கலைக்கதிர்

பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ்

COURTESY

G. Ramaswamy & Co

Ganga Textiles

COIMBATORE 641 037

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்.

பாரதியார் நூற்றாண்டுச் சிறப்பிதழ்-டிசம்பர் 1981

கலைக்கதிர்

மலர் 33 • டிசம்பர் 1981 • இதழ் 12

நிருவாக ஆசிரியர் ஜி. வரதராஜ்

கௌரவ ஆசிரியர் ஜி. ஆர். தாமோதரன்

நன்றி மறப்பது நன்று அன்று 5
மகாகவி பாரதி-புதுயுகத்தின் தலைவாயில் 8
பாரதி-ஒரு முன்னுணர் ஞானி 13
அருள் நாயகன் 16
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் 17
பாரதியாரும் இளைஞரும் 20
பாரதியாரின் வாழ்க்கை வரலாறு 28
பாரதியார் கவிதை நடை 41
பாரதியாரின் மறுமலர்ச்சி எண்ணங்கள் 49
கவிஞனை உணர்ந்த கவிஞர்கள் :
கவிமணி, நாமக்கல் கவிஞர், பாரதிதாசன், கல்கி, கண்ணதாசன் 55
ஹிந்து தர்மம் 61
மகாகவி 65
பாரதியின் தொழிற்புரட்சி 66
பாரதியின் உருவம் 70
பாரதியார் வாழ்வில் சில நிகழ்ச்சிகள் 73
புத்துலகச் சிற்பி 74
கண்ணதாசனின் பாடல்களில் சக்திதாசனின் தாக்கம் 76
பாரதிக்கு அஞ்சலி 82
காந்தியடிகள் காண விரும்பிய இளைஞர் சமுதாயம் 84
அமரகவி பாரதி 91
பாரதியின் தொழிலாளர் 95
பாரதிமண் கெட்டதே 101
பாரதியார் நூல்கள் 102
கண்ணன் பாட்டு 107
வெளிநாட்டார் கண்ணோக்கில் பாரதியார் 115
பாரதியும் அறிவியலும் 123
பாரதியாரின் பெருமிதப் பண்பு 127
பெரிய புராணம் 131
பாரதியும் தாகூரும் 132
பாரதியின் காதலி 137
தமிழ்த்தாய் வாழ்த்து 144

வெளிநாடு
விலை ரூ. 2-00 ★ விலை ரூ. 1-50

கலைக்கதிர் இதழில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

தனிமை இரக்கம்

குயிலனாய்! நின்னொடு கலவியின் குலவி
பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்து பின் -
இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப்படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைத்தால்
பாவியென் நெஞ்சம் பகீரெனல் அரிதோ!
கலங்கரை விளக்கொரு காவதம் கோடியா

மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர் யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
வளியெனப் பறந்தநீர் மற்றியான் எனாது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே!
மயலையிற் றென்றெவர் வகுப்பரங் கவட்கே?

மதுரை 'விவேகபாநு' மாத இதழில் 1904-ஆம் ஆண்டு ஜூலையில் முதன் முதலில் அச்சில் வெளிவந்த பாரதியாரின் கவிதை

செ. அரங்கநாயகம்,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

தேதி : 20-11-81

கோவை மாநகரில் இருந்து வெளிவரும் அறிவியல் மாத இதழ் 'கலைக்கதிர்', பாட்டுக்கொரு புலவன் பாரதியின் நூற்றாண்டு விழாவினையொட்டி சிறப்பு மலர் வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்கின்றேன்.

நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலாவாகத் தமிழ் மண்ணில் தோன்றிய அந்தத் தனிப்பெருங் கவிஞன் துறைகள் தோறும் புதுமை வெள்ளம் பாய்ந்தோட வேண்டுமென விழைந்தான்.

வெள்ளத்தின் பெருக்கைப்போல், கவிப் பெருக்கும், கலைப் பெருக்கும் எங்கணும் மேவிடச் செய்த அந்த மகாகவி காட்டிய பாதையில் உறுதி ஏற்போம்.

மலர் சிறக்க என் இனிய வாழ்த்துக்கள்.

(ஒ-ம்) செ. அரங்கநாயகம்



நன்றி மறப்பது நன்று அன்று

திரு. ஜி. வரதராஜ்

"எந் நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்பது வள்ளுவர் வாக்கு. வாழுகின்ற சமுதாயம்- வாழுகின்ற மனிதன் மற்றவர்கள் செய்த நன்மையை ஒரு போதும் மறக்காது- மறக்க மாட்டான். தமிழ்நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் இந்திய விடுதலைக்கும் தன் கவிதைத் திறனால் மிகுந்த பணி செய்தவர் பாரதியார். அவர் தமிழகத்தில் தோன்றிய நாள் 11-12-1882. எனவே அவர்தம் நூறாவது பிறந்த நாள் 11-12-1981. இதனைக் கொண்டாடி நன்றி பாராட்டும் வகையில் *கலைக்கதிர் 1981 டிசம்பர்* இதழைப் பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழாக வெளியிட்டு மகிழ்கின்றோம். அவ்வாறு மகிழும் நேரத்தில் அவர் ஆற்றிய பணிகள் சிலவற்றையாவது எண்ணிப் பார்ப்பதும் செயல்படுத்துவதுமே அவர்க்கு நாம் காட்டும் நன்றியாகும்.

ஒன்பது ஆண்டுப் பிராயத்திலேயே பாரதி கவிதைபாடத் தொடங்கிவிட்டார். அவர் பாடிய பாடல்கள் பொருளற்ற பாட்டுக்கள் அல்ல. எல்லாப் பாடல்களும் இனிய ஓசை நயம் உடையன; எளிய சொற்களைக் கொண்டன; ஆழமான (deep sense) பொருள்களைக் கொண்டன; உணர்ச்சியை ஊட்டக் கூடியன; நாட்டுப்பற்றை ஊட்டி வளர்ப்பன; படிக்கின்றவர்கள் மனத்தை உயர்த்தும் பாங்கின. ஒருவரின் எழுத்தோ, பாட்டோ அதனைப் படிக்கின்றவர்களின் மனத்தில் அமைதியையும், ஒழுங்கையும், உயர்வையும் ஏற்படுத்தவில்லையென்றால் அதனால் பயன் இல்லை என்பது என் கருத்து.

1908 இல் அவர் வெளியிட்ட "ஸ்வதேசகீதங்கள்" என்ற நூலில் இடம் பெற்ற பாடல்களும் அதற்கு அடுத்த ஆண்டில் வெளியிட்ட "ஜன்மபூமி" என்ற நூலில் இடம் பெற்ற பாடல்களும் மக்கள் உள்ளத்தில் சுதந்திர வேட்கையைக் கிளப்பின; அவற்றைப் படித்த பல்லாயிரம் இளைஞர்கள் நாட்டு விடுதலையை நோக்கி வீறுகொண்டு எழுந்தனர்; பாடலைப் பாடக்கேட்ட

படிக்காத பொது மக்களும் எழுச்சி கொண்டனர்.

படித்தவர்கள் மட்டுமே படித்துப் பயன்படும் அளவு இருந்த தமிழ்ப் பாடல்களில் எளிமையைப் புகுத்திப் பாடி வழிகாட்டியவர் பாரதி. ''செந் தமிழ் நாடு என்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது என் காதினிலே'' ''எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்'' ''தமிழன் என்று ஒரு இனம் உண்டு தனியே அவற்கு ஒரு குணம் உண்டு'' — இவைகள் பாரதி பாடல்களின் வரிகள். இவை எவ் வளவு எளிமையானவை பாருங்கள்.

பாரதியார் இந்திய நாட்டின் விடுதலையை மட்டும் பாடவில்லை; இந்தியாவின் ஒற்றுமையைப் பாடி னார்; ஒருமைப்பாட்டைப் பாடினார்; உயர்வைப் பாடினார். இந்தியா சுதந்திரம் பெறுவதோடு இந்தியா வில் ஒற்றுமை ஓங்க வேண்டும்; ஒருமைப்பாடு வாழவேண்டும்; உயர்வு வளர வேண்டும் என்பது அவருடைய ஆசை.

''ஞானத்திலே, பரமோனத்திலே — உயர்
மானத்திலே, அன்னதானத்திலே
கானத்திலே, அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்ந்த நாடு''

எனவும்

''தீரத்திலே, படைவீரத்திலே —நெஞ்சில்
ஈரத்திலே, உபகாரத்திலே
சாரத்திலே, அதி சாத்திரங்கண்டு
தருவதிலே உயர்நாடு''

எனவும் பாடி தன் ஆசையை வெளிக் காட்டி உள்ளார்.

''சாதிக் கொடுமைகள் வேண்டாம் —அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்''

எனச் சாதிப் பிரிவுகளை அகற்ற அன்பாக வேண்டுகின்றார். தமிழ் நாட்டு மக்கள் மட்டுமின்றி இந்திய நாட்டு மக்கள் எல்லாரும் ஆண்டவனை வேண்டி ''புகழானது திக்கனைத்தும் பரவும் குணம், பகை யற்ற வாழ்வு, வல்லமை, புண்ணியம், இசை இன்பம், இவை யெல்லாம் நாம் வரங்களாகப் பெறு வோம்'' என்கின்றார்.

இவ்வாறு எவ்வளவோ செய்தி களைச் சொல்லலாம். அவர் கவிதை களைப் படித்துப் பார்ப்பவர்கள் கீழ்க் கண்ட செய்திகளைத் தெளிவாக உணருவார்கள். பாரதியின் பாடல் களில்: (1) கருத்துச் செறிவு உண்டு அதே நேரத்தில் அவைகளைச் சாதாரண மக்களும் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய எளிமையான நடை உள்ளது. (2) இடைக்காலத்தவர் அரசர்களைப் பாடினர்; புராணங் களைப் பாடினர்; அரண்மனையைப் பாடினர். பாரதியாரோ மக்களைப் பாடினார்; மக்களின் நலன்களைப் பாடினார்; மக்கள் கவிஞராக விளங் கினார். (3) நாட்டு மக்கள் மனதில் எழுந்த சுதந்திரக் கனலை நன்கு எரியச் செய்தார்; வீரம் கொண்டு எழச் செய்தார்; எல்லா மட்டத் தினரும் சுதந்திரத்தின் பயனை அறியச் செய்தார். (4) தெய்வீகத் தையும் பாடியுள்ளார்; தேசியத்தை யும் பாடியுள்ளார் என்பன போன்ற பல செய்திகளைக் காண லாம். அவர் பாடிய பாடல் களில் தேசிய கீதங்கள் உண்டு; பிரபந்தங்கள் உள்ளன; காவியம் உண்டு; நீதிப்பாடல்கள் உண்டு. அவை அனைத்தும் நம் சமு தாயத்தை உயர்வுடைய சமுதாய மாக ஆக்க வல்லன. ஒரு கவிஞனை இன்னொரு கவிஞனால்தான் உள்ள வாறு உணர்ந்து கொள்ள முடியும்.

எனவே, கவியரசர் பாரதி யாரைப் பற்றிக் கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு அவர்கள் பாரதி மணி மண்டபத் திறப்பு விழா வாழ்த்துச் செய்தியாக அனுப்பிய செய்தியை இங்கே நினைவு கொள்வது பொருத்தமாக இருக்கும்.

"Poet Bharathi" has fullfilled the true mission of a poet. He has created beauty not only through the medium of glowing and lovely words, but has kindled the souls of men and women by the million to a passionate love of freedom and a richer dedication to the service of the country.

Poet like Bharathi cannot be counted as the treasure of any province. He is entitled by his genious and his work to rank among those who have transcended all limitation of race, languge and continent and have become the universal possession of mankind'.

" ஒரு கவிஞனின் உண்மையான பணியெதுவோ அதனை நிறைவேற்றியவர் பாரதியார். அவர் தன் ஒளிமிக்க இனிய எழுத்துக்களால் அழகைமட்டும் உருவாக்கவில்லை; நாட்டு விடுதலை வேட்கை கொண்டு நாட்டுப் பணிக்கே தங்களை அர்ப்பணித்த ஆயிரமாயிரம் மக்களைக் கிளர்ந்தெழச் செய்தார். பாரதியார் போன்ற கவிஞரை ஒரு மாநிலத்துக்கே உரியவர் என எண்ணுதல் கூடாது. அவர்தம் அறிவுத் திறத்தாலும் பணியாலும் மொழி, இனம், கண்டம் ஆகிய எல்லைகளையெல்லாம் கடந்து நிற்கும் ஞானியர் வரிசையில் ஒப்ப வைத்து எண்ணத் தக்கவர். அவர் உலக மக்களின் சொத்து".

பாடல்களையும் உரைநடைகளையும் எழுதி மக்கள் மனம் மாண்புறச் செய்த அந்த உலக மகாகவியை மறப்பது நன்றி மறப்பதாகும். அவர் செய்த நலன்களை மறவாமைக்கு அறிகுறியாகத்தான் இந்தச் சிறப்பு இதழை வெளியிட்டு மகிழ்கின்றோம். தமிழக அரசு கோவையில் வரப்போகும் பல்கலைக் கழகத்திற்குப் பாரதி பல்கலைக் கழகம் எனப் பெயரிட்டுத் தன் நன்றி அறிதலைக் காட்டவுள்ளது.

வாழ்க பாரதி நாமம்
வளர்க அவர்தம் நெறிகள் □

மகாகவி பாரதி - புதுயுகத்தின் தலைவாயில்

மாண்புமிகு செய்தி, அற நிலையத்துறை அமைச்சர்
திரு. இராம. வீரப்பன்,

வரலாற்றில் தங்களுக்கென நிலையான இடத்தைப் பெற்றுவிட்ட பெருமக்கள் அனைவரையும் - கட்சி வேறுபாடு கருதாது நினைவுகூர விழாக் கண்டு, போற்றுகின்ற புரட்சித் தலைவரின் அரசு - தமிழ் இலக்கிய உலகில் புதுமைக்குத் தொடக்க விழா நடத்திய மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழாவை, இந்த ஆண்டு இறுதியில் தொடங்கி, அடுத்த ஆண்டு முழுதும், கொண்டாட இருக்கின்றது.

''ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல் வந்த மாமணி''யான மகாகவி பாரதி, தமிழ்க் கவிதை உலகிற்குப் புது யுகத்தின் தலைவாயிலைத் திறந்து விட்ட புத்துலகச் சிற்பியாவார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், கவிதை மறுமலர்ச்சிக்கும் தடையாக இருந்தவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு - சொல் புதிதும், சுவை புதிதும் கொண்ட எந்நாளும் அழியாத சோதி மிக்க நவக்கவிதைகளைப் புனைந்து, ''உய்வகை காட்டும் தமிழுக்குப் புது நெறி காட்டிய'' பெரும் புலவர் அவர்.

தமிழ் மொழி செழுமை பெற்றிடவும் - தமிழர் வாழ்வில்வளங் கூட்டிடவும் - அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டில் விடுதலை வேட்கை வளர்ந்திடவும், கவிதை, சிறுகதை, காவியம், எனும் இலக்கியத் துறைகளையெல்லாம் தொட்டுத் தழுவி-ஏடுகள் பலவற்றை நடத்தி-நாட்டில் எழுச்சி அலை பரப்பிய இலக்கியக் கடல் அவன்.

இந்த மண்ணில் அந்த மகாகவி வாழ்ந்திருந்த காலம் மொத்தம் முப்பத்தொன்பது ஆண்டுகள்தான்.

1882 முதல் 1921 வரை தான்.

இந்த மிகக் குறுகிய வாழ்நாளில் அவர் படைத்திட்ட இலக்கியங்கள்-ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழித்தும் அதன் பின்வரும் தலைமுறையினருக்கும் எழுச்சியையும், ஏற்றத்தையும் தரக்கூடிய கருத்துக் கருவூலங்களாகும்.

எளிய நடை, புதிய பாவினங்களுக்கு எடுத்துக் காட்டாகக் கவிதை புனைந்த பாரதி தன் வழி நடக்கும் ஒரு புதிய பரம்பரையைத் தோற்றுவித்தார்; பழமைத் தளையை உடைத்துப் புதிய தலைமுறை வீறுடன் எழுந்து புறப்பட்டது.

ரஷ்யப் புரட்சியின் உந்து சக்தியாக இருந்த புரட்சி எழுத்தாளன்

''கடவுளின் தூதர்களான மகான்கள் மக்களுக்கு நன்மை செய்யவே தோன்றுகிறார்கள். தங்கள் பணி இவ்வுலகில் முடிந்தவுடனே அவர்கள் மறைந்து விடுகிறார்கள்.''

பாரதி

மாக்சிம் கார்க்கி 'இலக்கியம்' என்பதற்கு விளக்கம் தரும்போது ''புத்தகம் என்கிற முப்பட்டைக்கண்ணாடியின் மூலம் வாழ்க்கையின் உண்மை நிலையைக் காணவேண்டும்'' என்று குறிப்பிட்டார். கலை, இலக்கியம் குறித்து பாரதியின் நோக்கும், போக்கும் இதற்கு மாறுபட்டதல்ல.

இலக்கியப் படைப்புகள் அனைத்தும் மனிதாபிமானம் பேணுவதாக- மனித நேயம் போற்றுவதாக இருக்க வேண்டும்; மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பாக மட்டுமல்லாமல், வாழ்க்கையின் மேம்பாட்டுக்கு அடித்தளமாக, உரமாக, நெறிகாட்டும் கருவியாக இருக்க வேண்டும் என்பது தான் பாரதியின் விழைவாகும். ''வாழ்வின் இன்ப துன்பங்களை உணர்ந்து உருகினால்தான் கவிதை சிறக்கும்'' என்பது அவரது கருத்தாகும். ''பிறர் துன்பத்தைக் காணும் போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், யாப்பிலக்கணம் படித்த ஒருவனும் கவிதை பழகுவராயின் - முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான். இவன் தொழிலிலே கவிதை இராது'' என்று ஓரிடத்தில் அவர் குறிப்பிடுவதிலிருந்தே இதனை நாம் உணர முடிகிறது.

மகாகவி பாரதி, பொதுமைச் சமுதாயத்தை அமைக்கவும்-மனித குலம் முழுமைக்கும் பொதுவானதோர் அமைப்பை நிர்மாணிக்கவும் கனவு கண்டான். மனிதர்கள் மட்டுமல்ல, காக்கை குருவிகளும் நீள் கடலும் மலையும்கூட, தனது ஜாதி என்று பாடி களிப்பில் ஆழ்ந்திருந்தான். ஆனாலும், தமிழையும் தமிழரையும் எந்தத் தருணத்திலும் மறந்தானில்லை.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று அறுதியிட்டுக் கூறிய பாரதி, ''தமிழ் ஜனங்களுக்குச் சக்தி மேன்மேலும் பெருகச் செய்ய வேண்டும் என்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர்தரிக்கின்றோம்'' என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

தமிழ் மொழி மீது பாரதி கொண்டிருந்த பற்றிற்கும் ஈடுபாட்டிற்கும் எல்லையே இல்லை என்பதுதான் அவரது வாழ்விலிருந்து நாம் அறிகின்ற உண்மையாகும்.

'அக்ரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணா அவர்கள் போற்றிய 'வ.ரா.' அவர்கள் ''மகாகவி பாரதியார்'' என்ற நூலை இயற்றியுள்ளார். அதில், பாரதியாரோடு தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை விவரிக்கின்றார்.

''பாரதியாரை நமஸ்கரித்த என்னை அவர் தூக்கி நிறுத்தியதும் 'யார்' என்று கேட்டார். தமிழில் பதில் சொல்லியிருக்கலாமே! இங்கிலீஷ் படித்த கர்வம் ஆளை எளிதிலே விட்டுவிடுமா? நான் இங்கிலீஷைப் பொழிய ஆரம்பித்தேன்.

''அடே, பாலு! வந்தவர் உனக்கு இணையாக இங்கிலீஷ் பொழி கிறாரடா! அவரிடம் நீ பேசு, எனக்கு வேலையில்லை'' என்று உறக்கக் கத்தினார்!

''ஒரு தமிழன் மற்றொரு தமிழ னோடு, இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்? என்று வருத்தக் குரலுடன் என்னைக் கேட்டார்..........'' என்று அந்த நூலில் ''வ.ரா.'' குறிப்பிடுகிறார். பாரதியாரின் தமிழ்ப் பற்றுக்குச் சான்று பகர இந்த ஒரு நிகழ்ச்சியே போதும்!

அதனால்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

'' தமிழகம் தமிழுக்குத் தகும்
உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்
கிடக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றி
னான்''.

என்று நெஞ்சாரப் புகழ்ந்தார்.

மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்க்கவும்-அவர் களுக்குச் சுதந்திரத்தின் இனிமையைக் குழைத்தூட்டவும் கவிதை பாடியவர் என்று மட்டும் பாரதியைப் பற்றிக் கருதுவோ மானால் ''சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற செம்மை நலம் எல் லாம்'' பெற்றிருந்த அவரை முற்றிலும் உணர்ந்தவர்களாக மாட் டோம்.

பல ஆண்டுகளுக்கு முன்- ''மக்கள் கவிஞர்'' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்கள் :

"Bharathi was not merely the bard of nationalism; he was certainly the morning star of reformation ...... He was angry with the foreigner and wanted his country to become free but that was not his goal, that was not to be his end. It was but the beginning......"

''பாரதி வெறும் தேசியக் கவிஞர் மட்டுமல்ல. சீர்திருத்த வானில் மின்னிய விடிவெள்ளி அவர். அந் நியன் மீது ஆத்திரமும், நாடு விடு தலை பெற வேண்டும் என்ற அவா வும் அவருக்கு இருந்தன. ஆனால் அவை மட்டுமே அவரது இலட்சிய மாக இல்லை; அவை மட்டுமே அவரது இலக்காக இருந்திருக்க முடி யாது. அது அவரது இலட்சியத்தின் ஆரம்பம் - தொடக்கம் - அவ்வளவு தான்......... ...'' என்று பாரதியை பேரறிஞர் அண்ணா அவர்கள் படம் பிடித்துக் காட்டினார்கள்.

மக்களுக்காக, மக்களைப் பற்றி மக்களிடையே பழகு மொழியில் கவிதை புனைந்த, அந்த மகாகவி யின் சிந்தை, செயல் அனைத்தை யும் எடுத்துரைக்கும் வகையில் அவரது கருத்திற்கு ஆக்கம் தேடு கின்ற வகையில், ''அண்ணாவின் அரசு'' அவரது நூற்றாண்டு விழா வினைக் கொண்டாட இருக்கிறது.

'' ஒன்றென்று கொட்டு முரசே
அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே''

'' தகரென்று கொட்டு முரசே -
பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்''.

என்று முரசு கொட்டிய முற்போக்குக் கவிஞன் அவன்.

'' செப்பு மொழி பதினெட்டுடையாள்
எனிற்
சிந்தனை யொன்றுடையாள்''

ஏறு போல் நட

என்று செம்மாந்து பாடிய புலவன் அவன்.

அதனால்தான் 1981 - டிசம்பர் 11-ம் நாள் தொடங்கும் பாரதி நூற்றாண்டு விழா ஆண்டினைத் ''தேசிய ஒருமைப்பாடு ஆண்டாகக்'' கொண்டாட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

'தேமதுரத் தமிழோசை
உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டு'
மென விழைந்த

பாரதியின் பெருமையை பாரெங்கும் அறிந்திடச் செய்யும் வகையில் மற்ற மாநில தலைநகர்களிலும் - வெளி நாட்டிலும் பாரதி விழாவை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவின் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் ''பாரதி இருக்கை'' ஏற்படுத்தவும், நினைவுச் சொற்பொழிவுகள் நடத்தவும் அரசின் சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எட்டயாபுரத்தில் பாரதி மணி மண்டபத்தைப் புதுப்பிக்கவும் - அவரது நினைவை நிலை நிறுத்தும் வகையில் கலைக்கூடம் அமைக்கவும்- சிலை நிறுவவும்-அவரது பெயரால் தோரண வாயில் திறக்கவும் - பொருட்காட்சி ஒன்று பிரமாண்டமான அளவில் நடத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

''பாரதி நினைவு மலர்'' வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல்
வேண்டும்;
இறவாத புலமையெனில் வெளி
நாட்டார்
அதை வணக்கம் செய்தல்
வேண்டும்.''

என்று விரும்பிய பாரதியின் படைப்புக்களைப் பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யவும், பாரதியின் வாழ்க்கையைப் பாமரர்களும் அறிந்திடும் வகையில் திரைப்படம் தயாரிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இவையனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போன்று, ''பாரதியின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் - நாள்தோறும் - தமிழகத்தில் ஏதாவது ஓரிடத்தில் கொண்டாட வேண்டும்'' என்ற தமிழகத்தின் முதல்வர், தமிழகத்தின் தலைவர், புரட்சித் தலைவர் விருப்பம் தெரிவித்ததற்கு ஏற்ப ஆண்டு முழுவதும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறோம்.

''நமக்குத் தொழில் கவிதை,
நாட்டிற்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோரா
திருத்தல்''

என்று இலட்சிய முழக்கமிட்ட மாபெரும் மக்கள் கவிஞருக்கு நாம் எடுக்கின்ற இந்த விழா, அவர் காட்டிய வழி நடக்கவும். அவரது கவிதைகள் ஊட்டிய உணர்வைக் காக்கவும், அவர் காணவிழைந்த சமத்துவச் சமுதாயத்தை அமைக்கவும், அனைத்திற்கும் மேலாக தமிழை வளர்க்கவும் போற்றவும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

வாழ்க பாரதி! வாழிய செந்தமிழ்!

வாழிய வங்கமே!

அங்கமே தளர்வெய்திய காலையும்
அங்கோர் புன்னரி தந்திடு மூனுணாச்
சிங்கமே யென வாழ்தல் சிறப்பெனச்
செம்மைகூறி நந்தாய்ப் பெருந்தேயத்தைப்
பங்கமே பெறு மிந்நிலை நின்றுயர்
பண்டை மாண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்கமே யென வந்தனை வாழி நீ
வங்கமே நனி நனி வாழிய வாழிய!

கற்பகத் தருப்போல் எது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினிற்
பொற்புறப் பிறந்தேம், நமக்கோர் விதப்
பொருளு மன்னிய ரீதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்கர நோக்கியா
மவனி வாழ்தலா காதென நன்கிதை
வற்புறுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்கமே நனி வாழிய வாழிய!

கண்ணினீர் துடைப்பாய் புன்னகைகொள்வாய்
கவினுறும் பரதப் பெருந் தேவியே
உண்ணி கழ்ந்திடும் துன்பம் களைதியால்
உன்றன் மைந்தர்கள் மேனெறி யுற்றனர்
பெண்ணி னெஞ்சிற் கிதமென லாவது
பெற்ற பிள்ளைகள் பீடுறவே யன்றோ?
மண்ணினீ புகழ் மேவிட வாழ்த்திய
வங்கமே நனி வாழிய வாழிய!

வங்க வாழ்த்துக் கவிதை — பாரதியார் சென்னை சுதேசமித்திரனில் பணியாற்றிய பொழுது 15-9-1905-இல் -சுதேசமித்திரனில் வந்த பாரதியாரின் முதற்கவிதை.

பாரதி - ஒரு முன்னுணர் ஞானி

டாக்டர் ஜி. ஆர். தாமோதரன்

'காலை ஞாயிறு' என நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களால் குறிப்பிடப்பெற்ற- 39 ஆம் வயது நிறைவு பெறுவதற்கு முன்பே அமரரான அமரகவி பாரதியார் அவர்கள் 1882-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ஆம் நாள் எட்டயபுரத்தே தோன்றி 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாள் சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு 67-ஆம் எண்ணுள்ள வீட்டில் இறையடிஎய்தினார். வாழ்ந்த காலம் கொஞ்சமே. ஆனாலும் அவர் ஆற்றிய பணி என்றும் அழியாப் பணியாய் உள்ளது.

பாரதியார் தமது ஏழாம் வயது முதல் அருமையான தமிழ்க் கவிதைகளை விளையாட்டாகப் புனைந்து பாடியதனைக் கண்ட தமிழ்க் கவிஞர்கள் வியந்து போற்றினர். எட்டு, ஒன்பது வயதுக் காலத்திலேயே கொடுக்கப்படும் சொற்கள், பொருள்கள் ஆகியனவற்றை வைத்துக் கவி பாடும் ஆற்றல் கைவரப் பெற்றராய் விளங்கினார். இவற்றையெல்லாம் நேரில் கண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், ''காளிதாசன், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய காலம் முதல், அநாயாசமாய்க் கவி சொல்ல வாய்த்ததென்று நாம் கேட்கும் கதைகளையும், குமரகுருபரர் ஐந்தாவதாண்டில் அரும்பாக்கள் இயற்றினார் என்ற கதையினையும் அபூர்வ கற்பனைகளென்று புறக்கணித்த நான் பாரதியார் ஏழாவது வயது முதல் எளிதில் பாடலியற்றித் தமிழ் வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்டபொழுது தான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது; கவிகள் பிறப்பிலேயே அமைய வேண்டுமென்று அறிந்தேன்'' என்று உணர்ந்து உரைத்துள்ளார். கவிதைகளை விரைந்தியற்றும் இவரின் திறன் கண்டு புலவர் பெருமக்கள் இவரைப் ''பாரதியார்'' என்று பாராட்டினர். அன்று முதல் சி. சுப்பிரமணியம், சுப்பிரமணிய பாரதியார் ஆனார்; பாரதியார் என்றே எல்லாராலும் போற்றப்பட்டு வருகின்றார்.

பாரதியின் கவிதைகளையும் கட்டுரைகளையும் படிப்பவர்கள் இவர் ஒரு இயற்கைச் சுவைஞர்; நாட்டுப் பற்றை ஊட்டி வளர்க்கும் உயர்ந்த உணர்வூட்டும் உணர்ச்சி மிக்க கவிஞர்; ஞான நெறி நின்று எல்லா உலகையும் இறைவன் காட்சியாகக் காணும் அத்வைத ஞானி; குழந்தைக் கவிஞர்; சாதி மத பேதமுள்ள சமுதாயத்தைக் கண்டித்த சமரச ஞானி; சங்கீத ஞானமுடைய மகான்; பெண்ணுலகப் பெருமை பேசும் பெரியார்; மண்ணுலகை இன்பமாகக் கண்ட யோகி; எதிர் காலத்தை முன்னுணர்ந்து கூறும் ஞானி என்று

பலவாறாகப் புகழும் வண்ணம் அவை அமைந்திருப்பதனைக் காண்பர்.

இவர் தம் வாழ்வின் நிகழ்ச்சிகளை மேற்போக்காகப் பார்ப்பவர்க்கும் இவர் பெரியவர் சிறியவர் என்ற வேறுபாடற்றுத் துன்பப்படும் எல்லார்க்கும் இரங்கும் எளியவர்; தன் துன்பத்திலும் பிறர் இன்பம் காண விழையும் ஒப்புரவாளர்; தன் பெண்டு, தன்பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் என்ற குறுகிய எல்லையை அறியாதவர்; உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பேதம் தொலைய வேண்டும் எனத் துடித்தவர்; இவர்தம் தாராள மனத்தாலும், பிறர்க்கே உழைக்கும் பெரும் பண்பாலும் பித்தர் என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்கானவர்; சாதி தொலைந்தாலன்றி இந்த நாட்டிற்கு விடிவே இல்லையென்பதில் அசைக்க முடியாத உறுதியுடையவர்.—இவை போன்ற பல செய்திகள் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

தமிழர் மறந்தாலும் தமிழை மறவாத அறிஞர் பாரதியார். அவர்கள் தமிழில் பல்வேறு பா வகைகளும் பா வினங்களும் இருந்த போதிலும் அவைகளை ஓரளவு போற்றிப் புதுப் புதுக் கருத்துக்களையும் புதுப்புது பா வகைகளையும் இயற்றித் தமிழ் அன்னைக்கு அணி செய்தார். இவர் பாடல்களின் பொருள்களும் உணர்ச்சிகளும் புத்தம் புதியன; புரட்சி உண்டுபண்ணும் பெற்றியன. ''எழுத்துக்கலைஞனுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையில்லாவிட்டால் நிகழ்காலத்தை அவனால் மதிப்பீடு செய்ய முடியாது'' என டால்ஸ்டாய் கூறியதற்கொப்ப பாரதியார்க்கு எதிர்காலத்தில் நம்பிக்கை இருந்தது; எதிர்காலம் எப்படி இருக்கும் என ஒருவாறு முன்னுணர்ந்து கூறும் ஆற்றல் மிக்கு இருந்தது.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்திய நாடு சுதந்திரம் பெறவில்லை; அவர் இறந்து 26 ஆண்டுகட்குள் இந்தியா சுதந்திரம் பெற்றுவிடும் என்ற நம்பிக்கை எவரிடமும் இல்லை என்றாலும், உள்ளத்தில் உண்மையொளி பெற்ற கவிஞராதலால் அவர் உள்ளுணர்வு அவர்க்கு உண்மையை உணர்த்திற்று. இந்தியா சுதந்திரம் பெற்றுவிடும் என்று உணர்ந்து ஆனந்தக் கூத்தாடி ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று'' எனத் தன்னை மறந்து 26 ஆண்டுகட்குப் பிறகு உண்மையிலேயே பயன்படப் போகும் பாட்டினைப் பாடிய முன்னுணர் அறிஞர் பாரதியாராவார். அவர் அவ்வாறு மகிழ்ந்த மகிழ்வெல்லாம் நெடுநேரம் நிற்கவில்லை. அவர் உள்ளுணர்வால் உணர்கின்றார். பெற்ற சுதந்திரம், சுதந்திரம் பெற்ற மக்களால் பேணிப் பாதுகாக்கப் படாமல் போய்விடுமோ என்ற சூழ்நிலை தந்நலக்காரர்களாம் ''சாதிப் பிரிவுகள்'' சொல்லி தாழ்வு உயர்வு கற்பித்து, நீதிப் பிரிவுகள் செய்து நித்தம் சண்டை செய்யும் மக்கள் இவர் கண்முன்பு நின்றனர். நெஞ்சில் உரமற்று நேர்மைத் திறமற்று வஞ்சனை சொல்லும் மக்களின் மிகுதியைக் கண்டார்; ஊக்கம், உளவலி, உண்மையில் பற்று இவையற்று மாக்களைப் போன்று வாழ்கின்ற மக்கள் கூட்டம் பெருகுவதைக் கண்டார்; எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற மானமற்ற மக்களின் கூட்டம் மிகுவதனைக் கண்டு உளம் துடித்தார். சுதந்திரப் பயிர் என்ற தலைப்பில் வரும் செய்திகள் எல்லாம் இன்றைய

நம் நாட்டின் நிலைகளை அன்றே எண்ணிக் கூறியன போல உள்ளன.

"தண்ணீர்விட் டோவளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்; கருகத்
திருவுளமோ
எண்ணமெல்லாம் நெய்யாக
எம்முயிரின் உள் வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத்
திருவுளமோ
ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த
பின்னர்
வாராது போலவந்த மாமணியைத்
தோற்போமா
இன்பச் சுதந்திரம் நின் இன்
அருளால் பெற்றதன்றோ
அன்பற்ற மாக்கள் அதைப்
பறித்தால் காவாயோ".

என வருந்திப் பாடினார். நெஞ்சத்தே பொய்யின்றி, வஞ்சனையின்றி மனத் தூய்மையோடு எண்ணற்ற நல்லார் இடருற்றுப் பெற்ற சுதந்திரம் இடையில் இத்தகைய இடர்ப்பாடுகள் இருப்பினும் நல்ல நிலையில் இறுதியில் உலகைக் காக்கும் அளவுக்கு உயரும் என நம்புகின்றார், எனவே, "வெற்றி கூறுங்கள்! வெண் சங்கு ஊதுங்கள். இன்றைய நாள் வரையிலும் அறநெறி அற்ற தலைவர்கள் குற்றங்களையே தங்களின் மகுடங்களாகக் கொண்டதும், மற்ற மனிதரை வஞ்சித்து அடிமைப் படுத்தலே அறிவின் பெருமையென எண்ணியதும், சொத்தை நீதிகளைச் சொல்லி ஏய்த்து வந்ததும் இல்லாமல் போய், கற்றவர்கள் தங்கள் உண்மை நிலை உணர்ந்து, போர்ப் படையின் செருக் கொழிந்து, அறம் திறம்பாத வாழ்வினை அமைப்பர்" என்று நம்புகின்றார். "படைஞர்தம் செருக்கொழிந்து அறம் திறம்பாத கற்றோர் தலைபடக் காண்போம்" எனப் பாரத மாதா நவரத்ன மாலையில் நம்பிக்கை ஊட்டுகிறார்.

அமரர் சர்க்கரைச் செட்டியார் அவர்களின் கருத்துப்படி பாரதியார் மக்களிடையே பாடிய கடைசிப் பாட்டு "பாரத சமுதாயம் வாழ்க" என்ற பாடலாகும். இப் பாடலில் "எல்லா உயிர்களிலும் பரம்பொருள் விளங்குவதனைத் தெளிந்து ஏற்றத் தாழ்வற்ற, சாதி, இன, மத பேத மற்ற சமதர்மச் சமுதாயத்தை—சுரண்டலும் குவிப்பும் அற்றச் சமுதாயத்தை-எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற உணர்வு தெளிந்த சமுதாயத்தை அமைத்து பாரத சமுதாயம் உலகிற்கு வழி காட்டும்; அந்தச் சமுதாயம் வாழ்க!" என்று வாழ்த்துக் கூறுகின்றார். எனவே எவ்வளவுதான் இன்றைய பாரத சமுதாயம் சென்று சென்றணுவாய்த் தேய்ந்து நின்றாலும் இறுதியில் ஒன்றாய் நின்று உலகம் வாழ வாழ்ந்து வழிகாட்டும் என்று நம்புகின்றார்.

சத்தியத்தைப் போற்றி வாழ்ந்த பாரதியார் நாட்டுப் பற்று, கல்வி, தொழில், விஞ்ஞானம், சமுதாயம், பொருளாதாரம் பற்றிக் கூறிய கருத்துக்கள் எல்லாம் சத்திய வாக்காய் அமைந்து பாரதி ஒரு முன்னுணர் ஞானி என்ற புகழை ஈட்டித்தந்து வருகின்றன. வாழ்க பாரதி நாமம்.

☐

பாரதியார் பற்றி பல்வேறு
படங்களைத்
தந்துதவிய 'தமிழரசு'க்கு
நன்றி

☐

அருள் நாயகன்

— திருமதி. செளந்தரா கைலாசம் —

தெள்ளு தமிழ்க்கவி அள்ளி அளித்தருட்
செல்வம் வளர்த்தவனை—நலம்
தேடிக் குவித்தவனை—ஒரு
தெய்வத் திருமகனை

உள்ள மதில்ஒளி வெள்ளம் நிறைத்துயர்
உண்மை உரைத்தவனை—உல
கோங்க நிறைத்தவனை—சொல
ஒப்புமை அற்றவனை

கள்ள மகற்றிடும் நல்ல படிப்பினை
கற்றுக் கொடுத்தவனை—அன்பு
காட்டி அணைத்தவனை—நமைக்
கட்டிப் பிணித்தவனை

வெள்ளை அரக்கரின் தொல்லை அழித்திடும்
வித்தை விதைத்தவனை—பெரும்
வித்தகன் பாரதியை—நாம்
மெத்த வணங்கிடுவோம்!

காலனை யும்சற்று காலால் மிதித்திடக்
கங்கணம் பூண்டவனை—அச்சக்
காரிருள் கீண்டவனைப்—புகழ்க்
கட்டியம் நீண்டவனைக்

ஆலமு மின்னருள் தெய்வமென் றேமனம்
ஆய்ந்து தெளிந்தவனை—உயர்
ஆண்மை மிகுந்தவனை—தினம்
அன்பில் மகிழ்ந்தவனை

ஓலமி டும்உயர் ஓங்கி வளர்ந்திட
உள்ளொளி சேர்ந்தவனை—இறை
உண்மைகள் காத்தவனை—கவி
உன்னதம் பூத்தவனை

ஞாலமி தில்பகை தன்னையும் அன்புடன்
நத்திடச் சொன்னவனை—அருள்
நாயகன் பாரதியை—நிதம்
நாடி வணங்கிடுவோம்!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

அ. வேங்கடராமன், இ. ஆ. ப.
துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயமுத்தூர்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

வளமான சமுதாய வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்குப் பாரதி வகுத்திடும் வழி இது. உழைப்பே உற்பத்தியைத் தந்திடும். உற்பத்திப் பெருக்கத்திலிருந்து வளம் பிறந்திடும். எனவே, எந்தச் சமுதாயம் உழைப்பைப் போற்றி, உண்டு களித்திருப்பதை, புல்லுருவியாக வாழ்வதை வன்மையாகக் கண்டிக்கிறதோ அந்தச் சமுதாயம் வாழ்ந்திடும், வளர்ந்திடும்.

உழைப்புக்குக் குறிக்கோள் வேண்டும். இலட்சியம் இல்லாத உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும். பாரதி நம் சமுதாயத்திற்குக் கோடிட்டுக் காட்டும் குறிக்கோள் :

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்''

உண்ணும் உணவு எல்லோருக்கும் கிடைத்திட வேண்டும். அருமையான எண்ணம். எண்ணத்தைச் செயலாக்க இருக்கும் இயற்கைச் சூழ்நிலையைச் செவ்வனே பயன்படுத்திட அறிவு நுட்பம் தேவை. பாரை உயர்த்திட வேண்டுமானால் அறிவு தேவை, ஆற்றல் தேவை, உழைப்புத் தேவை. இவற்றைப் பேணிக் காத்து வளர்த்திட வேண்டும்.

முன்னேற்றத்திற்கு அடித்தளம் உணர்வுகள். இன்றைய நிலை என்ன? எந்நிலை அமைந்திட வேண்டும்? எவ்வாறு அதற்காகச் செயலாற்றிட வேண்டும்? என்ற தொடர்ச்சியான எண்ணங்கள். இவற்றைத்தான் திட்டமிடும் முறை என்று இன்றைய வல்லுநர்கள் கூறுகிறார்கள். பாரதியின் எண்ண ஓட்டங்களும் இம்முறையிலேயே அமைந்துள்ளன. சமுதாயத்தின் நிலையை அவர் கண்கள் ஆய்கின்றன :

''தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத
தேசம்''

அது மட்டுமா? அல்ல; அல்ல; பாழ்பட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிந்தாரா? இந்நிலையை மாற்ற வழியுண்டு என்று உணர்ந்தாரா? இல்லை, இல்லை என்று உணர்ச்சி பொங்கக் கூறுகிறார் :

'' கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்
காரணங்கள் இவையெனும்
அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே''

> "மாதர்களை, இருட்டிலே தள்ளி விட்டு அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்து விட முயல்வது வீண் முயற்சி"
>
> — பாரதி

இந்நிலைகளை அகற்றத்தான் திட்டங்கள் பல தீட்டி செயலாக்கினோம். விடுதலைக்குப்பின். இன்றைய நிலை என்ன? நாட்டின் உணவு உற்பத்தியைப் புதிய உத்திகள் வழியாககணிசமாக உயர்த்தியுள்ளோம். "பஞ்சமோ பஞ்சம்" என்று பரிதவித்து நிற்கும் நிலையிலிருந்து விடுபட்டுள்ளோம். இருப்பினும் வயிறார உணவளிக்க இயலுகிறதா? இல்லையே, ஏன்? உணவுப்பொருள் உற்பத்தி பெருகி வருகிறது. ஆனால் மக்கள் பெருக்கமும் தொடர்ந்து அதிகமாகிக் கொண்டே வருகின்றது. உணவுப் பொருள் இருந்தும் அதை வாங்கும் சக்தி இல்லாததால் அரை வயிற்றுப் பட்டினிகளின் எண்ணிக்கை பெருகுகிறது. வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டுமானால் நிலத்தைமட்டும் நம்பிப் பயனில்லை. தொழில் வளம் பெருக வேண்டும். தொழிலுக்கு வேண்டிய கச்சாப் பொருட்களை உழவு தந்திட வேண்டும். எனவே நல்வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்கு, அடிப்படை :

மக்கள் பெருக்கம் குறைய
வேண்டும்
விளைபொருள் மிகுந்திட
வேண்டும்
தொழில் முன்னேறி உழைப்புக்கு
வாய்ப்பு அதிகரித்திட வேண்டும்.

விஞ்ஞான உலகத்தில் வாழ்கிறோம். ஏனைய நாடுகள், சமுதாயங்கள் மின்னல் வேகத்தில் வளர்ந்து வருகின்றன. நம் முன்னேற்றத்தை விரைவாக்க தொழில் நுட்பக் கல்வி, செயலாற்றல் பெருகிட வேண்டும். தனிமனிதனின் உற்சாக உழைப்புக்கு உறுதுணையாக சமுதாயம் தனது பொதுப் பொறுப்புக்களை ஏற்று, உகந்த நிர்வாக அமைப்புகளை உருவாக்கி, சட்ட திட்டங்களை அமுலாக்கிநடைமுறைப்படுத்த வேண்டும்.

தொழில் நுட்ப வளர்ச்சிக்குப் பாரதியின் எண்ணங்கள் பலப் பல :

"மந்திரம் கற்போம் வினைத்
தந்திரம் கற்போம்
வானை அளப்போம் கடல் மீனை
அளப்போம்
சந்திர மண்டிலத்து இயல் கண்டு
தெளிவோம்
சந்தித் தெருப்பெருக்கும் சாத்திரம்
கற்போம்"

இயற்கையை நன்கறிந்து கொள்வோம். அவற்றை வென்றும், ஒட்டியும் வாழக் கற்போம். கற்றதைப் பரப்பிடுவோம்.

வேளாண்மை வளர்ச்சிக்கு, தொழில் வளத்திற்கு விஞ்ஞான அறிவு தேவை. தொழில் நுட்பத்திற்கு அண்டைய நாடுகளை மட்டும் சார்ந்திராமல் நம் வன்மையைப் பெருக்கிட வேண்டும். பரந்த நமது நாட்டின் நிலைக்கேற்ற வழி வகைகளைக் கண்டறிய ஆய்வுச் சாலைகள் இன்னும் பல அமைத்திட வேண்டும். உழவர் நிலை அறிந்து, அவர்கள் சூழ்நிலையை உணர்ந்து பார்த்து, அவர்தம் இடர்ப்பாடுகளைக் களைந்து முன்னேற்றம் கண்டிடும் ஆய்வுகளை வேளாளர் கழனிகளில், மக்கள் மத்தியில் செய்கின்ற பாங்கு மலிந்திட வேண்டும். நமது ஊர் நிலைக்கேற்ப மனித சக்தியை அடித்தளமாகக் கொண்ட புதிய தொழில்

முறைகளை, அமைப்புகளை உருவாக்கிட வேண்டும். இதற்கும் ஆய்வுகள் நிறையத் தேவை. தொழில் வளத்திற்குப் பாரதி கூறும் வழி வகை:

''குடைகள் செய்வோம் உழு
படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம்
இரும்பாணிகள்செய் வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்
செய்வோம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள்
செய்வோம்''

''காவியம் செய்வோம் நல்ல காடு
வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர்
உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள்
செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும்
உவந்து செய்வோம்''

உவகையுடன் உழைத்தால் உலகத் தொழில் அனைத்தையும் நாம் செய்திடலாம். இதற்கு அறிவுப் பெருக்கம் தேவை. உழைப்பவர்களுக்கு உறுதுணையாக நின்று அவற்றைப் போற்றிக் காக்கும் பாங்கு சமுதாயத்திற்குத் தேவை. பொருளாதாரக் கண்ணோடு தனி மனிதர்களின் செயலாற்றலை வளர்த்து அவற்றிலிருந்து பிறக்கும் நன்மைகளைப் பொதுச் சொத்தாக மாற்றிடும் சீரிய வழி வகைகள் சமுதாயத்தின் வாழ்க்கை நெறியாக மலர்ந்திட வேண்டும்.

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்
பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு
கொள்ளுவோம்''

மண்ணுக்கும், நீர் நிலைக்கும் ஏற்ப வேளாண்மை செய்து நல்ல வணிக முறைகளை உருவாக்கி உன்னத நிலை அடைந்திடலாம்.

கவிஞனின் காவியங்கள் உணர்வுகளிலிருந்து பிறக்கின்றன. அவன் கனவு காண்கிறான், நல்வாழ்வு மலிந்திட வேண்டும் என்று. விஞ்ஞானியும் கனவு காண்பவன் தான். சமுதாயம் உயர்ந்திட வேண்டும், அதற்கான வழிவகைகள் என்னென்ன என்று எண்ணுகின்றான். எண்ணங்கள் ஆய்வுகளாக மலர்கின்றன.

அவற்றிலிருந்து பிறப்பது புதிய உத்திகள். விஞ்ஞானச் சுடர்களை வழிகாட்டிகளாக அமைத்துக் காவியம் காட்டும் உன்னத வாழ்வை நோக்கி வீறுநடை போட்டிடுவோம். உழைப்பைப் போற்றுவோம், உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வகையாக வாழ்ந்திடுவோம்.

''ஓயுதல் செய்யோம் தலை சாயுதல்
செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல
வண்மைகள் செய்வோம்''

□

பெரிய மனுஷத் தன்மை?

இன்னுமொரு தொல்லை, பெரிய மனுஷத் தன்மைக்கும் சரீர உழைப்புக்கும் விரோதம் என்று நம்மவர்களில் சிலரின் மனதில் எந்தப் பிசாசோ எழுதி வைத்து விட்டது. ஆகையால் சொற்பப் பணமுடையவன் கூட, தனக்கு ஜலம் கொண்டு கொடுக்க ஓராளும், குளிப்பாட்ட ஓராளும், தலை துவட்ட ஓராளும் வைத்துக் கொண்டு, பாயோடு கிடக்கும் கிழவியைப் போல் நடந்து கொள்ளுகிறான். (பாரதி சமூகம்—பக்கம் 177)

பாரதியாரும் இளைஞரும்

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு
துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்ச் சமுதாயத்திலும், இலக்கிய உலகிலும் ஒரு புரட்சியுகத்திற்கு அடிக்கல் நாட்டிய பெருமை தேசியக் கவி பாரதியாருக்கு உண்டு. அடிக்கல் நாட்டியது மட்டுமின்றி அதற்காக அரும்பாடுபட்டவரும் நமது பாரதியே! புதுமைச் சமுதாயம் காண தமது கவிதைகளையே சக்தி வாய்ந்த கருவிகளாக ஆக்கிக்கொண்டார். கற்பனை உலகிலும் கவித்துவ வானிலும் தம்மை மறந்து சஞ்சரித்துக் கொண்டிருந்த தமிழ்க் கவிஞர்களின் மரபில் புதிய மாற்றத்தைஏற்படுத்திச் சமுதாய மண்ணில் கால்களைப் பதித்தவர் பாரதி. ஆம்!

அவரது கவிதைகள் யாவும் சமுதாயத்திற்காகச் சமுதாயத்தை நினைத்தே பாடப்பட்டவை.

'நமக்குத் தொழில் கவிதை,
நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோரா
திருத்தல்—''

எனக் கவிதையைத் தொழிலாகக் கொண்டு, அந்தத் தொழிலையும் இந்நாட்டு மக்களுக்காகச் செய்தவர் பாரதி. இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற 'சமுதாயக் கவி' பாரதி எனில் அது மிகையன்று.

உயர்ந்த சிந்தனை, திடமான நம்பிக்கை, தெளிந்த தொலைநோக்கு இம்முப்பெருஞ் சக்திகளின் வெளிப்பாடாகவே அவரது கவிதைகளை நாம் காண்கின்றோம். அடிமைச் சகதியிலே என்பிலாப் புழுக்களென நெளிந்து கொண்டிருந்த கோடான கோடி இந்திய மக்களின் போர்



வீரனாக, புரட்சிக் கவிஞனாகப் பாரதி விளங்கினார்.

''சுவைபுதிது பொருள்புதிது
வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத
மாக்கவிதை''

என்று பாரதியே தனது கவிதைகளைப் பற்றிக் கூறுவது போல அவரது கவிதைகள் இறவாப் புகழ் பெற்றவை.

''வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழுதற்கே''

என்று மக்களுக்காகவே வாழ விரும்பியவர் பாரதி. அதனால்தான் விநாயகர் நான்மணி மாலையில் மணக்குள விநாயகரிடம்,

''கணக்குஞ் செல்வமும் நூறுவயது
இவையும் தரநீ கடவாயே''

கூடித் தொழில் செய்

என்று வேண்டிக் கொள்கிறார். என்ன காரணத்தினாலோ அவரது வேண்டுதல் பொய்த்து விட்டது. இளைஞராக வாழ்ந்து, இளைஞராகக் கவிதைகளை எழுதி இளைஞராகவே வாழ்வை முடித்துக் கொண்டார். வயதில் இளையவரானாலும் அறிவில் பெரும் ஞானியாகவே விளங்கியவர் பாரதியார்.

''இருள்சூழ்ந் திருந்த இவ்வைய
முழுதும்
எழக்கதி ரான இளைஞன் பாரதி''

என்று கவிஞர் கண்ணதாசன் கூறுவது போல ஞாயிறெனத் தோன்றி ஞானவொளி பரப்பியவர் நமது பாரதி.

இளைய பாரதமும் பாரதியும்

எழுச்சிமிகு பாரதத்தை உருவாக்கும் வல்லமை படைத்தவர்கள் இளைஞர்களே என்பதைப் பாரதி நன்குணர்ந்திருந்தார். எனவேதான் அவ்விளைஞர் சமுதாயத்திற்கு அச்சமின்மை, நாட்டுப் பற்று, உழைப்பின் உயர்வு முதலியவற்றைத் தமது பாடல்கள் பலவற்றிலும் வலியுறுத்துகின்றார்.

''இளைய பாரதத்தினாய்
வா, வா, வா
எதிரிலா வலத்தினாய்
வா, வா, வா
ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதயஞாயி றொப்பவே
வா, வா, வா
களையிழந்த நாட்டிலே
முன்போல
களை சிறக்க வந்தனை
வா, வா, வா
விளையும் மாண்பு யாவையும்
பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய்
வா, வா, வா

என்று சோம்பிக் கிடக்கும் பாரத நன்னாட்டு இளைஞர்களைத் தட்டி எழுப்புகின்றார். இளைஞர்களின் சக்திகளை ஒன்று திரட்டி, அதைக் கொண்டு எதையும் சாதிக்க முடியும் என்று பாரதி நம்பினார். எனவே, இந்நாட்டு இளைஞர்களுக்கு அவர்களது மரபுப் பெருமையை விளக்குகின்றார்.

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம்
வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே''

என்று பாரம்பரியப் பெருமையைப் பேசுகிறார் பாரதி. முந்தையர்கள் வாழ்ந்தது மட்டுமன்றி, அவர்களது சிந்தையில் ஆயிரமாயிரம் சிறந்த எண்ணங்கள் தோன்றி அதனால் அறவாழ்க்கையும், ஆன்மீக வாழ்க்கையும் தலை சிறந்தன இந்நாட்டில். இவ்வாறு சந்ததி சந்ததியாக, பரம்பரை பரம்பரையாக முதிர்ந்த அறிவும், ஆழ்ந்த அன்பும் கொண்ட உயர்தனிச் செந்நெறியைப் பின்பற்றிய எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து வலுவூட்டிய நாடு எங்கள் பாரதநாடு.

''தீரத்தி லேபடை வீரத்திலே—
நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேஉயர் நாடு''

என்று பாரத மக்களின் வீரம், அறிவு, ஆன்மீகப் பாரம்பரியங்களை இளைஞர்களுக்கு உணர்த்துகின்றார். வீரர்களும் தீரர்களும் வாழ்ந்தது இந்நாடு.

''மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த
பொன்னாடு''

என்கிறார். நாகரிகத்தின் முதிர்ந்த நிலையைக் கண்டு, பரிபூரண ஞானம் பொலிந்தது. நமது பாரத நாடு. எங்கள் நாட்டில்தான் புத்தர் போன்ற ஞானிகளின் பேரருள் பொங்கியது. இந்தப் பாரம்பரியத் திற்கு நாம் அனைவரும் வாரிசுகள். வீரத்திலும், அறிவிலும், வலியவர் களின் வழித்தோன்றல்களாகிய நாம் கலையழிந்து நிற்கலாமா? வலிகொண்ட இளைய பாரதத்தை உருவாக்கவே பாரதி பழம் பெருமை களைக் கூறுகின்றார்.

பாரம்பரியப் பெருமைகள் மட்டு மல்லாது இந்நாட்டு இளைஞர் களுக்கு நாட்டுப்பற்று, அச்ச மின்மை, உழைப்பின் உயர்வு, பொதுவுடைமை முதலானவற்றை யும் பாரதி வலியுறுத்தத் தவற வில்லை.

ஒருமைப்பாட்டுணர்வு

வேற்றுமையில் ஒற்றுமைகண்ட நாடு பாரத நாடு, பலவேறு மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து பாரதம் என்னும் ஒருகுடைக் கீழ் ஒன்றுபட்டு நிற்கும் இனம் பாரத இனம்.

''முப்பதுகோடி முகமுடையாள்
உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்
—இவள்
செப்புமொழி பதினெட்டுடை
யாள்எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்''

என்று வேற்றுமையில் ஒற்றுமை யாய்ப் பாரதத் தாயைப் படைக் கின்றார். பாரதி இந்நாட்டு இளைஞர்களிடம் மிகவும் வலி யுறுத்திச் சென்றது என்ன என்று ஆராய்ந்தால் அது நாட்டு ஒருமைப் பாடே என்பது புலனாகும். பிரிவினை என்னும் நச்சரவு நம் இளைஞர்களைத் தீண்டிவிடுமே யானால் அல்லது அவர்கள் உள்ளத் தில் குடி கொண்டு விடுமேயானால் அதைவிட நம் நாட்டிற்குப் பெரும் பகை வேறில்லை. வெள்ளையரை எதிர்த்து விடுதலை பெற வேண்டும் என்ற காரணத்திற்காக மட்டும் ஒற்றுமைக்குரலை உயர்த்தவில்லை பாரதி. வருங்காலச் சுதந்திர இந்தியாவின் வளமும், முன்னேற்ற மும் நாட்டு ஒற்றுமையின் அடிப் படையிலேயே ஏற்பட வேண்டும் என்று நம்பினார்.

என்ன செய்ய வேண்டும்?

''சுவாமி! ஞானநெறியில் செல்வோன் எத்தொழிலை முதலில் செய்ய வேண்டும்.''

பாரதியார்

''முதலில் நாக்கை வெறுக்க வேண்டும். பொய், குறளை, கடுஞ்சொல், இன்னாச் சொல், தற்புகழ்ச்சி ஆகியவை கூடாது. உண்மையையே பேச வேண்டும். அச்சத்தை நீக்குவதே அந்தக்கரணத்தை வெளுத்தலாகும். அந்தக் கரணம் தூயதானால் விடுதலை கிட்டும்''.

குள்ளச்சாமி

கேட்டிலும் துணிந்து நில்

"எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில்
யாவருக்கும் அந்நிலை பொது
வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—
வீழில்
முப்பது கோடி முழுமையும்
வீழ்வோம்"

என்று பாரதி உணர்த்தியதுபோல ஒருமை உணர்வை வேறு யாரால் உணர்த்த முடியும். எத்தனைச் சக்தி வாய்ந்த சொற்கள். வாழ்விலும், தாழ்விலும் பாரத மக்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்கிறார்.

மொழியாலும், இனத்தாலும் மட்டுமன்றிச் சாதிப் பிரிவுகளாலும் ஒருமைப்பாடு குலைக்கப்படுவதைக் கண்டு அவர் மனம் புழுங்கினார். சாதியில் உயர்வு தாழ்வு என்பது எப்போதும் கிடையாது. உயர்ந்தவர் என்பது அவரவர் உள்ளத்தாலே பெறப்படுகின்றது. இளைஞர்களாகிய நாம் சாதி சமயப் பிணக்குகளுக்கு ஆளாகாமல் ஒன்றுபட வேண்டும் என்று கூறுகிறார்.

"ஜாதி மதங்களைப் பாரோம் —
உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின
ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தினராயினும்
ஒன்றே"

என்று முழங்கும் பாரதி, சாதி, இனச் சண்டைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்நாட்டினை அன்னியர் அடிமை கொள்ளும் செயலையும் சுட்டிக் காட்டுகின்றார். தம்முள் வேறுபட்டுச் சண்டைகள் செய்து கொண்டாலும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்ததனால் அவர்கள் சகோதரர்கள் அல்லவா? எனவே, அன்னியர்களுக்கு ஒரு சிறிதும் இடந்தர மாட்டார்கள்.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகல் என்ன
நீதி? ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—
தம்முள்
சண்டை செய்தாலும் சகோதரர்
அன்றோ"

என்று கூறுகிறார். "ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்று பிஞ்சு நெஞ்சத்திலும் ஒற்றுமை வித்தினைத் தூவுகின்றார்.

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்-
அன்பு
தன்னில் செழித்திடும் வையம்"

என்று சாதிப்பிரிவுகளைச் சாடியும்,

"யாரும் கும்பிடும் தெய்வம்-
பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்"
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று-
இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்'

என்று மதவேறுபாடுகளைக் கடிந்தும்

"வண்ணங்கள் வேற்றுமைப்
பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்
இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல்
காணீர்"

என்று நிறவேறுபாடுகளை நிந்தித்தும் பல இடங்களில் பாடுகின்றார். இதற்கு மேலும் உலகிலுள்ளோர் அனைவரையும் ஒன்றென மதிக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

"உடன்பிறந்தார்களைப் போலே-
இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
இடம்பெரி துண்டுவை யத்தில்-
இதில்
ஏதுக்குச் சண்டை செய் வீர்!"

என்று உலக ஒருமைப்பாட்டுணர்வை யும் போற்றுகின்றார்.

அச்சமின்மை

உள்ளத்தில் தெளிவும், நற் சிந்தனையும் கொண்டோரிடம் அச்சம் என்ற சொல்லுக்கே இட மில்லை. அச்சத்தினின்றும் விடு பட்டவனே எடுத்த செயலினை முறையாகவும் முழுமையாகவும் செய்ய இயலும். செயல் திறம் மிக்க இளைஞர்களிடம் அச்சத்தின்சாயலே கூடாது. எதனைக் கண்டாலும் எதனைச் செய்தாலும் அச்சமுற்று அவலங்கொள்வோரைக் கண்டு பாரதியார் மனங்கொதித்துப் பாடு கின்றார்.

'' நெஞ்சு பொறுக்கு தில்லையே- இந்த
நிலைகெட்டமனிதரை நினைத்து விட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே''

என்றும்,

'' அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொள்வாரடீ- கிளியே
ஊமைச் சனங்களடி''

என்றும், இந்நாட்டிளைஞர்கள் அஞ்சியஞ்சி நிதம் சாவதைக் காணச் சகியாது சினங் கொள்கிறார். அவ் விளைஞர்களைப் பார்த்து,

'' அச்சம் நீங்கினாயோ ? - அடிமை
ஆண்மை தாங்கினாயோ?''

என்று கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றார். அஞ்சுவது அஞ் சாமை பேதமை, என்பது உண்மை தான். ஆனாலும் யாண்டும், எப் போதும், எதற்கும் அஞ்சுவது கீழ் மக்களது இயல்பாகும். இந்திய நாட்டின் தனிப்பெரும் ஞானியான விவேகானந்தரும் நமது இளைஞர் களுக்குஇட்ட முதல் கட்டளை அச்சம் நீங்கி ஆண்மையுடன் வாழுங்கள் என்பதே ஆகும்.

'' அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெல்லாம்
எதிர்த்து நின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணிநம்மை
தூறுசெய்த போதிலும்
அச்சமில்லை.......''

என்று பாரதியின் பாடலை உணர்ந்து ஓதும் ஒருவனுக்கு அச்சம் பறந்தோடும் என்பதில் ஐய மில்லை. அச்சத்தால் அவலமுற்ற வனும் பேய் பிடித்தவனும் ஒன்றே என்கிறார்.

'' பயமெனும் பேய்தனை
யடித்தோம்-பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக்
குடித்தோம்''

என்பது பாரதியின் கூற்றாகும்.

உழைப்பின் உயர்வு

கடின உழைப்பு ஒன்றினால் மட்டுமே உலக நாடுகளில் சிறந்த நாடாக இந்தியா உயர்வு பெற முடி யும். அப்படிப்பட்ட கடின உழைப்பு நம்நாட்டு இளைஞர்களிடமிருந்து முழுமையாக வெளிப்பட வேண்டும். மற்ற நாடுகளைப் போல நாம் வெகு வாக முன்னேற வேண்டும் என்ற பேரவா பாரதியாருக்கு இருந்தது.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித்திருப் போரை
நிந்தனை செய்வோம்.

> **மனஉறுதி வேண்டும்**
>
> உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது. நாடிகள் மனதின் வசமாகும். ஆகையால், உடம்பிலுள்ள நோய்களைத் தீர்த்து வலிமையேற்றுவதற்கு, மனவுறுதி, நம்பிக்கை, உற்சாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத்தகும்.
>
> (பாரதியார்-சமூகம்)

என்று உழவையும், தொழிலையும் பாரதத்தின் இரு கண்களாகப் பாவிக்க வேண்டும் என்கிறார். எந்த வித உழைப்பையும் நல்காது நாளும் உண்டு, உறங்கிச் சுகங் காண் போரைத் தண்டிக்க வேண்டும் என் கிறார்.

மேலைநாடுகளில் ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றங்களைக் கண்டுவியப்பதோடன்றி, அத்தகைய அறிவியல் முன்னேற்றங்கள் நமது நாட்டில் இல்லையே என்று பாரதி பெரிதும் வருந்தக் காண்கிறோம்.

'' புத்தம் புதிய கலைகள் -பஞ்ச
பூதத்துச் செயல்களின்
நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே-அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில்
இல்லை''

என்னும் பாடலில் பாரதியின் ஏக்கப் பெருமூச்சு நன்கு வெளிப்படுகிறது. மேலை நாடுகளில் வளர்ந்து வரும் கலைகள் அனைத்தும் நம்நாட்டிலும் வளர வேண்டும் என்ற நோக்கில் இளைஞர்களை வெளிநாடுகளுக்குச் சென்றுவரக் கூறுகின்றார்.

'' சென்றிடுவீர் எட்டுத்திக்கும்-
கலைச்
செல்வங்கள் யாவுங்
கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்''

நம் நாட்டிற்குத் தேவையான, ஏற்றதான, இன்றியமையாத தொழில்கள் அனைத்தையும் நீங்கள் செய்தல் வேண்டும்; செய்யும் தொழிலையும் உண்மை உழைப்போடு உவந்து செய்ய வேண்டும் என்கிறார்.

'' உலகத் தொழில் அனைத்தும்
உவந்து செய்வோம்''

என்று கூறும் பாரதி,

'' ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம்
செய்வோம்
ஆலைகள்வைப் போம் கல்விச்
சாலைகள் வைப்போம்
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல்
செய்யோம்''

என்று அனைத்துத் தொழில்களையும் நம்நாட்டு இளைஞர்கள் கற்றுத் தொழில் வளம் மிக்க தன்னிறைவு பெற்ற நாடாக இந்தியாவைத் திகழச் செய்ய வேண்டும் என்று விரும்பினார். வான்வெளி இயலையும் கோள்களின் நிலைகளையும் நுண்மையாக ஆய்ந்து கணித்த நாடு நம் பாரத நாடு. அந்த மரபினைப் போற்றும் வகையில்,

'' வானையளப் போம் கடல்
மீனையளப் போம்
சந்திரமண் டலத்தியல்கண்டுதெளி
வோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம்
கற்போம்''

என்கிறார். தளராத மனமும் சலியாத உழைப்பும் கொண்டு ஆக்கங்கள் பல செய்திடும் இளைஞர்களைப் பாரதி இறைநிலைக்கு உயர்த்துகின்றார். ஆக்கல் தொழிலுக்கு இறைவனாகிய பிரம்மதேவனை உழைக்கும் இளைஞர்கள் வடிவில் காண்கிறார்.

'' அரும்பும் வேர்வை உதிர்த்துப்
புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே

பெரும் புகழ் நுமக்கே
இசைக்கின்றேன்
பிரம்மதேவன் கலைஇங்கு
நீரே!''

என்கிறார் பாரதி.

பொதுவுடைமைக் கருத்துக்கள்

இளைஞர்களின் மனதில் பொது உடைமைக் கருத்துக்களை ஆழப் பதிய வைத்தவர் பாரதி. ஏழை, பணக்காரன், என்னும் சமுதாய மேடு பள்ளங்களைச் சமன் செய்ய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுகின்றார். சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் அரைவயிற்றுக் கஞ்சிக்கும் கதியின்றி இன்னமும் அல்லற்படுவதைக் கண்டு நெஞ்சு பொறுக்காத பாரதி,

'' இனி ஒரு விதி செய்வோம் - அதை
எந்தநாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை
யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்''

என்று பொதுவுடைமைச் சமுதாயம் மலர போர்க்குரல் எழுப்புகின்றார். வலிமை கொண்டோர் நலிந்தவர்களையும், செல்வர்கள் ஏழைகளையும் சுரண்டுவதைக் கண்ட அவர், ''ஆண்பிள்ளைகளாகிய நாம் அவ்வாறு நடப்பதை அனுமதிக்கலாமா?'' என்கிறார். அப்படிப்பட்ட சுரண்டலை எதிர்த்துப் போராடும்போது நமது உயிரையும் துச்சமென எண்ண வேண்டும் என்கிறார். அப்பாடல் வருமாறு :

பொழுதெல்லாம் எங்கள் செல்வங்
கொள்ளை கொண்டு
போகவோ ? - நாங்கள் சாகவோ ?
அழுது கொண்டிருப் போமோ ?
ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ ? –உயிர்– வெல்லமோ ?

பொதுவுடைமைச் சமுதாயத்தைக் காண இளைஞர்களுக்கு அறைகூவல் விடுக்கும் பாரதி முதற்படியாக அனைவரையும் ஒப்ப மதிக்கும் நிலை உருவாக வேண்டும் என்கிறார்.

ஏழை என்றும் அடிமை என்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே

... ...

மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே!

பொருளாதார நிலையில் சரிநிகர் சமானமாக வாழும் அந்தப் பொதுவுடைமைச் சமுதாயம் வளர அனைத்திலும் அனைவர்க்கும் சம உரிமை வேண்டும்; இல்லையேல் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருந்தே தீரும். அந்த உரிமையை இளைஞர்களாகிய நாமே உணர்ந்து போற்ற வேண்டும் என்கிறார்.

'' நாமிருக்கும் நாடுநமது
என்பதறிந்தோம் – இது
நமக்கே உரிமையாம்
என்பதறிந்தோம் - இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி
அடிமைசெய் யோம் - பரி
பூரணனுக் கேயடிமை செய்து
வாழ்வோம் ''

என்று கூறுகின்றார். 'யாமார்க்கும் குடியல்லோம்' என்று குடியாட்சித் தத்துவத்தை அப்பர் பெருமான் அன்றே கூறிச் சென்றார். அம்மரபைப் போற்றும் வகையில் பாரதியும், பாரில் இனி பரிபூரணனுக்கேயன்றி வேறு யார்க்கும் அடிமையில்லை என்று கூறுகிறார்.

பாரதியின் பொற்காலம்

''பழமைக்கும் புதுமைக்கும் பாலம் சமைத்தவர் பாரதி; அரசியல் விடுதலைக்கும், சமுதாய விடுதலைக்கும் போர்க்குரல் எழுப்பிய ஒப்பற்ற கவிஞன் பாரதி; அறம்பாட வந்த அறிஞன், புதிய திறம்பாடம் வந்த மறவன்'' என்ற பாரதிதாசனின் கூற்றுக்கொப்ப எண்ணற்ற கவிதைகளால் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டவர் பாரதி; இன்று தமிழகத்தின் கவிஞர்களுக்கெல்லாம் முதன்மைக் கவிஞராக, முன்னோடிக் கவிஞராக பாரதியார் விளங்குகின்றார். இளைஞர்களின் உள்ளத்தில் ஒருமைப்பாட்டுணர்வு, அச்சமின்மை, உழைப்பின் உயர்வு, பொதுவுடைமைக் கருத்துக்கள்முதலியவற்றை ஆழப் பதித்துச் சென்றவர் நமது பாரதியார். இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய உலகினைப் '' பாரதியின் பொற்காலம் '' என்றே கூறலாம்.

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்''

—பாரதி.

மகா சமர்த்தன்

காற்றே, வா. மெதுவாக வா.
ஜன்னல் கதவை அடித்து உடைத்து விடாதே.
காயிதங்களை யெல்லாம் எடுத்து விசிறி எறியாதே.
அலமாரிப் புத்தகங்களைக் கீழே தள்ளி விடாதே.
பார்த்தையா? இதோ, தள்ளி விட்டாய்.
புஸ்தகத்தின் ஏடுகளைக் கிழித்து விட்டாய்.
மறுபடி மழையைக் கொண்டு வந்து சேர்த்தாய்.
வலி யிழந்தவற்றைத் தொல்லைப் படுத்தி வேடிக்கை
பார்ப்பதிலே நீ மஹா ஸமர்த்தன்.

• • • •

எல்லாம் தெய்வம்

மனம் தெய்வம், சித்தம் தெய்வம், உயிர் தெய்வம்,
காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம், நீர், காற்று,
தீ, வான்,
ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள்-எல்லாம்
தெய்வங்கள்,
உலோகங்கள், மரங்கள், செடிகள்,
விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன,
மனிதர்-இவை அமுதங்கள்.

பாரதியார்

பாரதியாரின் வாழ்க்கை வரலாறு

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, எம்ஏ; பிஎச்டி;

பாரதியார் தம் வாழ்க்கையில் நிகழ்த்திய அரிய செயல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. ''பெரியோரை வியத்தலும் இலமே- சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'' என்று ஒரு புறநானூற்றுப் புலவர் பாடுகிறார். சிறியோரை இகழாமல் இருக்கலாம். ஆனால் பாரதியார் போன்ற பெரியோர்களை வியக்காமல் இருக்க முடியாது.

பாரதியார் வாழ்ந்த காலம் நம் பாரத நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு மிகவும் அல்லலுற்ற காலம். அக்காலத்தில் தோன்றிய பாரதியார் தம் சிறுவயது முதல் இயற்கையில் ஈடுபட்டுக் கவிதைகள் புனைந்தார். தேசிய உணர்ச்சி அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்தது; தியாகங்கள் பல புரிந்தார்; ஏழைகளைக் கண்டு நெஞ்சம் உருகினார்; வறுமை அவரை வாட்டியது; அளவற்ற துன்பங்களுக்கு ஆளானார்; அவற்றிற்கெல்லாம் அவர் மனம் தளரவில்லை; சாதி மத வேற்றுமைகளைச் சாடினார்; பெண்ணடிமையை வெறுத்தார்; எல்லா உயிரினங்களையும் நேசித்தார். நேர்மையும், அஞ்சாமையும் அவருடைய அணிகலன்கள். இவை போன்ற பல அரிய பண்புகளை விளக்கும் பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் உண்மையில் நம் உள்ளத்தை நெகிழச் செய்கின்றன.

பிறப்பும் வளர்ப்பும்

பாரதியார் 1882-ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் மூல நட்சத்திரத்தில் (11-12-1882) பிறந்தார்; தந்தையார் பெயர் சின்னசாமி அய்யர்; தாயார், இலட்சுமி அம்மாள். பாரதியாருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் சுப்பிரமணியம். அவரை அவர்கள் சுப்பையா என்று கூப்பிடுவார்கள். பாரதியாருக்குப் பிறகு பெண் மகவு ஒன்று பிறந்தது. அதற்குப் பாகீரதி என்று பெயரிட்டார்கள். பாரதியாரின் ஐந்தாவது வயதில் அவருடைய தாயார் இறந்துவிட்டார். எனவே, இரண்டு குழந்தைகளையும் வளர்க்கும் பொறுப்பைக் கருதிச் சின்னசாமி அய்யர் வள்ளியம்மாள் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். வள்ளியம்மாள் பாரதியாரை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தார். தந்தை எதிலும் கண்டிப்பானவர். அவர் எதிரே நின்று பேசவும் பாரதியார் அஞ்சுவார். ஆனால் அவர்தம் சிற்றன்னை மூலமாகத் தம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வார்.

கல்வி

சின்னசாமி அய்யர் எட்டையபுரம் அரண்மனையில் பெரிய பதவியில்

பணியாற்றி வந்தார். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பெரும் புலமை வாய்ந்தவர்; மேனாட்டுக் கணிதத்தில் வல்லவர்; ஏழைகள் மீது இரக்கமும் அவர்கள் நலத்தில் நாட்டமும் கொண்டவர். தன் மகன் சுப்பையாவுக்கு ஐந்தாவது வயதில் எழுத்தறிவு தொடங்கி வைத்தார்; தம் மகன் உடல் நலத்தில் கூடக் கவனம் செலுத்தாமல் எப்போதும் கல்வி கற்பிப்பதிலும் கணிதம் பயிற்றுவிப்பதிலும் கண்ணும் கருத்துமாய் இருந்தார். தம் வயதோடு ஒத்த சிறுவர்களோடு விளையாட வாய்ப்பு ஏற்படாதபடித் தம் தந்தையார் தமக்குக் கல்வி கற்பித்ததைப் பாரதியார் தம் சுய சரிதையில்,

''வேண்டு தந்தை விதிப்பினுக்
கஞ்சியான்
வீதி யாட்டங்க ளேதிலும்
கூடிடேன்
தூண்டு நூற்கணத் தோடு
தனியனாய்த்
தோழமை பிறிதின்றி
வருந்தினேன்''

என வருந்திப் பாடுகின்றார்.

பாரதியாருக்குப் பள்ளிப் படிப்பில் மிகுதியாகப் பற்றில்லை. தம் ஏழாவது வயதிலேயே அவர் இயல்பாகவே கவிகள் பாடும் ஆற்றல் பெற்றார். தம் பதினோராவது ஆண்டில் புலவர்கள் கூடிய பெரும் சபையில் புதிதுபுதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே கவிகளை முழுமையாக விரைந்து இயற்றி அவையோர் அனைவரையும் வியப்படையச் செய்தார். சபையில் கூடியிருந்த புலவர்கள் அவரது கவித்திறத்தைப் பாராட்டி, ''பாரதி'' என்ற பட்டம் அளித்தனர். அன்று முதல் அவர் பாரதியார் என்றே அழைக்கப்பட்டார்.

சுமை எங்கே?

'சாமி, கந்தைகளைக் கட்டி முதுகின் மேல் வைத்துச் சுமப்பதேன்' என்றேன். 'நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கின்றாய். நான் முதுகில் சுமக்கிறேன்' என்று குள்ளச்சாமி கூறி மறைந்தார். ''அஞ்ஞானப் பழங் குப்பைகளையும், பழங் கவலைகளையும், பழந் துன்பங்களையும், பழம் சிறுமைகளையும் மனத்தில் வைத்து வீணாய்ச் சுமந்து திரியும் மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டே குள்ளச்சாமியார் இவ்வாறு கூறினார்.''

பாரதியார்

தொடக்கமுதல் பாரதியார் ஆங்கிலக் கல்வி நிலையங்களிலேயே படித்தார்; தனித்தமிழ் ஆசிரியரிடம் அவர் தமிழ்ப்பாடம் கற்றதில்லை. இவர் திருநெல்வேலி இந்து உயர்நிலைப்பள்ளியில் சுமார் மூன்று ஆண்டுகள் மூன்று முதல் ஐந்தாம் படிவம் வரை படித்தார். அக்காலங்களில் அவருடைய அரிய கவிதை ஆற்றலையும், பிறரை வாயடக்கும் அறிவு நுட்பத்தையும் பேச்சு வன்மையையும் உணர்த்தவல்ல நிகழ்ச்சிகள் பல கூறப்படுகின்றன. ஒரு சமயம் தமிழ்ப் பயிற்சிமிக்க காந்திமதிநாதபிள்ளை என்பவர் ''பாரதி சின்னப்பயல்'' என்ற இறுதி அடியைக் கொடுத்து, அதைக் கொண்டு வெண்பா ஒன்றைப் பாடும்படி பாரதியாரைக் கேட்டார். பாரதியார் சிறிது நேரத்திற்குள் ஒரு வெண்பாவைப் பாடினார். அதன் மூன்றாம் அடி இறுதியில் ''காந்திமதி நாதனை'' என்று அமைத்து,

''..............காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்''

என்று பாட்டை முடித்தார். ''காந்திமதிநாதனைப் பார், அதி சின்னப் பயல்'' என்பது இதன்

உட்கார்ந்திருப்பவர்கள் : மகள் சகுந்தலா (பாப்பா)
மனைவி செல்லம்மாள்

நிற்பவர்கள் : மகள் தங்கம்மா, நண்பர் ராமு,
நண்பர் விஜயராகவன், பாரதியார்

பொருள். அதைக் கேட்டு அனைவரும் பெருவியப்பெய்தினார்கள்.

மற்றொரு சமயம் தமிழ் வகுப்பில் 'காலரி'யில் உயர்ந்த இடத்தில் அமர்ந்திருந்த பாரதியாரிடம், தமிழாசிரியர் வெறுப்புக் கொண்டு ஒரு கேள்வி கேட்டார். அதற்குப் பாரதியார் விடை ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார். ''மேகம் போலக் கவிகள் பொழிவதாக ஊரிலே புகழப்படுகிறீர், காளமேகம் போல் பொழியாமல் சும்மா இருப்பதேன்?'' என்று ஆசிரியர் ஏளனமாகப் பேசினார். உடனே பாரதியார், ''பண்டிதர் அவர்களுக்கு மேகத்தின் சாமான்ய குணம்கூடத் தெரியாமல் இருக்கிறதே? காளமேகம் தனக்குத் தோன்றிய பொழுது மழைபொழிவதன்றிப் பண்டிதர் உத்திரவுக்குப் பயந்து பெய்வதில்லையே. இஃதறியாமல் என்னைப் பேசும்படி கட்டாயப்படுத்தும் பண்டிதரிடத்தில் பரிவு காட்டுவதெப்படி?'' என்று அமர்ந்த வண்ணம் விடை கூறினார். வகுப்பு மாணவர் அனைவரும் அதைக் கேட்டுக் கைகொட்டி நகைத்தார்கள். ஆசிரியர் வெட்கமடைந்தார். இங்ஙனம் பல சமயங்களில் தம்மை எதிர்த்த புலவர்களைப் பாரதியார் அடக்கிய திறத்திலிருந்து அவருடைய அறிவு நுட்பமும் தமிழ்ப் புலமையும் நன்கு புலப்படுவனவாகும்.

திருமணம்

1897- ஆம் ஆண்டு ஆனி மாதம் 15-ஆம் நாள் பாரதியாருக்குத் திருமணம் நடைபெற்றது. அப்போது பாரதியாருக்குப் பதினான்கு வயது. மனைவியின் பெயர் செல்லம்மாள். அவருக்கு வயது ஏழு. அக்காலத்தில் திருமணம் முடிந்தவுடன் கணவன் மனைவியர் பேசுவதில்லை. கணவனைக் கண்டால் மனைவி ஓடி ஒளிய வேண்டும். ஆனால் பாரதியார் தன் மனைவியிடம் பலர் முன்னிலையில் காதற் பாடலைப் பாடலானார்.

தந்தையின் மறைவு

பாரதியாருக்குத் திருமணமான அடுத்த ஆண்டு அவருடைய தந்தை சின்னசாமி அய்யர் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அவர் எட்டையபுரத்தில் பருத்தியந்திர மணைச்சாலை ஒன்றை நிறுவி நடத்தினார். அதில் பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டது. இதனால் அவர் வறுமைக்கு உள்ளாகி மனமுடைந்து, தம் உயிர் துறந்தார். பொருளிழப்பே தம் தந்தையார் மரணத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்த பாரதியாருக்குப் பணத்தின் மீதே வெறுப்புண்டாயிற்று.

காசிக்குச் செல்லுதல்

காசியில் பாரதியாரின் அத்தை குப்பம்மாள் தம் கணவர் கிருஷ்ணசிவன் அவர்களுடன் செல்வச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். தந்தையார் இறந்த பிறகு பாரதியார் ஆதரவு அற்றவரானார், அவர் நிலையை உணர்ந்து அத்தை குப்பம்மாள் காசிக்கு வரும்படி அழைத்தார். அவர் அழைப்பை ஏற்றுப் பாரதியார் காசிக்குச் சென்றார். அங்கு அத்தையார் அவரைக் கலாசாலையில் சேர்த்தார். கலாசாலையில் பாரதியார் இந்தி, சமஸ்கிருதம் முதலியவைகளை மிக விரைவில் கற்று நுழைவுத் தேர்வில் முதன்மையாகத் தேறினார்.

அத்தையார் தம் மக்களினும் பாரதியாரிடம் மிக்க அன்பு கொண்டு அவருக்கு வேண்டிய பொருள்களை



வ. வே. சு. அய்யர்

வாங்கிக் கொடுப்பார். பள்ளிக்குச் செல்லும் நேரம் தவிரப் பாரதியார் கங்கைக் கரையில் அமர்ந்து கவிதை புனைவார்; இயற்கை அழகில் ஈடுபடுவார்; நண்பர்களுடன் படகில் சென்று இன்பமாகக் காலங் கழிப் பார். அந்தணருக்கேற்ற ஆசாரங் களை அறவே விட்டொழித்தார். எல்லாச் சாதியாருடனும் கைகோத் துக் கொண்டு உலவுவார். எப்போதும் கோட்டும், சட்டையும், தலையில் தலைப்பாகையும், காலில் 'பூட்சும்' அணிந்திருப்பார். தம் குடுமியை நீக்கிக் 'கிராப்' செய்து கொண்டார். அதை வகிடு எடுத்துச் சீவிவிடுவார்; மீசையும் வளர்த்துக் கொண்டார். அந்தணருக்குப் பிடிக்காத இவ்வலங்கோலங்களைக் கண்ட அவருடைய மாமன் கிருஷ்ணசிவன், அவரை மிகவும் வெறுத்தார். ஆனால் அவருடைய அத்தையின் அன்பு சிறிதும் குறைய வில்லை. அவரை மிகவும் பரிவோடு வழக்கம்போல் ஆதரித்து வந்தார். முடிவில் மாமன் கிருஷ்ணசிவன், பாரதியாரின் கவித்திறமையையும் திருவெம்பாவை போன்ற பக்திப் பாடல்களை உருக்கமாகப் பாடும் பாரதியாரின் இசைப்புலமையையும் உணர்ந்து அவரைப் புகழ்ந்தார்.

எட்டையபுரத்துக்குத் திரும்புதல்

காசியில் பாரதியார் படித்துக் கொண்டிருந்தபோது, வடநாட்டி லேயே தங்கிவிட முடிவு செய்தார். எட்டையபுரம் அரசர் காசிக்குச் சென் றிருந்தபோது, பாரதியாரைக் கண்டு எட்டையபுரம் வருமாறு அழைத்தார். பாரதியார் தம்மிடத் தில் அடிமையாக இருக்க வேண்டாம் என்றும், அவர் விருப்பம்போல் இருக்கலாம் என்றும் அரசர் கூறி னார். அவர் சொல்லை மீறி நடக்க மனமின்றிப் பாரதியார் எட்டைய புரத்திற்குத் திரும்பினார். அங்குத் தம் மனைவி செல்லம்மாளுடன் குடும்ப வாழ்க்கை நடத்தினார். அரசர் பல வசதிகள் அளித்தும் பாரதியாருக்கு எட்டையபுர வாழ்க்கை பிடிக்கவில்லை. அவர் உள்ளம் பொது வாழ்க்கையை நாடி யது. எனவே, அவர் எட்டையபுரத் திலிருந்து மதுரைக்குச் சென்றார்.

பொது வாழ்க்கைத் தொடக்கம்

மதுரையில் அவர் சேதுபதி பள்ளி யில் மூன்று மாதங்கள் தமிழாசிரிய ராகப் பணியாற்றினார். பிறகு சென்னையில் 'சுதேசமித்திரன்' பத் திரிகையில் வேலைக்கு அமர்ந்து, தேசத் தொண்டினைத் தொடங் கினார். அவர் 'சுதேசமித்திர'னில்

தேச பக்தர் போல்நடிக்கும் பொய்யர்களைத் தாக்கியும், உண்மையான தேசத் தொண்டர்களை ஊக்கியும் கவிகள் இயற்றினார். நாட்டின் வறுமையைக் குறித்து அவர் உள்ளம் கொதித்தது. தமிழர்கள் கல்வியறிவு இன்றி இருக்கும் நிலையை நினைந்து வருந்தி, அவர்களை இடித்துக் கூறிப் பல பாடல்களும், கட்டுரைகளும் எழுதினார். அப்பாடல்களைத் தமிழறிஞரும் தேச பக்தருமான வ. உ. சிதம்பரம் பிள்ளை பாராட்டி அத்தகைய பாடல்களை இயற்றும்படி பாரதியாருக்கு ஊக்கமூட்டினார்.

'சுயராஜ்'யக் கொள்கை

1906-இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் புத்துயிர் பெற்று விளங்கியது. அக்காங்கிரசுக்குப் பாரதியார் சென்றார். அது பாரதியாரைப் புது மனிதராக்கியது. அப்போது காங்கிரஸ் தலைவராய் இருந்த தாதா பாய் நௌரோஜி ''சுயராஜ்யம்'' என்னும் குரலை எழுப்பினார். வைஸ்ராய் கர்சன் என்பவர் வங்காளத்தை மேல் வங்காளம், கீழ் வங்காளம் என்று இரண்டுகூறுகளாகப் பிரித்தார். இதனை வங்காளிகள் மிக்க ஆத்திரத்துடன் எதிர்த்தார்கள். இதிலிருந்து பிறந்ததுவே சுயராஜ்யக் கிளர்ச்சி. அக் காங்கிரஸில் உள்நாட்டுப் பொருள்களையே வாங்குவது, வெளி நாட்டுப் பொருள்களை வாங்குதல் கூடாது, நாட்டுக் கல்வி, சுயராஜ்யம் ஆகியவை பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'இந்தியா' பத்திரிகை

பாரதியாருக்குத் தேசபக்தி உணர்ச்சி மேலோங்கியது. அவர் உள்ளத்தில் தீவிர தேசியப்புரட்சி வேரூன்றியது. தம் புரட்சிக் கருத்துக்களை வெளியிடச் ''சுதேசமித்திரன்'' இடந்தராது என்பதை உணர்ந்து, அதன் பணியிலிருந்து விலகிக் கொண்டார். பின்பு பல நண்பர்களின் உதவியைக் கொண்டு 'இந்தியா' என்ற தமிழ் வாரப் பத்திரிகையைத் தொடங்கினார். அவர் கல்கத்தா காங்கிரசின் புதுக் கொள்கையை ஆதரித்து எழுதினார். மேலும் பாட்டு, கேலி செய்யும் படங்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு முதலியவைகளும் வெளியிடப்பட்டன. 'இந்தியா' பத்திரிகை தொடங்கிய சிறிது காலத்திற்குள் பாரதியாரின் பெயர் பரவலாயிற்று.

சூரத் காங்கிரஸ்

1907-ஆம் ஆண்டில் சூரத் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. தீவிரவாதிகளை மிதவாதிகள் எதிர்த்தார்கள். அதில் தீவிரவாதிகளுக்குத் திலகர் தலைவராக விளங்கினார். கல்கத்தா தீர்மானங்களைச் சிறிதும் மாற்றக் கூடாது என்று திலகரைச் சார்ந்தவர்கள் உறுதியாகக் கூறினார்கள். திலகருக்கு ஆதரவாகத் தமிழ் நாட்டிலிருந்து நூறு பேர் சென்றிருந்தார்கள். அவர்களுள் பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை முதலியவர்களும் ஆவர். மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பெரிய குழப்பம் ஏற்பட்டு

உறுதியும் ஆசையும்

உடம்பை வலிமை செய்வதற்கு மன வலிமை வேண்டும். கஸரத் முதலிய பழக்கங்களில் உடம்பு பலமேறுவதற்கு மனவுறுதியும் ஆசையுமே முக்கிய காரணங்களாக வேலை செய்கின்றன.

(பாரதி—சமூகம்—பக்கம் 173)



பாரதியார் புதுவையில் வாழ்ந்த முதல் வீடு

காங்கிரஸ் நடைபெறாமல் போயிற்று.

பாரதியார் மிகச் சிறந்த கவிஞர். அவர் கவிகள் இயற்றுவதோடு நிற்காமல் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். இதற்குத் திலகர், அரவிந்தர், விபினச் சந்திரபாலர் காரணமாவர்.

புதுச்சேரிக்குப் போதல்

பாரதியார் சென்னையிலிருந்து திரும்பியதும் திலகரின் கொள்கைகளையும் அவற்றைச் செயல்படுத்தும் முறைகளையும் ஆதரித்துத் தீவிரமாக ''இந்தியா'' பத்திரிகையில் எழுதினார். 1908-ஆம் ஆண்டுத் திலகருக்கு ஆறு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. திலகர் கட்சியைச் சேர்ந்த தலைவர்களை ஒவ்வொருவராய் அரசினர் சிறையில் அடைத்தனர். வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோரும் சிறைத்தண்டனை பெற்றனர். பின்பு ''இந்தியா'' பத்திரிகையை வெளியிடுபவர் சிறையில் அடைக்கப்பட்டார். அடுத்து அந்த நிலை பாரதியாருக்கு ஏற்படும் என்று நண்பர்கள் உணர்ந்தார்கள். பாரதியும் சிறைசெல்ல அஞ்சவேயில்லை; அஞ்சும் இயல்பும் அவருக்கில்லை. ஆனால் அவர் சிறை செல்வதைக் காட்டிலும் அவரது கவிதைத் தொண்டு நாட்டுக்கு மிகவும் இன்றியமையாதது என்று அவருடைய நண்பர்கள் பலர் கருதினர். இதை அவர்கள் அவரிடம் வற்புறுத்தினர். அவர்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்கிப் பாரதியார் 1908-ஆம் ஆண்டுப் புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது புதுச்சேரி பிரஞ்சு நாட்டினருக்குரியதாய் இருந்தது; புதுவையில் புகுந்தவர் மீது பிரிட்டிஷ் அரசாங்கம் சட்டப்படி ஒன்றும் செய்யமுடியாது. இதை உணர்ந்த பாரதியார் அங்குச்

சென்றார். குப்புசாமி அய்யர் என்பவருக்குத் தம் நண்பர் ஒருவரிடமிருந்து கடிதம் வாங்கிச் சென்று, புதுவையில் அவர் வீட்டில் தங்கினார்.

புதுவை வாழ்க்கையின் தொடக்கம்

சென்னை அரசியலாரின் ஏவலால், பிரெஞ்சு போலீசார் குப்புசாமி அய்யரை மிரட்டிப் பாரதியாரை அவர் வீட்டிலிருந்து வெளியேறும்படிச் செய்தனர். பாரதியார் புதுவையில் வேறு எங்குத் தங்குவது என்று வழி தெரியாமல் தெருத் திண்ணையில் உறக்கமின்றி அமர்ந்திருந்தார். அப்போது எதிர்பாராமல் குவளை கிருஷ்ணமாச்சாரியார் எங்கிருந்தோ அங்கு வந்தார்; பாரதியாரைக் கண்டார்; அவர் நிலைமையைக் கேட்டு உணர்ந்தார், உடனே அவருடைய நண்பரான சுந்தரேசய்யர் உதவியைக் கொண்டு பாரதியார் இன்னொரு வீட்டிற்குக் குடிபுக ஏற்பாடு செய்யப்பட்டது. தூய சிந்தை படைத்த நல்லோர்க்குத் தெய்வம் உற்ற சமயத்தில் உதவும் என்பது இந்நிகழ்ச்சியிலிருந்து உண்மையாகிறது. பின்பு பாரதியாரின் நண்பரான சீனிவாசாச்சாரியார் சென்னையிலிருந்து புதுவைக்கு வந்தார். அவர் முன்பே புதுவையில் இருந்தவராகையால், பாரதியாரை அவருக்குத் தெரிந்தவர்கள் பலருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். நாளடைவில் பாரதியாருக்குப் பல சீடர்கள் ஏற்படலாயினர். புதுச்சேரியின் கடற்கரையும், மடுவும், தோட்டங்களும், வீதிகளும் பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்தன.

புதுவையில் 'இந்தியா' பத்திரிகை

தம் நண்பர்களின் உதவியைக் கொண்டு பாரதியார் புதுவையில் ''இந்தியா'' பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். இதற்கு உதவி செய்த முக்கிய நண்பர்களுள் சீனிவாசாச்சாரியார், இலட்சுமி நாராயணய்யர், திருமலாச்சாரியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மக்களின் அச்சம், அரசியலாரின் சீற்றம் இவற்றுக்கிடையே

பாரதியார் குடும்பம்



'இந்தியா' வெளியிடப்படும் நிலை இருந்தது. இருப்பினும் அப்பத்திரிகைக்குச் செல்வாக்கு இருந்தது. ஆனால் அதைப் படிக்கும் தமிழர்கள் வெளிப்படையாகப் படிக்க முடியாது. தடை செய்யப்பட்ட பத்திரிகையைப் படிப்பது போலவே அதை மறைமுகமாகப் படித்து வந்தார்கள். நாளடைவில் 'இந்தியா' பத்திரிகைக்குப் பல இடையூறுகள் நேர்ந்தன. அது புதுச்சேரியிலிருந்து வெளியூர்களுக்குச் சரியாகப் போய்ச் சேர்வதில்லை. 'இந்தியா' அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய பணம் சரிவர வந்து சேர்வதில்லை. அஞ்சலகத்திலும் எப்போதும் சிறு சிறு தகராறுகள். இதனால் பாரதியாருக்கு உணவுக்கும் பணமில்லாமல் போயிற்று. வேலை செய்பவர்களுக்கும் துன்ப நிலை. முடிவில் பத்திரிகையை நிறுத்த வேண்டியதாயிற்று.

புதுவைக்கு அரவிந்தர் வருதல்

பாரதியார் மனமுடைந்த நிலையில் இருந்தபோது, அரவிந்தர் புதுவையைப் புகலிடமாக அடைந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்த ஆண்டு 1910. அரவிந்தர் மானிக்டோலா வெடிகுண்டு வழக்கில் சிறை செய்யப் பெற்று, விடுதலை அடைந்து, சில காலத்திற்குள் அவர் புதுச்சேரியை அடைந்தார். அரவிந்தரைக் கண்டதும் பாரதியார் பூரிப்படைந்தார். அவரோடு தாம் உரையாடியதன் பயனாய் பாரதியாருக்கு ஊக்கமும் மனவுறுதியும் வளர்ந்தன. பாரதியாரின் பேச்சு அரவிந்தருக்கு மகிழ்ச்சியை அளித்தது.

புதுச்சேரி தேச பக்தர்களுள் வ. வே. சு. அய்யரைப் போல் பல நூற் புலமை உடையவர் இல்லை எனலாம். உடற் பயிற்சியிலும் ஆர்வமுள்ளவர்; நீந்துவார்; ஓடுவார்; பாரதியாருக்கு இவற்றில் விருப்பம் இருப்பினும் சிறிதும் பயிற்சி இல்லை. வ. வே. சு. அய்யர் செய்யும் இவ்வுடற் பயிற்சிகளைப் பாரதியார் மிக்க ஆர்வத்துடன் கவனிப்பார். வ. வே. சு. அய்யர், பாரதியார், சீனிவாசாச்சாரியார் முதலியோர் அரவிந்தரின் வீட்டுக்குச் சென்று, உரையாடுவார்கள். அவர்கள் பேசத் தொடங்கினால் பொழுது போவதே தெரியாது. அவர்கள் பேச்சைக் கேட்போர்க்கு இயலாதன எல்லாம் எளிமையான செயல்களாகத் தோன்றும்.

ஆஷ் கொலையும் விளைவும்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளராயிருந்த ஆஷ் என்பவர் ஓர் இளைஞரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் தமிழ்நாட்டில் அடக்குமுறை மிகவும் கடுமையாக மேற்கொள்ளப்பட்டது. 'சுயராஜ்யம்', 'வந்தே மாதரம்' என்ற சொற்களைச் சொன்னவர்கள் மட்டுமன்றி, அவர்களுடைய உற்றார், உறவினர், நண்பர்கள், அறிமுகமானவர்கள், பார்த்தவர்கள், கேட்டவர்கள் எல்லோரையும் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினர். ஆஷ் கொலை செய்யப்பட்ட சமயம் பாரதியாரின் மனைவி செல்லம்மாள் தம் சொந்த ஊர் கடையத்தில் இருந்தார். கொலை நடந்து ஏழெட்டு நாட்களுக்குப் பிறகு அவர் புதுச்சேரிக்கு வந்து, பாரதியாருடன் வாழ்க்கை நடத்தினார்.

துன்ப நிலை

பாரதியார் தாய்நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்தே

தீர வேண்டும் என்று உறுதி கொண்டார். ஆனால் கையில் காசு கிடையாது. நண்பர்கள், உறவினர்கள் உதவியும் இல்லை. பாரதியார் தம் குடும்பத்தை எப்படியோ நடத்திச் சென்றார். அவரிடம் உண்மையான அன்பு கொண்ட சில நண்பர்கள் நடு இரவில் அவர் இல்லத்திற்கு வந்து, அவர்களால் இயன்ற அளவு பொருள் கொடுத்து உதவி, வணங்கிச் செல்வார்கள். அவர்கள் திரும்பிப் போகும்போது, இரகசிய போலீசாருக்குப் பயந்து, தலைக்கு முக்காடிட்டுக் கொண்டு போவார்கள்.

சில சமயம் வீட்டில் அரிசி இருக்காது. ஆனால், பாரதியார் தம் வீட்டு மாடியில் பத்துச் சீடர்களோடு "பூணூல் வேண்டுமா? வேண்டாமா?" என்பது பற்றிவிவாதித்துக் கொண்டு இருப்பார். தம்மீது இருக்கும் தேவையற்ற தடை உத்தரவினை நீக்கி விடும்படி அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்து கொண்டே இருந்தார். இங்கிலாந்து அரசருக்குக் கூட விண்ணப்பம் அனுப்பினார். வழக்கம்போல் "கவனிக்கப்படும்" என்ற பதிலே வந்தது. பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

பாரதியாருக்கு மேலும் மேலும் மெய்யுணர்வு வளர்ந்தது. இம்மெய்யுணர்வு கைவரப் பெற்ற நிலையில் தான் அவர், புதுவையில் 'பாஞ்சாலி சபதம்', 'ஞானரதம்', 'குயில் பாட்டு', 'கண்ணன் பாட்டு' முதலியவைகளை எழுதினார். அவர் அச்சடிப்பது போல் வேகமாக எழுதிக் குவிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

அருள் உள்ளம்

பாரதியார் ஓர் ஆன்ம ஞானி, எல்லா உயிர்களிடத்தும் அன்பாய்

> நாம் நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே பிறந்து விட்டோம். நம் கருத்துக்களை மக்கள் நானூறு ஆண்டுகள் கழித்து ஒத்துக் கொள்வார்கள்-
>
> **பாரதி**

இருக்க வேண்டும் என்று பிறருக்கு அறிவுறுத்தியதோடு அல்லாமல், தாமும் நடைமுறையில் நடத்திக் காட்டினார். ஒரு சமயம் கழுதைக் குட்டி ஒன்றைத் தம் தோள்மீது தூக்கி முத்தமிட்டார்.

ஒரு நாள் தம் வீட்டில் பாரதியார் கனகலிங்கம் என்ற ஓர் அரிஜன இளைஞனை இருக்கையில் அமர்த்தி, அவனுக்கு எதிரில் தாமும் அமர்ந்து, ஓமம் வளர்த்துப் பல பிராமணர்கள் முன்னிலையில் அந்த இளைஞனுக்குப் பூணூல் அணிவித்தார். பிறகு அவனைப் பார்த்து, "கனகலிங்கம்! நீ இன்றையலிருந்து பிராமணன். எதற்கும் அஞ்சாதே. யார் உனக்குப் பூணூல் அணிவித்தது என்று கேட்டால் பாரதி போட்டான் என்று தைரியமாய்ப் பதில் சொல்" என்றார். சுமார் 1911-1912-ஆம் ஆண்டில் நிகழ்ந்த பாரதியாரின் இத்தகைய தீவிர சமுதாயப் புரட்சி அவருடைய அஞ்சாமையையும் துணிவையும் உணர்த்துகின்றது.

ஒரு சமயம் பிச்சைக்காரன் ஒருவன் பாரதியாரிடம் வந்து காசு கேட்டான். அவரிடம் அப்போது காசு ஒன்றும் இல்லை. உடனே அவர் தாம் அணிந்திருந்த புது வேட்டியை அவிழ்த்துப் பிச்சைக்காரனிடம் கொடுத்து கோவணத்தோடு நின்றார். அதைக் கண்டு அவருடைய மனைவி திகைப்படைந்தார். பாரதியார் தம் மனைவியைப் பார்த்து, "அந்த ஏழை வேட்டியை வாங்கிக்

கொண்டு எவ்வளவு மகிழ்ச்சியோடு போகிறான். அவன் மகிழ்ச்சியைக் கண்டதும் நமக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது, இல்லையா?'' என்றார்.

இவை போன்ற நிகழ்ச்சிகளிலிருந்து அவரது பண்பட்ட உள்ளம் நன்கு தெரிகிறது. உண்மையில் அவர் மிக உயர்ந்த ஆன்ம ஞானி. இதை உணராத சிலர் அவரை அக்காலத்தில் 'பித்தர்' என்று மனம் கூசாமல் ஏசினர்.

புதுவையிலிருந்து நீங்குதல்

பாரதியாருக்குப் புதுவை வாழ்க்கையில் நாளடைவில் சலிப்பு ஏற்பட்டது; சிறைக்கு ஏன் அஞ்ச வேண்டும் என்று எண்ணினார். முடிவில் புதுவையை விட்டு நீங்க உறுதி கொண்டார். 1919-ஆம் ஆண்டு ஒரு நாள் தம் மனைவியோடு புறப்பட்டுப் பிரெஞ்சு எல்லையைக் கடந்தார். கடலூரில் போலீசார் பாரதியாரைக் கைது செய்ய வந்தார்கள். ''என் மீது என்ன குற்றம் என்பதைச் சொல்லி விட்டுக் கைது செய்யுங்கள்'' என்றார் பாரதியார். ''மேலதிகாரிகளின் உத்தரவு'' என்று கூறி அவரைச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். இருபது நாட்களுக்குப் பிறகு பாரதியார் ஒரு குறிப்பிட்ட ஊரில் இருக்கலாம் என்றும், அவர் விருப்பப்படி சுற்றக் கூடாது என்றும், ஏனைய ஊர்களுக்குச் சென்றால் அவர் கண்காணிக்கப்படுவார் என்றும் உத்தரவு பெற்று, விடுதலை அடைந்து, சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னை வாழ்க்கை

கடுமையான யோகப் பயிற்சியினாலும், தாம் அடைந்த தாங்கொணாத இன்னல்களாலும் பாரதியாரின் பொலிவு மிக்க உடல் மிகவும் மெலிந்து எலும்பும் தோலுமாக மாறியது. 'சுதேசமித்திர'னுக்குப் பல கட்டுரைகளும் பாடல்களும் எழுதி அனுப்பினார். பணமும் ஓரளவு கிடைத்து வந்தது. பெரும் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. காரணம், நாட்டில் கலையுணர்ச்சி சிறிதும் இல்லை; மக்களிடம் ஆங்கிலக் கல்வி மோகம் மிகுதியாக இருந்தது.

பாரதியார் இறுதியாகத் திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் வீதியில் ஒரு மாடி வீட்டில் குடியிருந்தார். பாரதியாரிடம் பக்தி கொண்டவர்களில் ஒருவரான குவளைக்கண்ணன் என்பவர் திருமாலுக்குப் படைத்த சர்க்கரைப் பொங்கல் முதலிய பிரசாதங்களை அவருக்குக் கொண்டு வந்து கொடுப்பார். பாரதியார் அவற்றைக் காக்கை, குருவிகளுக்கு இட்டு, அவைகள் உண்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்.

விபத்து

பாரதியார் நாள்தோறும் பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது வழக்கம்; கோயிலுக்குச் செல்லும்போதே கோயில் யானைக்குத் தேங்காயும் பழமும் அளிப்பார். ஒரு நாள் அந்த யானைக்கு மதம் பிடித்திருந்தமையால், அதன் நான்கு கால்களும் சங்கிலியால் பிணிக்கப்பட்டிருந்தன. அதைச் சுற்றி நான்கு புறங்களிலும் இரும்பு வேலி இடப்பட்டிருந்தது. அன்றும் பாரதியார் சிறிதும் அஞ்சாமல் தேங்காய், பழங்களை அளிக்க அதன் அருகில் சென்றார். அந்த யானைக்கு மத மயக்கத்தால் யார் என்று தெரியாமல் தன் கொம்பினால் அவரைக் குத்திக் கீழே தள்ளிற்று. அவர் அதன் கால்களுக்கிடையில்

மரம்போல் விழுந்து கிடந்தார்; உடம்பில் பலத்த காயம். அங்குக் கூட்டம் நிறைந்திருந்தது. ஆனால், யானை அருகில் சென்று பாரதியாரைத் தூக்கிக் கொண்டுவர எவரும் முன் வரவில்லை. 'நாள் தோறும் பழங்கொடுத்து வரும் அன்பருக்குத் தீங்கு செய்து விட்டோமே, என்று எண்ணி மிகவும் இரக்கங் கொண்டதுபோல், யானை அசையாமல் நின்றது. நண்பர் குவளைக்கண்ணனுக்கு இச்செய்தி எட்டியது; ஓடிவந்தார்; இரும்பு வேலிக்குள் தாவிக் குதித்தார்; இரத்த வெள்ளத்தில் கிடந்த பாரதியாரைத் தூக்கி எடுத்துத் தோள் மீது போட்டுக் கொண்டார். அங்கிருந்த மக்களின் உதவியுடன் பாரதியாரை வேலிக்கு வெளியே கொண்டு வந்தார். பாரதியார் உடனே இராயப்பேட்டை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். சில நாட்களுக்குள் அவருடைய காயம் குணமாயிற்று.

இறுதிக்காலம்

சென்னைக்கு அலி சகோதரர்களும், காந்தியடிகளும் வந்திருந்தார்கள். பாரதியாருக்கு அவர்களைப் பார்த்து உரையாடும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் காந்தியடிகளைக் கண்டு, 'சத்தியாக்கிரக இயக்கம்', 'ஒத்துழையாமை' ஆகியவற்றைப் பற்றி உரையாடினார். முடிவில் " வாழ்க நீ எம்மான்... " என்ற பாட்டை முழுதும் பாடி விட்டு வந்தார்.

பாரதியாரின் உடம்பு நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே வந்தது. ஆனால் அவருடைய மனவுறுதி சிறிதும் குன்றவில்லை. இறைவன் தியானத்தில் அவர் ஈடுபட்டார். முடிவில் 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாள் அவர் ஆவி உடலை விட்டுப் பிரிந்தது. பாரதியாரின் பருவுடல் தான் மறைந்தது. ஆனால் அவரது புகழுடல் தமிழர் உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெற்று விட்டது. உணர்ச்சி வெள்ளப் பெருக்கெடுக்கும் அவருடைய பாடல்களும், அவர் ஆற்றிய தியாகங்களும் ஆன்ம ஒளியும் என்றும் இந்நிலவுலகில் சுடர் வீசித் திகழ்ந்து மக்களின் மனவிருளைப் போக்கும் என்பதில் ஐயமில்லை.

□

பாரதியின் தொழிற் கொள்கை

ஏழைகளே இல்லாமற் செய்வது உசிதம். வயிற்று ஜீவனத்துக்கு வழியில்லாமல் யாருமே இருக்கலாகாது. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளையிடுவதிலும் உபயோகப் படுத்துகிறார்கள். ஐரோப்பிய யந்திரத் தொழிற்சாலைகள் ஏற்பட்டதிலிருந்து ஏழைகளுக்கு முன்னைக் காட்டிலும் அதிக துன்பம் ஏற்பட்டு இருக்கின்றனவேயன்றி ஏழைகளின் கஷ்டம் குறையவில்லை.

புண்ணிய மூர்த்திகள்

பாரதியாருக்கு
உதவியளித்த
செல்வந்தர்
ஆறுமுகம் செட்டியார்.

கல்வை சங்கர செட்டியார்

ஏழ்மையிலும் உதவிய சுந்தரேச அய்யர்
தமக்கு அதிக வருவாய் இல்லாத போதும், தம்
மனைவியின் நகைகளை அடகு வைத்துக்கூடப்
பாரதியாருக்குப் பணம் உதவியவர்.



பாரதியாரிடமும் அவரது குடும்பத்தாரிடமும்
மிகுந்த பாசம் கொண்டிருந்த பணிப்பெண்
அம்மாககண்ணு

பிரம்ம ராய அய்யர் என்று
பாரதியாரால் அழைக்கப்பட்ட
பேராசிரியர் சுப்பிரமணிய அய்யர்.

பக்கத்திருப்பவர் துன்பம் — தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத் திருந்தி உலகோர் — நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் — யோகி

— **பாரதியார்**

பாரதியார் கவிதை நடை

டாக்டர் ம. ரா. போ. குருசாமி
எம்ஏ; எம்லிட்; பிஎச்டி;

நடை

"நடை" என்ற சொல் 'நட' என்னும் மூலச் சொல்லிலிருந்து உருவானதாகும். நடக்கை, நடப்பு, நடத்தை, நடை முதலான சொற்கள் 'நட' என்ற சொல்லை அடியாகக் கொண்டு பிறந்தவையாகும்.

பொதுவாக இலக்கியத் துறையில் 'நடை' என்பது, கருதுவோன் மனத்துச் செய்தி ஒலி/சொல் வடிவாய்ப் புறப்பட்டு, 'நடந்து', கேட்போன் மனத்திலே சென்று பதியும் நிலையினைச் சுட்டுகின்றது. 'ஸ்டைல்' என்று ஆங்கிலத்தில் சுட்டப்படுகின்ற இதனை வடமொழிவாணர்கள் 'ரீதி' எனக் குறித்து, அதற்கென இலக்கணங்களும் வகுத்துள்ளனர். நடைக்கு எனத் தனியே தமிழில் இலக்கண நூலாக எதுவும் இல்லை. எனினும், 'நடை'யின் இயல்பினை வரையறுத்து ஓரளவு விளக்குதற்குத் தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பல குறிப்புகள் உள்ளன.[1] அவற்றையெல்லாம் விரித்துரைக்கப் புகாமல், ஓரிரண்டு குறிப்புகளை மட்டும் 'நடை' விளக்கமாக இங்கே காண்போம்.

தான் கருதிய பொருளைப் பிறர் உணர வேண்டும் என்பதற்காகவே படைப்பாளர்கள் எழுதுகின்றனர். இவ்வாறு உணர்த்தும் முயற்சியில் அவர்கள் கையாளும் மொழியின் ஆற்றலே 'நடை' எனச் சுருக்கமாகச் சொல்லலாம். இன்னும் சுருக்கமாக 'நடை என்பது உணர்த்தும் திறன்' எனலாம்.

நடை-முறைகள்

உணர்த்தும் திறன் பல்வேறு சொல்லாட்சி முறைகளால்-உருவாக்கப் பெறும் பல்வேறு பாக்களால்-கையாளப்பெறும் பல்வேறு உத்திகளால் சிறக்கும். இங்கே குறிப்பிட்ட சொல்லாட்சி, பா வடிவு, உத்தி யாவுமே நடையின் சிறப்புக்கான கூறுகளாகும். சில கவிதை (நூல்) களில் இவற்றுள் ஒன்றோ பலவோ இடம் பெற்று நடைக்கு நலம் ஊட்டும்.[2]

பாரதியார் கருத்து

நடை பற்றிப் பொதுவாகவும் தம் கவிதை நடை பற்றிக் குறிப்பாகவும் பாரதியாரே கூறியுள்ளவற்றையும் உணர்ந்து கொள்ளலாம்.

உரைநடை எழுதுகின்றவர்களுக்கு உதவக் கூடிய நல்ல குறிப்புகளைப் பாரதியார் 'வசன நடை' என்ற தலைப்பிட்டு எழுதியிருக்கிறார். அந்தக் குறிப்புகள் 'நடை'

1. காண்க : டாக்டர் இ. சுந்தரமூர்த்தி எழுதிய 'நடையியல் அறிமுகம்'
2. நடை நலத்துக்கு உதவுகின்ற சில கூறுகளே இங்கே சுட்டப்பட்டன.

பாரதியாரும் பதினொன்றும்!

மகாகவி பாரதியாருக்கும், 11-ஆம் எண்ணுக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

பாரதியார் பிறந்தது 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள்.

அவர் 'பாரதி' என்னும் பட்டம் பெற்றது, தம் 11-ஆவது வயதில்!

அவர் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தது 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாளில்!

பற்றிய பொதுக் குறிப்புகளாகவும் கொள்ளத் தக்க வகையில் அமைந் திருக்கின்றன.

''...... சொல்லவந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லாமல், நடை நேராகச் செல்ல வேண்டும். முன் யோசனையில்லாமலே நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்துவிட்டால், பின்பு ஸங்கடமில்லை. ஆரம்பத்திலே மனதிலே கட்டி முடித்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைரியமுமிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும்; வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தன்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாகயிருக்க வேண்டும். இவற்றுள், ஒழுக்கமாவது தட்டுத்தடை யில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. ... ... உள்ளத்தில் தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ் நடை எழுதும்''[3]

தமிழில் உரைநடை எழுதத் தொங்டகுகிறவர்களுக்கு உதவியான குறிப்புகளைத் தரும்போதே, சிறந்த நடையின் இயல்புகளையும் பாரதியார் சுட்டியிருப்பதை மேலே காட்டிய பகுதியில் காணலாம். கம்பர் கவிதை நடைக்குச் சொன்ன இயல்புகளைப் பாரதியார் எடுத்துக் காட்டியுள்ளதையும்[4], 'உள்ளத்தில் தமிழ் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ் நடை எழுதும்' என்று நல்ல நடை அமைவதற்குரிய காரணம் வழி இதுவெனச் சுட்டியிருப்பதையும் நாம் மனதில் அமைத்துக் கொள்ள வேண்டும். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே

---

3. பாரதியார் கட்டுரைகள்: கலைகள் (பாரதி பிரசுராலய வெளியீடு) மாலை 1: வசன நடை பக்கம் 86-87

4. கம்பர் பாடல்:

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்

— கம்பரா. ஆரணிய. சூர்ப்பணகை-1.

ஞெகிழ்வது அருளின்

ஒளியுண்டாகும்' என்று அவரே பிறிதோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

சொல்லாட்சி > நடை

சொல்லாட்சியால் நடை நலம் சிறக்கும். அத்தகைய சொல்லாட்சியின் திறத்தை வள்ளுவர் பலவாறு குறித்திருக்கிறார். கேட்போர் எளிதில் புரிந்து கொள்ளும்படியாகவும் மனத்திலே பதியும்படியாகவும் சொற்கள் அமைய வேண்டும்.[5] கேட்பவர்களைத் தம் வயப்படுத்துகின்ற வகையிலும் கேட்கத் தவறியவர்களும் 'ஐயோ கேட்காமல் விட்டோமே' என விரும்பும் வகையிலும் சொல்வல்லமை பெற வேண்டும்;[6] வேறு எந்தச் சொல் போட்டாலும் பொருந்தாது என்னும் வகையில்-இதனை வெல்லும் சொல் வேறு ஒன்று இல்லை என்னும் வகையில் சொற்கள் அமைய வேண்டும்.[7] ...இவ்வாறு சொல்லாட்சி பற்றி வள்ளுவர் கூறுவன மேலும் பல உண்டு. சொல்வன்மையின் இயல்புகளைத் தொகுத்துரைக்கும்போது பரிமேலழகர், ''அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்றிவை முதலாயின'' எனத் தந்துள்ள குறிப்பையும் நினைவு கொள்ளுதல் நலம்.[8]

உள்ளத்திலே நேர்மையும் தைரியமும் கொண்டு, உள்ளத்தில் உண்மையொளி கொண்டவராய்ப் பாரதியார் பாடிய ஒரு பாடலை இங்கே காணலாம்.

> **பரிசு!**
>
> திருநெல்வேலியில் ஒரு தமிழ்ச்சங்கம் நடத்திய கவிதைப் போட்டிக்குப் பாரதியாரும் தன் கவிதையை அனுப்பியிருந்தார். அவருடைய 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற அந்தக் கவிதைக்கு மூன்றாம் பரிசுதான் கிட்டியது. கவிஞனை நிர்ணயிப்பது பரிசுகள் அல்ல!
>
> — **மன்னை சம்பத்**

இப்போதெல்லாம் குழந்தைமணம் என்பது பெரும்பாலும் கிழவர்கள் சொல்லும் பழங்காலக் கதையாகி விட்டது. சொல்லும் உருவாகாத மழலைப் பருவத்துக் குழந்தைகளை மணவிலங்கு பூட்டி, எதிர்காலத்தைத் தளர்நடைப் பருவத்திலேயே இருள் ஊட்டிய கொடுமை இந்த நாட்டில் சமயத்தின் பெயரால்- 'சம்பிரதாய'ச் சடங்காக நிலைபெற்றிருந்த காலம் பாரதியார் காலம். அந்தக் கொடுமையை எதிர்க்கும் துணிவு நேர் கொண்ட பார்வையோடு நிமிராத காலம் - - - - கவிதை தன் வீறு கொண்டு சாடுகிறது:

பால ருந்து மதலையர் தம்மையே
  பாதகக்கொடும் பாதகப் பாதகர்
மூலத் தோடுகு லங்கெடல் நாடிய
  மூட மூடநிர் மூடப் புலையர்தாம்
கோல மாக மணத்திடைக் கூட்டுமிக்
  கொலையெ னுஞ்செயல்
            ஒன்றினை உள்ளவும்
சால இன்னுமோர் ஆயிர
            மாண்டிவர்
  தாத ராசி அழிகெனத்
            தோன்றுமே[9]

5. திருக்குறள் 424

7. திருக்குறள் 645

9. பாரதியார் : ஸ்வசரிதை

6. திருக்குறள் 643

8. திருக்குறள் 643 பரிமேலழகர் உரை

இந்தப் பாட்டின் நடைநயத்தை மனங்கொள்ளுதற்குப் பாரதியாரின் ஆளுமையோடு தொடர்புடைய ஒரு கருத்தினை நினைவிற் கொள்ள வேண்டும். தேசியக் கவிஞர் என்றும், பாரத விடுதலை வேட்கையால் பாடிய கவிக்குயில் என்றும் பாரதியாரைப் பாராட்டுவர். பிற பிற துறைப் பாடல்களும் பாரதியார் எழுத்தோவியங்களில் உண்டு; எனினும், அவருடைய தனித்தன்மை நாட்டு விடுதலைக்கெனப் பாடிய தேசியக் கவிஞர் என்பதில்தான் துவக்கம் பெறுகின்றது. பாரதியாரின் வாழ்க்கைக் குறிக்கோள் நாட்டு விடுதலையுணர்விலே மையங் கொண்டது எனலாம்.

நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்[10]

எனவும்,

இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே[11]

எனவும் மேலும் பல வகையாகவும் அவர் பாடிய பாடல்கள் வாயிலாக அவருடைய தேசியச் சார்பினையும் விடுதலை வேட்கையையும் உணரலாம்.

சபதமெடுத்தல், சாபமிடுதல் போன்ற நிகழ்ச்சிகள் ஒருவருடைய உணர்ச்சியின் இமயக் கொடுமுடியில் நிகழ்வனவாகும். அத்தகைய சூழலில் எழும் வாசகங்கள் வெற்றுக் குரலாக அமையாமல் உயிராழத்திலிருந்து கிளம்பும் சத்திய ஆவேசத்தின் குரலாக இருக்கும்.

குழந்தைமணத்தின் கொடுமையைச் சாடுகின்ற பாரதியாருக்கு-சுதந்திரப் பயிரைப் பேணுதலைத் தம் உயிர் மூச்சாகக் கொண்ட பாரதியாருக்குக் குழந்தை மணம் செய்விப்போர் கொலைகாரராகவே படுகின்றனர். ''இந்தப் பாவிகளுக்குமா விடுதலை வேண்டும்! இவர்களெல்லாம் இன்னும் இன்னும் ஓராயிரம் ஆண்டுக் காலம் அடிமைகளாகவே கிடந்து அழியட்டும்'' என்று கடிந்துரைத் தாலே போதுமானது. தம் உயர்க் குறிக்கோளுக்கே எதிரானதொரு நிலையைக்கூட இந்தக் 'கொலைகாரர்'க்காக ஏற்றுக்கொள்வார் போல் பேசுகிறார்: சால இன்னும் ஓராயிரம் ஆண்டு இவர் தாதராகி அழிக எனத் தோன்றுமே! இந்தச் சாபம் போதாதா ?!

போதாது என்று உணர்கிறது. கவிஞரின் சத்திய ஆவேசம். 'பால் அருந்தும் மதலையராயிற்றே, இவர்களுக்கு இந்தக் கொடுமை செய்யலாமா' என்றுகூட எண்ணிப் பார்க்கமுடியாத பாதகர்கள்! கொடும் பாதகர்கள், கொலைகாரர்கள் என்றெல்லாம் அடுக்கினால் கூடப் பாரதியாரின் ஆத்திரம் அடங்காது போலும். இந்தக்கொலை பாதகர்களை எப்படிச் சாடுகிறார், என்னென்ன சொற்களை எப்படியெப்படி அடுக்கிச் சாடுகிறார் என்று கண்டு உணரவேண்டும்.

பாதகக் கொடும்பாதகப் பாதகர்
மூட நிர்மூட மூடப் புலையர்
பாதகர்-பாதகப் பாதகர்-கொடும்
பாதகப் பாதகர்-பாதகக் கொடும்
பாதகப் பாதகர் !

10. பாரதியார் : விநாயகர் நான்மணி மாலை 25
11. பாரதியார் : சுதந்திர தேவியின் துதி 1

புலையர்-மூட ப் பு லை ய ர்-மூட மூடப்புலையர் - நிர்மூட மூ ட ப் புலையர்-மூட நி ர் மூ ட மூடப் புலையர் !

இத்தனை ஆத்திரம் ஏன்? 'அடிமை வாழ்வு அகன்று இந் நாட்டார் விடுதலை ஆர்ந்து, செல்வம், குடிமையில் உயர்வு, கல்வி ஞானமும் கூடி ஓங்கிப் படிமிசைத் தலைமை' எய்த வேண்டுமென்று பாடிய விடுதலைக் கவிஞர், ஏன் தம் நாட்டு மக்களையே 'சால இன்னும் ஓராயிரம் ஆண்டு தாதராகி அதிக' எனச் சாபம் இடுகிறார்?

குழந்தை மணக் கொடுமையால் இந்த நாடே மூலம் அழிந்து குலங் கெட்டு நாசமாகி விடுமே என்பது அவர் ஆத்திரம். வீறு கொண்ட பாரதம் என்ற பெருமிதம் அழிந்து, நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் இன்றி, விழி குழிவு எய்திடச் சப்பாணிக் களஞ்சியமாகப் பாரதம் ஆகிவிட்டால், விடுதலை வந்து தான் என்ன பயன்!...... இந்த ஆத்திரம் பொ ங் கி ப் பெ ரு கி வ ரு கி ற து பாட்டிலே.

உணர்ச்சி-நேர்மையும் தைரியமும் கொண்ட உணர்ச்சி உள்ளத்தில் இருந்தால் கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும் என்று சொன்னாரே - அ தை இ ந் த ப் பாட்டிலே பார்க்கிறோம்.

இந்தப் பாட்டின் நடை உணர்ச்சி எழுப்பிய நடை...... அன்று, உணர்ச்சியே நடையாகப் பீறிட்ட காட்சி.

உணர்ச்சிக் களஞ்சியமாகிய சொல் லாட்சியால் அமையும் நடையை இந்தப் பாட்டில் காணலாம்.

பா வகை > நடை

நடையின் நிலையமாகப் பல்வேறு வகைப் பாக்களும் பாவினங்களும் அமையும் என்பது அடுத்து காணு தற்கு உரிய நிலை, வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி ஆகிய நால் வகைப் பாக்களும், தாழிசை துறை விருத்தங்களாகிய பாவினங்களும் பாரதியார் கவிதைகளிலே இடம் பெற்றிருக்கின்றன. நா ன் ம ணி மாலை போன்ற பிரபந்தங்கள் இ ய ற் றி ய தி லு ம் அ வ ரு டை ய பாவகை நடையினைக் காணலாம். ஆயினும், சிந்து வகையில் அவர் இயற்றிய பணியே அவருக்குத் தனிச் சிறப்பைக் கொடுத்தது எனல் வேண்டும். 'சிந்துக்குத் தந்தை' என்று அவர் சிறப்பிக்கப்படுகின்றார்.

பல் வகை யாப்பு வடிவங்களிலும் தேர்ச்சி பெற்றவர், 'சிந்து' எனும் எளிய நடைப் பாங்கிலே சிந்தை செலுத்தியது ஏன்?

"எளியபதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவ துடன், காவியத்துக்குள்ள நயங் கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்."[12]

எளிய சந்தமும் பொது மக்கள் விரும் பும் மெட்டும் கொண்ட நடைக்கும் சிந்து வகை யாப்பு மிகவும் வாய்ப் பாக இருக்கும். அதனால்,

12. பாரதியார்; பாஞ்சாலி சபதம் முகவுரை

கேட்டதும் கொடுத்தவர்

பாரதியாரை வ. உ. சிதம்பரனார் சந்தித்து உரையாடுவது வழக்கம். அப்போது பாரதியார் தமது கவிதைகளை வ. உ. சி. அவர்களுக்குச் சொல்லுவார். இத்தாலி நாட்டைச் சேர்ந்த தேச ஊழிய இளைஞர் சங்கத்தின் உறுப்பினர்கள் செய்து வந்த ஆங்கில மொழியில் வெளியிடப் பட்டிருந்த சூளுரைப் பாடலை வ. உ. சிதம்பரனாரிடம் படித்துக் காட்டினார் பாரதியார். அதனைக் கேட்ட வ. உ. சி. சொக்கிப் போனார். அவர், அந்தப் பாடலைத் தமிழ்ப் பாட்டாகத் தருமாறு பாரதியாரிடம் வேண்டினார். உடனே, அதைத் தமிழ்க் கவிதையாக மொழி பெயர்த்தார். அதுதான் 'மாஜினியின் சபதம்' என்ற தலைப்பில் 'பேரருட் கடவுள் திருவடி யாணை' எனத் தொடங்கும் பாடல் ஆகும்.

வீர சுதந்திரம் வேண்டிநின்
றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ-
என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்
டார்கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ[13]

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—
நின்று
நித்தந் தவஞ் செய் குமரியெல்லை —
வட
மாலவன் குன்றம் இவற்றினிடையே
— புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு[14]

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்
— இங்கு
யாவர்க்கு மொன்றெனில் காணீர்[15]

போன்ற பல கவிதைகள் எழுந்தன.

எளிய சந்தமும் பொதுமக்கள் விரும்பும் மெட்டும் அமைந்த நடையைக் கையாள வேண்டுமென்பதால், கவிதைத் தரம் இறங்கிவிட வேண்டும் எனப் பாரதியார் கருதவில்லை. பொதுமக்கள் நாட்டம் என்று சொல்லிக் கண்டபடி 'கிறுக்கி' விட்டு 'இது மக்கள் இலக்கியம்— ஜன நாயக இலக்கியம்' என்று 'கதைப் பதை'ப் பாரதியார் ஏற்பவரில்லை. ''ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்க முள்ள தமிழ்மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி' எழுத வேண்டும் என்று சொல்லும் அதே வாக்கியத்தைக் 'காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும்' என்று எச்சரிக்கையோடு பாரதியார் முடித்திருப்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

உத்திகள் > நடை

சொல்லாட்சியால் அமையும் நடை நயம், யாப்பு வடிவ வகைகளால் அமையும் நடை நிலை ஆகியவை போலவே, இலக்கியப் படைப்பில் கையாளும் உத்திகளாலும் நடை அழகு காணலாம்.

தாயுமானவரிடத்திலே ஈடுபாடு கொண்டவர் பாரதியார். அவருடைய

13. பாரதியார்: சுதந்திரப் பள்ளு 1
14. பாரதியார்: செந்தமிழ் நாடு 3
15. பாரதியார்: முரசு 17

பாடல்களில் கண்ணிகள் மிகச் சிறப்பானவை என்பதை யாவரும் அறிவர். சிந்துவகை வடிவிலே மனம் செலுத்திய பாரதியார்க்குத் தாயுமானவரின் கண்ணிகள் கவர்ச்சி ஊட்டியது இயல்புதான். 'தாயுமானவர் ஆனந்தக் களிப்பு மெட்டு' என்ற குறிப்புடனேயே

வந்தே மாதர மென்போம் — எங்கள்
மாநிலத் தாயை வணங்குது
மென்போம்
ஜாதி மதங்களைப் பாரோம் — உயிர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின
ராயின்
வேதிய ராயினு மொன்றே — அன்றி
வேறு குலத்தின ராயினு
மொன்றே[16]

என்று பாரதியார் பாடுகிறார். இப்படியே காவடிச் சிந்து உத்தியை

தொன்று நிகழ்ந்த தனைத்து
முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் — இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய்[17]

வெடிபடு மண்டத் திடிபல
தாளம் போட — வெறும்
வெளியி லிரத்தக் களியொடு
பூதம் பாடப் — பாட்டின்
அடிபடு பொருளுன் அடிபடு
மொழியிற் கூடக் — களித்
தாடுங் காளீ சாமுண் டீகங் காளீ!
அன்னை, அன்னை
ஆடுங் கூத்தை நாடச்
செய்தா யென்னை[18]

சந்தாதாரர்கள் கவனிக்க!

சந்தாவைப் புதுப்பித்துத் தொகை அனுப்பும் போதும், கடிதம் எழுதும் போதும் சந்தா எண்ணைக் குறித்து எழுத வேண்டுகிறோம்.

கலைக்கதிர்

என்ற பாடல்களிலே கையாளும் போது ஒரு புதுவகை நடை தேசியக் கவியிடம் பிறக்கிறது.

இப்படியே நந்தனார் சரித்திரக் கீர்த்தனை உத்தியில் அமைந்த பாடல்களும் பாரதியாரில் உண்டு.[19] பண்டாரப் பாட்டும்[20] பாரதியார் கவிதைக்கு நடைநயம் ஊட்டியுள்ளது.

இசைப் பாடல்களாயமைந்த கவிதைகளிலே பண்கனிந்த நடைவகைகள் காணலாம்.

சொல் இயங்கும் வேகம் கொண்டு நடை நிலை வரையறுத்தல், உள்ளுறை உத்தியால் நடைவகை தேர்தல், பிற மொழிக் கலப்பின் எல்லை வைத்து நடையினைக் கணித்தல் ... ... என்று மேலும் மேலும் பற்பல வகைகளில் பாரதியாரின் கவிதை நடையினை ஆராயலாம்.

கட்டுரைக்குரிய எல்லை வரையறை கருதி மூவகையால் பாரதியாரின் கவிதை நடையினை அறிமுகப்படுத்திய அளவில் இக் கட்டுரை நிறைகின்றது. □

---

16. பாரதியார்: வந்தே மாதரம்-பல்லவி, சரணம் 1
17. பாரதியார்: எங்கள் தாய் 1
18. பாரதியார்: ஊழிக் கூத்து 1
19. பாரதியார்: வ. உ. சி— கலெக்டர் விஞ்ச் உரையாடல்களாக வரும் பாடல்கள் காண்க. (நாட்டிலெங்கும், சொந்த நாட்டில் எனத் தொடங்குவன) தொண்டு செய்யுமடிமை எனத் தொடங்கும் பாடலும் இவ்வகையினதே.
20. பாரதியார்: அச்சமில்லை, அம்மாக்கண்ணு பாட்டு.

ONE MORE DIAMOND
IN THE CROWN OF
RAMAKRISHNA

SRSI

SRSI one of the country's leading producers of quality steel & alloy steel castings unit, now nstalled INDUCTO THERM imported from USA with the Crucibles of medium frequency ranging to 250 kgs. & 100 kgs.

SRSI can now supply in alloy steel castings specification from .5 kgs to 5000 kgs, from CA 15 to special alloys like Hastelloys and cater the needs of chemical, ertilisers, Pharmaceuticals, food stuff & Dyestuff industries.

SRSI can help you to arrest the corrossion problems & resist the Thermal Shocks.



SRI RAMAKRISHNA STEEL INDUSTRIES LTD.
KARAMADAI-641 104 COIMBATORE Dt. TAMILNADU.
Phone : 54 Karamadai 311 Mettupalayam, 89388, 89389 Coimbatore
Grams : CASTSTEEL Telex : 0855-286-SRSI-IN

SUGUNA / SRSI / SI

பாரதியாரின் மறுமலர்ச்சி எண்ணங்கள்

முனைவர் சாலை இளந்திரையன்,
எம்ஏ; எம்லிட்; பிஎச்டி;

பாரதி என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்படும் சுப்பிரமணிய கவிஞரை புதுமைக் கவிஞர் என்றும் புரட்சி யாளர் என்றும் பாராட்டிப் பேசுவது வழக்கமாக, ஒரு மரபு போலவே நிலைத்துள்ளது. ஆயினும், அவரைப் புதுமையாளர், புரட்சியாளர் என் றெல்லாம் சொல்வதைவிட ஒரு மறு மலர்ச்சியாளர் என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

முன்பு இல்லாதிருந்து இப்போது (புதிதாக) ஏற்படுவது எதுவோ அதுவே புதுமை; இருக்கின்ற நிலையை அடியோடு மாற்றி, வேறொரு புதுநிலை சமைக்க எழு கின்ற வேகநடையே புரட்சி. சிற்சில இடங்களில் இவை இரண்டு போலக் காட்டினாலும்,- முன்பு இருந்த தில் நல்லதைப் புதுக்கிப் பாதுகாக்க வேண்டும் என்கிற கருத்தும் தொனியுமே பாரதியிடம் மிகுதியாக இருப்பதால், அவரை ஒரு மறு மலர்ச்சிச் சிந்தனையாளர் என்றே குறிப்பிட வேண்டும்.

இலட்சியம்

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்'' என்று தமது கடமையை வகுத்துக் கொண்ட சுப்பிரமணியக் கவிஞர்,- அந்தக் கடமையை வகுத்து உரைத்த 'விநாயகர் நான்மணி மாலை' யிலேயே, தமது இறுதி இலட்சியத் தையும் தெளிவுபடுத்தியுள்ளார்:

பொய்க்கும் கலியை நான்கொன்று,
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருதயுகத்தினையே
கொணர்வேன், தெய்வ
விதியிஃதே!

தாம் வாழ்வது (துன்பமும் சூதும் நிறைந்த) கலியுகம் என்றும், இங்கே மறுபிறப்பு எடுக்க வேண்டியது (இன்பமும் ஏற்றமும் நிறைந்த) கிருதயுகமே என்றும் முடிவுக்கு வந் தார் கவிஞர். அதனாலேயே, பொய்க் கும் கலியைக் கொன்று அதன் பீடத் திலே, சென்று போன கிருதயுகத்தை மீட்டுவந்து நிலைநிறுத்த வேண்டும் என்று அவர் சொல்லுகிறார்.

இந்த நாட்டு இந்துக்களின் கணக்குப்படி, உலக வாழ்வு நான்கு யுகங்களைக் கொண்டது. கிருத யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன அவற்றின் பெயர் கள். இந்த வரிசையில் கிருதயுகமே நீண்டது. அதுவே எல்லா நலன் களும் பொருந்தியது. அதாவது அதுவே பொற்காலம்! (கிருதயுகம்:

தன்வினை தன்னைச் சுடும்

'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' நாம் பள்ளர் பறையருக்குச் செய்ததையெல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள். நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளும் நெட்டால் திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களானால் ஊருக்கு வெளியே சேரிகளில் வாசம் செய்ய வேண்டும். சாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக் கூடாது. பிரத்யேகமாக விலகி நடக்க வேண்டும். பல்லக்குகள் வண்டிகள், இவற்றைப் பற்றி யோசனையே வேண்டியதில்லை. சுருக்கம், நாம் நமக்குள்ளேயே ஒரு பகுதியாரை நீசர்களென்று பாவித்தோம். இப்போது நம் எல்லோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாக் கருதுகின்றார்கள்.

- சமூகம்.
பாரதியார்

"The first of four Yugas; the golden age of the Hindus" - TAMIL LEXICON) சென்று போன பொற்காலமாகிய அந்தக் கிருதயுகத்தை மீட்டு வர வேண்டும் என்று கருதியதாலேயே, "மெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன்" என்றும் "தெய்வ விதி இஃதே" என்றும் அடித்துச் சொல்லுகிறார் பாரதி. அந்தப் பழைய நன்னிலையை மீட்பதே நோக்கம் என்பதை வேறு இடங்களிலும் சுட்டித் தெரிவிக்கிறார் கவிஞர். குறிப்பாக, புதிய ருஷியா என்னும் தலைப்பில் ருஷ்யப் புரட்சியை வாழ்த்தி வரவேற்கும் அவருடைய பாடல்,

இடிபட்ட சுவர் போலே
  கலி விழுந்தான்—
கிருதயுகம் எழுக மாதோ!

என்னும் ஓங்கிய மகிழ்ச்சிக் குரலோடேயே முடிகிறது. ஆகவே, பெரிய புதுமைகளைச் செய்வதை விட, புரட்சிகளை எழுப்புவதை விட,-புன்மைகளே இல்லாத பொற்காலம் என்று கருதப்பட்ட கிருதயுகத்தை இங்கே மீண்டும் உண்டாக்க வேண்டும் என்பதிலேயே கவிஞரின் நாட்டம் குவிந்து இருந்தது என்பது தெளிவு.

பழைய வீரன்

மொத்தமான பொற்காலக் கிருதயுகத்தைப் பற்றி மட்டுமல்ல,- அதன் வெவ்வேறு அம்சங்களான தனிமனித உயர்வு, பெண் உரிமை, சமுதாய (குல) அமைப்பு போன்ற பலவற்றிலும் இது போன்ற (பழமை மீட்கும்) மறுமலர்ச்சி எண்ணங்களையே எடுத்திசைக்கிறார் பாரதி.

நாட்டு விடுதலை உணர்வு மூண்டு பொங்கி நின்ற காலத்தில் வாழ்ந்து, அதனை நெஞ்சிலே ஏற்று நிமிர்வு கொண்டவர் கவிஞர். அந்தப் போர்க்களத்திற்கு ஏற்ற வீரர்களையே அவர் வரவேற்கிறார்; அதில் பங்கு பெற முடியாத நலிவுகளைப், "போ, போ" என்று துரத்துகிறார். இந்த இரட்டை உணர்வுகளை, "வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்" என்னும் பாடல் எழிலுற எடுத்துரைக்கின்றது : "ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா" என்று

அவர், இருகை நீட்டி இளைய பாரதத்தை அழைக்கையில், அந்த வீரன் புதுமை பூத்த புரட்சியாளன் என்று நினைக்கிறோம். சற்றே நின்று உற்றுக் கவனிக்கும்போது, இருந்து மறைந்துபோன ஒரு பழமையையே அவர் மீட்டழைக்கிறார் என்பது விளங்குகிறது:

களைஇழந்த நாட்டிலே
முன்போலே
களைசிறக்க வந்தனை
வா வா வா.

முன்பு ஒரு காலத்தில் இங்கே இருந்து, பின்னர் மங்கி மாய்ந்து போன களையின் (பொலிவின்) மறு எழுச்சியையே அவர் நெஞ்சம் விழைந்தது என்பதை இந்த அடி தெளிவுபடுத்துகிறது. இதிலே நமக்குச் சிறிய அய்யமும் ஏற்பட்டு விடக் கூடாது என்று கருதியவர் போல, "விளையும் மாண்பு யாவையும், பார்த்தன் போல விழியினால் விளக்குவாய்" என்று அந்த இளைய வீரனைப் பழைய அருச்சுனனாகவே காண விரும்புவதையும் கவிஞர்சொல்லிவிடுகிறார்.

பழைய கதைகளின்படி, அருச்சுனன் கிருதயுகத்தைச் சேர்ந்தவன் அல்லனாயினும், தருமத்தை நிலைநாட்டும் போரிலே, "தனுவுண்டு, காண்டீவம் அதன் பேர்!" என்று வெல்லுவிளி பயிற்றியவன் என்பதால், அவனிடத்திலே பெரிய காதல் கொண்டுள்ளார் கவிஞர். கண்ணன் பாட்டிலேகூட ஓர் இடத்தில் கண்ணனாகிய தாய், "அண்ணன் அருச்சுனன் போல் என்னை ஆக்கிவிடுவாள்!" என்று சொல்லிப் பெருமிதம் கொள்ளுகிறார்.

பழைய பெண்ணுரிமை

பாரதி பாடிய பெண் உரிமைப் பாடல்கள் மிகமிகப் புதுமையானவை

> **முடிவைச் சீறுவானேன்**
>
> ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்தினால் ஸ்வதிந்திரம் தானே சித்தியாகும் என்பது என்னுடைய கொள்கை. காரணத்தை விட்டுப் பயனைச் சீறுவதில் என் மனங் குவியவில்லை.
>
> பாரதியார்

என்றும் புரட்சிகரமானவை என்றும் (பொதுவாகக்) கருதப்படுகின்றன. உண்மையில் அவைகளுட் பொதிந்த சிந்தனை பழமையின் மறுவடிவம் என்றே அவர் சொல்லுகிறார். "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்..., நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்!" என்றெல்லாம் சுதந்திரப் பேரிகை முழக்குகிறாள் இவருடைய புதுமைப் பெண். அதன் முடிவிலே கவிஞர் எழுந்து விளக்கம் தருகிறார்:

புதுமைப் பெண்இவள்
சொற்களும் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப்
புதிதன்றிச்
சதுரறைப்படி மாந்தர்
இருந்தநாள்
தன்னிலே பொதுவான
வழக்கமாம்;
மதுரத்தே மொழி மங்கையர்
உண்மைதேர்
மாதவப் பெரியோருடன்
ஒப்புற்றே
முதுமைக் காலத்தில்
வேதங்கள் பேசிய

பாரதியாரின் சீடர்கள்



வ ரா



பாரதிதாசன்

பாரதியாரால் பூணூல் அணிவிக்கப்பட்ட அரிசனச் சீடர் கனகலிங்கம்

முறைமை மாறிடக் கேடு
விளைந்ததாம்!

ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வது, நான்மறைப்படி மாந்தர் வாழ்ந்திருந்த (கிருதயுக) நாளில் பொதுவான வழக்கமாக இருந்தது என்றும் பொய்ம்மை கொண்ட இந்தக் கலியுகத்தில்தான் அது புதுமையாகத் தெரிகிறது என்றும் விவரிக்கிறார் கவிஞர். அதாவது, 'இல்லாத ஒன்றை நான் (என் புதுமைப்பெண்) சொல்லுவதாக எண்ணிட வேண்டாம்; முன்பு இருந்து, இடையிலே அழிந்து போனதைத்தான் மறுபடியும் இங்கே கொண்டுவர விழைகிறேன்' என்று அவர் சொல்வது தெளிவாகப் புலப்படுகிறது.

பாஞ்சாலி சபதத்திலே துரோபதை அரச சபையில் நீதி கேட்டு அழுகின்ற கட்டத்தில் வீடுமன் எடுத்துரைக்கும் செய்திகளிலும் இதே கருத்து உள்ளது; ''வேத முனிவர் விதிப்படி, நீ சொல்வது (ஆணுக்கு பெண் அடிமை அல்ல என்பது) நீதியெனக் கூறும்; நெடுங்காலச் செய்தி அது! ஆணொடு பெண் முற்று நிகரெனவே அந்நாளில் பேணி வளர்த்தார்." அதாவது, வேத (கிருத யுக) காலமாக இருந்திருந்தால் பாஞ்சாலியைப் பணயம் வைத்து அவள் கணவன் சூதாடியிருக்க முடியாது; அந்த யுகம் மாறிவிட்டதால் ஆணோடு பெண் சமம் என்ற கொள்கை அழிந்துவிட்டது என்பது கருத்து.

நாலு குலங்கள்

இந்த நூற்றாண்டில் மிகுதியான வெப்பத்தை எழுப்பிய சாதிப் பிரச்சினையிலும் சுப்பிரமணியக் கவிஞர் ஒரு பழநிலைக்கு அரண் செய்யும் விதமாகவே சிந்தித்துள்ளார்: சாதிக் கொடுமைகள் வேண்டாம்'' என்றும், ''சாதிகள் இல்லையடி பாப்பா-குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!'' என்றும் பாடிய இக்கவிஞர், மனிதச் சாதி (இனம்), தொழில் வகையில் வெவ்வேறு குலங்களாகப் பிரிந்திருப்பதை ஆதரிப்பதாகவே காண்கிறது ''ஊருக்கு நல்லது சொல்வேன்,-எனக்கு, உண்மை தெரிந்தது சொல்வேன்'' என்ற முன்னுரையோடு

இவர் முழங்கும் முரசிலே பின்வரும் செய்திகள் வருகின்றன:

வேதம் அறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவறாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாயக்கன்
பண்டங்கள் விற்பவன் செட்டி,—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென்றோர் வகுப்பில்லை—தொழில்
சோம்பலைப் போல் இழிவில்லை
நாலு வகுப்பும் இங்கொன்றே;—இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்,
வேலை தவறி சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி!

மனிதச் சாதி, தொழில் அடிப்படையில் பார்ப்பான், செட்டி, நாய்க்கன், தொழிலாளி (?) என்னும் தான்கு குலங்களாகப் பிரித்திருந்தால்தான் ஞாலம் சீராக வளர முடியும் (இல்லாவிட்டால் ''சேவை தவறிச் சிதைந்தே-செத்து வீழ்ந்திடும் மானிடச் சாதி'') என்றே இவர் கருதியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு அரண் செய்யும் விதமாகவே கண்ணன் பாட்டில், (கண்ணன் என் தந்தை என்னும் பகுதியில்) இறைவனே இந்தக் குலப் பிரிவை வகுத்து அமைத்ததாகவும், பிற்காலத்தில் மனிதர்கள் அந்த அமைப்பை நாசமுறப் பண்ணிவிட்டதாகவும் சொல்லி வருத்தப்படுகிறார்.

நாலு குலங்கள் அமைத்தான்—அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்.

சுப்பிரமணிய பாரதியாரைப் பொருத்தவரை; தொழில் அடிப்படையில் மனிதக் குலத்தை இறைவனே வகுத்து அமைத்ததாகவே அவர் கருதுகிறார்; அந்த அமைப்பு மனிதக் குலத்தின் வளர்ச்சிக்கு மிகமிக இன்றியமையாதது என்று அவர் கருதினார் என்பதும் தெளிவு. அவரே, (கண்ணன் பாட்டில்) மற்றோர் இடத்தில், ''மேலவர் கீழவர் என்றே வெறும் வேடத்தில் பிறப்பினில் விதிப்பதை''க் கண்டிக்கிறார். எனவே, கால ஓட்டத்தில்,-திரேதா, துவாபர, கலியுகங்களில் ஏற்பட்டு விட்ட சாதிமுறைகளை ஒழித்து, இறைவன் அமைத்த நான்கு குலங்களாக மனிதர்களைப் பிரித்துக் காணும் குலமுறையை மீட்டு நிலைநாட்டுவதைப் பாரதி விரும்பியிருந்தார் என்றே தெரிகிறது.

துணைச் சாதனங்கள்

இந்தக் கிருதயுகச் சமுதாய அமைப்புக்கு அரணான வேதம், சாத்திரம் போன்றவைகளையே சுப்பிரமணியர் சிறந்த நூல்கள் என்று கருதியுள்ளார்; அவைகளில் ஊடாடி விட்ட மாசுகளை நீக்கி அவைகளைத் தூய்மைப்படுத்தி விட்டால், பாரத மனிதன் சீரிய சிந்தனையாளனாகவும் ஏறிய வீரம் உடையவனாகவும் மறுபிறப்பு எடுப்பான் என்பதே அவருடைய கருத்து. ஓரிடத்தில், இறைவன் கோத்துவைத்த வேதங்களில் பல பொய்ம்மைகள் புகுந்து விட்டதாக அவர் வெதும்புகிறார். அவைகளை,-

வேதங்கள் என்று
புவியோர் சொல்லும்
வெறுங்கதைத் திரளில்
அவ்வேதம் இல்லை.

என்று சாடுகிறார். ''நான் வேடிக்கையுறக் கண்டு நகைப்பதற்கே கோத்த பொய் வேதங்கள்'' என்றுகூடக் கண்ணன்—என் தாய் என்னும் பாடலில் குறிப்பிடுகிறார்.

இந்தப் பொய்களைப் பாராட்டு கிறான் என்பதாலேயே, அவர் காலத்து இந்தியனை, "சென்று போன பொய்யெலாம் மெய்யாகச் சிந்தை கொண்டு, போற்றுவாய், போ போ போ!" என்று துரத்து கிறார்.

வசன கவிதை என்னும் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள "விடுதலை" என்னும் ஓரங்க நாடகத்தில் பாரதப் பழமையாகிய பொற்காலம் சரிந்து போன வரலாற்றைப் பின்வருமாறு சொல்லுகிறார் கவிஞர்:

விசுவாமித்திரன், வசிட்டன், காசிபன்
முதலியோர் செய்த முதல்நூல் மறைந்தது;
பொய்ந்நூல் பெருகின; பூமியின் கண்ணே
வேதம் கெட்டு வெறுங்கதை மலிந்தது;-
போதச் சுடரைப் புகைஇருள் சூழ்ந்தது!

பழமையான ஒரு காலம் இருந்தது; அது எல்லாவகையிலும் உயர்வு உடையதாக இருந்தது. காலப் போக்கில் பொய்யும் வழுவும் புகுந்திட, அந்தப் பொற்காலமாகிய கிருதயுகம் மாறிச் சிறிது சிறிதாகச் "கலி" தலையெடுத்தது. இனி மேலும், மனிதர்கள் உயர்வுபெற வேண்டுமானால், கலியை வென்று உயர வேண்டுமானால்,— அந்தப் பொற்காலமாகிய கிருதயுகத்தை மீட்டு நிலை நாட்டவேண்டும். இது தான் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களின் எண்ண ஓட்டம். இதுவே சுப்பிரமணிய பாரதியின் கருத் தோட்டமாகவும் அவருடைய நூல்களில் ஊடுருவிக் கிடப்பது கவனிக்கத் தக்கது.

மறுமலர்ச்சியாளரே

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கவிதை நடையிலும் உரைநடையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கருக்கொண்ட புதுமைகளுக்கு ஒரு வடிவம் கொடுத்தவர் பாரதி என்பதை மறுக்க முடியாது; அதே போல், அவருடைய காலத்துப் பெரிய நிகழ்ச்சியாகிய நாட்டு விடுதலைப் போராட்டத்தின் விளைவான எண்ணவீச்சுகளை உள் வாங்கிக் கொண்டு, அதுவரை தமிழில் வலுவாக எழுந்து ஒலித்திராத பாரதநாடு, வீர சுதந்திரம் என்பன போன்ற கோட்பாடுகளை அவர் ஓங்கி ஒலித்தார் என்பதையும் நாம் மறக்க முடியாது. ஆனாலும், பாரதத்தின் மாண்புமிகு பழமை என்று அவர் கருதிய வாழ்க்கை முறையையும் அதற்குத் துணையான சிந்தனைகளையும் மீட்டு வர வேண்டும் என்று கருதிய வாழ்க்கை முறையையும் அதற்குத் துணையான சிந்தனைகளையும் மீட்டு வர வேண்டும் என்றுகருதிய மறுமலர்ச்சியாளராகவே அவர் செயல்பட்டார் என்பதை நாம் மறந்திடக் கூடாது. "பொய்க்கும் கலியை நான் கொன்று, பூலோகத்தார் கண் முன்னே, மொய்க்கும் கிருத யுகத்தினையே, கொணர்வேன், — தெய்வ விதி இஃதே" என்று அவர் குறிக்கோள் வகுக்கும்பொழுது, — "நான் ஒரு புதுமையாளனோ புரட்சியாளனோ அல்லன், — நான் ஒரு மறுமலர்ச்சியாளனே" என்று நம் நெஞ்சில் ஆணியடித்ததுபோல எழுதிட அவர் விரும்பினார் என்பதை நாம் உணர வேண்டும். இந்த உணர்வோடு படித்தால் தான் பாரதியின் பணியை நாம் சீராக மதிப்பிட முடியும் என்பதையும் நாம் அறிய வேண்டும். □

கவிஞனை உணர்ந்த கவிஞர்கள்

பாட்டுக் கொரு புலவன்

பாட்டுக் கொரு புலவன் பாரதி, அடா!— அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா!— அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே, அடா!— கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமே, அடா!
கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா!— பசுங்
கன்றும்பால் அருந்திடாது கேட்குமே, அடா!
குயிலும் கிளியும்பாட்டில் கூவுமே, அடா!— மயில்
குதித்துக் குதித்துநடம் ஆடுமே, அடா!
வெயிலும் மழையுமதில் தோன்றுமே, அடா!— மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமே, அடா!

அலைமேலே அலைவந்து மோதுமே, அடா!— அலை
அழகான முத்தையள்ளிக் கொட்டுமே, அடா!
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே, அடா!— அலை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே, அடா!
விண்ணி லொளிருமீன்கள் மின்னுமே, அடா!— விண்ணில்
விளங்கும் மதிநிலவு வீசுமே, அடா!
கண்ணுக் கினியசோலை காணுமே, அடா!— அதில்
களித்திள மான்கள்விளை யாடுமே, அடா!

தேனும் தினையும்பாவில் உண்ணலாம், அடா!— மிகத்
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாம், அடா!
கானக் குழலிசையும் கேட்கலாம், அடா!
களிவண்டு பாடுவதும் கேட்கலாம், அடா!

நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில் — மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமே, அடா!
ஏட்டிலிம் மந்திரந்தான் கண்டவருண்டோ?— ஈதவ்
ஈசன் திருவருளென் றெண்ணுவாய்; அடா!

உள்ளந் தெளியுமொரு பாட்டிலே, அடா!— மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலே, அடா!
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலே, அடா!— ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலே, அடா!

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

'மலரும் மாலையும்' என்னும் நூலிலிருந்து

பாரதி நினைவு

சுப்ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்;
இப்ர பஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும்;
'இந்தியன் நான்' என்றிடும்நல் விருமாப் புண்டாம்;
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும்!
ஒப்பரிய 'தமிழன்' எனும் உவகை ஊறும்;
உள்ளமெல்லாம் துள்ளியெழும் ஊக்க முண்டாம்.

அச்சமெனும் பெரும்பேயை அடித்துப் போக்கும்;
அடிமைமன விலங்குகளை அறுத்துத் தள்ளும்;
துச்சமென வருதுயரம் எதையும் தாங்கிச்
சுதந்திரத்தை விட்டுவிடாத் துணிவு தோன்றும்;
கொச்சை மிகும் பிறநாட்டு மயக்க மெல்லாம்
கூண்டோடு விட்டொழிக்கத் தெளிவு கூட்டும்;
மெச்சிடுநம் தாய்நாட்டின் நாக ரீகம்
மேன்மையெல்லாம் பாரதியார் பாட்டால் மேவும்!

தரித் திரத்தின் கொடுமையெல்லாம் சேர்ந்து வாட்டத்
தன்வீட்டில் உணவின்றித் தவித்த நாளும்
சிரித்தமுகம் மாறாமல் செம்மை காத்துத்
தேசத்தின் விடுதலையே சிறப்பா யெண்ணித்
தெருத்தெருவாய்த் தேசிய பஜனை பாடிச்
சென்னையிலும் உணர்ச்சிவரச் செய்த தீரன்
உருத்தெரியா திப்போதும் இங்கே நம்மை
ஊக்குவதும் பாரதியின் உரைக ளேயாம்!

நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை

'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் நூலிலிருந்து

பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில்

பாரதி மணி மண்டபம்

அணையா விளக்கு

பைந்த மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனி, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடு துயில்நீக்கப் பாடி வந்தநிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்!

பாரதிதாசன்

('புது நெறிகாட்டிய புலவன்' என்னும் கவிதையிலிருந்து)

தெய்வத் தமிழ் நாட்டினிலே

தெய்வத்தமிழ் நாட்டினிலே—வெண்ணிலாவே நாங்கள்
தீரமின்றிப் பேதையராய் வாழ்ந்திருந்தோம்—ஏதும்
செய்வதறி யாதிருந்த போதினிலே—ஒரு
சிங்கநாதம் கேட்டெழுந்தோம்—வெண்ணிலாவே.

இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார்—அந்த
இழிவும் ஒரு பெருமையென்று எண்ணி வாழ்ந்தோம்—நல்ல
அறிவொளியால் இருளகற்ற ஒருவர் வந்தார்—இதை
அமரர் நாடென்றறிந்தோம் வெண்ணிலாவே.

கங்கையெனப் பொங்கி வரும் தண்தமிழினில்—இன்பக்
கவிதைபல புனைந்தளித்தார் வெண்ணிலாவே—வெற்றிச்
சங்கமூதி முரசறைந்து எழுகஎன்றார்—இந்தத்
தரணியில் நமக்குநிகர் இல்லை யென்றார்

கவியரசர் பாரதியின் கவிதை இன்பம்—உன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே—இந்தப்
புவியில்நீயும் தமிழன்என்னப் பிறந்ததுண்டோ?—அவர்
புதுமைக்கவி அமுதருந்தி மகிழ்ந்ததுண்டோ?

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

தீர்க்க ஞானி

இருண்டதோர் பாரதத்தில்
இயற்கையில் எழுந்த வெய்யோன்!
மருண்டதோர் மனித ஜாதி
மருட்சிக்கு மருந்தாய் நின்றோன்!
அருந்திறன் உள்வாய் தோன்றி
ஆக்கிய கவிதை ஊற்று!
வருஞ் சமுதாய முற்றும்
வகைபடச் சொன்ன மேலோன்!

இந்திய ஒருமைப் பாட்டை
எப்பொழுதோ உரைத்தான்!
சந்திர மண்டலத்தைத்
தான் பார்க்க நினைத்திருந்தான்!
யந்திரத் தொழில் நுட்பங்கள்
அனைத்தையும் கனவு கண்டோன்
மந்திரக் கவிஞன் அம்மா!
மாகாளி தந்த சக்தி!

எத்தனை தீர்க்க ஞானம்!
எத்தனை புதிய சொற்கள்!
எத்தனை உணர்ச்சி வேகம்!
எத்தனை பக்தி மோகம்!
இத்தனை கருத்தைச் சொன்ன
இயற்கவி வாழ்ந்த நாளில்
எத்தனை பேருணர்ந்தார்?
இப்பொழு துணர் கின்றாரே!

கவிஞர் கண்ணதாசன்

Grams : LAKMAWORKS
Phone . 89371 (9 lines)
Telex · 0855/374 Coimbatore
P.B.No. · 5, Coimbatore 641 020

Lakshmi Machine Works Limited

(In collaboration with M/s. Rieter Machine Works Limited, Switzerland and M/s. Schweiter Engineering Works Limited, Horgen, Switzerland)

Registered Office, Administrative Office & Works :
PERIANAICKENPALAYAM, S. R. K. V. POST, COIMBATORE 641 020

MANUFACTURERS OF:

1 HIGH SPEED DRAW FRAMES (Model DO /2S) (Two Deliveries)
2 SPEED FRAMES (Model F/1 - Type GS)
3 RING SPINNING FRAMES (Type DJ5)
4 HIGH SPEED RING SPINDLES (M2)
5 SLIVER LAP MACHINES (Model E2/4A)
6 RIBBON LAP MACHINES (Model E4/1A)
7 HIGH SPEED COMBERS (Model E7/4)
8 BLOW ROOM LINES
9 HIGH PRODUCTION CARDS CRISTALLINA (Type C1/2)
10 HIGH SPEED AUTOMATIC PIRN WINDERS (Type MSL)

For Other Particulars

Please Contact :

VOLTAS LIMITED
TEXTILE MACHINERY DIVISION
BOMBAY AND OTHER BRANCHES
and
SALES DEPARTMENT
LAKSHMI MACHINE WORKS LTD.
S. R. K. V. POST
COIMBATORE - 641 020

Textile Machinery of World Renown, for Performance, Quality and Workmanship

Our Mechanised Foundry set up with the Technical Collaboration of Messrs. Krupps of West Germany can supply quality grey iron castings with excellent surface finish as per Indian Standard Grades 15, 20 and 25.

ஹிந்து தர்மம்

மகாகவி பாரதியார்

"ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன் ;
சீருக்கெல்லாம் முதலாகும் - ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்"

என்னுடைய அபிப்பிராயத்தில் ...... இந்தச் சமயத்தில்...... ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலை நாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். பாரத பூமியின் மக்கள் எல்லாம் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மத பேதம், ஜாதி பேதம், குல பேதம், பாஷா பேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோர் எல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே இரத்தம், ஒரே சுடர், ஒன்று!

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வர வேண்டுமானால் ஐக்கிய நெறியை உடனே அனுசரிக்க வேண்டும். உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய அறம், புதிய நெறி தோன்றக்கூடிய காலம் பிறந்து விட்டதென்று மேதாவிகள், எல்லாரும் ஒருங்கே சொல்லுகிறார்கள். இங்ஙனம் புதிய ஞானம் பிறக்க வேண்டுமானால் அதற்கு ஹிந்து மதமே முக்கிய சாதனம் என்று நாம் சொல்லுகிறோம். சுவாமி விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், ஜகதீச சந்திரவஸு முதலிய பெரியோர்களும் அங்கனமே சொல்லுகிறார்கள். இந்தச் சமயத்தில் ஹிந்துக்கள் பிரிவு பேசலாமா? ஹிந்துக்கள் பிரிந்து கிடந்தால், ஹிந்து தர்மத்தின் மஹிமையை உலகத்தார் காண்பதெப்படி? ஹிந்து தர்மம் பெருமாள் கோயிலைப் போல! நிற்பது எங்கே நின்றாலும், அத்தனை பேருக்கும் பிரசாதமுண்டு. பகவத் சந்நிதியில் ஜாதிபேதமில்லை. அத்தனை பேரும் கலந்து நிற்கலாம். சர்வ தர்மங்களுக்கும் ஹிந்து தர்மமே வழிகாட்டி. ஹிந்து தர்மத்தை நிலைநிறுத்தினால் எல்லோருக்கும் நல்லகாலம் பிறக்கும்!

சென்னை கிருஸ்துவ கலாசாலையில் டாக்டர் மில்லர் என்று ஒரு பாதிரி இருந்தார். அவர் நல்ல புத்திசாலி என்று பெயரெடுத்தவர். அவர் ஹிந்து மதத்தைப் பற்றிப் பேசும்போது, கடவுளின் அந்தர்யாமித்தன்மையை மற்றெல்லா மதங்களைக் காட்டிலும் ஹிந்து

பாரதியார் தமிழ்க் கவிதைக் கென 'கவிதா மண்டலத்தைத் தொடங்கினார். தமிழறிஞர் சக்கர வர்த்தி நைனாரும் ஒரு பத்திரிகை நடத்தினார். அதன் பின் பாரதி தாசன் அவர்கள் 'குயில்' கவிதை ஏட்டினைத் தொடர்ந்து நடத்தி, கவிதைத் துறைக்குப் பெருமை சேர்த்தார். அவரின் மாணவர்களான 'சுரதா' 'ஊர்வலம்' —காவியம் — 'இலக்கியம்' ஆகிய ஏடுகளையும்; பொன்னடியான் 'முல்லைச்சரம்' மாத ஏட்டினையும் நடத்தினர். முல்லைச்சரம் தொடர்ந்து 15 ஆண்டு களாக வெளிவந்து கொண்டிருக் கிறது. கவிஞர் கண்ணதாசன் தன் 'தென்றல்' பத்திரிகையின் வாயி லாகத் தமிழ்க் கவிதை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்க முட்டினார். த. கோவிந்தன் 'வானம் பாடி' -'கவிஞன்' போன்ற ஏடுகளை யும் நடத்தினார். தெசிணியின் 'கவிதை' ஏடும், செங்குட்டுவனின் 'கவிக்கொண்டலும்' வானம்பாடி யின் 'கவிதா மண்டல'மும் — வா. மு. சேதுராமனின் 'தமிழ்ப் பணி' யும்-'கவியுகமும்' கவிதை இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபடும் ஏடுகளாக உள்ளன.

—இந்திரா

மதத்திலேதான் தெளிவாகக் காட்டி இருக்கிறார்கள் என்று சொல்லியிருக் கிறார். கடவுள் சர்வாந்தர்யாமி என்பது எல்லா மதத்திலுமுண்டு. ஆனால் இங்கேதான் அதைத் தெளி வாகச் சொல்லுகிறோம்.

பாரத ஜாதி ஒன்று; பரஸ்பர அநு சரணையுடைய பல கிளைகள் கொண்ட ஒரு பொருள். நமது ஜாதீய ஒருமையை உணர்வதற்கு தேசபக்தி என்ற விழிகொண்டு பார்க்க வேண்டும். ஆனால் சுய லாபத்தைக் கருதிய அந்நியர்கள் நம்மில் வேற்றுமைகளைப் பற்றிப் பேசும்போது நமக்கு மிகவும் சந்தேக முண்டாகிறது. அவர் உபதேசம் முடிந்து வீட்டுக்குப் போன பிறகு தனியேயிருந்து இதைப்பற்றி யோசித்துப் பார்ப்பதே தகுமென்ற எண்ணம் உண்டாகிறது.

நம்முள்ளே பொது நலத்திற்கு விரோதமான வேற்றுமைகளை அவரவர்கள் கண்ட கண்ட இடத்தில் நீக்கிக் கொள்ள வேண்டுமே யல்லாது, நமது பொதுநலச் செய்தி களைக் காட்டிலும், வேற்றுமைச் செய்திகள் வெகு முக்கியம் போல, பின்னவற்றையே, பிரமாதமாக பிரசங்கித்துக் கொண்டிருக் கலாகாது.

...ஹரிஜனங்களுக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற் கடமை. அவர்களுக்கு முதலா வது வேண்டியது சோறு. சென்னைப் பட்டணத்து 'பட்லர்' களைப் பற்றிப் பேச்சில்லை. கிராமங்களிலுள்ள பண்ணை ஹரி ஜனங்களைப் பற்றிப் பேச்சு. அவர் களையெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு, அவர்களோடு சமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்கால மாகச் சொல்லி வருகிறேன். அவர் களையெல்லாம் ஒன்று சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதி களே! நாட்டுக் கோட்டைச் செட்டியார்களே! இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக்கூடிய

கைங்கர்யம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கர்யம்.

நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினர் என்று விலக்கினோம். இப்போது நமது ஹிந்து ஜாதி முழுவதையும் உலகம் தீண்டாத ஜாதி என்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புகள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியைத் துர்பலப்படுத்தி விடுமானால் அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அந்நியர்களுக்கு எளிதாகிறது. ''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்''!

நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கிறது. இதைப் பற்றி மேற்குலத்தார்கள் வேண்டிய அளவு சிரத்தை செலுத்தாமல் இருக்கின்றனர். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதிபயங்கரமாகக் குறைந்து கொண்டு வருகிறது. மடாதிபதிகளும், சந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்தமடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம் நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்!

நாமே தாழ்ந்த ஸ்திதியில் இருப்போர்களை நல்லஸ்திதிக்குக் கொண்டு வர வேண்டும். இந்தத் தாழ்ந்தவர்களும் நமக்கு வேண்டியவர்கள்தான். ஆகையால் எழுந்திருங்கள். பெரியோர்களே! உங்கள் பிள்ளைகள் யாவரையும் தேசத்திற்கு நன்மை செய்ய அனுப்புங்கள்.

வெளித்தேசத்தாருக்குத் தர்மோபதேசம் செய்கையில் நமது நாட்டில் குற்றங்கள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமோ? இங்கே அநாவசியமான ஜாதி விரோதங்களும் (அன்புக்குறைவுகளும்) அவமதிப்புகளும் வளர விடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும், உடன் பிறப்பையும் நிலை நாட்டுவது நம்முடைய கடமையன்றோ? □

ஆதாரம்: 'ஊருக்கு நல்லது'
மகாகவி பாரதியார் எழுதியது

பாரதியின் சமயக் கொள்கை

எல்லா உயிர்களும் பரமாத்மாவின் அம்சங்களே என்பதை நன்கறிந்து, அவற்றை மன மொழி மெய்களால் எவ்வகையிலும் துன்புறுத்தாமல்; இயன்ற வழிகளிலெல்லாம் அவற்றிற்கு நன்மையைச் செய்து வர வேண்டும் என்பது ஹிந்து மதத்தின் மூல தர்மம் என்பதை மாணாக்கர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். மாம்ஸ போஜனம் மனிதன் உடல் இறைச்சியைத் தின்பது போலாகும் என்றும், மற்றவர்களைப் பகைத்தலும் அவர்களைக் கொல்வது போலேயாகும் என்றும் ஹிந்து மதம் கற்பிக்கிறது. 'எல்லாம் பிரம்ம மயம்', 'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்ற வசனங்களால் உலக முழுவதும் கடவுளின் வடிவமே என்று ஹிந்துமதம் போதிக்கிறது. 'இங்ஙனம் எல்லாம் கடவுள்மயம் என்று உணர்ந்தவன் உலகத்தில் எதற்கும் பயப்படமாட்டான். எங்கும் பயப்படமாட்டான். எக்காலத்திலும் மாறாத ஆனந்தத்துடன் தேவர்களைப் போல் இவ்வுலகில் நீடூழி வாழ்வான்' என்பது ஹிந்து மதத்தின் கொள்கை.

— சமூகம்.
பாரதியார்.

WEAVERS CHOICE:

- **Rajalakshmi Cotton Yarn**
- **Rajalakshmi Viscose Yarn**
- **Rajalakshmi Blended Yarn**

BEST FOR ITS PRICE

Priyadharshini — Cambric

RLM 210 — Dhoti

RLM 1703—Superior Mull

THE RAJALAKSHMI MILLS LIMITED

Head Office:
1126 TRICHY ROAD
COIMBATORE 641 005

Phone: 26312 (3 Lines)

Cable: RAJALAKSHMI
COIMBATORE

Telex: 0855-267 RLM IN

Branch:
KARAMADAI
COIMBATORE DT.

Phone: 44 Karamadai
443 Mettupalayam

மகா கவி

•⁚• திரு. ம. ப. பெரியசாமித்தூரன்

சுப்பிரமணிய பாரதியார் ஒரு மகாகவி. சோர்வுற்று தாழ்வு மனப் பான்மை அடைந்து நிற்கின்ற நிலையிலே அந்தச் சமூகத்தைத் தட்டி எழுப்ப ஒரு மகாகவி தோன்று கிறார். கவிதை என்பது வேடிக்கைப் பின்னல்கள் என்ற நிலைமை மாறிடச் செய்பவனே ஒரு மகாகவி ஆவான். அவர் கவிதையிலும் மறு மலர்ச்சி உண்டாக்கினார். உரை நடையிலும் மறுமலர்ச்சி உண்டாக்கி னார்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் இல்லை. வள்ளுவன் போல் இளங் கோவைப் போல் இனி உலகத்திலே பிறந்திருக்க முடியாது. பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் பான்மை சொல்ல'' என்று கர்ஜித் தான். ''தமிழ் என்றும், புனர் ஜென்மம் என்றும் இவ்வாறு பெயரை வைத்துக் கொண்டு நாமமது தமிழ ரென விண்ணளாவிய புகழை நமக் குள்ளே பேசிக் கொண்டு இருப்பது நன்றோ என்று கைலை மலையின் உச்சி மீதில் கர்ஜிப்பது நன்றோ. நமது சங்கீதம், நமது சிற்ப சாஸ் திரம், நமது ஓவியம் மிகவும் புகழ் பெற்றவை'' என்று முழு மூச்சுடன் இடி முழக்கம் செய்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். எளிய பதம், எளிய சந்தம் இவற்றை வைத்துக் கொண்டே ஒப்பற்ற கவிதைகளைப் படைக்கலாம் என்று நிரூபித்துக் காண்பிப்பவன் ஒரு மகாகவி. தனது சிந்தனா சக்தியால் இந்தத் தமிழ்ச் சமூகத்திற்கு என்ன வேண்டும் என்று பாடியவன் மகாகவி.

''பட்டங்கள் ஆள்வதும், சட்டங் கள் செய்வதும் பாரினில் பெண்கள் படைக்க வந்தோம்'' என்று ஐம்பது ஆண்டுக் காலத்துக்கு முன்பேயே பாடியவன் மகாகவி. உலக விஷயங் களிலும் ரசமாக எழுதி உலகத்துக் கும் நமது நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று நிரூபித்துக் காட்டியவன் மகாகவி.

இறுதியாக ''சொந்த நாட்டில் பிறர்க்கு அடிமை செய்து துஞ் சிடோம் இனி அஞ்சிடோம்'' என்று எல்லா வல்லமைகளும் பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தையே நடுங்க வைத்தவன் மகாகவி. வரப் போகின்ற வலிமை வாய்ந்த தமிழ்ச் சமூகத்தை உருவாக்கியவன் மகாகவி. அதனாலே தான் இன்று பேச்சு மேடைகளில் தமது கவிதை கள் எல்லாம் முழங்கச் செய்தவன் மகாகவி.

காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்று எல்லா ஜீவராசிகளிடத்தும் தொடர்புபடுத்தியவன் மகாகவி.

இன்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா மிகச் சிறந்த முறையிலே நாடெங்கும் கொண்டாடுகிறோம். இவ்வாறு சமூகத்திலே தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்ட போதெல்லாம் ஒரு பெரியவர் தோன்றுகிறார். இவரை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்று கூறாமல் வேறு என்ன அடைமொழி கொடுத்து அழைப்பது? □

பாரதியின் தொழிற்புரட்சி

தீபம் நா. பார்த்தசாரதி
ஆசிரியர், தினமணிக் கதிர்

மகாகவி பாரதியைப் புரட்சிக்கவி என்றும், தேசியக்கவி என்றும் சிறப்பித்துச் சொல்கிறோம். இந்தச் சிறப்பு அடைமொழிகள் உபசாரத்துக் காகக் கொடுக்கப்பட்டவை அல்ல.

1882-இல் பிறந்து 1921-இல் மறைந்த ஒரு மகாகவி தம் காலத்துக்கும், எதிர் காலத்துக்கும் சேர்த்தே புதுமைகளைப் படைத் திருக்கிறார்.

பிரதேசம் மொழி இன உணர்வுகளில் பற்றுடன் தேசியம், சர்வ தேசியம் ஆகிய உணர்வுகளைப் பாரதியார் போற்றியிருக்கிறார்.

சில கவிஞர்கள் அவர்களுக்கு முந்திய கடந்த காலத்தோடு ஒப்பிட்டால் மட்டுமே புதுமையாளர்களாகத் தெரிவார்கள். இன்னும் சில கவிஞர்கள் தம் காலத்துப் பிற கவிஞர்களோடு ஒப்பிட்டால் மட்டும் புதுமையாளர்களாகத் தெரிவார்கள். வேறுசிலர் எவ்வளவுதான் புதுமை யாக விளங்கினாலும் தம் எதிர்காலத்திலே தோன்றும் பிற கவிஞர் களால் புதுமைஒளி மங்கிப் போவார்கள்.

ஆனால் தமிழ் மொழியில் பாரதியார் முக்காலத்துக்கும் புதுமை யாளராகத் திகழ்வதுதான் வியப்புக்குரியது. அவரது சிந்தனையின் வலிமையே இதற்குக் காரணம்.

அருவியையும், குருவியையும், மலையையும், மயிலையும் பாடிக் கொண்டிருந்த கவிஞர்களுக்கு (romantic poets) நடுவே, தொழிற் புரட்சியைப்பற்றிக் கவி எழுதினான் பாரதி. சோவியத் நாட்டில் நிகழ்ந்த புரட்சிக்கு வாழ்த்துக் கூறினான். இத்தாலியில் மாஜினி செய்த சபதத்தைத் தமிழர்கள் அறியக் கவிதை செய்தளித்தான். பெல்ஜிய நாட்டிற்கு வாழ்த்துப் பாடினான். பீஜித்தீவிலே கரும்புத் தோட்டத்திலே கண்ணீர் சிந்தும் பெண்களைப் பற்றிக் கவலைப்பட்டான்.

இத்தகைய பரந்த உள்ளம்தான் ஒரு கவிஞனை மகாகவி ஆக்கு கிறது. பாரதி காலத்தில் பல முக்கிய பொருள்களை நாம் அந்நிய நாடு களிலிருந்துதான் இறக்குமதி செய்து கொண்டிருந்திருக்கிறோம்.

சுதேசி உணர்வும், சத்திய ஆவேசமும் நிறைந்த அந்த மகாகவி பலகோடி மக்கள் நிறைந்த ஒரு நாடு எல்லாவற்றுக்கும் அந்நிய

நாடுகளை எதிர்நோக்கி நிற்பதைக் கண்டு மனம் நொந்திருக்கிறான்; உருகியிருக்கிறான்.

வெறும் குண்டூசி முதல் மல் துணிவரை பிற நாடுகளிலிருந்து வர வேண்டிய நிலையை மாற்ற வேண்டுமென்று நினைத்த நினைப்பே ''தொழில்'' என்ற தலைப்பில் கவிதையாகிறது பாரதியிடம். தேசத்தின் யாராவது ஒரு பொருளாதார வல்லுநன், அல்லது முதலீட்டுச் சக்தியுள்ள பணக்காரர் இப்படி நினைத்திருந்தால் அது இயல்பு.

தொழில் வளர்ச்சி பற்றி ஒரு கவி நினைக்க ஆரம்பித்து உருக்கமாகப் பாடுகிறான் என்பதே பெரிய புதுமை. மிக ஆழமான நாட்டுப் பற்றும், நலெல்லண்ணமும் மக்கள் நேய மனப்பான்மையும் இருந்தாலொழிய இது சாத்தியமில்லை. மகாகவியாகிய அவனுடைய சிந்தனை தொழில் வளர்ச்சி பற்றித் திரும்பியதையே ஒரு புரட்சியாக எண்ணுகிறேன் நான். ''தொழில்'' என்ற தலைப்பில் பாரதி எழுதியுள்ள கவிதை அவனை மற்ற கவிஞர்களிலிருந்து உயர்த்திக் காட்டுகிறது. சுதந்திரம் அடைய அவாவி நிற்கும் ஒரு நாட்டுக்குத் தொழில் வளர்ச்சியும், தொழிற் புரட்சியும் இன்றியமையாதவை என்பதைப் பாரதி உணர்ந்து பாடியதைப் போல அவனுக்கு முன்னோ பின்னோ இருந்த எந்தக் கவிஞரும் உணரவுமில்லை; பாடவும் இல்லை.

உருக்கு, சர்க்கரை, கப்பல் கட்டுதல், ஓட்டுதல் முதலிய தொழில்கள் வளர்ந்தாலொழிய ஒரு நாடு முன்னேற முடியாது என்ற சிந்தனையோடு கூடிய கவிஞனாகப் பாரதி இருந்திருக்கிறான். இதற்குக் காரணம் பாரதி ஓர் ஏட்டுச் சுரைக்காய்க் கவிஞனாக மட்டும் இல்லை; ஒரு தேசத் தலைவனாகவும் இருந்திருக்கிறான் என்பதே. ஒரு கவிஞன் இப்படித் திறமைகளின் இணைப்பு ஆக அமைவது அபூர்வம்.

கவிதையின் ஆவேச உணர்வு சிறிதும் குன்றா ஒரு பொருளாதார வல்லுநனைப் போல இந்தத் தொழிற் புரட்சியைத் தன் கவிதை மூலம் செய்திருக்கிறான் பாரதி.

பாரதி அரசுக் கொள்கை

ஜனங்களுக்குள்ளே சமாதானத்தைப் பாதுகாப்பதும், வெளி நாடுகளிலிருந்து படை எடுத்து வருவோரைத் தடுப்பதும் மாத்திரமே ராஜாங்கத்தின் காரியங்கள் என்று நினைத்து விடக் கூடாது. ஜனங்களுக்குள்ளே செல்வமும், உணவு, வாஸம் முதலிய ஸௌகர்யங்களும், கல்வியும், தெய்வ பக்தியும், ஆரோக்யமும், நல்லொழுக்கமும், பொது சந்தோஷமும் மேன் மேலும் விருத்தி அடைவதற்குரிய உபாயங்களை இடைவிடாமல் அனுஷ்டித்துக் கொண்டிருப்பதே ராஜாங்கத்தின் கடமையாவது.

(பாரதி 'சமூகம்'—பக்கம் 66)

''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே.
யந்திரங்கள் வகுத்திடுவீரே.
கரும்பைச் சாறுபிழிந்திடு வீரே
கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே.
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந்தொழில் செய்திடுவீரே
பெரும்புகழ் நுமக்கேயிசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே''.

இந்தத் தொழில் உயர்வு, அந்தத் தொழில் தாழ்வு என்றெல்லாம் வேறு பாடும் ஏற்றத் தாழ்வும் கருதாமல் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடு பட்டு நாடு வளர ஆயிரமாயிரம் தொழில்களைச் செய்ய வேண்டும் என்கிறான் பாரதி. கையால் உழைப்பது யந்திரங்களால் உழைப்பது இரண்டையுமே போற்றுகிறான் பாரதி. தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை இந்தியாவின் உடல் வருந்தி உழைக்கும் உழைப்பைப் பற்றிய சிந்தனையோடு மேற்கத்திய நாடுகளின் வேகமான யந்திர சாதனங்களையும் அவன் வரவேற்கிறான்.

அவன் எந்தத் தொழிலையும் விட்டுவிடவில்லை. பானை வனைதல் தொடங்கிப் பால் உற்பத்தி வரை உள்ள அனைத்தையும் கூறிவிடுகிறார்.

மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனை செய்குவீரே!
உண்ணக் காய்கனி தந்திடுவீரே!
உழுதுநன்செய்ப் பயிரிடுவீரே!

பாரதியின் நீதிக் கொள்கை

நீதி என்பது பொது ஒழுக்கம். ஒரு கிராமத்தில் வலியவனுக்கு வேறு நியாயம் எளியவனுக்கு வேறு நியாய மாக இருந்தால் அங்குள்ள நீதிக்காரரை உடனே மாற்ற வேண்டும். இல்லாவிட்டால், கிராமம் விரைவில் அழிந்து விடும். ஜனங்கள் குற்றஞ் செய்யாமல் நீதிக்காரர் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரர் குற்றஞ் செய்யாமல் ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரரிலே இரண்டு பெரிய பிரிவு உண்டு; நியாயஸ்தலங்களிலிருந்து நீதியைப் பரிபாலனம் செய்வோர் ஒரு பகுதி; நீதி (சட்ட) சபைகளிலிருந்து விதிகள் ஏற்படுத்துவோர் மற்றொரு பகுதி; இவ்விருதிறத்தாரும் கோணல் வழியிலே இறங்காமல் அடக்க வேண்டிய பொறுப்பு பொது ஜனங்களைச் சேர்ந்தது.

பாரதி
214—சமுகம்

எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடுவீரே!
இழையை நூற்றுநல் லாடை செய்வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர்நீரே.

''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே'' என்ற முதற்பாடலில் கனரகத் தொழில்களை (heavy industries) விவரித்த பாரதி இந்த இரண்டாவது பாடலில், ''உழுது நன்செய்ப் பயிரிடுவீரே'' என்பது முதல் பல நாட்டுப் புறத் தொழில்களை(rural industry) விவரிக்கிறான்.

''இழையை நூற்று நல்லாடை செய்வீரே'' என்ற வரி கைத்தறி நெசவையும் பஞ்சாலைத் தொழிலையும் ஒருங்கே குறிப்பிடுவதாகக் கொண்டால் தவறு இல்லை. இப்படி நகர்ப்புற, நாட்டுப்புறத் தொழிற் புரட்சியை வரவேற்றுப் பாடிய பாரதி தன் காலத்திலேயே தீர்க்க தரிசனமாகக் கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பற்றியும் பாடியிருக் கிறான்.

''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''

இந்தக் கருத்தைப் படிக்கும்போது கங்கை-காவிரித் திட்டத்தின் பிதா என்று அவனையே நினைக்கத் தோன்றுகிறது.

''ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்குவோம்''

என்று பாடும்போது சுதந்திர இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில் வளர வேண்டும், சுதேசிக் கப்பல்கள் ஓடவேண்டும் என்ற அவன் ஆசை தெரிகிறது.

ஆயுதத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை ஆகியவை வேண்டும் என்றும் அவன் கூறியிருக்கிருன்.

''ஆயுதம் செய்வோம் நலல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்''

சுதந்திரம் அடைவதற்கு முன்பே சுதந்திர நாட்டின் தொழில் உற்பத்தி யையும் தொழில் வளர்ச்சியையும், அதில் ஏற்படவேண்டிய புரட்சிகரமான மாறுதல்களையும் பற்றிப் பாரதி பாடியிருப்பது வியப்புக்குரியது.

மற்றைய தமிழ்க் கவிஞர்கள் பலரைப் போல் பாரதி தந்தக்கோபுர வாசியாக இருக்கவில்லை. இந்தியாவையும், அதன் பரப்பையும், மக்கள் தொகையும், தொழில் வளர்ச்சியில் அது பின்தங்கியிருந்த தன் காலத்து நிலையையும் கருத்தூன்றிச் சிந்தித்திருக்கிறான் அந்த மகாகவி.

அப்படிச் சிந்தித்த காரணத்தினால்தான் ''ஆயிரம் தொழில்கள் செய்திடுவீரே'' என்று தன் நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறான். எதிர்கால பாரத நாட்டுத் தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சிந்தித்த முதல் தமிழ்க் கவிஞன் பாரதியை நினைக்கும் போது நமக்குப் பெருமிதமாகிறது. □

பாரதியின் உருவம்

‘‘நடுத்தர உயரம்; ஒற்றை நாடி; மாநிறம் படைத்த மேனி; புரி புரியாய்ச் சுற்றிய வால் விட்ட தலைப்பாகை; அகன்ற நெற்றி; அதன் மத்தியில் காலணா அளவு குங்குமப் பொட்டு. அடர்ந்த புருவங்கள் உருண்ட கண்களைக் காத்து வந்தன. நிமிர்ந்த நாசி வாடிய கன்னங்களை விளக்கிக் காட்டிற்று. முறுக்கிய மீசை மேலுதட்டை மறைத்தும், உறுதி இழந்த உயிர் நிலையைக் கீழ் உதடு காட்டி விட்டது. உடல் மீது பித்தான் இல்லாத ஷர்ட்டு; அதை மூட ஓர் அல்பாக்கா கோட்டு; வெருண்ட கண்கள்; வேதனை வடிந்த கண்கள்; சாந்தம் நிறைந்த கண்கள்; வசியம் மிகுந்த கண்கள். அவை என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன. பாரதியைப் பார்த்த அன்றே அவர் தாசனாக மாறினேன்.’’ சி. ஆர். சீனிவாசன் ‘‘பாரதியும் அவாது உபதேசமும்’’

பாரதியார் தோற்றம் எப்படி?

வீரத்திரு விழி, முறுக்கிய மீசை, கோட்டு தலைப்பாகையுடன் அவர் காட்சி தந்தார். பாரதியார் அலுவலகம் வருவதும் பணி முடிந்து வீடு திரும்புவதும்கூட ரொம்ப மாறுபட்டது. விறு விறு வென்று வேகமாக வந்து சேர்வார். அதே போல வேகமான நடையில் வீடு திரும்புவார். எதிரே யார் வந்தாலும் லட்சியமில்லை. இடித்துக் கொண்டு போனாலும் திரும்ப மாட்டார். ஒரு சமயம் பாரதியார் இப்படிக் குடு குடு வென்று செல்கையில், ‘அதோ, குடுகுடுப்பாண்டி மாதிரி போகிறாரே, அவர்தான் பாரதியார்’ என்று ஒருவர் அலட்சியமாகச் சொன்னதும் இன்றும் என் நினைவில் நிற்கிறது.

‘‘தாங்கள் பாரதியார் படம் வரைந்தது பற்றிய விவரங்களைக் கூறுவீர்களா?’’

''பாரதியாரை நேரில் பார்த்ததை மட்டும் கொண்டு நான் அவர் படத்தைத் தீட்டவில்லை. சுப்ரமணிய பாரதியாரின் தேச பக்திப் பாடல்கள், குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, தமிழ் மொழி வாழ்த்து, மற்ற தோத்திரப் பாடல்களெல்லாம் நான் படித்து அதில் திளைத்தவன். பாரதியார் பாடல்கள் எனக்கு மனப்பாடம். பாரதியாரிடம் பழகியவர்கள் சொன்ன செய்திகளைக் கேட்டேன். பாரதியார் பாடும் தோற்றம் எப்படி எல்லாம் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன். அவர் கண்ணில் கண்ட ஒளி என் நினைவில் ஆழமாகப் பதிந்தது.''

(எழுபத்தி நான்கு வயது நிரம்பிய திரு ஆர்யா (இயற்பெயர் பாஷ்யம்) வரைந்த பாரதியார் ஓவியம்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்று உலகம் முழுவதும் காட்சியளிக்கிறது.)

—'குங்குமம்'

□

பாரதியார் பற்றி....

❊ ''பாரதியார் ஒரு மகாகவி. தமது உணர்ச்சியை வெளிப் படுத்துவதில் பேராற்றல் படைத்தவர். அவர் உள்ளத்து உண்மை ஒளியே கவிதைகளாக மலர்கின்றன. அவர் பாடல்கள் தமிழர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தன; கொடுப்பன ... பாரதியார் சிறந்த கவிதைத் தச்சர்; ஒப்பற்ற சீர்திருத்தச் சிற்பி; அழுத்தமான தெய்வ பக்தர்; வாய்மையும் நேர்மையும் பொருந்திய சமுதாயத்தின் வழிகாட்டி.''

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்
பாரதி காட்டும் வழி

• • • •

❊ ''மகாகவி பாரதியார் தமக்கே உரித்தான தனிப் பாணியில் மறுமலர்ச்சிக் கவிதைக் கருவியால் அரசியல், நாடு, மக்கள், தலைவர்கள், இயற்கை, தெய்வம், மதம், ஞானம், நீதி, தமிழ், இலக்கியம், காதல்-ஆகிய பல துறைகளையும் துருவி ஆராய்ந்து அலசிப் பார்த்து அதில் ஆர்ந்திருந்த ஊழல்களைஎடுத்துக் காட்டி அவற்றைச் சீர்திருத்திச் செம்மையாக்க வேண்டிய சீர்மையை ஆர்வமோடு செப்பியுள்ளார்.''

திரு. ரெ. இராமசாமி — பாரதியின் காதலி

• • • •

❊ ''தொழிலாளர்கள் உலகத்தை மாற்றும் ஒரு சக்தி என்பதை உணர்ந்தார். தொழிலாளரைப் புகழ்ந்து பாடிய பாரதி, அவர்களது நன் முயற்சிகளுக்கு வாழ்த்துப் பாடும் புரட்சிக் கவியாகப் படிப்படியாக மாறினார்.

திரு. நா. வானமாமலை — பாரதியும் தொழிலாளரும்

THE LAKSHMI MILLS COMPANY LIMITED

348, AVANASHI ROAD, COIMBATORE - 641 037

Spindles 2,14,560 Looms 504

Telegrams 'LAKSHMI' COIMBATORE — 'LAKSHMIMIL KOVILPATTI
'RUKMANI' SINGANALLUR

Telex · COIMBATORE — 0855-212
KOVILPATTI — MA 0445-286
SINGANALLUR — 0855-236

Telephone COIMBATORE — 30251 to 30255
KOVILPATTI — 613 & 614
SINGANALLUR — 87335/87337

Manufacturers of Fabrics and Yarns of the Finest Quality
Ask by name our following fabrics

'SUPRABHA' 'GALAXY' 'SUVARNA'	100% POLYESTER SAREES
'SUPER STAR' 'SUPREMACY'	100% POLYESTER PRINTED SHIRTINGS
'APSARA' —	100% POLYESTER BLOUSE MATERIAL
'EXCELLANCE' 'EMPEROR' 'ROYAL GOLD' 'GOLD CROWN' 'LAKSHMI STAR'	100% POLYESTER AND POLYESTER BLENDED SHIRTINGS
'CITIZEN' —	100% COTTON PRINTED DRESS MATERIAL
'PRITI' 'BALLERINA'	100% COTTON PRINTED SAREES
'PRIYA' 'ROOPMATHI'	2×2 AND 1×1 BLOUSE MATERIALS
'POLY CROWN' 'CHANCELLOR'	POLYESTER/CELLULOSIC BLENDED SUITING

பாரதியார் வாழ்வில் சில நிகழ்ச்சிகள்

பிறந்தது	11-12-1882
தாயை இழந்தது	1887
திருநெல்வேலியில் பள்ளிக் கல்வி	1887-1897
'பாரதி' என்ற பட்டம் பெற்றது	1893
திருமதி செல்லம்மாளை மணந்தது	1897
தந்தை சின்னச்சாமியை இழந்தது	1898
காசியில் கற்றது - அலகாபாத்துப் பல்கலைக் கழக புகுமுகத் தேர்வில் வெற்றிபெற்றது	1898-1901
எட்டயபுர அரண்மனைப் புலவராகியது	1902-1904
மதுரை சேதுபதி உயர் நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியராகியது	1904 (3மாதங்கள்)
சுதேசமித்திரன் நாளிதழின் துணை ஆசிரியர் - இந்தியா வார இதழ் தொடங்கியது - சக்கரவர்த்தினி மாத இதழ் நடத்தியது - பாலபாரதம் ஆங்கில மாத இதழ் நடத்தியது	1904-1907
தேசிய கீதங்கள் முதற் பாகம் வெளியிட்டது - இந்தியா வார இதழில் 'ஞானரதம்' உரைநடைத் தொடர் வெளியிட்டது	1908
கைது ஆவோம் என அறிந்து புதுச்சேரிக்குச் சென்றது - 'இந்தியா' வார இதழைப் புதுவையில் தொடங்கியது	ஆகஸ்டு-1908
புதுவையில் 'விஜயா' நாளிதழுக்கு வேகம் ஊட்டியது - 'கர்மயோகி' மாத இதழைத் தொடங்கியது - பலமொழி நகைச் சுவைக் கருத்துப் படங்களை வெளியிட்டது - 'இந்தியா' இதழ் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியாவில் தடை செய்யப்பட்டது	1909
'இந்தியா' வார இதழ் நின்றது -பிற இதழ் களும் வீழ்ச்சியை நோக்கியது	1910
நூல் வெளியீட்டில் ஆர்வம் - அரவிந்தர், வ.வே.சு.அய்யர், குள்ளச்சாமி, மற்றும் பல யோகியர் ; விடுதலை வீரர் பலர் உறவு பெற்று மகிழ்ந்தது	1911 - 1918
உலகப் போர் நின்றது - பாரதி சென்னை புறப் பட்டுக் கடலூரில் கைதாகி 21 நாட்கட்குப் பின்னர் விடுதலை ஆனது - கடயத்தில் சில காலம் வாழ்ந்து பின்னர் சென்னையில் சுதேச மித்திரன் இதழில் சேர்ந்தது -	1918-1920
திருவல்லிக்கேணி கோயில் யானையால் தாக்குண்டு பிழைத்தது	ஜுன்-1921
சில நாள் நோய்த் துன்பத்தால் மறைந்தது-	11-10-1921

(காலை-1-30 மணி அதாவது 12-10-1921)

புத்துலகச் சிற்பி

பேராசிரியர் திரு. அ. செகதீசன், எம்.ஏ; எம்.ஃபில்;
வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

காலத்தில் ஓயாத காட்டாறு; வாழும்
கருத்தாலே, தேயாத பாட்டாறு; மடமை
மூலத்துக் கெதிரான அறத்தாறு; பழமை
முடுக்குக்குப் புதிரான வழக்காறு; வறுமை
ஓலத்தை விடுமாறு, விழிமூடா அடிமை
உறக்கத்தைக் கெடுமாறு வைத்தமொழி நாட்டுப்
பாலத்துப் பண்பாட்டுப் பணியொழுக லாறு;
பாரதியாம் புத்துலகச் சிற்பிவர லாறு!

இருள்மூட்டத் தினில்வெட்டும் வரைமின்னற் புதிராய்,
இரவைவிரட் டிடும்வெற்றி விடியற்கலைக் கதிராய்,
மருள்கூட்டத் தினில்சிலிர்க்கும் மானவேல் வீச்சாய்,
மடிந்தபயிர்ப் பரப்புக்கு மடைதிறந்த வாய்ப்பாய்,
பொருள்வேட்டைக் கொள்ளையின்முன் பூகம்ப மூச்சாய்,
புரியாத புதர்ப்புழையில் எரிமலையின் பேச்சாய்,
திருநாட்டின் தெருவெல்லாம் தேமதுரத் தமிழாய்த்
தினவேற வைத்தமுதற் புத்துலகச் சிற்பி!

வெள்ளிக்கிண் ணத்தில்பால் சோறள்ளி வைத்து
விண்தங்க முத்துநிலா, விரற்பவளம் காட்டிப்
பிள்ளைமா ணிக்கத்துக் கூட்டாமல், பச்சைப்
பிஞ்சுமனத் தில்,சாதி நஞ்சென்றே தீட்டி,
''உள்ளகுலம் ஒன்றதனில் உயர்வுதாழ் வுரைத்தால்
உறும்பாவம்!'' எனும்உண்மைச் சத்துணவே ஊட்டித்
தள்ளிவிடும் நந்தனையே அந்தணனாய்க் காட்டும்
தப்பாத இனவொருமைப் புத்துலகச் சிற்பி!

பத்திநெறி பண்பொருமை முத்திரையைப் போடப்
பழுத்துவரும் அன்பருளே அறிவுடைமை யாகப்,
பித்தமனம், 'மதம்'கொண்டு பெருமைசிறு மையில்
பிழைப்புக் காய்ப் பிறப்புரிமை வழியடைக்கக், கண்டே
ஒத்துரிமை யுடைமையெனச் சிலுவை, பிறை யையும்
ஊட்டு திரு நாமவெண் ணீற்றுக்கோ புரத்தில்
வைத்தேற்றி அனைவருக்கும் சமபந்தி போட்ட
மனிதாபி மானத்துப் புத்துலகச் சிற்பி!

வெற்றிலைபாக்(கு) உரல்தட்டிப் பொக்கைவாய்க் கொட்டி
விரித்த பழங் கதைச்சருகு குதப்புநிலை விட்டே,
"கற்றிருக்கத் தமிழினிலோ கலையூட்டம் இல்லை;
கற்பிக்கும் திறமையிலோ வற்றல்நிலை; உலகில்
சுற்றியுள்ள அறிவியலோ சூழவழி இல்லை;
சோதனையே!" எனும் பழியின் பேதமையை நீக்க,
"முற்றுமுல கேகிடுவீர்; புத்தம்புதுக் கலைகள்
மொய்க்க இவண்!" என்றேவும் புத்துலகச் சிற்பி!

மனிதருக்காம் உணவதனை மனிதர்பறிப் பாரோ?!
மற்றவர்க்காம் உரிமை,முற்றும் மற்றொருவற் கானால்
தனியொருவற் குணவில்லை எனும்கொடுமை தானாம்
சமதர்மம், சமதாயம், சமத்துவம்,பின் ஏனாம்?
இனிவிதியாச் செய்வதற்கே ஒன்றுண்டாம்! வீழ்ச்சி
இப்படியாம் சமுதாய அமைப்பினையே மாற்றி
நனிநிலைமை எதிலுமிலா நடுநிலைமை வெற்றி
நாட்டுகின்ற பொதுவுடைமைப் புத்துலகச் சிற்பி!

வையகத்தை வளைத்தடக்கும் மன்னாதி மன்னர்;
மகுடமணிக் குடைவேந்தர்; அனைத்துலகச் செல்வம்
மையமிட்ட கைவள்ளல் என்றாலும், சின்ன
வாழைப்ப ழக்கடையே வைத்திருப்பா ரேனும்
பையவிழ்க்கும் தொழில்வழியே பணம்படைத்தல் இன்றிப்
பண்பென்றே அவ்வவர்க்காம் பணிநடத்தி, வஞ்சப்
பொய்யகல வாழ்வாரேல் அவர்மேலோர் என்றே
பொதுவேதம் தனியோதும் புத்துலகச் சிற்பி!

தாயின்மணிக் குடையின்கீழ்த் தவப்புதல்வர் இன்றோ
தனித்தனியே சிக்கிமுக்கிக் கனல்தெறித்து நிற்பார்!
ஆயபல கொடியின்கீழ் அரசியல்காய்ப் புக்காய்
அன்னைமடி யைவெட்டி மண்ணெடுப்பார்! அந்தத்
தாயின்மணிக் கொடியின்கீழ் அனைத்துமா நிலத்தின்
தனயர்களை ஒருமனதாய் அணிவகுக்க வைத்தே
கோயிற்பணி எனவொருமைப் பாட்டுக்கம் பத்தில்
கொடியேற்றி வைத்தமுதற் புத்துலகச் சிற்பி!

புதிதான 'சொல்' விதைத்துப், புதிய 'பொருள்' தோன்றிப்
புதிய'சுவை' பூத்து, வழிப் புதிய 'வளம்' காய்த்துப்
புதிதுபுதி தாய்ப்பழுத்த கவிக்கனிகள் தம்மைப்,
"புதிதாகத் தமிழன்னைக் கழியாத உயிரும்
புதிதாக ஒளியும்இயன் றிடுமாறிங் கினிமேல்
பிறந்து, புதுக் காவியங்கள் பெறுவோர்க்கும், அவர்க்கு
நிதியளக்கும் செல்வர்க்கும் காணிக்கை" யாக
நீட்டும்கை நிறைகொள்கைப் புத்துலகச் சிற்பி! □

கண்ணதாசனின் பாடல்களில் சக்திதாசனின் தாக்கம்

புலவர்
தமிழ்ப்பித்தன், பிலிட்;
'தமிழரசு' சென்னை

பாரதி!

பாட்டுக் கொரு புலவன் என்னும் புகழ் பெற்ற பாவலர்.

பண்டிதரும் பாமரரும் ஏக காலத்தில் புரிந்து போற்றும் வகையில் கவிதைச் சிற்பம் வடித்தெடுத்த காவியச் சிற்பி!

சந்தங்களைச் சொந்தங்களாக்கி, சதங்கை மணிகள் என ஒலிக்க வைத்த வார்த்தை நட்டுவனார்.

தமிழ் இலக்கியத் திருநகரின் கவிதைமணி மாளிகையில் எளிய இனிய சொல் வாயில்களைத் திறந்து வைத்த திருமகன்.

ரசிகத் தன்மையை அனைவரிடத்திலும் அறிமுகம் செய்து வைத்த அற்புதக் கவிதை மன்னர்.

கரடு முரடு நிறைந்த இலக்கியப் பாதையை-கல்லும் முள்ளும் அடர்ந்து கிடந்த கவிதை வீதியை வைரமணிச் சொற்களால் சரிப்படுத்தி எல்லாத் தரப்பினரையும் நடைபோட வைத்த நாவுக்கரசர்.

அவரைப் போற்றாதார் இல்லை- புகழாதார் இல்லை! அவர் திறம் உணராதார் இல்லை - இல்லை!.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த - வாழ்கின்ற பற்பல தமிழ்க் கவிஞர்களைப் பாரதி வயப்படுத்தியிருக்கிறார். பலரது கவிதைகளிலும் அவர் உலா வருகிறார்; இந்த நூற்றாண்டுக் கவிஞர்களில் குறிப்பிடத் தக்கவராய்த் திகழ்ந்த அமரர் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கவிதைகளிலும் களிநடம் புரிகிறார்.

கவியரசர் கண்ணதாசன் அவர்கள் பாரதியின் ரசிகராகத் திகழ்ந்திருக்கிறார். அவரைத் தமது மானசீக குருநாதராகவே அவர் ஏற்றுக் கொண்டிருந்தார். பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்த பாரதியின் மீது அவருக்கு மாறாத காதல் உண்டு. அந்த மா கவிஞரை அடிக்கடி பாராட்டிப் பேசுவார். அவரது நடையைப் பின்பற்றுவார். அவரது கருத்துக்களைச் சுவிகாரம் செய்து கொள்வார்.

பாரதி, கண்ணதாசனின் உள்ளத்தில் தக்கதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டார் என்பதை அவரது கவிதைகளும் திரை இசைப் பாடல்களும் தெரிவிக்கின்றன. சில நேரங்களில் பாரதியின் ஒரு சில வரிகளை அப்படியே அடித்தளமாக அமைத்துக் கொண்டு அவற்றின்

மேல் கவி மாளிகையை உருவாக்கியும் அவர் காண்பித்துள்ளார்.

பாரதியின் வரிகளை அவர் எடுத்தாண்ட காலங்களில் அவரைப் பல விமரிசகர்கள் குறை கூறினர் - குற்றம் சாட்டினர்.

‘முன்னோர் மொழிபொருளே
யன்றி யவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் ......’

என்று நன்னூல் கூறியிருப்பதற்கிணங்க, அவர், பாரதியின் வரிகளைக் கவிதைகளிலும் - திரை இசைப் பாடல்களிலும் எடுத்தாண்டிருக்கிறார். பாரதியின் தாக்கம் கண்ணதாசனிடம் அதிகமான அளவில் காணப்படுகிறது. அதனை ஆய்வு நோக்கில் அணுக முற்படலாம்.

பேரருட் கடவுள் திருவடி யாணை
பிறப்பளித் தெமையெலாம்
புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு
நாட்டின்
தவப்பெய ரதன் மிசை யாணை
பாரவெந் துயர்கள் தாய்த்திரு
நாட்டின்
பணிக்கெனப் பல்விதத் துழன்ற
வீரர் நம் நாடு வாழ்கென வீழ்ந்த
விழுமியோர் திருப்பெய ராணை

‘மாஜினி சபதம்’ என்ற தலைப்பில் பற்பல ஆணைகளை அள்ளித் தெளித்து பாரதி எழுதிய கவிதை இது.

இந்தக் கவிதை கண்ணதாசனின் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டது. இதன் எதிரொலி ‘உறுதி’ என்ற தலைப்பிலே இது போன்று ஆணைகள் பலவற்றைத்தெரிவிக்கும் கவிதையை அவரிடம் கிளர்ந்தெழச் செய்தது. அக் கவிதை வருமாறு:

பாரதியின் மொழிக் கொள்கை

தமிழ் நாட்டில் தேசியக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ்ப் பாஷையை பிரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒரு வித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது ‘தேசியம்’ என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை.

பாரதியார்
சமூகம்.

என்றிவள் பிறந்தாள் என்றுல
கறியா
என்தமிழ்த் தாயின்மீ தாணை
அன்றிலுக் கிளையாள் அன்புறும்
மனையாள்
அன்னவள் தாலிமீ தாணை
மன்றினி லென்னை மணம்பெறச்
செய்ய
வந்த ஆ சான்பெயர் ஆணை
நின்றெழில் பரப்பும் செந்தமிழ்
வீரர்
நிரற்பெயர் வரிசைமீ தாணை.

இந்தக் கவிதையின் முதல் இரு வரிகளான :

என்றிவள் பிறந்தாள் என்றுல
கறியா
என்தமிழ்த் தாய் என்பது
—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம் எங்கள் தாய்
-என்னும்

பாரதியின் மற்றொரு கவிதையின் வரிகளை நினைவூட்டுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதி, கண்ணனைப் போற்றிப் போற்றிப் பாடியுள்ளார். அவனைப் பல்வேறு நிலைகளில் - பல்வேறு வடிவங்களில் காண்கிறார். கண்ணனைத் தொண்டனாகக் கொண்டு 'கண்ணன் என் சேவகன்' என்ற தலைப்பில், பாரதி,

பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங் கொண்டு போவதற்கே -இனி
என்ன வழியென்று கேட்கில் உபாயம்
இருகணத் தேயுரைப்பான் -
கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிட
காணும் வழி யொன்றில்லேன் - வந்திங்கு
உன்னை யடைந்தனன்' என்னில் உபாயம்
ஒருகணத் தேயுரைப்பான் - எனத் தொடங்கி
கீதை யுரைத்தெனை இன்புறச் செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடுவென் - என

முடிக்கிறார்.

சக்திதாசன் எனத் திகழ்ந்த பாரதியையே கண்ணன் வயப்படுத்தி யிருக்கிறான் என்றால் கண்ணனின் தாசன் என விளங்கிய கண்ணதாசனைக் கண்ணன் சும்மா விடுவானா? பாடலுக்கு மேல் பாடல் எனப் பற்பல பாடல்களைப் பாட வைத்திருக்கிறான். பாரதியின் 'கண்ணன் என் சேவகன்' கவிதையின் எதிரொலியாக 'என் பரந்தாமன்' என்னும் தலைப்பில் கண்ணதாசன் இயற்றிய கவிதை இதோ :

மைவிழிப் பாவையை
மயக்கி வாழ்த்துவான்
நெய்மொழிக் கோபியர்
நிழலி லாடுவான்
கைவழி ராதையைக்
கவிதை யாக்குவான்
பொய்மொழி யற்றஎன்
புதுமைக் கண்ணனே!

செஞ்சொற் கீதையைச்
சிகர மேற்றுவான்
அஞ்சலென் றோர்கையில்
அமைதி கூட்டுவான்
வெஞ்சரப் போரிலும்
வெற்றி நாட்டுவான்
கஞ்சமென் மலரடிக்
கவிதைக் கண்ணனே!

இறைவனின் பெருமையை எடுத்துரைக்க வந்த பாரதி கூறுகிறார் :

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா - இறைவா - இறைவா.
சித்தினை அசித்துடன் இணைத்தாய் - அங்குச்
சேருமைம் பூதத்து வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பலநல் லழகுகள் சமைத்தாய்!

பாரதியின் 'எத்தனை கோடி இன்பம்' என்னும் வரிக்கு ஒரு பட்டியலையே உருவாக்கி 'அவன் தான் இறைவன்' என்ற தலைப்பில் அற்புதமான தத்துவக் கவிதை ஒன்றைப் படைத்திருக்கிறார் கண்ணதாசன். பின்னர் இது திரைப் பாடலாக உலா வந்தது; அந்தக் கவிதை இதுதான் :

பூஜ்ஜியத்துக் குள்ளே ஒரு
ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன்-
அவனைப்
புரிந்து கொண்டால் அவன்தான்
இறைவன்.

... ...

தென்னை இள நீருக் குள்ளே
தேங்கியுள்ள ஓட்டுக் குள்ளே
தேங்காயைப் போலிருப்பான்
ஒருவன் - அவனைத்
தெரிந்து கொண்டால் அவன்தான்
இறைவன்.

... ...

கல்லிருக்கும் தேரை கண்டு
கருவிருக்கும் பிள்ளை கண்டு
உள்ளிருந்து ஊட்டிவைப்பான்
ஒருவன் - இதை
உண்டுகளிப் போர்க்கவனே
இறைவன்,

மரபுக் கவிதைகளில் மட்டுமல்ல- திரைப்பாடல்களிலும் பாரதியின் கருத்தும் - கவிதை வரிகளும் கண்ணதாசனால் எடுத்தாளப் பட்டிருக்கின்றன.

கண்ணன் பிறந்தான் - எங்கள்
கண்ணன் பிறந்தான் - இந்தக்
காற்றதை எட்டுத் திசையிலும்
கூறிடும்
திண்ண முடையான் - மணி
வண்ண முடையான் - உயர்
தேவர் தலைவன் புவிமிசைத்
தோன்றினான்.

தோத்திரப் பாடல்கள் என்ற பிரிவில் 'கண்ணன் பிறப்பு' என்ற தலைப்பில் பாரதி எழுதியுள்ள கவிதையின் தொடக்கம் இது.

இதன் எதிரொலி போல் கண்ணதான் எழுதிய திரை இசைப் பாடல் வருமாறு :

கண்ணன் வந்தான்-அங்கே
கண்ணன் வந்தான்-ஏழை
கண்ணீரைக் கண்டதும்
கண்ணன் வந்தான்.
தேடிநின்ற கண்களிலே
கண்ணன் வந்தான்
தீபம் ஒன்றைக் கையில் கொண்டு
கண்ணன் வந்தான்.

இதிலே மற்றொரு எழுத்தாளரும் உண்டு. இப்பாடலின் தொடக்கத் தில் விருத்தமாகப் பாடப் பெறும் நான்கு வரிகளில் முதல் வரியாக பாரதியின் வரியை அப்படியே எடுத்தாண்டிருக்கிறார். அது வருமாறு :

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு
நல்லவர்க்கும் ஏழையர்க்கும்
ஆண்டவனே காப்பு
பசிக்கு விருந்தாவான்
நோய்க்கு மருந்தாவான்
பரந்தாமன் சந்நிதிக்கு
வாராய் நெஞ்சே!

காதலைக் குறித்துத் தெளிவுறுத்த வந்த பாரதி, 'சுயசரிதை'யில் குறிப் பிடுகிறார்:

நாடகத்தில் காவியத்தில் காத
லென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி
நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளேகிணற்றோ
ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு
கின்றார்.

இந்தக் கவிதை கண்ணதாசன் அவர் களுக்கு, ஒரு திரைப்பாடலை உரு வாக்கித் தந்திருக்கிறது. ராணி சம்யுக்தா என்னும் படத்தில் ஒலித்த அந்தப் பாடல் இதோ:

மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி!

பாரதியார் முதலில் மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி என்று தம் பெயரை வெளியிட்டிருக்கிறார். பின்னால் காளிதாஸன், சக்திதாஸன் என்ற புனை பெயர்களில் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தம் உண்மைப் பெயரிலேயே எழுதும் போது ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி என்று குறித்திருக்கிறார்.

சித்திரத்தில் பெண்ணெழுதி
சீர்படுத்தும் மாநிலமே
ஜீவனுள்ள பெண்ணினத்தை
வாழவிட மாட்டாயோ?
காவியத்தில் காதலென்றால்
கரைந்துருகும் கற்பனையே
கண்ணிறைந்த காதலுக்கே
கண்ணீர்தான் உன்வழியோ!

'ஆத்ம ஜயம்' என்ற தலைப்பில் பாரதி எழுதிய கவிதை வருமாறு:

கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திட மாட்டாவோ — அட
மண்ணில் தெரியுது வானம் — அது நம்
வசப்படல் ஆகாதோ!

பாரதி கூறிய இதே கருத்தை 'ரகசிய போலீஸ் 115' என்னும் படத்தின் வாயிலாக கண்ணதாசன் தெரிவிக்கிறார். அந்தப் பாடல் இதோ:

கண்ணில் தெரிகின்ற வானம்
கைகளில் வாராதோ
துள்ளித் திரிகின்ற மேகம்
தொட்டுத் தழுவாதோ!

சென்று போனதை எண்ணி நித்தமும் சித்தம் கலங்கிக்கவலையின் வடிவமாக துன்பச் சுமையின் உருவமாகத்திரியும் மனிதர்களுக்குப் பாரதி ஒரு போதனை செய்கிறார்!

சென்றதினி மீளாது மூடரே நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டாம்.

இதே கருத்தைப் பாடலாக்கி ஒலிக்க வைக்கிறார் கண்ணதாசன், 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் படத்தில் ஒலித்த அப்பாடல் இதுதான்

காலம் சிறிது கனவுகள் பெரிது
கவலைப் படுவதேன் மனது
... ...
சென்ற காலங்கள் சென்று வாழ்வில்
வந்த காலமே நன்று.

அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற பாரதி, காலன் என்னும் எமனையும் எதிர்த்துப் பாடினார். நாட்டுத் தொண்டு புரிவதற்காகத் தாம் நெடுநாள் வாழ வேண்டும் என அந்த வரகவி நினைத்தார். அதனால் காலனை விளித்துப் பாடினார்; அவனைச் சாடினார்; அவனைப் புல்லாய்-பூண்டாய்க் கருதினார்.

காலா! உனை நான் சிறு புல்லென
மதிக்கிறேன் - என்றன்
காலருகே வாடா சற்றே உனை
மிதிக்கிறேன்.

காலன் மனிதர்களுக்குத் தருவது மரணம் என்னும் பரிசு. மனிதர்கள் மரணம் எய்தினாலும் கூட, பலர்,

மக்கள் மனத்தில் தங்கி விடுகிறார்கள். அத்தகையவர்களின் உயிரை மட்டுமே காலன் கவ்விச் செல்ல முடியுமே தவிர, அவர்கள் பெற்ற பெயரையும் புகழையும் கவர்ந்து செல்ல முடிவதில்லை. அதனால் அவர்கள் செத்த பின்னரும் வாழும் வாய்ப்பைப் பெறுகிறவர்கள். இந்தக் கருத்தை உள்ளடக்கி-பாரதி கவிதையின் மாற்றுருவாக-'இரத்தத் திலகம்' என்னும் படத்தில் கண்ணதாசன் எழுதிய பாடல் வரிகள் வருமாறு:

மானிட ஜாதியை ஆட்டி
வைப்பேன்-அவர்
மாண்டுவிட்டால் அதைப் பாட்டில்
வைப்பேன்-நான்
நிரந்தர மானவன் அழிவதில்லை-
எந்த
நிலையிலும் எனக்கு
மரணமில்லை.

உமர்கய்யாமின் தத்துவத்தை எடுத்துரைக்கும் வகையிலே இந்தப் பாடலை அவர் எழுதியிருக்கிறார் என்றாலும் இது உமர்கய்யாமின் கருத்தை உணர்த்தும் வகையிலோ திரை இசைக்கு ஒரு பாடலை உருவாக்கும் வகையிலோ அமையவில்லை. கண்ணதாசனின் வாழ்க்கை ஏட்டின் படலத்தை நமக்கு உணர்த்துவதாகவே அமைந்திருக்கிறது.

பாரதி என்றோ மறைந்தார்; ஆனால், மக்களின் நெஞ்ச வீடுகளில் இன்றும் வாழ்ந்து வருகிறார்-உலா வருகிறார். பாரதியைப் போலவே பண்டிதர், பாமரர் ஆகிய இரு தரப்பினரையும் தமது பாடல்களால் தொட்டுத் தழுவிய பாட்டுக் குயில் கண்ணதாசன் அவர்களும் மறை

பாரதியாரும் அரவிந்தரும்

''பாரதி உயரத்தில் பெரியவர்; அரவிந்தர் உருவத்தில் சிறியவர். பாரதியாரும் சங்கோசி; அரவிந்தரும் சங்கோசி. பாரதியாரின் சொற்கள் முல்லை மலரின் தாக்கும் மணம் கொண்டவை; அரவிந்தரின் சொற்கள் செந்தாமரை மலரின் பரந்து விரிந்த அழகைத் தாங்கியவை. இருவருக்கும் புதிய புதிய கருத்துக்களும், சித்திரச் சொற்களும் திடீர் திடீரென்று புதை வானங்களைப் போன்று தோன்றும். பாரதியார் ஆகாயத்தில் ஓடுவதை எட்டிப் பிடித்து வந்ததாகச் சொற்களைப் பொழிவார்; அரவிந்தர் பூமியைத் துளைத்துத் தோண்டி, பொக்கிஷத்தைக் கொணர்ந்ததாகப் பேசுவார். இருவர் சொற்களிலும் கவிச்சுவை நிறைந்திருக்கும். பாரதியாரைப் போலவே அரவிந்தரும் கல கலவென்று விடாமல் சிரிப்பார். அரவிந்தரின் பேச்சினால் பாரதியாரின் ஊக்கமும் உள் வலிமையும் வளர்ந்தன; பாரதியாரின் பேச்சினால் அரவிந்தர் மகிழ்ச்சியடைந்தார்.''

— மகாகவி பாரதியார் வ. ரா.

வெய்தியுள்ளார் - எனினும் மக்கள் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்து நிற்பார்.

இரு பெருங் கவிஞர்களும் மறைவு எய்தி விட்டாலும் மக்கள் மனங்களில் நித்தமும் உதயம் ஆகின்றனர். பொழுது புலர்ந்ததும் பூபாளம் இசைக்கின்றனர் - பின்னர் மோகனத்தை முழக்குகின்றனர்-பின்னர் முகாரியைத் தவழவிட்டு, அவலச் சுவையை எழுப்பித் தங்களின் நினைவலைகள் நம்மை எப்போதும் வட்டமிடச் செய்கின்றனர். அந்த அலைகள் ... தமிழ் மக்களின் இலக்கியச் சுவைக்கு நிலையாக அமைந்த பொற்சிலைகள் எனத் திகழ்கின்றன. □

பாரதிக்கு

அஞ்சலி!

திரு. கே. எஸ். நாகராசன், எம்ஏ;
முதல்வர், தன்ராஜ் பெய்து ஜெயின் கல்லூரி, சென்னை.

வெள்ளையர் அடக்குமுறைச் சட்டத்தைப் பிறப்பித்து, பாரத மக்களைப் புழு பூச்சிகளினும் இழிவாய் நடத்தி வந்தனர். அக்காலத்தில் நாட்டுப் பற்று என்னும் நந்தா விளக்குச் சோதி விட்டு ஒளிர ஒரு சுடர் தோன்றிற்று. அச்சுடரை அவிக்க அந்நாள் ஆட்சியினர் பட்ட பாடுகள் பல. ஆனால் அவ்விளக்கை அவர்களால் அணைக்க முடியவில்லை. தானாகவும் அச்சுடர் அணையவில்லை. ஏழாண்டினில் கவிபாடும் திருவைக் கருவிலேயே பெற்று விட்டது அச்சுடர். ஆனால் அந்தத் திரு காப்பியங்களாகவும், கோவைகளாகவும், உலாக்களாகவும், மாலைகளாகவும் வெளி வரவில்லை. பாரத மக்கள் கடைத்தேற விருத்தங்களாகவும் சிந்துகளாகவும் வெளிப்பட்டது. அச்சுடருக்கு அந்நாளைய புலவர் அளித்த பட்டம் ‘‘ பாரதி ’’ என்பது.

பாரதிக்குச் சாதி மதம் இல்லை. சாதிகள் பலவென்று அயல் நாட்டவர் நம்மீது ஒரு பெருங் குறையைச் சொல்லி ஏளனம் செய்து வந்தனர். அங்ஙனம் சொன்னவர்க்கு விடையாக பாரதி கூறுகிறான்: ‘‘நாங்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். சண்டை இடுவோம். ஆயினும் நாங்கள் சகோதரர். அன்னியனே! நீ யார் நீதி சொல்ல? நாங்கள் முப்பதுகோடி மக்கள் வாழ்ந்தாலும் அத்தனைப் பேரும் வாழ்வோம். வீழ்ந்தால் அத்தனைப் பேரும் வீழ்வோம். தொண்டு நிலைமையைத் தூ என்று தள்ளுவோம். நாங்கள் ஒன்றாய் நின்று வெல்வோம் அல்லது உயிர் விடுவோம். நீ வெளியேறு’’ இப்படி வேற்றுமைகளை மறந்து ஒன்றாய் நின்று, குரல் கொடுக்க வேண்டிய அவசியம் இன்னும் உள்ளது, அயல் நாட்டவராலும், சமூக விரோத சக்திகளாலும் ஓயாத தொல்லை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்நாளில் பாரதியின் சொல் நமக்குத் தாரக மந்திரமாகப் பயன்பட வேண்டும்.

இமயமலையில் ஏறி அதன் கொடுமுடியைக் காணவேண்டும். மேலைக் கடல் முழுதும் கப்பல் விடவேண்டும். பள்ளிகளைக் கலைக் கோயில்களாகக் கருதவேண்டும். சிங்களத் தீவினுக்கு ஒரு பாலம் கட்டவேண்டும். வட இந்தியாவில் பெருகி வந்து அழிவை ஏற்படுத்தும் நீர்ப்பெருக்கத்தைத் தடுத்து, திசைமாற்றி, வறண்ட பகுதிகளில் பாயச் செய்து, பயிர் செய்ய வேண்டும். பாரதத்தில் உள்ள

கனிப் பொருள்களைக் குடைந்து எடுக்க வேண்டும். தென்கடல் முத்தெல்லாம் நமக்கு எடுக்க எடுக்கக் குறையாத செல்வம்.

சிந்துநதியின் நீர்ப்பெருக்கு அதன் மீது நிலா காய்கிறது, அருகில் இருப்போர் சேர நன்னாட்டு இளம் பெண்கள் காதில் ஒலிப்பதோ இனிய தெலுங்கு மொழிப் பாட்டு. இச்சூழலில் தோணிகள் ஓட்டி விளையாட வேண்டுமாம். பிரிவு மனப்பான்மை வளர்ந்துவரும் இந்நாளில் பாரதியின் சொல்லோவியமும் அதில் அடங்கியிருக்கும் ஒருமைப் பாட்டுக் கருத்தும் சிந்தனைக்கு உரியன. கங்கை நதிப்புறத்துக்கோதுமையைக் காவிரி வெற்றிலைக்குப் பண்டமாற்று செய்ய வேண்டுமாம். சிங்க மராட்டியர் கவிதை கேட்டு, சேர நாட்டுத் தந்தங்களைப் பரிசளிக்க வேண்டுமாம். இராஜஸ்தான் வீரர்க்குக் கன்னடத்துத் தங்கத்தைக் கட்டிகட்டியாக வாரி வழங்க வேண்டுமாம். ஊசி முதல் எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமாம். கப்பல்கள் கட்ட வேண்டுமாம். காவியங்கள் செய்ய வேண்டுமாம். சுருங்கக் கூறினால், உலகத் தொழில் அனைத்தையும் உவந்து செய்ய வேண்டுமாம்.

எவ்விதத்திலும் இன்னல்களையே அனுபவித்து வந்த பாரதியின் உள்ளம் சுதந்திரத்தைப் பற்றி எண்ணும் போது தூய்மையுடனும் சலியாத உறுதியுடனும் விளங்கி நின்றது பெரு வியப்பாகும். ''வீர சுதந்திரத்தைப் பெற வேண்டும். பாரதத் தாயை வணங்குவதே தாரகம். சுதந்திரப் பயிரைக் கண்ணீரால் காத்து வந்தோம். எங்கள் கருத்தில், எங்கள் உயிரில் வளர்ந்த வண்ண விளக்கு இச்சுதந்திர வேட்கை. பாரதத் தாயே! எங்கள் மீது ஓரிருள் மூடிக் கிடக்கிறது. மேலோர்கள் சிறையில் கிடக்கிறார்கள். நூலோர்கள் செக்கு இழுக்கிறார்கள். நீதியும் அறமும் நிலைத்திருப்பது உண்மையானால் நாங்கள் ஓய்ந்து வீழ்வதன் முன்னம் சுதந்திரத்தை எங்களுக்குக்கொடு'' என்று வேண்டினான் பாரதி.

இவ்வாறு உருகித் தவித்த பாரதி ஒரு நாள் நல்ல கனவு காண்கிறான். விழித்து எழுகிறான். தான் கண்ட கனவைச் சொல்லுகிறான். பாரதம் விடுதலை பெற்று விட்டது. நாமிருக்கும் நாடு நமதாகிவிட்டது. ஏமாற்றுவோருக்கு ஏவல் செய்யும் காலம் மலையேறி விட்டது. எங்கும் சுதந்திரம் எல்லோரும் சமம். புல்லோருக்கும் பெரியோர்க்கும் நல்ல காலம். நயவஞ்சனைக்காரர்க்கு நாசம். உழவும் தொழிலும் தலையெடுத்து விட்டன. இனிமேல் பூமியில் எவர்க்கும் அடிமை செய்ய வேண்டியதில்லை. எல்லோரும் பரிபூரணனுக்கு ஆட்செய்து ஆனந்தமாய் வாழ்கின்றனர்.

அரசியல் சுதந்திரம் பெற்று முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆய் விட்டன. எனினும், பாரதியின் கனவு இன்னும் பலிக்கவில்லை. பொய்யும் புரட்டுமே வெற்றிக்கு வகை செய்கின்றன, சாதி சமய அடிப்படையிலேயே காரியங்கள் நிகழ்கின்றன. மனிதனுக்கு மனிதன் ஏதேனும் ஒரு வகையில் அடிமையாகவே இருக்கிறான். இன்றேல், வளமாக வாழ முடியாது என்ற நிலை நீடிக்கிறது. அன்பு, நீதி ஆகியவற்றை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கை குறைகிறது. இந்த அவல நிலை மாற நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அமரகவி பாரதிக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். □

காந்தியடிகள் காண விரும்பிய இளைஞர் சமுதாயம்

காந்தியின் வாழ்வே கடவுளைக்
காட்டும்;
கல்விகள் தேடிடும், கருணையை
ஊட்டும்
சாந்தியைப் புகட்டிடும் சாத்திரம்
அதுவே!
சத்திய நெறிதரும் சூத்திரம்
அதுவே!
இமயமும் குமரியும் இருக்கிற
வரைக்கும்
இப்பெரு உலகினிலே அவன்
பெயர் சிறக்கும்
சயமமும், நிறங்களும் சமமெனக்
கருதும்
சகலமும் காந்தியை வணங்குவர்
பெரிதும்!
-என்கிறார் நாமக்கல் கவிஞர்.

இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த மகாத்மா காந்தியின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது பல இருகின்றன.

காந்தியடிகள் பாரதத் தாய்க்கு ஆங்கிலேயர்களால் பூட்டப்பட்ட கைவிலங்கை அஹிம்சை என்னும் ஆயுதத்தால் அறுத்தெறிந்த விடுதலை வீரர் ஆவார். ''ஊருக்கு உழைத்திடல் யோகம்'' என்கிறார் பாரதி. அதுதான் மனித வாழ்வென்கிறார் வினோபா. இதைத்தான் ''சர்வோதயம்'' என்கிறார் மகாத்மா. சத்தியமும், அஹிம்சையும் காந்தியடிகளின் உயிர் மூச்சு. மகாத்மா வருங்கால இளைஞர் சமுதாயத்தை ஒரு பொறுப்புள்ள கடமை உணர்வு கொண்ட, சேவை மனப்பான்மை மிக்க சமுதாயமாக வளர வேண்டும் என விரும்பினார். இளைஞர்கள் சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடித்து நேர் வழியில் சத்திய நெறியில் செல்ல வேண்டும் என விரும்பினார்.

எல்லப்பா ரங்கம்மாள் நினைவு
கலைக்கதிர் கட்டுரைப் போட்டி

மூன்றாம் பரிசு ரூ. 450/- பெறும் கட்டுரை

செல்வன் **து. சி. சக்திவேல்,**
பன்னிரெண்டாம் வகுப்பு,
'அ' பிரிவு
வெள்ளையன் செட்டியார்
மேல்நிலைப் பள்ளி
திருவொற்றியூர்,
சென்னை - 19

சத்தியமும், தர்மமும்

சத்தியமும், தர்மமும் ஒன்றுக்கொன்று அடிப்படையானவை. தர்மம் என்பது பிறருடைய தன்மையை விரும்பி அதற்கு உழைத்தல், சேவை செய்தல் ஆகும். இளைஞர்களில் ஒருவரையொருவர் சகோதரர்களாக நேசித்து ஒருவர்

துயரை மற்றொருவர் பங்கிட்டுக் கொண்டு தொண்டு செய்ய ஆரம்பிக்க வேண்டும். ஒருவர் துயரப்படும்போது, மற்றொருவர் தாமே அத்துயரத்தில் இருப்பதுபோல் உணர வேண்டும். பிறர் துயரப்படுவது கண்டு அனுதாப உணர்ச்சி கொள்வதோடு அனுதாபத்தைச் செயலிலும் காட்ட வேண்டும். ஆனால், அதற்காக இளைஞர்கள் அமைதியற்றவர்களாகி விட்டால் அது வீண் ஆசையும், அறிவீனமுமாகும். அதைத் தவிர்க்க வேண்டும். அத்தகைய தியாகமும், ஈடுபாடும் பரிசுத்தமும் இளைஞர்களிடையே இருக்க வேண்டும் என காந்தியடிகள் விரும்பினார்.

சேவை மனப்பான்மை

சேவை எல்லையற்றது. அதைப் போல சேவை செய்வதற்கு இளைஞர்களுக்கு உள்ள சக்தியும் எல்லையற்றது. ஏனெனில், ஆன்மாவின் சக்திக்கு எல்லையே கிடையாது. இதயத்தின் வாசல்கள் மட்டும் திறந்து வைத்திருப்பவர்கள் சிறிய சேவை செய்தால்கூட அது நிறைந்த பலனைத்தரும். ஆனால், பிறர்க்குத் தன்னுடைய இதயத்தை அடைத்துக் கொண்டு ஒருவன் செய்யும் சேவை ஒரு பலனும் தராது. ஒரு கீரையை மட்டும் வைத்துக் கொண்டு இதய பூர்வமாக விதுரன் சாப்பாடு போட்டதிலிருந்தும் துரியோதனன் மனமில்லாமல் அறுசுவை அன்னம் இட்டதிலிருந்தும், இளைஞர்கள் காணக்கூடிய பொருள் இதுவே என்கிறார் மகாத்மா காந்தியடிகள்.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட சேவையில் இளைஞர்கள் ஈடுபட்டிருக்கும் போது, மற்ற சேவைகளைப் பற்றி அவசியமில்லாதவரை எண்ணக் கூடாது. அவ்வாறு எண்ணினால்

பாரதி தனது இலக்கிய வாழ்வில் முதன் முதலில் புனைந்து கொண்ட புனை பெயர் 'ஷெல்லி தாசன்' என்பது.

ஆதாரம் ; ரகுநாதன்
பாரதியும் ஷெல்லியும்
என்ற நூலில் முகவுரை

அது வீண் ஆசையாகவோ, பகட்டாகவோ கருதப்படும் என்கிறார் மகாத்மா.

தியாகம்

நாம் பிரதிபலன் எதையும் எதிர் பாராமல் சேவை செய்யும்போது நாம் உண்மையான தியாகம் செய்கிறோம். புனிதத்தன்மை படைத்ததாக ஆக்குவது என்பதே தியாகத்திற்குப் பொருளாகும். நாம் ஒரு தியாகம் செய்துவிட்டு அடிக்கடி பலர் முன்னிலையில் தான் தியாகம் செய்ததாகத் தற்பெருமை கொள்வது உண்மையான தியாகமாகாது. நாம் ஆத்திரமடையும்போதோ, கோபம் அடையும்போதோ நாம் புனிதமடைவதில்லை; பிறரையும் புனிதமுள்ளவர்களாகச் செய்வதில்லை. ஒழுக்கத்திற்கும், தியாகத்திற்கும் இளைஞர்கள் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஒழுங்கான தியாகம் என்று கூறுவதைக் காட்டிலும் ஒரு தெய்வீகப் புன்னகையில் அதிகத் தியாகம் - அதிகப் புனிதப்படுத்தும் சக்தி இருக்கிறது. எனவே இளைஞர்கள் எவ்வித பலனையும் எதிர் பாராமல் தியாகம் செய்ய வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

அஹிம்சை

பிறர்க்குத் தீங்கு செய்ய வேண்டும் அல்லது பிறரைக் கொல்ல வேண்டும்

பாரதியாரின் பிழை!

22-5-1920 தேதியில் வெளியான 'சுதேசமித்திரன்' பத்திகைரியில், மகாகவி பாரதியார் 'ரெயில்வே ஸ்தானம்' என்ற கதையை எழுதியிருந்தார். அக் கதையைப் படித்த முஸ்லீம் நண்பரொருவர் பாரதியாரிடம் வந்து, ''உங்கள் கதையில் ஒரு பிழை இருக்கிறது. அதில் முகம்மதிய பிரபு ஒருவர் சகோதரிகளான மூன்று பெண்களை மணந்து கொள்வதாக எழுதியுள்ளீர்கள். அப்படி மணத்தல் முகம்மதிய சாத்திரப்படி 'ஹராம்' (பாதகம்) ஆகக் கருதப்படுகிறது. தன் மனைவி உயிருடனிருக்கையில், அவளுடன் பிறந்த மற்ற ஸ்திரீயை ஒரு முஸ்லீம் மணக்கக்கூடாதென்பது எங்கள் சாத்திரங்களின் கொள்கை'' என்றார்.

இதைக் கேட்ட பாரதியார் தன் தவறுக்கு வருந்தி ''மனைவியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் இந்துக்களிடம் உண்டாகையால், அதுபோல முகமதியர்களுக்கும் இருக்கலாமென்று நினைத்து எழுதிவிட்டேன்: அந்தப் பிரபுவுக்கு அவனுடைய சிற்றப்பன் தன் மூன்று குமாரத்திகளையும் மணம் செய்வித்தான் என்பதை மாற்றி, 'தன்னினத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் செய்வித்தான்' என்று திருத்தி வாசிக்கும்படி சுதேசமித்திரன் வாசகர்களுக்குத் திருத்தம் எழுதிவிடுகிறேன்'' என்றார்.

'பாரதி நூல்கள்'

என்ற எண்ணத்தை அகற்றிவிடுதலே அஹிம்சையாகும். ஒவ்வொரு வகையிலும்அவரவர்க்குக்குறைந்தவர்களிடமே அஹிம்சையைக் கடைப்பிடிக்க முடியும். ஆகவே, முழு அஹிம்சாவாதியாக மாற வேண்டுமானால், பரிபூரணத்துவ நிலையை அடைய வேண்டும். பரிபூரணத்துவ நிலை என்பது நாம் பின் வாங்காது உலகத்தை எதிர்த்து நிற்க வேண்டிய திறமையாகும். சொந்தத் துணிவு தான் இன்றியமையாதது என்கிறார் காந்தியடிகள்.

அஹிம்சையானது பேச்சில் வெளீவருவது அபூர்வம். அது மௌனமாகச் செயல்படுகிறது. அது அறிவைத் திருப்திப்படுத்துவதில்லை; உள்ளத்தை ஊடுருவிப் பாய்கிறது. பேச்சிலும், வாக்குவாதத்திலும் எந்த அளவு ஈடுபடுகிறோமா அந்த அளவுஅதனுடைய பலன் குறைந்து விடுகிறது. எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அஹிம்சை நெறியைக் கடைப்பிடித்து நேர் வழியில் தீர்வு காண முயல வேண்டும் என்கிறார் மகாத்மா.

சத்திய நெறி

தொல்லைகளும், துன்பங்களும் நமது தினசரி வாழ்க்கையில் இயல்பாகி விட்டன. சத்தியத்தில் நிற்பதென்பது பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு எவ்வளவோ தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. அதிலே எவ்வளவோ தொல்லை, எவ்வளவோ கட்டுப்பாடுகள் — இப்படியெல்லாம் இராமல் ஆனந்தமான காரியமாக மட்டும் இருக்குமானால் அதிலே இவ்வளவு அழகுக்கு இடமில்லை, தலையில் வானமே இடிந்து விழுவதாய் இருந்தாலும், நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். உண்மையைக் கடைப்பிடிப்பதினாலும், உலகம் முழுவதையும், இந்தியாவையுங் கூட இழப்பதாயிருந்தாலும் குற்றமில்லை. உண்மையாகவும்

எவை நமக்கு அருமையாய் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் இந்தியாவையுங்கூட இறுதியில் திரும்பப் பெற்று விடுவோம். இதற்குக் கடவுள் துணை செய்வார். இந்த நம்பிக்கையோடு உயிர் போகும் வரையில் சத்தியத்தையே கடைப்பிடித்து ஒழுக வேண்டும். இப்படி ஒழுகினால்தான் நாம் உண்மையிலேயே சத்தியத்தைப் பின் பற்றுபவர்களாவோம். இதுதான் தேசிய வாழ்வில் படிந்திருக்கும் மாசைப் போக்குவதற்கு வேண்டிய உண்மையான தவம் என்கிறார் மகாத்மா.

அன்பு நெறி

நம்மிடம் பேசாத ஒருவரிடம் நாமே பேச வேண்டும். நம்மிடம் வராத ஒருவரை நாமே போய்ப் பார்க்க வேண்டும். நம்மிடம் அதிருப்தி அடைந்துள்ள ஒருவரிடம் நல்ல முறையில் நாம் நடந்து கொள்ள வேண்டும். மன்னிப்பதும் அன்பு செலுத்துவதும்தான் உயர்ந்தது. ஆனால் இதில் ஓர் அடிப்படை ஐயப்பாடு இருக்கிறது. யார் அன்பு செலுத்த முடியும்? ஒரு சுண்டெலி சுண்டெலியாக இருக்கும்வரை பூனையை நேசிக்க முடியாது. நம்மிடம் உள்ள அச்சம் நீங்கிய உடனே அடிப்பதா, அணைப்பதா என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கக் கூடிய தகுதி ஏற்படுகிறது. அணைப்பதென்பது மனிதனின் ஆன்மா எழுச்சியைப் பெற்றிருக்கிறது என்பதற்குச் சான்றாகும். அடிப்பது என்பது உடல் பலத்தைக் காட்டுகிறது என்கிறார்.

அஹிம்சையும், சத்தியமும்

அஹிம்சையையும், சத்தியத்தையும் கடைப்பிடித்து இலட்சியத்தை அடைய வேண்டும். ஆனால், அஹிம்சையையும் சத்தியத்தையும் கைவிடாமல் இலட்சியத்தை அடைய கால தாமதம் ஆகுமென்றால் அதற்காக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்திருக்க வேண்டும். அஹிம்சையும், சத்தியமும் யாவற்றிலும் மிகுந்த சக்தி வாய்ந்தவை. அஹிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடிப்பதென்பது நீண்ட பாதையாகத் தோன்றினாலும், அதுவே நேர்பாதை. ஆகவே, இளைஞர்கள் அஹிம்சையையும், சத்தியத்தையும் கடைப்பிடித்து நேர்வழியில் ஒழுக வேண்டும்.

கல்வியில் அஹிம்சை

அஹிம்சை என்பது இணையற்ற ஓர் அரிய ஆயுதம், அது வாழ்க்கையின் உயிர் நாடி; வீரர்களின் சிறப்பியல்பு. உண்மையில் அவர்களுடைய இயல்புகள் யாவும் இதில் அடங்கி விட்டது. அது கோழைகளின் கைகளுக்கு எட்டாததோர் தத்துவம். உணர்ச்சியில்லாத உயிரில்லாத மரக்கட்டை போன்ற தத்துவம் அன்று அது. உயிர் ததும்பிக் கொண்டிருக்கின்ற பெருஞ் சக்தியாகும் அது. ஆன்மாவுக்குத் தனித்து அமைந்த அருங்குணமும் அதுவே. இதன் காரணமாக நாம் அதை எல்லாவற்றிலும் சிறந்த தர்மமாகக் கூறுகிறோம்.

அஹிம்ஸா பரமோ தர்ம:

ஆதலால் கல்வி ஆராய்ச்சியாளர் கையில் அது தூய்மையான அன்பின் உருவம் பெற்று விளங்க வேண்டும் என்றும் புதிதாகவும் என்றும் பெருக்கெடுத்தோடுகின்ற உயிர் ஊற்றாகவும், விளங்குவதோடு அவர்கள் செய்யும்செயல் ஒவ்வொன்றிலும் அது வெளிப்பட்ட வண்ணம் இருக்க வேண்டும். அதனுடைய

எது விடுதலை?

"கடவுளின் ஞானக்கதிரை விழித்து நோக்குதலே விடுதலை. அதுவே சிதம்பரம். சிதம்பரம் சென்று ஈசனிடம் வரம் வாங்கு. சிதம்பரம், சீரங்கம், பழனி முதலிய தலங்கள் யாவும் ஜீவன்முக்திச் சின்னங்களாகும்."

பாரதியாருக்குக் குள்ளச்சாமி கூறியது

சமூகத்தில் கெட்ட எண்ணம் தலைகாட்ட முடியாது. பகை, குரோதம் ஆகிய இந்த இருளையெல்லாம் அஹிம்சையாகிய சூரியன் அழித்துவிடுகிறது. கல்வியில் அஹிம்சா நெறியானது மிகத் தெளிவாகவும் நெடுந்தூரம் வரையிலும் ஒளி விடுகிறது. ஆகவே இளைஞர்கள் கல்வியில் அஹிம்சை நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் மகாத்மா காந்திடியகள்.

உண்மையான கல்வி

உண்மையான கல்வி என்பது உள்ளத்திலிருந்து வருவதுதான் என்ற உறுதியான நம்பிக்கை ஏற்பட வேண்டும். இருதயத்தில் மட்டும் பரிசுத்தமான அன்பு இருக்குமானால் மற்றவைகளெல்லாம் தாமதமாகவே வரும். மெய், வாய், கண், மூக்கு செவி ஆகிய புலன்களை நல்லமுறையில், நல்ல வழியில் செயல்பட வைப்பதே அறிவுக்கு உண்மையான அபிவிருத்தி ஆகும். அறிவும், உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும் போது இதயத்துவமும் விழிப்படைய வேண்டுவது அவசியமாகும். அவ்விதமின்றி அறிவும், உடலும் வளர்ச்சிப் பெற்று, இதன் தத்துவம் விழிப்பு அடையா விட்டால் அது கிரமமான வளர்ச்சி ஆகாது; வெறுங்கோணலாகப் போய்விடும் என்கிறார் காந்தி.

பிரார்த்தனை

தர்மம், சேவை, தியாகம் இவற்றிற்கு அடிப்படை பிரார்த்தனையே யாகும். எந்த ஒரு இக்கட்டான, நெருக்கடியான நேரத்திலும், நமக்கு உதவியாக இருப்பது பிரார்த்தனையேயாகும். கடவுளுடன் ஒன்றுபடுவதும் பிரார்த்தனையாலே தான். இது மனத்தைப் பரிசுத்தப்படுத்தும், உண்மையான ஸ்நானமாகும். குளிக்கா விட்டால் உடலானது எவ்வாறு அழுக்கடைகின்றதோ அதைப் போன்று பரிசுத்தமான ஆன்மாவைக் கூட பிரார்த்தனை என்னும் நீரால் கழுவா விட்டால் அசுத்தமாகத் தோன்றும். ஆகையால் ஒரு போதும் பிரார்த்தனை செய்யத் தவறக் கூடாது என்கிறார் மகாத்மா.

கீதா மனோபாவம்

கீதையிடம் நல்ல ஆழ்ந்த பக்தி இருத்தல் வேண்டும். கீதையை நன்கு கற்று உணர்வது நல்லது. கீதை வாழ்க்கையில் வழி காட்டும் துணையாகும். அவரவர்களிடம் இருப்பவைகளைத் துறந்து விட்டாலன்றிக் கடவுள் நெறியைப் பின்பற்ற முடியாது எனக் கீதை கூறுகிறது. நம்முடைய சேவைகளில் கீதா மனோபாவத்தை அடைய இளைஞர்கள் முயல வேண்டும். இளைஞர்கள் என்ன செய்தாலும், சுயநலம் இல்லாமல், சேவா உள்ளத்துடன் செய்ய வேண்டும் என்பதுதான் கீதா மனோபாவம்.

அன்பு நிறைந்த ஒருவனுக்குக் கொல்வதெல்லாம் தவறுதான். அவனுக்குக் கொல்ல வேண்டிய அவசியமும் ஏற்படாது. கொல்லவும்

மாட்டான். பாம்பைக் கொல்ல மாட்டான். பாம்பும் அவனைக் கடிக்காது. ஒரு பாவமும் செய்யாத, கபடமற்ற இந்த நிலையை இளைஞர்கள் அடைய வேண்டும் என்கிறார்.

மனத் தூய்மை

தீயனவற்றுக்கு மனிதன் இடம் அளிக்கும் வரை அவன் அசுத்தமானவன். கடவுள் முன்னால் நிற்கத் தகுதியற்றவன் என்று மதம் கூறுகிறது. ஆகையால் பரிசுத்தமில்லாதவர்கள் நம்மில் யாராவது இருந்தால் அவர்களுடைய முதல் கடமை அதை ஒப்புக் கொள்வதேயாகும். அதன் மூலம் அந்தத் தவறான செயலிலிருந்து நம்மைப் பரிசுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும்.

குற்றவாளிகள் என்ற சொல்லே நமது அகராதியில் இருக்கக் கூடாது. அல்லது நாம் எல்லோரும் குற்றவாளிகளே. ''பாவம் செய்யாதவர்கள் முதல் கல்லை எறியுங்கள்'' என்று ஏசுநாதர் கூறினார், அதன் பின்னர் அந்தப் பாவி விலை மகள் மீது கல்லை வீசும் துணிச்சல் யாருக்கும் வரவில்லை. ஒரு சிறைக் காவலர் கூறியது போல உள்ளாந்தரத்தில் எல்லோரும் குற்றவாளிகளே என்கிறார் காந்தியடிகள்.

தீண்டாமை

தீண்டத்தகாதவர் என ஒரு வகுப்பைப் பிரித்து வைத்திருக்கிறோம். இது ஹிந்து மதத்திற்கு அவமானமாகும். தீண்டாமையானது மிகவும் பாபம் நிறைந்த செயல். கொலை செய்வதற்கு ஒக்குமிது. இந்தப் பாவத்தை விரைவில் கொல்லாவிட்டால் அது ஹிந்து மதத்தையே விழுங்கி விடும், தைரியமாக அவர்களையும் ஹிந்துக்களாகவே மதித்து அவர்களை நாம் கௌரவிக்க வேண்டும்.

உடல் முதலிய ஸ்தூலமான பொருள்கள் சம்பந்தப்பட்ட அளவிலேயும், பொதுக்கிணறுகளை உபயோகிப்பதிலும், பொது பாடசாலைகளில் கல்வி பயில்வதிலும், கோயில்களுக்குச் செல்வதிலும் தீண்டத்தகாதவர் என்போருக்குள்ள தடையை நீக்க வேண்டும். அவர்களையும், நம்மில் ஒருவராக மதித்து அவர்களிடம் இளைஞர்கள் அன்பு காட்ட வேண்டும். சுவர்ண ஹிந்துக்களை, தீண்டத்தகாதவர் பார்க்கத் தகாதவர், நெருங்கத்தகாதவர் என்று சுவர்ண ஹிந்துக்கள் வீண் கர்வம் கொள்கின்றனர். இப்படி வீண் கர்வம் கொள்வதற்குச் சாஸ்திரசம்மதம் எதுவும் இல்லை. எனவே இளைஞர்கள் எவ்விதமான தொல்லை வந்தாலும் அதைத் தாங்கி தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்கிறார்.

ஹிரிஜனத் தொண்டு

ஹரிஜனக் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் காலையிலும், மாலையிலும் சிறிது நேரம் பாடம் சொல்லிக் கொடுக்கலாம். ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளைச் சுத்தப் படுத்தலாம். சிறுவர்களுக்கும், முதியவர்களுக்கும், சுகாதாரப் பாடங்கள் மூலமாக அறிவுறுத்தலாம். நோய்வாய்ப்பட்ட அரிஜனங்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம். இத்தகைய தொண்டுகளை கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களும், பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும் சமூக சேவையாக மனமுவந்து செய்ய முன் வரவேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

கடமை

நமது கடமையை நாம் சரிவரச் செய்தால், விரும்பியவற்றையெல்லாம் நாம் நிச்சயமாக அடைய

முடியும். அப்போது நீங்கள் எந்த மனிதருக்கும் பயப்படவேண்டிராது.

கிராமத் தொண்டு

இளைஞர்கள் அனைவரும் ஓய்வு நேரங்களிலோ, விடுமுறை நாட்களிலோ கிராமத்தொண்டில் ஈடுபட வேண்டும். இளைஞர்கள் அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று நிலைமையை ஆராய வேண்டும். சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் கல்வியையும், சுகாதாரத்தையும் போதிக்க வேண்டும் ராட்டினத்தில் நூல் நூற்கக் கற்றுத் தர வேண்டும். இத்தகைய தொண்டினை இளைஞர்களிடம் இருந்து காந்தியடிகள் எதிர்பார்க்கிறார்.

இளைஞர்களுள் ஒற்றுமை

நாம் எல்லோரும் இதயத்தில் ஒன்றுபட வேண்டும். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. ஆகவே நமது உள்ளத்தில் இருப்பதைப் பகிரங்கமாக வெளிக் கொண்டு வரவேண்டும். நாம் செய்யும் காரியம், நல்ல காரியமாக இருந்தால் ஏன் தைரியமாகச் செய்யக் கூடாது? நம்முடைய உண்மையான தோற்றத்தை வெளிக் காண்பிக்க ஏன் அச்சம்? என்கிறார் காந்தியடிகள். எனவே, இளைஞர்கள் அவர்கள் விரும்பும் நல்ல காரியத்தில் இறங்குவதற்கு அச்சம் கூடாது என்கிறார்.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை

ஹிந்து இளைஞர்களும், முஸ்லிம் இளைஞர்களும் ஒருவரையொருவர் சகோதரர்களாகப் பார்க்க வேண்டும். பண்டிகை தினங்களில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரையொருவர் வரவேற்று உபசரிக்க வேண்டும். ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சண்டைச் சச்சரவுகள் ஏற்படக் கூடாது. அவர்கள் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருக்கவேண்டும்.

ஆன்ம சக்தி

ஆன்ம பலம் அல்லாத வேறெந்த பலமும் சொற்ப வாழ்வுடையது வீணானது. ஒவ்வொரு இளைஞனும் தன்னை ஒழுங்கு பெற நிறுத்தி, தூய்மைப்படுத்தி ஆன்மபலம் என்ற ஒப்பற்ற ஆயுதத்தைப் பெற முயல வேண்டும். ஒரு தேசம் ஆன்மீக சக்தியைக் கொண்டு போரிட்டால் தான் தர்ம வழியில் செல்ல முடியும். எனவே, இளைஞர்கள் ஆன்மீக சக்தியைப் பெற முயல வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

முன்னேற்றம் அடையும் வழிகள்

காந்தியடிகள் இளைஞர்கள் முன்னேறுவதற்கான பல வழிகளைக் கூறியுள்ளார். அதிகம் விவாதிக்கக் கூடாது. விவாதிப்பில் நேரத்தை வீணாக்கக் கூடாது. அவசியமாக ஓரளவு விவாதத்திற்குப்பின் விரைவாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதன்பின் அம்முடிவில் உறுதியாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான் முன்னேற்றம் அடையமுடியும். ஒரு முடிவுக்கு வந்த பின் அதை உறுதியாகக் கடைப்பிடிக்கும் பழக்கம் மிகவும் முக்கியமானதாகும் என்கிறார் காந்தியடிகள்.

முடிவுரை

நல்லது இளைஞர்களே! ''ஒருவரைப் போற்றுவதற்கு அடையாளம் அவரைப் பின்பற்றி ஒழுகுவது'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதற்கேற்ப நாம் காந்தியடிகளைப் போற்றுவதற்கு அடையாளம், அவருடைய நெறி முறைகளைப் பின்பற்றுவதேயாகும். எனவே, காந்தியடிகளின் வழியைப்பின்பற்றி, அவர் காண விரும்பிய கடமையுணர்வுடைய அஹிம்சை நெறியில் செல்லும் ஒரு இளைஞர் சமுதாயத்தை அமைப்போம் என இளைஞர்களாகிய நாங்கள் உறுதி கூறுகிறோம்.

அண்ணல் காந்தியின் புகழ் ஓங்குக!

அருமைத் தாய் நாடு வாழ்க! □

அமரகவி பாரதி

திரு. கு. பொன்னம்பலநாதன், எம்ஏ; பிலிட்;
துணை இயக்குனர், தமிழ் வளர்ச்சித் துறை, கோவை.

மலர் தலை உலகில் விளங்குறு மொழிகளுள்
உயர்தனிச் செம்மொழி யாம்எம் தமிழில்
சிற்பம் இன்னிசை சிறப்புறு மருத்துவம்
அற்புத மான அருங்கலை சோதிடம்
இயற்கை யாற்றலை எழிலுறக் காட்டும்
விண்ணியல் முதலா வியப்புறு கலைகளில்
எண்ணறு நூல்கள் இலங்கின அவைதாம்
ஆற்றொழுக் கான நடையில் அமைந்தவை
அனைத்தும் இழந்தோம் அருவினைப் பயத்தால்
இடைக்கா லத்துநிலை எண்ணிப் பார்மின்.
பாமரர் பயின்று பயனுறா வண்ணம்
பண்டிதர் தங்கள் புலமையை நிறுவ

யமகம் திரிபு மடக்கு அந்தாதி
சித்திரக் கவிவிஸ் தாரக் கவியென
கற்பனை வளமிலாக் கவிதைகள் புனைந்து
பூரிப்படைந்தார் போலிப் புலவர்
பாரத தேசம் பரங்கியர் ஆட்சியில்
அடிமைப் பட்டு அல்ல லுற்றது
ஆங்கில மொழியே அரும்பெறல் மொழியென
அயல்மொழி மோகம்; அந்நியர் நடையுடை
பாவனை எல்லாம் பாரினில் மேன்மை
மேனாட் டாரே மேலோ ரென்று
தாழ்மை யுணர்ச்சியால் வீழ்ச்சி யுற்றுக்
கிடந்தனர் மக்கள் கொடுமை என்னே!

இத்தகு சூழலில் எழுந்தான் பாரதி
உயர்ந்தது தமிழ் மொழி; விழித்தனர் தமிழர்
பாமர மக்களும் படித்துப் பயனுற
எளிய நடையும் இனிய சந்தமும்
அமைந்த கவிதைகள் அழகிய கவிதைகள்
விடுதலை உணர்வும் வீரநல் லுணர்வும்

பொங்கும் பாக்கள் பாடிக் குவித்தான்
பாரதி பாக்களைப் படித்துப் பயன் பெற
அகர முதலி அருகில் வேண்டா!
தெருட்டும் நிகண்டு தேடவும் வேண்டா!
பாரதம் விடுதலை பெறுவது திண்ணம்
என்றே தீர்க்க தரிசனம் கண்டு

ஆடுவோ மேபள்ளுப் பாடுவ மென்று
ஆனந்தக் கூத்து ஆடினான் அன்றே
சிந்து நதியின் மிசைநில வினிலே
சேர நாட்டிள மங்கை யருடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டுக ளிசைத்து
தோணி யேறி விளையாடுவ மென்று
ஒருமைப் பாட்டின் உயர்வினை உணர்த்தினான்
அரிவையர் தாமும் ஆடவர் தாமும்
சரிநிகர் சமமே தாழ்வுயர் விலையென
பெண்மையைப் போற்றினான் பெண்ணினம்
வாழ்த்தினான்.
யாமறி மொழிகளில் எமதுசெந் தமிழ்போல்
எங்கணு மில்லை யாமறி புலவரில்

கம்பனை யன்ன வள்ளுவ ரன்ன
புலவரைக் காணேன் புவனத் திலென
தாழ்மை உணர்வால் வீழ்ந்திருந் தோரை
ஊக்கப் படுத்தி உணர்ச்சி யூட்டினான்
அயல்மொழி களிலுள் அருமை நூல்களை
தமிழ்தனில் பெயர்ப்பீர் தரம் குன்றாமல்
இம்மொழி யுள்ள இலக்கிய மெல்லாம்
மற்றைய மொழிகளில் மாண்புற அமைப்பீர், என
கற்றவர் தமக்குக் கட்டளை யிட்டான்
காக்கையும் குருவியும் எம்சாதி யென
உயிரினம் முழுமையும் உறவுகொண் டாடினான்
இந்தநூற் றாண்டில் இணையிலாக் கவிஞன்

தனியொரு வனுக்கு உணவில் லையெனில்
ஜகத்தை அழிப்போம் என்ற பாரதிதன்
வாழ்வில் கண்டவை வறுமையும் சிறுமையும்!

போற்றுவா ரின்மையின் புலவரும் வறுமையும்
மலரும் மணமும் மணியும் ஒலிபோல்
இணை பிரியாமல் இலங்கு வதறிவோம்,
திருவேறு தெள்ளிய ராதலும் வேறு
திருவள் ளுவனார் தெள்ளமு தன்றோ
வாழ்ந்த போது வறுமையால் வாட்டி
மாய்ந்த பின்னர் மணிமண் டபந்தான்
எட்டைய புரத்தில் கட்டி முடித்தோம்
உணர்ச்சி யளவில் ஊக்க மிகுந்தவர்

வாய்ச்சொல் அளவில் வீரம் நிறைந்தவர்
தமிழரை மிஞ்சத் தரணியில் இல்லை
பாரதி பெயரால் பல்கலைக் கழகம்
அணிபெறு சாலை அமைத்தது அரசு
அகமிக மகிழ்ந்தோம் ஆயினும் எமது
நெஞ்சத் திடையே நின்றதோர் எண்ணம்
தண்டமிழ்ப் புலவர் தமது வாழ்நாளில்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் பெறச் செய்வோமென
ஏற்போம் சூளுரை இறைவ னதருளால்
வாழிய தமிழினம் வளர்க செந்தமிழ்
வாழிய பாரத மணித்திரு நாடு □

பாரதியார் பற்றி......

❊ ''பாரதியார் நோய் அணுகாமல் காத்துக் கொள்வதில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். வெளியிலிருந்து வீட்டுக்குள் நுழையும் முன் யாவரும் காலைக் கழுவிக் கொண்டுதான் உள்ளே வரவேண்டும் என்று கட்டளை இட்டிருந்தார். உணவு விடுதிகளில் உண்ணக் கூசுவார்.''

திரு. மு. வேங்கடசாமி—பைந்தமிழ்ச் சாரதி பாரதியார்

• • • •

❊ ''இந்த இருபதாம் நூற்றாண்டில் கவிதை உலகிலே ஒரு புதுமையையும் புரட்சியையும் உண்டாக்கித் தன்னேரிலாத கவியரசராகத் திகழ்ந்தவர் பாரதி. அடிமையுற்ற பாரதத்தை மீட்கக் குடிமையுணர்வை மக்களுக்கு ஊட்டினார். ஒப்பிலாத சமுதாயத்தைப் படைக்க விரும்பி உலகிற்கு ஒரு புதுமையினைக் காட்டி நாட்டுப்பற்றையும் தமிழ் மொழிப் பற்றையும் கடவுளின் ஒருமைக் காட்சியையும் பாமரருக்கு உணர்த்தினார்.''

திரு. மணிவாசகன் — பாரதியின் புதிய சமுதாயம்

SRI RAM ENTERPRISES

14, Lakshmi Buildings
J. C. ROAD, BANGALORE-2
Phone: 600396 - 611677

Distributors for Karnataka State :

PSG INDUSTRIAL INSTITUTE
EL. P. EM. INDUSTRIALS
'VIKING' INDUSTRIES
'LCT' INDUSTRIES

காக்கை, குருவி யெங்கள் ஜாதி - நீள்
கடலு மலையுமெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களி யாட்டம்

— *பாரதியார்*

பாரதியின் தொழிலாளர்

திரு. ஆர். இருசுப்பிள்ளை, எம்.ஏ; டிஎஸ்எஸ்;

பாட்டுக்கொரு புலவனெனப் பாராட்டப் பெற்ற பாரதியார் அவர்கள், பாடாத பொருள் இல்லை. அவர் தொழிலாளர் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் எண்ணி எண்ணி ஏற்றுப் போற்றத் தக்கன.

பாரதியின் தொழிலாளர் பற்றிய கருத்துக்களை உள்ளவாறு உணர்ந்து கொள்ள வேண்டுமாயின் தொழிலாளர் என்ற சொல்லின் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தொழிலாளர் என்ற சொல்லைச் சொற்பிரித்துப் பொருள் கண்டால், அதற்குத் தொழிலை ஆள்பவர் என்ற பொருள் இருப்பது விளங்கும். ஒரு தொழிலை ஆள்கின்ற கூறுகள் மூன்று. அவை மூலதனம், அறிவு, உடல் உழைப்பு என்பனவாகும். எனவே, மூலதனம் இடுவாரும், அறிவால் உழைப்பாரும், உடல் உழைப்பைத் தருவாரும் ஒரு தொழிலைப் பொறுத்தவரை அத்தொழிலை ஆள்பவர் ஆகின்றனர். எனவே, இம் முத்திறத்தாருமே தொழிலாளர் ஆகின்றனர். இந்தக் கருத்திலேதான், பாரத தேசம் என்ற தலைப்பில் பாரதி எழுதிய பாட்டில்,

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்
பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு
கொள்ளுவோம்''

என்ற வரிகளில் முதலின் சிறப்பையும்

''காசி நகர்ப் புலவர் பேசும்
உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி
செய்வோம்''

என்ற வரிகளில் அறிவின் சிறப்பையும்

''பட்டினில் ஆடையும் பஞ்சில்
உடையும்
பண்ணி மலைகள் என வீதி
குவிப்போம்''

என்ற வரிகளில் உடல் உழைப்பின் சிறப்பையும் விளக்குகின்றார். மூன்று செயல்களிலும் மூன்றும் இருப்பினும் ஒவ்வொரு தொழிலில் ஒவ்வொன்று சிறந்து இருப்பதனைக் காணலாம். மூன்றும் ஒன்றி இணைந்து செயல் படும்போதுதான் தொழில்கள் சிறக்கின்றன.

மூலதனம், அறிவு, உடலுழைப்பு ஆகிய மூன்றும் ஒருவரிடமிருந்தோ இருவரிடமிருந்தோ பல நபர்களிடமிருந்தோ ஒரு தொழிலில் ஈடுபடுத்தப் படலாம். எப்படி இருப்பினும் தொழிலாட்சியைப் பொறுத்தவரை மூவகையினருமே தொழிலாளர்கள் ஆகின்றனர். இம்மூவகைத் தொழிலாளர்களும் செம்மையாய்ச் செயலாற்றுகின்றபோதுதான், அத்தொழில் வளர்ச்சியால் உலகம் வாழ வழிகள் பிறக்கின்றன; உறுத்தல்கள் தொலைகின்றன; உண்மை இன்பம் விளங்குகின்றது என்பது பாரதியின்

நம்பிக்கை. இவர்களிலே ஒருவரிடம் சீர்கேடு இருப்பினும் தொழில் வளர்ச்சியால் பெற வேண்டிய பயன்கள் இழக்கப்படுகின்றன; தொழிலில் ஈடுபடுத்தப்படும் அனைத்து முயற்சிகளும் இசையெழுப்பும் இனிய வீணையைப் புழுதியில் எறிந்த புன்மை நிலை எய்தும் என்பனவற்றை,

'' நல்லதோர் வீணை செய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி — எனைச்
சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே ''

என்ற வரிகளால் நம்மை உய்த்துணர வைக்கின்றார்.

இம் முத்திறத் தொழிலாளர்களையும் பாரதியார் '' கண்ணன் என் சேவகன் '' என்ற தலைப்பில் பாடிய பாட்டில் இருவேறு வகையினராகப் பிரிக்கின்றார். ஒரு வகையினர் எப்போதும் கூலியையே குறியாகக் கொண்டு, கடமையை மறந்து, காலத்தையும் போக்கித் தனக்கும் சமுதாயத்திற்கும் தீங்கினை ஏற்படுத்துகின்றவர்கள். அவர்கள் தனக்கு வாழ்வளித்த தொழில், நிறுவனம், சமுதாயம், நாடு, செல்வம் அத்தனையையும் மறந்து கடமையைத் தட்டிக் கழித்துத் தன்நலம் ஒன்றே குறியெனக் கொள்ளும் கூலித் தொழிலாளர்கள். இத்தகைய தொழிலாளர்கள் ஈடுபடும் தொழில், புறத்தால் எத்துணைச் சிறப்பாக வளர்ந்துள்ளது போன்று தோற்றம் அளிக்கினும் அவற்றின் பயனால் இன்னலே எங்கும் வளரும்; இன்பம் தொலையும்; அமைதி அழியும். பாரதி இவர்களை எண்ணித்தான் '' சேவகரால் பட்ட சிரமமிகு உண்டு கண்டீர் '' என உரைக்கின்றார்.

பிறிதொரு வகையினர், தம்மிடம் உள்ள பொருள், அறிவு, உடல் வலிமை ஆகியவற்றைத் தந்நலம் கருதாமல் தொழில் வளத்தையும் நாட்டின் நலத்தையும் எண்ணி அவற்றைத் தொழிலில் ஈடுபடுத்தும் உண்மைத் தொழிலாளர்கள். இவர்கள் 'காசு பெரிதன்று காதல் பெரிதென' எண்ணித் தமக்கு வாழ்வளித்த நாட்டின் மீதும், மக்கள் மீதும், நிறுவனத்தின் மீதும் அன்பு கொண்டு பொருளையும், அறிவையும், உடல் வலிமையையும் ஈடுபடுத்தி ஆராக் காதலொடு உழைக்கும் உத்தமத் தொழிலாளர்கள். இவர்கள்தாம் தொழிலை ஆட்சி செய்யவல்ல தொழிலாளர்கள் என்ற பெயருக்குப் பொறுத்தமானவர்கள். இவர்களால்தான் உலகின் துன்பத்தைப் போக்கித் துயர் துடைக்க இயலும் என்ற கருத்தில்,

'' பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னான்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னான்
துயர் இலாததைச் செய்து விட்டான்
துன்பம் என்பதைக் கொய்து விட்டான் ''

எனப் பாரதி குறிப்பிடுகின்றார்.

மூன்று வகைப்பட்டவரிடையேயும் கூலிகள் உண்டு; பணியாளர்கள் உண்டு; ஆட்சியாளர்கள் உண்டு. தன்பெண்டு, சோறு, வீடு, சம்பாத்தியம், தான் என்பவைகளையே குறியாகக் கொண்டு செயல்படும் தொழிலாளர்கள், தனக்கு வரும் லாபம் ஒன்றையே எண்ணுகின்றவர்கள் -

அவர்கள் எவ்வகையைச் சார்ந்தவ ராயினும் அவர்களைக் கூலிகள் எனவே அழைத்தல் வேண்டும். இவர்கள் சமுதாயத்திற்குக் கொடுப் பது மிக மிகக் குறைவு; சமுதாயத்தி லிருந்து எடுப்பதோ மிகமிக அதிகம். தனக்கும் வேண்டும், பிறருக்கும் கொடுக்கலாம்; சமுதாயத்தில் ஒரு மாற்றம் கண்டு அதனால் பேரும் புகழும் பெறலாம் என்ற மனப் பாங்கோடு செயலாற்றுகின்றவர்கள் முன்னவரிலும் சற்று உயர்ந்தவர் கள். இவர்கள் கொடுப்பதும் எடுப் பதும் ஏறக்குறைய சமமாகவே இருக் கும்; சில காலங்களில் இவர்கள் எடுப்பது கொஞ்சம் எச்சாகவும் இருக்கும். இத்தகையவர்களைப் பணியாளர்கள் எனக் கூறலாம். ஆனால், 'தொல்லுலக மக்கள் எலாம் ஒன்றே' 'வேண்டாம் விருப்பும் வெறுப்பும்' 'செய் கருமத்தன்றிச் சேரும் பயன் அதனில் ஐய எனக்கு இல்லை அதிகாரம்' 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன்' என்ற மனப்பாங்கோடு, சமுதாய நலன் கருதி, நிறை மனத்தோடு உழைக்கின்ற தொழிலாளர்களே உண்மையில் ஆட்சியாளர்கள் எனத் தக்காராவர். ஒரு நாட்டில் இம் மூவகையினரில் எவ்வகைப்பட்ட தொழிலாளர்கள் மிகுதியாக உள்ள னர் என்பதனைப் பொறுத்தே அந்த நாட்டின் உயர்வு தாழ்வு அமையும்.

மனித வாழ்வில் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் சிறப்பான இடம் பெறினும், அறமும் இன்ப மும் சிறப்பாக அமைய நடுவண தாகிய பொருள் சிறப்பாக அமைய வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.

'அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்''

என்ற குறள் இதனைத் தெளிவுபடுத் தும். பொருளின் சிறப்புக் கருதியே சொல் வைப்பு முறையில் பொருள் நடுவிடத்தைப் பெற்றுள்ளது. இதே

யார் தொழிலாளர்?

தொழிலாளிகள் என்போர் சரீரத்தால் வேலை செய்கிறவர் களே என்று சிலருக்கு எண்ணமிருக்கலாம். அது தப்பு. சரீரத்தால் ஆகட்டும், புத்தியாலாகட்டும், முதலாளிக்குட்பட்டு வேலை செய்கிறவர்கள் எல்லாருமே தொழிலாளிகள் என்று அந்த வ்யாஸம் எழுதியவர் சொல்லுகிறார், இது நம்முடைய தேசத்தார் முக்கிய மாகக் கவனிக்க வேண்டிய விஷயம். ஏனெனில், நம்மவருடைய மனதில் இந்த விஷயம் பதிவு பெறுதல் மிகவும் சிரமம். குமாஸ்தாக் கள், உபாத்தியாயர்கள் முதலியவர்களும் தொழிலாளிகளே என்று அந்த வ்யாஸமெழுதியவர் சொல்லுகிறார். எனவே, என் போன்ற நூலாசிரியர்களும் தொழிலாளிகளே. முதலாளி கூட, ஆள் நியமித்தல், வேலையை மேற்பார்த்தல், வியாபார சம்பந்தமான கணக்குகளைக் கவனித்தல் முதலிய செய்கைகளால் தொழிலாளி ஆகிறான்.

(பாரதி 'சமூகம்' — பக்கம் 153)

அடிப்படையில்தான், பொருள் போடும் தொழிலாளர், அறிவை ஈடுபடுத்தும் தொழிலாளர், உடல் உழைப்பை நல்கும் தொழிலாளர் ஆகிய முத்திறத்தவருள் பொருளும், உடல் உழைப்பும் கோணலற்ற நற் பயனளிக்க வேண்டுமாயின் நடுவில் நிற்கும் அறிவுத் தொழிலாளர் சிறப் பாக இயங்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் பொருள், அறிவு, உடல் உழைப்பு எனப் பாரதி தன் பாட்டில் அமைத்துள்ளார். அறிவின் பயனைக் கூற வந்த பாரதி ''இன்றைய நாள் வரையிலும் மற்றை மனிதரை அடிமைப் படுத் தலே முற்றிய அறிவின் முறை என்று எண்ணினர்'' அது தவறு ; உண்மை யில் வாழ்வில் அமைதி, இன்பம். அன்போடு கூடிய வளர்ச்சி வேண்டு மாயின், ''கற்றவராலே உலகு காப்புற்றது ; உற்றது இங்கு இந் நாள் என வெற்றிச் சங்கு முழுங்குதல் வேண்டும்'' எனப் பாரதி விழை கின்றார்.

அறிவுத் தொழிலாளரின் சிறப்பை மேலும் நன்கு வற்புறுத்தும் இடங் கள் பாரதி பாட்டிலே பல உண்டு. பொருளைப் போட்டுத் தொழிலை ஆள்பவர்களிடம் பாரதி கருத்தைச் செலுத்தினதைவிட, உடல் உழைப்பை ஈந்து தொழிலை ஆள்பவரிடம் கருத்தைச் செலுத் தினதைவிட அறிவை ஈந்து தொழிலை ஆளும் அறிவுத் தொழி லாளரிடம்தான் பாரதி பெருங் கருத்துச் செலுத்தியுள்ளார். தரித்திரம் போக வேண்டுமானால், செல்வம் உண்மையான தன் பயனோடு வளர வேண்டுமானால், பாவமற்ற பணி சிறக்க வேண்டு மானால் அறிவுத் தொழிலாளர்கள் பண்பில் சிறந்து விளங்க வேண்டும். அவ்வாறு சிறந்து விளங்காமல் ''தன்பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்ற சின்னதொரு கடுகு போன்ற உள்ளங் கொண்டவர்'' களாக வாழ்வாரானால் தொழில் வளர்ச்சியின் பயன்கள் வேலியே பயிரை மேய்ந்த கதையாய்ப் போகும். அறிவுத் தொழிலாளர் களின் இயல்புகளை அவ்வளவு எளிதில் இனம் காண இயலாது என்பதனை நன்குணர்ந்த பாரதியார் அறிவுத் தொழிலாளர் தம் உயர் நிலை மறந்து இழிந்த நிலையில் இயங்குவாராயின் அவர்கட்கு கடவுள்தான் தண்டனை தர வேண்டும் என்று மனம் குமைந்து கூறுகின்றார்.

''தரித்திரம் போகுது ; செல்வம்
வருகுது
படிப்பு உயருது ; பாவம்
தொலையுது
படிச்சவன் சூதும் பாவமும்
பண்ணினால்
போவான் போவான் ஐயோன்னு
போவான்''

என்ற வரிகளால் இவற்றை விளங்க வைக்கின்றார்.

'யோகஹா கர்மசு கௌசலம்' என்று கீதையில் கண்ணன் கூறி யுள்ளார். இதன் பொருள் 'செயல் திறனே யோகம்' என்பதாகும். ஒருவர் தன்னை மறந்து, தன் நாமம் கெட்டுத், தொழிலின் தாளிணைகள் உற்றுச் செயல் படும்போது அவர் ஏற்ற தொழில் மூலதனம் போடுவ தாயினும், அறிவை நல்குவதாயி னும், உடல் உழைப்பைத் தருவ தாயினும் அது யோகமாகிறது ; எனவேதான், தொழில் திறனே யோகம் எனக் கீதை கூறுகின்றது. அத்தகைய தொழில், உலகம் வாழ வல்ல வகையில் அமைகின்றது.

இத்தகைய தொழிலாளர்களிடம் தம் நிலை பற்றிய தெளிவும், எவ்வகையிலும் தொழிலைத் தாழ்த்தாத மன உறுதியும், உள்ளத்தில் வெள்ளமெனப் பாய்ந்தோடும் அன்பும், பொறிகளைச் சென்ற விடத்தால் செலவிடா ஆளுமைத் திறமும், அருட் பேராற்றலின் நெறியாம் அருளில் நாட்டமும் ஏற்படும் என்பதனை,

'' அறிவிலே தெளிவு, நெஞ்சிலே
உறுதி
அகத்திலே அன்பினோர்
வெள்ளம்
பொறிகளின்மீது தனியர சாணை
பொழுதெலாம் நினது
பேரருளின்
நெறியிலே நாட்டம் கரும
யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை
அருளாய்
குறிகுணம் ஒன்றும் இல்லதாய்
அனைத்தாய்க்
குலவிடு தனிப் பரம்பொருளே''

என்ற பாட்டில் தெளிவுபடுத்துகின்றார். அவ்வாறு தொழில் யோகமாக விளங்கும்போது — அந்த அளவுக்கு இம் மூவகைத் தொழிலாளர்களின் நிலையும் உயரும்போது அவர்களின் பணிகளெலாம் உலகில் காணப்படும் அனைத்து உயிர்களின் நல்வாழ்வுக்காகும் என்பதனை,

'' ஊருக்கு உழைத்திடல் யோகம்—
நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்—
உளம்
பொங்கல் இலாத அமைதி
மெய்ஞானம் ''

என்று கூறித் தெளிவு படுத்துகின்றார். பொருளைப் போட்டுத் தொழிலை ஆளுகின்ற பெரும் தொழிலதிபர்கள் ''கருமமும் சொந்த நலத்தினைச் சிறிதும் கருதிடாது அளித்தலும் தானே தருமமாம்'' என்று எண்ணிச் செயல்பட வேண்டும் எனக் கூறுகின்றார்.

அறிவுத் தொழிலாளரைப் பற்றியும், பொருள் தொழிலாளர் பற்றியும் பாடிய பாரதி உடல் உழைப்பாளரைப் பற்றியும் பாடியுள்ளார். ஆனால், உடல் உழைப்பை நல்கும் தொழிலாளர்களைப் புகழ்ந்து பேசுகின்றார்; அவர்களைப் பிரம தேவனோடு ஒப்பிடுகின்றார். உடல் உழைப்பை ஈயும் தொழிலாளர்களால் ஊறு மிகுதியும் விளைக்க இயலாது என்ற கருத்தினாற் போலும்,

'' இரும்பைக் காய்ச்சி உருக்கிடு
வீரே
யந்திரங்கள் வகுத்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநல் முத்தெடுப்
பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப்
புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு வீரே
பெரும்புகழ் நுமக்கே
இசைக்கின்றேன்
பிரம்ம தேவன் கலையிங்கு
நீரே''

என்று அவர்களைப் போற்றிப் புகழ்கின்றார்.

மூலதனம் போட்டுத் தொழிலை ஆள்பவரும், அறிவை ஈந்து தொழிலை ஆள்பவரும், உடல் உழைப்பைக் கொடுத்து தொழிலை ஆள்பவரும் மனச் செம்மையோடு தொழிலின் மீது பக்தி கொண்டு ஒன்றிற்கொன்று துணையானவைகளைத் தவிர ஏற்றத்தாழ்வோ, எதிர் நிலையோ இல்லாதவை என்ற தெளிவோடு தொழிலை ஆற்றும்போது ஊர், நாடு, உலகம் ஆகியன கடந்த

மெய்யான உணர்வு பெற்று, உலகு இன்பக் கேணி என்ற உண்மையுணர்ந்து, பதற்றம் நீங்கித் தாங்களும் இன்புற்று மற்றவர்கட்கும் இன்பம் நல்குமாறு பணி புரிவர். இதனை,

''பக்தி உடையார் காரியத்தில்
பதறார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்''

என்ற வரிகளால் தெளிவு படுத்துகின்றார்.

இத்தகையவர்களால்தான் ''விண்ணின் இடிமுன் விழுந்தாலும் பான்மை தவறி நடவாத'' பண்பினர்களாக வாழ இயலும் என்று பாரதி நம்புகிறார்.

எனவே, தொழிலில் ஈடுபட்டுத் தொழிலை ஆளுகின்ற மேற்கூறிய மூவகைத் தொழிலாளர்களும் ஒருவர்க்கொருவர் ''நண்பராய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் விளங்கி வாழ்தல் வேண்டும்'' என்பது பாரதியின் வேட்கை. அவர்களே பாரதியின் நோக்கில் தொழிலாளர்கள் ஆவர். வாழ்க வையகம்! □

வினா??? விடை!!!

திரு. ப. தாணுமோகன், சென்னை-26

வினா : நெல்லிக்காயை உண்டவுடன் நீர் அருந்தினால் இனிப்பது ஏன்? சர்க்கரை உண்டவுடன் தேநீர் கைப்பது ஏன்?

டாக்டர் க. ரா. கிருட்டிணன்

விடை : நெல்லிக்காயின் சுவைக்கு மூன்று வகைப் பொருள்கள் காரணமாகின்றன. அஸ்கார்பிக் (வைடமின் C), ஸிட்ரிக், டார்டாரிக் முதலிய அங்கக அமிலங்கள் புளிப்பைத் தருகின்றன. டான்னின்கள் (tannins) துவர்ப்புக்குக் காரணம். குளுகோஸ், ஃப்ருக்டோஸ் (fructose) ஸுக்ரோஸ் முதலிய சர்க்கரைப் பொருள்களும் உண்டு. அமிலப் பொருள்களும் சக்கரைப் பொருள்களும் நீரில் நன்கு கரைவன. அவை எளிதில் சுவை முளைகளுக்குள் புகுந்து அங்குள்ள சுவையுணர் நரம்பு முனைச் செல்களைத் தூண்டவல்லன. உவர்ப்பு, (உப்பு) இனிப்பு, புளிப்பு, கைப்பு, (கசப்பு) ஆகியவற்றிற்கு மட்டுமே தனித்த உணர்விகள் உண்டு. அப்பொருள்கள் தூண்டும் புளிப்பும், இனிப்பும், துவர்ப்பில் அடிபட்டுப் போகும். அடுத்து நீர் அருந்தும்போது முதல் விழுங்கில் நாவின் மேல் படிந்த நெல்லிக்காய்ப் பொருள்கள் எல்லாமே நாவினின்று கழுவி அகற்றப்படும். ஆனால், சுவை முளைகளுக்குள் சென்ற அமிலங்களும் சர்க்கரைகளும் தப்பிவிடுகின்றன. எனவே, துவர்ப்பு நீங்கியதும் இவற்றின் சுவை வெளிப்படுகிறது. புளிப்பு மிகக் குறைவாயிருக்கும்போது சக்கரையின் இனிப்பு தூக்கலாகத் தெரிவது இயல்பு.

தேநீரில் இனிப்பும், கைப்பும், சிறிதளவு துவர்ப்பும் உண்டு. சக்கரை முழு இனிப்புப் பொருள்; அதில் வேறு பொருளோ, வேறு சுவையோ கிடையாது. முதலில் சக்கரையை உண்ணும் போது இனிப்பு உணர்விகள் முழு வன்மையுடன் தூண்டப்பட்டு சகிப்புத்தன்மை (tolerance) பெற்றுவிடுகின்றன. அந்த நிலையில் அவை இனிப்பை உணரா. அப்போது தேநீரின் மிதமான இனிப்புத் தெரியாது. ஆனால் கைப்பு உணர்விகள் தேநீரின் காப்பின் (caffeine) தியோப்பில்லின் (theophylline) முதலிய ஆல்கலாய்டுகளின் கைப்பை நன்கு காட்டும்.

பாரதி மண் கெட்டதே

திரு. ஐ. சி. கோவிந்தசாமி
தலைமை ஆசிரியர், தியாகி என். ஜி. ஆர். நினைவு
உயர்நிலைப்பள்ளி, கோவை.

வெற்றி வெற்றி வெற்றி என்று
வெற்றி முரசு கொட்டியே
வெற்றி பெற்று தீர்வதென்று
வீர கவிதை பாடியே
உற்று நோக்கும் உலக அரங்கில்
நமது நாட்டை உயர்த்தவே
'சொற் புதிதாய் பொருள் புதிதாய்'
கவிதை தந்தான் பாரதி.

சுற்றிச் சூழ்ந்து நம்மைக் கெடுத்த
தீமையாவும் நீங்கவும்
குற்றமற்ற தூயவாழ்வில்
துணிந்து நாட்டம் கொள்ளவும்
பற்று கொண்டு நாட்டை மொழியை
நாளும் போற்றி வளர்க்கவும்
கற்று புதிய கலைகள்சேர்க்க
கவிதை சொன்னான் பாரதி.

அஞ்சி மூட வலையில் சிக்கி
அவதியுற்ற மக்களை
கஞ்சியின்றிப் போனதற்கோர்
கருத்தறியா ஏழையை
தஞ்சமென்று தீமைகண்டும்
தாள்பணியும் கோழையை
நெஞ்சமுருகி உணர்வு சேர்க்க
நிமிர்ந்து நின்றான் பாரதி

ஜாதி பேதம் ஆட்டம் போடும்
ஜாதிப் பேய்கள் ஆட்சியும்
நீதியற்ற குப்பை நூல்கள்
குவிந்து வளரும் கோலமும்
வீதிச் சுவர்கள் தாங்க மறுக்கும்
விரசமான படங்களும்
நாதியற்றுப் போனதாலே
பாரதிமண் கெட்டதே?

பாரதியார் நூல்கள்

இன்று நாம் பெரிய தொகுதிகளாகக் காணும் மகாகவி பாரதியின் படைப்பிலக்கியங்கள் அதாவது கவிதைகளாகட்டும் - கட்டுரைகளாகட்டும் - கதைகளாகட்டும் - எவையானாலும், அவை பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்டு, சிறு சிறு நூல்களாகவேதான் வெளிவந்தன. அதனைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

வரிசை எண்	நூற் பெயர்	பதிப்பாளர் (அ) பதிப்பாசிரியர்	முதற் பதிப்பு பதிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு
1	ஸ்வதேச கீதங்கள்-முதற்பாகம்	பாரதியார்	1908
2	புதிய கட்சியின் கொள்கைகள் (திலகரின் பிரசங்கங்கள்-மொழி பெயர்ப்பு)	பாரதியார்	1908
3	எங்கள் காங்கிரஸ் யாத்திரை	பாரதியார்	1908
4	ஜன்மபூமி (ஸ்வதேச கீதங்கள் 2-ஆம் பாகம்)	பாரதியார்	1909
5	மாதாவாசகம்	பாரதியார்	1910
6	ஞானரதம்	பாரதியார்	1910
7	பாஞ்சாலி சபதம் (முதற் பாகம்)	பாரதியார்	1912
8	மாதாமணிவாசகம்	தென்னாப்பிரிக்காவில் வெளியீடு	1914
9	புதிய ஆத்திசூடி	பாரதியார்	1914
10	பொன் வால் நரி (The Fox with Golden Tail)	பாரதியார்	1914
11	கண்ணன் பாட்டு	பரலி. சு. நெல்லையப்பர்	1917
12	நாட்டுப்பாட்டு	,,	1917
13	பாப்பாப் பாட்டு	,,	1917
14	முரசு	,,	1917

1	2	3	4
15	மகாகவி சர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாசங்கள்	சுதேசமித்திரன் புத்தகசாலை	1918
16	பாரத ஜனசபை - முதற்பாகம் (காங்கிரஸ் சரித்திரம்-மொழிபெயர்ப்பு)	,,	1919
17	பாரத ஜனசபை-இரண்டாம் பாகம்	,,	1920
18	கதாமாலிகா	,,	1920
19	சுதேச கீதங்கள்-முதற்பாகம்	பாரதி ஆசிரமம்	1922
20	சுதேச கீதங்கள்-இரண்டாம் பாகம்	,,	1922
21	குயில்பாட்டு - கண்ணன் பாட்டு-பாரதி அறுபத்தாறு	பாரதி பிரசுராலயம்	1923
22	பாஞ்சாலி சபதம் - இரு பாகங்களும் இணைந்தது	,,	1924
23	பகவத் கீதை முன்னுரை	,,	1924—25
24	பகவத் கீதை உரைவிளக்கம்	,,	1924—25
25	சுதேச கீத சங்கிரஹம்	,,	1925



சென்னை திருவல்லிக்கேணியில் பாரதியார் வாழ்ந்த வீடு

1	2	3	4
26	சந்திரிகையின் கதை	பாரதி பிரசுரலாயம்	1925–26
27	தராசு	,,	1928
28	நவதந்திரக் கதைகள்	,,	1928
29	வேத ரிஷிகளின் கவிதை	,,	1928
30	பதஞ்சலி யோக ஸூத்ரம்	,,	1928
31	விநாயகர் நான்மணி மாலை	,,	1929
32	தேசிய கீதங்கள்	,,	1929
33	தோத்திரப் பாடல்கள்	,,	1930
34	வேதாந்தப் பாடல்கள்	,,	1930
35	காட்சி	,,	1930
36	சித்தக் கடல்	,,	1930
37	பாரதி நூல்கள்-கட்டுரைகள் 1. தத்துவம்	,,	1935
38	2. மாதர்	,,	1930
39	3. கலைகள்	,,	1935
40	4. சமூகம்	,,	1935
41	ஆசாபங்கம் (தாகூர் கதை-மொழி பெயர்ப்பு)	கமல நிலையம்	1937
42	நஷ்டபூஷணம் ,,	,,	1937
43	கதைக்கொத்து	பாரதி பிரசுராலயம்	1937
44	Agni and other poems and translations	,,	1937
45	Essays and other prose fragments	,,	1937
46	ஸ்வசரிதையும் பிறபாடல்களும்	,,	1938
47	பத்திராதிபர் (தாகூர் கதை-மொழி பெயர்ப்பு)	கமல நிலையம்	1939
48	வேத ரிஷிகளின் கவிதை தொடர்ச்சி	பாரதி பிரசுராலயம்	1941
49	பாரதி கீதத்திரட்டு (2-ஆம் பதிப்பு)	,,	—
50	பாரதி மணிமலர்	,,	1948
51	பாரதி தமிழ்	அமுத நிலையம்	1953

1	2	3	4
52	சின்னச் சங்கரன் கதை	பாரதி புத்தக நிலையம்	1956
53	தாகூர் சிறுகதைகள் (மொழி பெயர்ப்பு)	அமுத நிலையம்	1958
54	பாரதி புதையல்-முதல் தொகுதி	,,	1958
55	பாரதி புதையல் - இரண்டாம் தொகுதி	,,	1959
56	பாரதி புதையல் - மூன்றாம் தொகுதி	,,	1975
57	பாரதி தரிசனம்- முதல்தொகுதி	நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்	1975
58	பாரதி தரிசனம்-இரண்டாம் தொகுதி	,,	1977
59	சக்ரவர்த்தினி-கட்டுரைகள்	வானவில் பிரசுரம்	1970
60	மும்மணிகள்	,,	1979

பின் குறிப்பு:

கூடியவரை மகாகவி பாரதியாரே தமது நூல்களுக்குத் தலைப்பெயரிட்டு விட்டார்.

முதன் முதலில்!

1904-இல் பாரதியார் சென்னை வந்து சுதேசமித்திரன் அலுவலகத்திலே பணியாற்றிய சமயம். 'வங்க வாழ்த்துக் கவிகள்' என்ற அவருடைய பாடல் சுதேசமித்திரனில் 15-9-1905-இல் வெளியானது. சுதேசமித்திரனில் பாரதியார் எழுதிய முதற் கவிதை இதுவே எனக் கருதப்படுகிறது. (இக்கவிதை இச்சிறப்பிதழில் 12-ஆம் பக்கம் வெளியாகியுள்ளது.)

பாரதியாரின் கவிதை ஒன்று மதுரையிலிருந்து வெளியான 'விவேக பாநு' என்ற மாத இதழில் முன்பே வெளியாகியுள்ளது 'தனிமை இரக்கம்' என்ற தலைப்புள்ள அக்கவிதை 1904 ஜூலை இதழில் வந்துள்ளது. இதுவே அச்சில் வந்துள்ள பாரதியாரின் முதற் கவிதை. இதை அவர் எட்டைய புரத்தில் இருந்த போதே பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார். (இக்கவிதை இச்சிறப்பிதழில் 3-ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

1908-இல் பாரதியார் 'ஸ்வதேச கீதங்கள்' என்ற நூலை வெளியிட்டார். பதினுன்கு பாடல்கள் அடங்கிய இதுவே அவருடைய முதல் நூலென்று கொள்ளலாம். அந்நூலை அவர்தம் குருவாகிய நிவேதிதா தேவியாருக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார். "ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கிய தொப்ப எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலைச் ஸமர்ப்பிக்கின்றேன் என்று அவர் எழுதியுள்ளார்.

Grams : SUPERMILL
Hindupur

Phone : 122 HINDUPUR

SUPER SPINNING MILLS LTD.

KIRIKERA P. O. 515 211

Hindupur Tq., Anantapur Dist.

Andhra Pradesh

Ring Spindles : Licenced - 75,116

Installed - 50,116

SPINNERS OF QUALITY YARN

60s Carded Hank and Cone

60s Combed Hank and Cone

80s Combed Hank and Cone

40s Combed Hosiery Cone

40s Carded Hank

2/80s Combed Hank and Cone

"கண்ணன் பாட்டு"

டாக்டர் தமிழண்ணல், எம்ஏ; பிஎச்டி;
தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கிய வானத்தில் பத்திமை இலக்கியங்கள் என்ற விண்மீன்கள் எத்தனை எத்தனையோ மின்னுகின்றன. ஆனாலும் அவற்றிடையே தனக்கென்ற ஒரு தனி ஒளியுடன் கண்ணன் பாட்டுச் சுடர் வீசித் திகழ்கிறது. தமிழ்ப் பத்திமை இலக்கிய வகைமையைக் கண்ணோட்டம் இடும் ஒருவர் "இனி என்ன புதுமை படைக்க முடியும்?" என்றுதான் ஐயுறுவர். ஆனால், அத்தனை இலக்கிய வளர்ச்சிக்கும் பின்னர் வந்தாலும் "கண்ணன் பாட்டு", அவையனைத்திற்கும் மேற்பட்டதாய்ப் புது வளர்ச்சி நிலை காட்டிப் பூத்துக் குலுங்கி நிற்கிறது.

கண்ணன் பாட்டு முற்றிலும் இசைப்பாடல்களால் ஆனது. சிலர் கருதுவதுபோல் வடமொழிச் செயதேவரின் கீதகோவிந்தம் போன்ற நூல்கள் பாரதிக்குத் தூண்டுணர்ச்சியாக அமைந்து இவ்விசை பாட்டுத் தொகுதியைப் பாட வைத்திருக்கக் கூடும். எனினும் தமிழில் தாயுமானவர், வள்ளலார், அண்ணாமலை ரெட்டியார் போன்றவர்கள் இசை மழை பொழிந்து இறையருளில் திளைக்கவில்லையா? பாரதிக்கு இவற்றில் மிக ஈடுபாடுண்டு என்பது யாவரும் அறிந்ததேயாம். 'தங்கமே தங்கம்' என்பது நாட்டுப் பாடல் வழிவந்த மெட்டுப் பாட்டு. 'பாயும் ஒளி நீ எனக்குப் பார்க்கும் விழி நானுனக்கு' என்பதும் நாடோடிப் பாடல் வடிவமேயாம். மற்றும் பாரதிக்குப் பீடுநடை தரும் சிறப்புடைய சிந்துப் பாடல் வடிவங்கள் சில இதில் உள. இசைப் பாட்டு வடிவத்தில் பண்ணும் தாளமும் குறிப்பிட்டுப் பல்லவி, சரணப் பாங்கில் அமைந்த பாடல்களும் இதில் உள. இவ்வாறு இசைப் பாங்கில் கண்ணன் பாட்டு மேலோங்கி நிற்கிறது.

கண்ணனைச் சேவகனாக புனையும் பொழுது, "நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியருமாய், பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்" என்று கூறுவார் பாரதியார். அங்குச் சேவகன் ஒருவனே பல்வேறு நிலைகளில் உதவ முடியும் எனத் தெரிவிக்கும் பாரதியார், இறைவன் ஒருவனே நமக்குப் பல்வேறு நிலைகளில் தோன்றாத் துணையாக இருக்கிறான் என்ற மெய்ப் பொருளைக் கண்ணன் பாட்டில் நன்கு விளக்கி விடுகிறார்.

கண்ணன் பாட்டிலுள்ள 23 பாடல்களில் கண்ணனைத் தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன்; சீடன், சற்குரு; குழந்தை

விளையாட்டுப்பிள்ளை, காதலன் (6), காதலி (6); ஆண்டான், குல தெய்வம் எனப் பல்வேறு நிலைகளில் கொண்டு பாரதியார் பாடுகின்றார். இவற்றுள் தோழன், ஆண்டான், குல தெய்வம், குழந்தை, விளையாட்டுப் பிள்ளை ஆகியன தவிர ஏனைய வற்றில் ஒன்றுக்கொன்று எதிர் எதி ரான உறவுகளாகக் கண்டு பாடி யிருக்கக் காணலாம். தாயும் தந்தை யும் சேவகனும் அரசனும், சீடனும் சற்குருவும், காதலனும் காதலியும் என்பன காண்க. ஆண்டானாகக் கண்ட கண்ணனை அடிமையாகக் காணப் பாரதி மனம் ஒப்பவில்லை போலும்! குழந்தையாகக் கண்ட துடன் கண்ணனை விளையாட்டுப் பிள்ளையாகவும் கண்டது, கண்ணனைத் தொன்று தொட்டுக் குழந்தையாகப் போற்றி வரும் சிறப்புக் கருதியே, எனலாம்.

தமிழில் உள்ள பத்திமை இலக்கி யங்களில் இறைவனைக் காதலனா கக் கருதி, அகத்துறைகள் பலவும் அமையப்பாடுவது தொன்மை மிக்க மரபாகும். தமிழிலுள்ள அகமரபே பத்திமை மரபு உருப்பெற்று வளர உதவிற்று என்பதைப் புலமையுடை யாரனைவரும் அறிவர். இந் நூற் காதற் பாடல்களில் 'பாங்கியைத் தூதுவிடுதல், பின்னே வந்து நின்று கண் மறைத்தல், நாணிக் கண் புதைத்தல், குறியிடம் தவறுதல்' போன்ற துறைகள் அமைந்து கிடப் பது இதை வலியுறுத்தும். ஆழ்வார் கள் கண்ணனைக் குழந்தையாகவும் விளையாட்டுப் பிள்ளையாகவும் கருதிப் பாடிய பாடல்கள் இன்பம் சுரக்கும் இன்னமுதங்களாகும். ''உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'' என்பது பெருமாள் திரு மொழி. பாரதியார் ''மழைக்குடை, பசிநேரத்துணவு என்றன் வாழ்வி னுக்கு எங்கள் கண்ணன்''. என்னும் போது, இவ்வுணர்வே வெளிப்படு கிறது. இறைவனைத் திருஞான சம்பந்தர் தந்தையாகவும் திருநாவுக் கரசர் ஆண்டானாகவும் சுந்தரர் தோழனாகவும் பாடிய சாயல்களை அவர்தம் பாடல்களின் வழி நன்கறியலாம்.

பாரதியார் கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தது மட்டுமின்றி, அதில் தோய்ந்த புலமைநலம் வாய்க்கப் பெற்றவர். கண்ணன் பாட்டின் முதற் பாடலிலேயே,

''வேதம் உணர்ந்த முனிவர்
உணர்வினில்
மேவு பரம்பொருள்காண்- நல்ல
கீதை உரைத்தெனை இன்புறச்
செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடுவேன்''

என்பதால், அவ்வனுபவத்தோடு இப்பாடல்கள் புனையப்பட்டமை தெளிவாகும்.

கீதையில் அர்ச்சுனன் கண்ணனை நோக்கி விசுவரூப தரிசனப் பகுதி யில் கூறும் செய்தியைப் பாரதியார் தம் மொழியாக்கத்தில் கீழ்வருமாறு தந்துள்ளார்:

''சராசரமாகிய இவ்வுலகத்துக்கு நீ தந்தையாவாய். இவ்வுலகத்தால் தொழத்தக்கனை; மிகவும் சிறந்த குரு நீ. உனக்கு நிகர் யாரு மில்லை''....

''ஈசா, வேண்டுதற் குறியாய், மகனைத் தந்தை-போலும் தோழனைத் தோழன் போலும் அன்பனை அன்பன் போலும் நீ என்னைப் பொறுத்தல் வேண் டும்''.

கண்ணன் பாட்டின் முதற் பாட்டு அருச்சுனன் கூற்றாகவே அமைந்து, கண்ணனைத் தோழனாகக்கொண்டு, பாரதி நிகழ்ச்சியடிப்படையில் பாடப் பட்டிருப்பது, பாரதியார் கீதை வழி யிலேயே இப்பாட்டிற் காணும்

கண்ணன் உறவுகளை வகைபடுத்தியுள்ளார் என்பதை வலியுறுத்தும்.

'கண்ணன் பாட்டு' இசையமைதியாலும் இறையுறவுப் பாட்டுத் திறத்தாலும் பத்திமை இலக்கியத்தில் புதுமை படைக்கிறது. ஆயினும் முன்னைய தமிழ் மரபும், கீதைவழியும் அதன் உருவாக்கத்திற்குத் தூண்டுணர்வும் அடிப்படையுமாயின எனலாம், மரபு அடிப்படையில் புதுமை படைப்பதே இலக்கிய வளர்ச்சி என உணர்வார். கண்ணன் பாட்டின் சிறப்பினை உணரத் தவறார்.

கண்ணன் பாட்டு, கண்ணனை மூன்று நிலைகளில் உணர்ந்து பாடப் படுகிறது.

ஒன்று: இயற்கையில் கண்ணனைக் கண்டு மகிழ்கிறது.
இரண்டு: புராணக் கதையில் கண்ணனைக் கண்டு உறவாடுகிறது.
மூன்று: சமுதாய வாழ்வில் கண்ணனை உறவுகண்டு நேசிக்கிறது.

இயற்கையில் முழுவதுமாகக் கண்ணனைக் காணுமிடம் 'கண்ணன் என் தாயாகும்! வானம் என்னும் கையிலணைத்து, மண்ணென்னும் மடியில் வைத்து, கண்ணன் எனும் தாய் தன் குழந்தைக்குப் பல மாயக் கதை சொல்லி மனங்களிக்கின்றாள்.

''சுட்டும் விழிச்சுடர்தான் — கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி — கண்ணம்மா
வானக் கருமைக் கொல்லோ''

என்பதுபோல் வருமிடங்கள் பல இயற்கையைக் கண்ணனாகக் காணுமிடங்களேயாகும்.

கண்ணனை மகாபாரதத்தில் வரும் கண்ணனாகக் கொண்டு பாண்டவர் சிறப்பாக அருச்சுனன் - உறவை வைத்துப் புனையும் பாடல்கள்தான் இதன்கண் மிகுதி. 'கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை' என்ற ஒரு பாடலில் மட்டும் கோகுலத்தில் கோபியர் காதலனாக வளர்ந்த பாகவதக் கண்ணன் முழுவதுமாகப் புனையப் படுதல் காணலாம். இவ்வாறு கண்ணன் புராண வரலாறுகள் ஆங்காங்குக் குறியீட்டுப் பொருளுடன் கலந்தே வழங்கப்படுகின்றன.

''பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே-இனி
என்ன வழியென்று கேட்கில் உபாயம்
இருகணத்தேயுரைப்பான் -அந்தக்
கண்ணனை வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன்றில்லேன்-வந்திங்கு
உன்னை அடைந்தனன் என்னிலுபாயம்
ஒருகணத்தே உரைப்பான்''

சுபத்திரை காதலையும் கன்னனைக் கொல்ல அவனுடைய கவச குண்டலங்களையும் புண்ணியத்தையும் கவர்ந்து வந்து உதவியமையையும் நினைவுகூரும் இடம் இது. காதலில் வெற்றி பெறவும் பகைமையை வெல்லவும் தக்க பொழுதுகளில் இறையருள் பாலிக்கும் என்பதையே உள்ளீடாக இஃதுணர்த்துகிறது.

கண்ணனை மனிதனாக உறவு கொண்டு, ஈடுபட்டுப் பாடுவதில்தான் கண்ணன் பாட்டு மிக மேலோங்கி நிற்கிறது. பிற பத்திமைப் பாசுரங்களுக்கில்லாத பெருமை இது. பிற நூல்கள் சில மனித உறவு போல் பாடும்; மனித உறவாகவே கொண்டு பாடுவதில்லை. வ.வே.சு.ஐயர் இந் நூலுக்கெழுதிய தம் முன்னுரையில்,

''நமது கவியும் இப் பாவத்தை விவரிக்கையில் பரபக்தியை விடச் சரீரமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார்'', என்று குறிப் பிடக் காண்கிறோம். திறனாளிகள் பலர் இவ்வாறு இதன் 'மனிதத் தன்மையைப்' பற்றி வியந்து எழுதி உள்ளனர். ஆனால், அதுவே இதன் சிறப்பாகும் என்று கொள்ளலாம். 'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந் ததை' வியந்தவர் பாரதியார். தம் பாடல்கள் இறைமை, சமயம், பத்திமை பற்றியனவேயாயினும் அவற்றையும் மனித குலத்துடன், இணைத்துச் சமுதாயவுணர்வுடன் பிணைத்துப் பாட விரும்பியவர் அவர். அப்போதுதான் மனித மனம் அதில் ஈடுபடும்; முழு உறவு கொள் ளும். இது கால வளர்ச்சியையும் கவிதை வளர்ச்சியையும் காட்டு கிறது.

கண்ணனை, இப் புனைவுத் திறந் தால், மிகமிக அருகில் கொண்டு வந்து விடுகிறார் பாரதியார்.

''கோபத்திலே ஒரு சொல்லிற்
சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான்
-மனத்
தாபத்திலே ஒன்று செய்து
மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான்
-பெரும்
ஆபத்தினில்வந்து பக்கத்திலே
நின்று
அதனை விலக்கிடுவான்
-சுடர்த்
தீபத்திலேவிழும் பூச்சிகள்
போல்வருந்
தீமைகள் கொன்றிடுவான்!''

ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். மிகச் சேய்மையிலேயிருந்துஉங்களை ஆட்கொள்ளக் கூடிய இறைவனி னும், இங்ஙனம் மனிதனாக உட னாகவே இருந்து அவ்வப்பொழுது உதவக்கூடிய இறைவனல்லவா நீங்கள் மிகவும் நேசிக்கும் இறைவ னாக இருக்க முடியும்? ''தேவர் குலத்தவன் என்றே - அவன் செய்தி தெரியாதவர் சிலர் உரைப்பார்'' என்று பாரதியார் கூறுதல் காண்க. உண்மையில் இப்போதுதான் நாம் உண்மையான இறையியல்பைக் கண்டுள்ளோம் என்று கருதும் மன உணர்வு ஏற்படுகிறதல்லவா?

திருமூலர் காலந்தொட்டு, வள்ள லார் காலம்வரை மனித சமுதாயத் திலே, உலக உயிர்களின் உறவிலே கண்டுவந்த இறையுணர்வு பாரதியா ரிடம் வெற்றி பெற்றது எனலாம்.

கண்ணனைச் சேவகனாகக் காணும் போது, நம் வீட்டுச் சேவகனையே காணுகிறோம். அல்லது நம் சேவக னிடத்திலேயே இறைவனைக் காண் கிறோம். ''காட்டு வழியானாலும் கள்ளர் பயமானாலும் இரவிற் பகலில் எந்நேரமானாலும் சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே சுற்றுவேன். தங்களுக் கோர் துன்பமுறாமற் காப்பேன்'' என்னும்போது இப்படிப்பட்ட சேவ கன் நமக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் நம் மனத்தில் தோன்று கிறதல்லவா?

இயற்கையில் இறைமையைக் கண்டு, அவ்வியற்கையையே இறை வனாகப் பாடுவது ஒரு மரபு. புராணக் கதைகளை உட்பொரு ளுடைய குறியீடுகளாக்கி, அவற்றின் மூலம் இறையியல்பை விளக்குவது பிறிதொரு மரபு. அவை தத்துவ விளக்கங்களாக மிளிர்தலுண்டு. மனித உறவில், உலக உயிர்களுடன்

கொள்ளும் தொடர்பில் இறைமையை ஏற்றிப் பாடுவதும் ஒரு மரபு. அம் மரபில் புதுமையைத் தோற்றுவித்து, வளர்ச்சி காட்டிய பெருமை பாரதியாருக்கு உண்டு. அதன் மூலமும் இறையியல்பை விளக்க முடியும், இறையுணர்வை ஊட்ட முடியும்; இறையனுபவத்தை விளைவிக்க முடியும் என்பதைப் பல்வேறு கோணங்களில் நிலை நாட்டிய பெருமை இக்கண்ணன் பாட்டிற்கு உண்டு. சேவகனிடம் ''ஏது பெயர்?'' என்றால் ''ஒன்றுமில்லை கண்ணன் என்பார் ஊரிலுள்ளோர் என்னை'' என்கின்றான். மேலும், அவன்,

''நானோர் தனியாள்! நரைதிரை தோன்றா விடினும்
ஆனவயதிற்கு அளவில்லை; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை'' என்கிறான்.

இவற்றில் உள்ள உட்பொருளைப் பாடிப் பாடித்தான் நுகர வேண்டும்.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுகிற இடத்தில்' என்பார்கள்.
''சின்னஞ்சிறு கிளியே-கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக்கலி தீர்த்தே-உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!''

என்று பாடும்பொழுது கண்ணன் என்ற குழந்தையைக் கொஞ்சுவதும், நம் குழந்தையைக் கொஞ்சுவதாக அமைகிறது. தெய்வமாக ஏற்றுக் களிக்கச் செய்யும் உணர்வும் அதில் உண்டு. அவ்வுணர்வு அப்பாடலை மட்டும் படிப்பவர்க்கு ஒரு வேளை ஏற்படாமல் போகலாம்; ஆனால் கண்ணன் பாட்டினை முழுவதுமாகப் படிப்பவருக்கு இக் குழந்தைப் பாடலிலும் தெய்வ உணர்வு இழை ஓடுதல் உறுதி.

பாரதியின் கண்ணன் காதல் பாடல்கள் ஈடும் எடுப்பும் அற்றவை. காதல் வாழ்வின் தொடக்கத்தில் ஏற்படக் கூடிய ''வேட்கை ஒரு தலை உள்ளுதல், மெலிதல், ஆக்கஞ் செப்பல், நாணுவரை இறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல்'' போன்ற மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. மேலும் பிரிவில் ஏற்படக் கூடியவற்றைப் ''பசிஅட நிற்றல், பசலைபாய்தல், உண்டியில் குறைதல், உடம்பு நனி சுருங்கல், கண் துயில் மறத்தல், கனவொடு மயங்கல்'' என்றிவ்வாறு அது பட்டியலிட்டுக் காட்டும். இம்மெய்ப்பாடுகள் பலவற்றையும் காதற் பாட்டுக்களில் வைத்து அறிதல் கூடும்.

தூண்டிற் புழுவினைப் போல்-வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடி!

கூண்டுக் கிளியினைப்போல்-தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்
வேண்டும் பொருளையெல்லாம்-மனது
வெறுத்துவிட்டதடி!

உணவு செல்லவில்லை- சகியே
உறக்கம் கொள்ளவில்லை!

கனவு கண்டதிலே- ஒரு நாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை- எவனோ
என்னகந் தொட்டுவிட்டான்!

தமிழ் அகப் பாடல்கள் பல மானுடக் காதலை இறைக் காதல் எனுமாறு உயர்த்துப் புனைந்து காட்டும்.

அத்தகைய சிறப்பை இப் பாடல் களிலும் காணலாம்.

பாரதியாரிடம் சைவம் என்றும் வைணவம் என்றும் வேறுபாடு தோற்றவில்லை. அவருக்குக் கண்ண னும் கண்ணன் கதைகளும் இறை அருட்பாங்கை உணர்த்தும் குறியீடு களே. கணக்கில் x என்று ஒரு குறியீடு வைத்துக் கொள்வ தில்லையா? அதுபோல அளவற்ற அருள் என்னும் இறைமையை உணரக் 'கண்ணன்' என்பது ஒரு குறியீடு ஆகிறது.

'' யானே ஆகி, என்னலாற்
பிறவாய்,
யானும் அவையுமாய், இரண்டி
லும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக்
கண்ணன்'' (சீடன்)

என்னும்போது இறைவன் 'ஒன் றாய், உடனாய், வேறாய்' நிற்பன் என்னும் சிவஞான போதச் செய்தி நினைவுக்கு வருகிறது.

'' கண்ணன் எனதகத்தே கால்
வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவுமவன்
பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்,
சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை,
சிவயோகம்,
தெளிவே வடிவாம் சிவஞானம்
என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி
வருகின்றன காண்!'' (சேவகன்)

கண்ணன் உறவு தோன்றி வளர வளரச் சிவயோகம் சிவஞானமும் கைவரப் பெறுகின்றன என்ற கருத்துச் சமய ஒருமையுணர்விற் பிறந்ததாகும். ''கண்ணன் என்றும் ஈசனென்றும் கூறுவதுண்டு; அரி, அறன், அயன் என மூவகைப் பெயரிட்டழைத்தாலும் அவன் ஒரு வனேயாவன். அவன் முகம் அறி யாதவரே, வேறுவேறு என்று சண்டைகள் செய்வார்'', இவ்வாறு தந்தையாகக் காணும்போது கூறு கிறார்.

கண்ணன் பாரதி உறவு என்பது இறை உயிர் உறவு பற்றியதேயா கும். கண்ணம்மா என் காதலி என்ற பாடலொன்றில், '' சாத்திரக்காரர் களிடம் யான் வினவிப் பார்த்தேன். இது இன்று நேற்று வந்த உறவல்ல வாம். நெடும் பண்டைக் காலம் முதல் நேர்ந்து வந்ததாம்'', எனக் குறிப் பிட்டு அதற்குச் சில காட்டுகளும் தரக் காண்கின்றோம்.

காதலனாக

போற்றும் இராமன்என
முன்புதித்தனை— அங்குப்
பொன்மிதிலைக் கரசன் பூமடந்தை
நான்

தோழனாக

ஊற்றமுது என்னவொரு வேய்ங்
குழல் கொண்டோன்— கண்ணன்
உருவம் நினைக்க மையப்
பார்த்தன் அங்குநான்

சீடனாக

முன்னை மிகப் பழமை
இரணியனாம்— எந்தை
மூர்க்கந் தவிர்க்கவந்த
நரசிங்கன் நீ

காதலியாக

பின்னையொர் புத்தனென நான்
வளர்ந்திட்டேன்-ஒளிப்
பெண்மை அசோதரை என்று
உன்னை எய்தினேன்-

இவ்வாறு ஏற்பட்ட உறவு என்றென் றும் நீடித்திருக்குமாம் என்று முடிக் கின்றார் பாரதியார்.

ஒளியும் விழியும், மதுவும் தும்பியும், வீணையும் விரலும், வடமும் வயிரமும், என வருகின்ற உவமைகள் எல்லாம் இவ்வுயிர் இறை உறவு பற்றிய குறியீடுகளேயன்றோ?

''வெண்ணிலவு நீ எனக்கு, மேவு
கடல் நானுனக்கு
பண்ணுசுதி நீ எனக்கு,
பாட்டினிமை நானுனக்கு''

என்று வரும்போது, எங்கும் நிறைந்த ஒருருவமாய்ச் சமைந்த இறைவனிடம் ஒட்டிக் கொள்ளும் உயிரது வேட்கை புலனாகிறது.

கடைசிப் பாடலுக்கு முதற் பாடல் 'கண்ணன் என் ஆண்டான்' என்பது. அதில் உலகியல் தழுவிய செய்திகளே உரைக்கப்படுகின்றன. அப்பாடல் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பெரிதும் நினைவூட்டுகிறது.

தஞ்சம் உலகினில் எங்கணும்
இன்றித்
தவித்துத் தடுமாறிப்
பஞ்சைப் பறையன் அடிமை
புகுந்தேன்
பாரமுனக் காண்டே
ஆண்டே! - பாரமுனக் காண்டே!
சேரி முழுவதும் பறையடித்தே
அருட்
கீர்த்திகள் பாடிடுவேன்!
பேரிகை கொட்டித் திசைகள் அதிர
நின்
பெயர் முழங்கிடுவேன் - ஆண்டே
பெயர் முழங்கிடுவேன்!

எவ்வளவு உயரஉயரப் பறந்தாலும் மண்ணுலக வாழ்வை மறத்தல் இயலாது. இந்துமதம் என்பது 'போகிற வழிக்குப் புண்ணியம் தருவது, மறுவுலக நல்வாழ்வு தருவது' என்று மட்டும் நம்புபவரை நேரிய வழிக்குத் திருப்புவது கண்ணன் பாட்டு. இவ்வுலக வாழ்வுக்கு வழிகாட்டுவது, உயிர் உடன் இருக்கும்போதே உயர்வாழ்வு தருவது என்ற உண்மையை அது பறைசாற்றுகிறது. வாழ்க்கையோடும் அன்றாட நடைமுறையோடும் பின்னிப் பிணையாத சமயமும் சாத்திரமும் நமக்கு எதற்கு?

தோட்டங்கள் கொத்திச் செடி
வளர்க்கச் சொல்லிச்
சோதனை போடாண்டே!
காட்டு மழைக்குறி தப்பிச்
சொன்னால் எனைக்
கட்டியடி யாண்டே!
ஆண்டே! — கட்டியடியாண்டே!
பெண்டு குழந்தைகள் கஞ்சி
குடித்துப்
பிழைத்திட வேண்டுமையே!
அண்டை அயலுக்கென்னால்
உபகாரங்கள்
ஆகிட வேண்டுமையே!
உபகாரங்கள்! — ஆகிட
வேண்டுமையே!!

இவ்வாறு மண்ணுலகோடு - அதில் உள்ள தும்பு தூசி, வம்பு, பசி, மாயம் சூது அனைத்தோடும் இணைந்தும் பிணைந்தும் செல்கின்ற கண்ணன் பாட்டு மிகச் சிறந்த பத்திமைப் பாட்டாகத் தோற்றுகிறது. ''காடு கழனிகள் காத்திடுவேன்; நின்றன் காலிகள் மேய்த்திடுவேன்; பாடுபடச் சொல்லிப் பார்த்ததன் பின்னர் என் பக்குவஞ்சொல் ஆண்டே! ஆண்டே! பக்குவஞ்சொல் ஆண்டே'' என்னும் போது, மண்ணுலக வாழ்விற் காலூன்றியபடியே, உயிர் பக்குவப்படும் சிறப்பும் தொனிக்கத் தொடங்குகிறது.

ஒன்பது வாயிற் குடிலிலைச் சுற்றி
ஒருசில பேய்கள் வந்தே
துன்பப் படுத்துது, மந்திரஞ்செய்து
தொலைத்திட வேண்டுமையே!
பகையாவுந் தொலைத்திட
வேண்டுமையே!

என்று மெய்ப்பொருள் நோக்கமும் ஆசை நீக்கமும் அறிவிக்கப்படுகின் றன. இறுதியாகவுள்ள 'கண்ணம்மா எனது குல தெய்வம்' என்ற பாட லில் 'சரணாகதித் தத்துவமாம்' இசைவும் இணைவும் ஓதப்படு கின்றன.

பழைய சாத்திரம், சமயம் ஆகிய மனப்பான்மைகளைப் பாரதியார் அவ்வாறே ஏற்கவில்லை. அவற்றில் மிக நல்ல இயல்புகள் உள்ளன என அவர் ஒப்புகிறார். அவற்றை மிகவுயர்த்தி உணர்கிறார்; பாராட்டு கிறார். ஆனால், அவற்றிலுள்ள அழுக்குகளை அவர் முற்றிலுமாகக் கண்டிக்கிறார்; களைந்தெறிய முயல் கின்றார். கண்ணன் பாட்டுச் சமய நோக்கில் புதுமை படைக்கிறது. அப் புதுமையைப் போற்றுமிடங்களும் பயனற்ற பழமையைக் கடியும் இடங் களும் கண்ணண் பாட்டில் பலவிடத் தும் காணப்படுகின்றன. அவற்றா லும் பாரதியாரின் மனநிலையை நாம் உணரலாம்.

கண்ணனாகிய தந்தை,

''துறந்த நடைகள் உடையான் -
உங்கள்
சூனியப் பொய்ச்சாத்திரங்கள்
கண்டு நகைப்பான்''

என்கிறான்.

''வேதங்கள் கோத்து வைத்தான் -
அந்த
வேதங்கள் மனிதர்தம்
மொழியிலில்லை
வேதங்கள் என்று புவியோர் -
சொல்லும்
வெறுங்கதைத் திறனில்அவ்
வேதமில்லை;
வேதங்கள் என்றவற்றுள்ளே -
அவன்
வேதத்திற் சிலசில கலந்ததுண்டு
வேதங்களன்றி ஒன்றில்லை-இந்த
மேதினி மாந்தர் சொலும்
வார்த்தைகள் எல்லாம்'' (தந்தை)

இவ்வாறு பாரதியார் இப் பாடல் களில் வெளிப்படுத்தும் புரட்சிச் சிந்தனைகள் பலவாகும்.

இடையிடையே மனவுறுதியோடு வாழும் வாழ்வுக்கான மணிமொழி களையும் மிடைந்து தருகிறது கண்ணன் பாட்டு:

''தாழவருந் துன்ப மதிலும் -
நெஞ்சம் தளர்ச்சி கொள்ளாதவர்க்குச்
செல்வ மளிப்பான்''

''துன்பத்தில் நொந்து வருவோர்-
தன்னைத்
தூவென்றிகழ்ந்துசொல்லிவன்பு
கனிவான்
அன்பினைக் கைக்கொள்
என்பான் - துன்பம்
என்புடைபட்ட பொழுதும்-
நெஞ்சில்
ஏக்கமுறப் பொறுப்பவர் தம்மை
உகப்பான்
இன்பத்தை எண்ணுபவர்க்கே-
என்றும்
இன்பமிகத் தருவதில்
இன்பமுடையான்''

இங்ஙனம் தந்தையாகி இன்பம் தரும் கண்ணனைக் கண்டு மகிழ்கிறோம். கண்ணன் பாட்டு இம்மையில் மாறாத இன்பம் தந்து, உயிரினுக்கு அமைதியும் குறைவற்ற பேரின்பமும் நல்கி வாழ்விக்கும் பத்திமைப் பாட்டு என்று துணிந்து கூறலாம். □

வெளிநாட்டார் கண்ணோக்கில் பாரதியார்

டாக்டர் கு. மோகனராசு, எம்ஏ; பிஎச்டி;
சென்னைப் பல்கலைக் கழகம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் எழுச்சி மிக்க பெரும் பாவலர் பாரதியார். இவர், எல்லார்க்கும் புரிகின்ற எளிய தமிழில் எண்ணக் குவியல்களை எழுத்து வடிவாக்கி இனிய தமிழ் மொழிக்கு ஏற்றம் நல்கியவர்; இலக்கிய உலகில் எழுச்சி மிக்க புதிய பாதையை வகுத்துத் தந்தவர்; இந்திய மக்களின் - உலக மக்களின் - துயர் கண்டு, துடித்தெழுந்து, புரட்சிப் படைப்புகளைப் புவி வாழ வழங்கியவர்; காலத்துக்கு ஏற்ற கருத்துகளை வழங்கியதொடு அமையாமல், காலம் கடந்து நிற்கும் கருத்துகளையும் வழங்கி அழியாப் புகழ் பெற்ற உலகப் பெருங்கவிஞர். அன்னாரின் படைப்புகளைத் தமிழகம் மட்டுமல்ல, உலகமே போற்றிப் புகழ்கின்றது. அப்புகழ்ச்சிகளுள் - மதிப்பீடுகளுள் - ஒரு சிலவற்றை எடுத்து விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியின் இலக்கியத் தொண்டு

ஏழு வயது முதற்கொண்டே பாக்கள் புனையும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார் பாரதி என்றும், தம்முடைய பதினொன்றாவது வயதிலேயே 'பாரதி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார் என்றும் அறிகிறோம்.[1] தொடக்க காலங்களில் - அதாவது, ஏறத்தாழ இருபத்திரண்டு வயது வரையில் - பாரதியார் எழுதிய பாக்கள் கிடைக்கவில்லை. 1904-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் அவர் எழுதிய பாடல்களே கிடைக்கின்றன. ஆகவே, ஏறத்தாழ, பதினான்கு ஆண்டுக்கால இலக்கியப் பணியை அறிய முடியவில்லை.

பாரதியார், அரசியல் களத்தில் நின்று கொண்டு நிகழ்த்திய 'இலக்கிய வேள்வி'யின் பயனாகக் கிடைத்த பாக்களே இன்று நாம் அறிபவை. அவற்றில் அரசியல் உணர்வும் அரசியல் அடிப்படையிலான சமூகப் பண்பாட்டு உணர்வும் இழையோடி நிற்கின்றன. காலத்தின் 'தேவை'களைக் கருப்பொருள்களாகக்கொண்டு, கவிபாடினார்; வெற்றி பெற்றார். கவிதையளவில் அவர் செய்த பணியை அயல் நாட்டு அறிஞர் பலரும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து, பாராட்டியுள்ளனர்.

"கவிதைகளில் தற்கால அரசியல் மற்றும் சமுதாய மெய்ம்மைகளை அறிமுகம் செய்து, இலக்கியத்துக்கும் சமுதாய-அரசியல் சிந்தனைகளுக்கும் சிக்கல்களுக்கும்

1. நாவலர் சோமசுந்தர பாரதியார், சுதேச கீதங்கள் - முதற்பாகம், பாரதி ஆச்ரம வெளியீடு, சென்னை, 1922; ப. 6.

இடையில் அதுவரை இருந்து வந்த தொடர்பு வகை இடைவெளியை - பாழ்குழியை - நீக்கியதால் பாரதியாரின் கவிதைகள் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன.''[2]

எனத் தெளிந்துரைக்கின்றார் முனைவர் கமில் சுவலபில் அவர்கள்.

காலத்துக்கேற்ற கருத்துகளைக் கருப் பொருள்களாகக் கொள்ளும் போதும், 'நிரந்தரமான சில உண்மைகளுக்கிணங்க வாழ்க்கைப் பொருளை விளக்கி வரைவிலக்கணம் சமைப்பது மகாகவியின் பொறுப்பாகிறது' என்றும், 'அந்த மகத்தான பொறுப்பைத் தமது உணர்ச்சி வேக மிக்க தனிப்பாக்களால் செய்து முடித்துள்ளார் பாரதியார்' என்றும் கூறி, பாரதியார் 'மகாகவி' என்பதற்கான காரணத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றார் முனைவர் க. கைலாசபதி அவர்கள்[3].

பாரதியாரை 'மகாகவி' என்று குறிப்பிடும் இந்த நேரத்தில், ஓர் உண்மையினையும் நாம் நினைவு கொள்ளுதல் வேண்டும். 'பாரதி மகாகவியா? இல்லையா?'' என்னும் சிக்கல், ஒரு கால கட்டத்தில் தமிழகத்திலேயே எழுந்தது என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். அதன் எதிரொலியை அயல் நாட்டு அறிஞர்களுள் ஒரு சிலரிடமும் காணுகின்றோம். 1973-இல் தாம் எழுதிய "The Smile of Murugan on Tamil Literature of South India'' என்னும் நூலில், பாரதியாரை 'மகாகவி' என ஏற்க மறுக்கும் அறிஞர் கமில் சுவலபில் அவர்கள்,[4] 1974-இல் தாம் எழுதிய 'A History of Indian Literature - Tamil Literature' என்னும் நூலில் பாரதியாரை 'மகாகவி' என ஏற்றுரைக்கும்[5] மாற்ற நிலையும் இங்கு நினையத் தக்க ஒன்றாகும். பாரதியார் பற்றி அயல் நாட்டார் கொண்ட கருத்து வளர்ச்சியினையும் ஓரளவு இஃது வெளிப் படுத்துகின்றது எனலாம்.

பாரதியார் உள்ளீட்டளவில் செய்த புரட்சியொடு இலக்கிய வடிவ அளவில் செய்த முயற்சிகளையும் அறிஞர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். மொழி மற்றும் இலக்கிய அளவில் தமிழுக்கிருந்த தளைகளை நீக்கி, அதன் ஆக்கத்திற்கான புதுவழியை வகுத்துத் தந்ததில் பாரதியார் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதாகக் குறிப்பிடுகின்றார் அறிஞர் ஹெல்கா ஆண்டன் அவர்கள்.[6] இவருடைய கருத்துடன் ஒத்த கருத்துடைய முனைவர் கமில் சுவலபில் அவர்கள், புராண பிரபந்தத் தளைகளிலிருந்தும் தற்கால நடைமுறை உண்மைகளை வெளியிடுவதற்குத் தடையாக அமைந்த இடைக்கால இலக்கிய வகைகளிலிருந்தும் தமிழ் இலக்கியத்தைப் பாரதியார் விடுவித்ததாகக்

2. Kamil Veith Zvelebil, A History of Indian Literature - Tamil Literature, Otto Harrassowitz, Wiesbaden, 1974, p. 62
3. க. கைலாசபதி, இரு மகாகவிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, நான்காம் பதிப்பு, 1974, ப, 85
4. Kamil Zvelebil, The Smile of Mnrugan on Tamil Literature of South India. Leiden, E. J. Brill, 1973, pp. 286 & 337.
5. Kamil Veith Zevelebil, A History of Indian Literature - Tamil Literature, p. 61
6. Helgo Anton, 'Subramania Bharati's Ideas on the development of Tamil Literature', Proceedings of the first International Conference Seminar of Tamil Studies, Vol.2, International Association of Tamil Research, 1969, p. 238.

கூறி, மகாகவிக்கு ஏற்றம் நல்கு கிறார்.[7]

பாரதியின் வசன கவிதைகள் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு சோதனை முயற்சியாகும். இம் முயற்சியையும் அறிஞர் உலகம் பாராட்டி உள்ளது. 1910 - 1920 – ஆம் ஆண்டுகளிலேயே தமிழ்க் கவிதை உலகில் புதிய உத்திகளை உருவாக்கிப் புதிய வழிகளை வகுத்துத் தந்து, இன்றைய 'புதுக் கவிஞர்'களுக்கு வழி காட்டிய தெளிவான முன்னோடிகளுள் ஒருவராக மகாகவி விளங்குவதாகக் கூறுகிறார் அறிஞர் கமில் சுவலபில் அவர்கள்.[8]

பாரதியாரின் இலக்கியத் தொண்டுகளில், கவிதைப் பணியைப் போலவே குறிப்பிடத்தக்க சிறப் பிடத்தைப் பெறுவது அவரது உரை நடைப் பணியாகும்.

> ''பாரதியின் கவிதைகளையே புகழ்ந்த புகழ்ச்சி, அவர் உரை நடைக்கு ஆற்றியுள்ள தொண்டை மறக்குமாறு செய்து விட்டது''[9]

என்பார் அறிஞர் ஆஷர் அவர்கள். இவர் கூற்று, பெரிதும் உண்மையே. இன்றும் கூட, பாரதி என்றாலே பலருக்கு அவருடைய கவிதைகளே முன் நிற்கின்றன. ஆனால், பாரதி பற்றிய எந்த ஆய்வும் அவருடைய உரைநடைகளையும் உள்ளடக்காமல் முழுமை அடையாது என்பதை இன்றைய ஆய்வுலகம் நன்கு அறிந்துள்ளது. அறிஞர் க. கைலாசபதி அவர்கள்,

> ''பாரதியாரது இலக்கிய ஆவேசத்தையும் ஆத்ம பக்குவத்தையும் அவரது கவிதைகளே திறம்படக் காட்டுவனவாயினும் பாரதியாரது எண்ணக் குவியல்கள், சிந்தனைத் துளிகள், உணர்ச்சிப் பொறிகள், ஆசாபாசங்கள் — முரண்பாடுகள் முதலியவற்றை அவரது வசனப் படைப்புக்களே தெளிவாகக் காட்டுகின்றன; காட்ட முடியும்''.[10]

எனத் தெளிந்துரைக்கின்றார். மேலும், பாரதியாரின் உரைநடை பல்வேறு வகைப்பட்டதாகவும் முன்மைத் தன்மைத்தாகவும் விளங்கு வதாகப் பாராட்டுகின்றார் அறிஞர் ஆஷர் அவர்கள்.[11]

பாரதியின் மொழிநடை

தம்முடைய படைப்புகள் ஒவ்வொன்றின் வழியாகவும் எல்லாத் துறையிலும், சாதாரண மக்களையும் தட்டி எழுப்ப வேண்டும் — அவர்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணத் துடனேயே பாரதியார் தம் படைப்புகளைப் படைத்தார். அந்த எண்ணமே, அவர்தம் நடையில் எளிமைக்கு வழிவகுத்தது எனக் கொள்ளலாம்.

> ''நெடுங் காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவியவை. காலம் மாற மாற பாஷை மாறிக் கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள்

7. Kamil Zvelebil, The Smile of Murgan on Tamil Literature of South India, p .278.
8. Ibid., pp. 313-314.
9. R. E. Asher, 'Some Land Marks in the History of Tamil Prose', Annals of Oriental Research, Vol. XXIV, 1973, p. 31.
10. க. கைலாசபதி, மு. நூ., ப. 19.
11. R. E. Asher, op. cit., p. 32.

உண்டாகின்றன. புலவர் அந்தந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை''[12]

என்று, பாரதியாரே கவிதை நடை எப்படி அமைய வேண்டும் என வரையறுக்கக் காணுகின்றோம். பாரதியார் படைப்புகளைக் காணும் போது, அவர் பண்டிதர் நடைக்கும் பாமரரின் பேச்சு நடைக்கும் இடைப்பட்ட ஓர் எளிய மொழி நடையைப் பின்பற்றினார் எனக் கொள்ள இடம் உளது; சாதாரண மக்களிடையே வழங்கும் சொல்லாட்சிகள், மரபுத் தொடர்கள், தொடர் அமைப்புகள் ஆகியவற்றையும் பாரதியார் போற்றிப் பயன்படுத்தி உள்ளார். இவ்வுண்மையை முனைவர் கமில் சுவலபில் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.[13] மேலும் அவர்,

''பாரதி சிந்தனை வாதம் பேசும் கவிஞர்; தனது தனித்தன்மையப் பெரிதாகக் கருதியவர். இருப்பினும், மக்கள் புரிந்து கொள்ளும் மொழி நடையில் அவர் மக்களிடம் பேசினார்''[14]

என்று, பாரதியின் மொழி நடையை வியந்தும் கூறுகின்றார். அறிஞர் ஹெல்காஆண்டன் அவர்களும் பாரதியின் தெளிவான எளிமையான மொழி நடையைப் பாராட்டி, தமிழ் உரைநடை உருவாக்கத்தில் பாரதியார் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றியுள்ளார் என எடுத்தியம்புகின்றார்.[15]

ஞானரதம் போலும் படைப்புகளில் பாரதியாருடைய நடை, கவிதைக்கும் உரைநடைக்கும் இடையில் தங்குதடையற்றுச் செல்வதாக மதிப்பீடு செய்கின்றார் அறிஞர் ஆஷர் அவர்கள்.[16]

பாரதியும் இயற்கையும்

கவிஞர்கள், இயற்கையின் குழந்தைகள்; இயற்கையொடு ஒட்டி உறவாடுபவர்கள்; இயற்கையின் நுட்பங்களை வண்ண வண்ணக் கோலங்களில் - வகை வகையான கோணங்களில் கண்டு கண்டு மகிழ்ந்து, தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என எண்ணி, அவற்றைப் பாக்களில் வடித்து உலகுக்கு வழங்குபவர்கள். பாரதியாரும் இதற்கு விதிவிலக்கானவர் அன்று.

அரசியல் எழுச்சிக்குரிய சிந்தனைகளுடனும், சமுதாய மறுமலர்ச்சிக்குரிய சிந்தனைகளுடனும் போராடிக் கொண்டிருந்த பாரதியார், அவ்வப்போது இயற்கையின் அரவணைப்பிற்குள்ளும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பாண்டிச்சேரி அதற்குத் தக்க களமாகவும் அமைந்தது.

பாரதிக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு நிலையை அறிஞர் பலர் ஆய்ந்துள்ளனர். அவர்களுள் அறிஞர் மகேஸ்வரி மகாதேவா அவர்கள்,

12. பாரதியார், பாரதி நூல்கள் - கட்டுரைகள், பாரதி பிரசுராலயம், ஐந்தாம் பதிப்பு 1950, ப. 61.
13. Kamil Zvelebil, The Smile of Murugan on Tamil Literature of South India, p. 278
14. டாக்டர் கமில் சுவலபில், 'பாரதியும் வசனமும்', தமிழகம் தந்த மகாகவி, சீனி விசுவநாதன் (தொகு.), ஸ்ரீ புவனேசுவரி பதிப்பகம், சென்னை, 1978, ப. 323.
15. Helga Anton, op. cit., p. 245.
16. R. E. Asher, op. cit., p. 33.

"பாரதியார் தம்முடைய கருத்துப் படிவங்களைப் பெரும்பான்மையும் இயற்கையை ஆழ்ந்து நோக்கும் நோக்கிலிருந்தே பெற்றார். இயற்கை, உயிர்வாழ்க்கை, அவற்றின் செயல்முறை ஆகியவற்றில் பேரன்பு பூண்ட பாரதியாருக்கு அவை தாமாகவே வந்து வாய்த்தன"[17]

என வரையறுத்துரைக்கின்றார். உற்று நோக்கி உய்த்து உணர்ந்த 'அழகின்' தூய்மையான - உண்மையான வெளிப்பாட்டைப் பாரதியின் கவிதைகளில் காண முடியுமென அறிஞர் ஜேம்ஸ். எச். கஸின்ஸ் (James H. Cousins) அவர்கள் கூறுகின்றார்.[18]

இயற்கையை அணுகியதில், பண்டைக்காலப் புலவர் பெருமக்களுக்கும் பாரதிக்கும் ஒரு சிறு வேறுபாடு உண்டு. வேறுபாடு சிறியதாயினும் குறிப்பிடத்தக்க ஒன்றே. பண்டைப் புலவர் பெருமக்கள் இயற்கையின் அமைதி நிலையை, அழகை, வியந்து பெரிதும் போற்றி நின்றனர். ஆனால், பாரதியோ இயற்கையின் கட்டுப்பாடற்ற, கொந்தளிப்பான, சீற்றம் மிக்க கூறுகளையே பெரிதும் கவிதைகளில் வடித்துள்ளார். இவ்வேறுபாட்டைத் தெளிவாக ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றார் அறிஞர் மகேஸ்வரி மகாதேவா அவர்கள்.[19] இவ்வேறுபாட்டுக்குக் காரணம் பாரதியார் வாழ்ந்த அரசியல்- சமூகச் சூழல்களே எனலாம்.

பாரதியின் இந்தியக் கண்ணோக்கு

பாரதியார் காசியில் தங்கி இருந்த காலத்தில், வங்கத்தில் வீறுபெற்றிருந்த விடுதலை உணர்ச்சி, அவர் உள்ளத்தையும் பற்றிக் கொண்டது; இந்தியா, இந்திய ஒற்றுமை, இந்திய விடுதலை என்னும் எண்ணங்கள் உள்ளத்தில் வேர் கொண்டன. 1905 - ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் அவர் தீவிரமாக இறங்கினார். அதுமுதல் அவர் உள்ளத்தில், 'ஒன்றுபட்ட இந்தியா' என்னும் எண்ணமே முதன்மையிடம் பெற்றிருந்தது. அதனை அவருடைய எழுத்துக்களில் தெளிவாக அறிய முடிகின்றது. 13-2-1906-ஆம் நாளன்று, பாரதியார் பின்வருமாறு ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டிருந்தார்.

"எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப் பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின், பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். ...தற்காலத்தே தமிழ்ப் புலமையில்சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப்

17. M. Mahadeva, 'Nature in Bharati's Poetry', Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies, Vol. 2, International Association of Tamil Research, Madras, 1971, p. 87.
18. James H. Cousins, மேற்கோள், மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை, சீனி. விசுவநாதன் (தொகு.), வானவில் பிரசுரம், சென்னை, 1981, ப. 28.
19. M. Mahadeva, op. cit., p. 79.

பாக்கள் புனைந்தனுப்புவராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக் கொள்ளப்படும்''[20]

இந்த விண்ணப்பம், பாரதியார் எந்த அளவிற்கு இந்திய நாட்டின் மேல் தீவிரப் பற்றுடையவராக விளங்கினார் என்பதனை அறிவதற்குரிய சான்றாகும். அவர் விண்ணப்பத்திற்குத் தமிழகம் செவி சாய்க்கவில்லை போலும்! அதனால், பாரதியார் தாமே எழுதிய தேசியப் பாடல்களைத் தொகுத்து 1908-ஆம் ஆண்டில் 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் நூலையும், 1909-ஆம் ஆண்டில் 'ஜன்ம பூமி' என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். பாரதியார் இந்தியநாட்டுப்பற்றை ஒரு 'நவீன மார்க்கம்' என்றே கொண்டார்; அதில் தம்மை இணைத்துக் கொண்டார்; அதிலே இறைமையைக் கண்டார். பாரதியாரின் இந்திய உணர்வை எடுத்துரைக்கையில்,

''பாரதியார் தேசபக்தியையே தெய்வ பக்தியாக மாற்றிக் கொண்டார்; வெறும் தேசபக்தியாக ஓர் உணர்ச்சி இருந்தால் அது வேகமும் ஆழமும் பெற்றிருக்காது. சமய மரபை அனுஷ்டித்தும் பாரத நாட்டைத் தாயாகவும் நாட்டுப் பற்றைத் தாயன்பாகவும் தேசப் பற்றைப் பக்தி வைராக்கியமாகவும் கொண்டார் பாரதி''[21]

என்றும், பாரதியார்,

'' இந்திய விடுதலை, இந்திய மனிதனின் விடுதலை என்னும் அடிப்படைத் தேவையிலிருந்தே சகல பிரச்சினைகளையும் நோக்கினார்; அணுகினார்''[22]

என்றும், தெளிவாக ஆய்ந்துரைக்கின்றார் முனைவர் க. கைலாசபதி அவர்கள்.

விடுதலை வேட்கையால் உந்தப்பட்டு, பாக்கள் பாடிய இந்தியக் கவிஞர்களின் பாடல்களை ஒப்பிட்டு நோக்கிய அறிஞர் இ.டி. செலிஷெவ் (E. D. Chelishev) அவர்கள், மேற்குறிப்பிட்ட கவிஞர்களுள் பலரும் தம் நிலப்பகுதி - தம் இனம் - தம் சமயம் என்னும் குறுகிய எல்லைக்குள்ளே நின்று தம் விடுதலை வேட்கையை வெளிப்படுத்திக் கொண்ட வேளையில், எவ்வித வேறுபாடும் கருதாமல் 'இந்தியா' என்னும் ஒரே நோக்கில் கவிதை பாடித் தம் வேட்கையை வெளிப்படுத்தியவர் பாரதியார் எனப் புகழ் மாலை சூட்டி மகிழ்கின்றார்.[23] மேலும் அவர்,

''பாரதியாரின் நாட்டுப் பற்றுத் தன்னுணர்ச்சிப் பாடல்களை, அதே போக்குடைய, இந்தியப் பிறமொழிகளில் எழுதப்பட்ட சிறந்த பாடல்களுடன் ஒப்பிட்டு நோக்கின், இந்திய விடுதலைப் போராட்டம் என்னும் கருத்தால் உந்தப்பட்ட இந்தியக் கவிஞர்களுள் தமிழ் நாட்டுப் பெருங் கவிஞரே-பாரதியாரே - முதன்மை இடத்தைப் பெறக்கூடியவர் என்ற முடிவுக்கு வர முடியும்''[24]

என உறுதி செய்கின்றார்.

பாரதியின் உலகக் கண்ணோக்கு

உலகக் கண்ணோக்குடைய பல்வேறு இலக்கியங்களைத் தமிழ்

20. பாரதியார், மு. நூ. ப.
21. க. கைலாசபதி, மு. நூ., ப. 30.
22. ———————, ப. 47
23. E. D. Chelishev, 'The Poetry of Subramanya Bharati, A Manifistation of new Tendencies in the development of Indian Literature', Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies, Vol. 2, op. cit., p. 90.
24. Ibid., p. 95.

போலும் பல்வேறு மொழிகளில் பெற்றுத் திகழ்வது இந்திய நாடு. ஆகவே, இம்மண்ணில் தோன்றும் உண்மையான கவிஞர் எவருக்கும் உலகம் என்னும் பரந்து விரிந்த பார்வை எழுவது இயல்பு. திருக்குறள் முதலாய பல்வேறு அற நூல்களிலும் தோய்ந்த நெஞ்சம் பாரதி நெஞ்சம்; ஆகவே, உலகம் என்னும் உணர்வு அவர் உள்ளத்தில் தேங்கி இருந்ததில் வியப்பில்லை. இக் கருத்தின் அடிப்படையில், மலேசிய அன்பர் ஜைனுதீன் அவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்:

''திருமூலரின் திருவாக்கையும், கணியன் பூங்குன்றனாரின் கவின் மொழியையும், வள்ளுவரின் வாயுரையையும் திருநபியின் திரு வசனத்தையும் தாரணிக்கு நினைவுபடுத்தும் பாரதி, வேற்றுமையிலே ஒற்றுமை காண விழைகின்றார். எனவே, அவர் அவனியைப் பொதுக் கண் கொண்டு நோக்கும் நிலை பூக்கிறது. இந்த எண்ணப்பூ ''ஒரே உலகத்தை'' உருவாக்கும் ஒற்றுமை மணம் வீசும் உயரிய கவிதைகளை உருவாக்குகின்றது''.[25]

மேலும், பாரதியார் வாழ்ந்த காலம் ஆசிய எழுச்சியையும் உலக ஒற்றுமையையும் காண விழைந்த ஒக்காகுறா ககுஜோ, டாக்டர் சன் யாட் சென், இரவீந்திரநாத தாகூர், ஆனந்த குமாரசாமி முதலிய பெருமக்கள் வாழ்ந்த காலம்; உலக மனிதனின் நலம் என்ற பரந்த இலக்கை நோக்கி உலகம் நடையிட்ட காலம்; ஆகவே, காலச் சூழலும் பாரதியின் உலகக் கண்ணோட்டத்திற்கு அடிப்படையாக இருந்திருக்கலாம். அன்றியும் அன்னை நிவேதிதா தேவி அவர்களின் தொடர்பும் பல ஞானியர்களின் தொடர்பும் பாரதியாரின் உலகளாவிய நோக்கிற்குத் துணை நின்றிருக்கலாம்; மேலும், பாரதியார் அவர்கள் செய்தித்தாள்கள் சிலவற்றில் ஆசிரியராக இருந்தது, உலகச் செய்திகளை அறிந்து கொள்ளவும் உலகக் கண்ணோட்டம் விரிவு பெறவும் காரணமாக இருந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. இதழாசிரியராக இருந்தபோது ஆப்பிரிக்கா, உருசியா, சப்பான், சீனா, துருக்கி முதலிய நாடுகளில் நடைபெறும் செய்திகளைத் தெளிவாக அறிந்து, மதிப்பிட்டுள்ளார் என்பதும் இங்கு நினைவு கொள்ளத் தக்க ஒன்றாகும்.

உலகம் என்னும் நோக்கு, பாரதியார் உள்ளத்தில் பல்வேறு சூழல்களால் வேரூன்றி நிலைத்திருப்பினும், அதனை விஞ்சும் அளவில் இந்தியா, இந்திய ஒருமைப்பாடு, இந்திய விடுதலை என்னும் உணர்வுகளே மேலோங்கி இருந்தன; அவற்றிற்கு உடனடியான தேவையும் ஏற்பட்டது. ஆகவே, அவருடைய உலக நோக்கு பெரும்பான்மையும் 'இந்தியா' என்னும் உணர்வை விட்டுப் பெரிதும் விலகாமலேயே அமைந்திருந்தது எனலாம்.

''நமக்கு ஸ்வராஜ்யம் இன்றியமையாதது. இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும் வழி''

என்று, பாரதியாரே கூறுவது கருதத்தக்கதாகும். முனைவர் க. கைலாசபதி அவர்கள்,

''பாரதியாரோ தன்னை உருவாக்கிய சூழல் பெரும்பாலும் உயர்ந்தது எனக் கொண்டு, அதற்கு

25. பட்டர் வொர்த் ஜைனுதீன், செந்தமிழ்த் தேனீ, தமிழ்மணிப் புத்தகப் பண்ணை, சென்னை 1981; ப. 20

அநுசரணையாக உலகத்தைத் தழுவ முற்பட்டார்''[26]

எனத் தெளிவுப்படுத்தியிருப்பதும் இங்கு ஊன்றி உணரத்தக்கதாகும்.

பாரதியாரின் உலகக் கண்ணோக்கினை வெளிப்படுத்தும் கவிதைகளுள் ஒன்று 'புதிய ருஷியா' என்னும் கவிதையாகும். இக்கவிதையின் வழி வெளிப்படும் பாரதியின் உணர்வை உணர்ந்து மதிப்பிடும் அறிஞர் இ. டி. செலிஷேவ் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார் :

'''புதிய ருஷியா' என்னும் அரிய கவிதையைப் படைத்ததன் வழி, பன்மொழி இலக்கியங்களை உள்ளடக்கிய இந்தியாவில், உருசியப் புரட்சிக்கு மதிப்பளித்த கவிஞர்களுள் முதல் கவிஞராகப் பாரதியார் விளங்குகின்றார்'',[27]

இம் மதிப்பீடு, உருசியா மண்ணில் தோன்றிய ஓர் அறிஞரின் வாயிலாகவே கிடைக்கின்றது என்பதும் இங்கு நினைவு கொள்ளத் தக்கதாகும்.

முடிவுரை

இதுவரை, பிறநாட்டு அறிஞர்கள், தமிழ் மண்ணில் தோன்றிய மாபெரும் கவிஞர் பாரதியாரை எவ்வெவ்வாறு நோக்கி உள்ளார்கள் என ஓரளவு கண்டோம். எனினும், உலக அரங்கில் பாரதியாரின் புகழ் பரவ வேண்டிய அளவுக்குப் பரவவில்லை என்பதும், பாரதியாரை ஆராய வேண்டிய அளவிற்குப் பரந்த அளவில் பிற நாட்டு அறிஞர்கள் ஆராயவில்லை என்பதும் இக் கட்டுரையாளானின் கருத்தாகும். பாரதியின் நூற்றாண்டு அளவில் நடைபெறும் சிறப்புகள் - சிறப்பு நிகழ்ச்சிகள் - பாரதியை உலக அரங்கில் இன்னும் புகழ் பெறச் செய்வதாக அமைதல் வேண்டும். □

26. க. கைலாசபதி, மு. நூ. ப. 34.

27. E. D. Chelishev, op. cit., p. 95.

இந்தியா என்ற வார இதழை பாரதி 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதத்தில் சென்னையில் தொடங்கினார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் அதனுடைய இலட்சியம். தனி இதழ் விலை அணா ஒன்று. பாரதி அதற்கு ஆண்டுச் சந்தா நிர்ணயித்த வழியே தனிப்பட்டது. அது பின் வருமாறு.

நமது பத்திரிகையின் சந்தா விவரம்

	ரூ.	அ.	பை.
எல்லா கவர்மெண்டாருக்கும்	50	0	0
ஜமீன்தார்கள், ராஜாக்கள், முதலியவர்களுக்கு	30	0	0
மாதம் ரூ. 200க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு	15	0	0
மற்றவர்களுக்கு	3	0	0

ஆதாரம்: 'பாரதியைப் பற்றி' என்ற நூல்
ஜீவா

நாட்டுப் பற்றின் கனலாகத் திகழ்ந்த பாரதி மொழிப்பற்றின் சிகரமாகவும் விளங்கினார்.

பண்டிதர் தமிழை பாமரர் தமிழாக எளிமைப் படுத்திய பெருமை மட்டுமன்று, தமிழெனும் துந்துபி கொண்டே தமிழினத்தைத் தட்டியெழுப்பி தலைநிமிரச் செய்த பெருமையும் பாரதிக்கு உண்டு.

கடந்த காலத்தை எண்ணிப் பார்த்து, நிகழ்காலத்தை உணர்ந்து, வருங்காலத்திற்கான வளமான சிந்தனைகளை கவிதை வரிகளாக வாரி வழங்கிச் சென்றவர் பாரதி. அவரது சிந்தனை வேகமும் செயல் வேண்டுமெனக் கனவு கண்டார். குறிப்பாக வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இடையறாது இழையோடி நிற்கும் அறிவியல் துறையில் எண்ணற்ற சாதனைகளை இயற்ற வேண்டும் என்பது அவரது இலட்சிய நோக்கு.

''வானையளப் போம்கடல் மீனை
யளப் போம்
சந்திரமண் டலத்தியல் கண்டு
தெளிவோம்''

என எதிர் கால அறிவியல் சாதனைகள் பற்றிய ஆசைக் கனவுகளைத் தம் பாடல்களில் ஆங்காங்கே பெய்து செல்கிறார்.

பாரதியும் அறிவியலும்

திரு. மணவை. முஸ்தபா

துடிப்பும் காலத்தையும் விஞ்சியதாகும். காலத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை அளவிடற்கரியது. அடிமை நாட்டில் தான் வாழ்ந்த போதிலும், நாடு விடுதலை பெற்று விட்டதாகவே எண்ணி 'ஆனந்தப்பள்ளு'ப்பாடி மகிழ்ந்தவர்.

விடுதலை பெற்ற இந்திய நாடு மின்னல் வேகத்தில் எப்படியெல்லாம் முன்னேற வேண்டும் என இன்பக் கனவு கண்டு, அவற்றை முத்திரைக் கவிதைகளாக வழங்கிச் சென்றவர் பாரதி.

விடுதலை பெற்ற பாரதம் எல்லா வகையிலும் உலகுக்கு ஓர் உன்னதமுன் மாதிரியாகத் திகழ

அறிவியல் உணர்வு மக்களிடையே பொங்கியெழ தமிழ் அறிவியல் மொழியாக ஆக்கம் பெற வேண்டும் எனத் துடித்தார். தமிழின் ஆற்றலில் அளவுக்கதிகமான நம்பிக்கை கொண்டிருந்தவர் பாரதி.

இதற்கு அடிப்படையாகத் தமிழன் எல்லாக் கலைகளையும் தமிழிலே கற்க வேண்டும். அதன் மூலம் தமிழை வளர்க்க வேண்டும் - வளப் படுத்த வேண்டும் என விரும்பினார். இதற்கு மாறாக, தாய் மொழியைப் புறக்கணித்து வேற்று மொழிகளை மட்டுமே படிப்பதைப் பெருமையாகக் கருதுவோரை வெறுத்தார்.

அவர்களைத் தேசிய உணர்வற்ற போலிகளாகக் கருதினார். அத் தகையவர்களை,

'' வேறு வேறு பாஷைகள் - கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய்
போ போ போ''

எனச் சுடு சொல்லால் விரட்டியடிக் கிறார்.

எங்கும் எதிலும் தன் தாய்மொழி யாம் தமிழே அரசோச்ச வேண்டும் என்பது அவனது பெருங் கனவு.

கருத்தை உணர்த்தும் வெறுங் கருவியாக மட்டுமன்றி நாட்டின் நல் இதயமாகவும் தமிழைக் கண்டவர் பாரதி.

தன் தாய் மொழியாம் தமிழ் மீது அவர் கொண்டிருந்த பற்றும் பாச மும் கொஞ்ச நஞ்சமன்று, சமஸ் கிருதம், ஆங்கிலம், தெலுங்கு முத லாகப் பன்மொழிப் புலமை பெற் றிருந்த பாரதி தமிழின் தனித் தன்மையையும் எழிலையும்,

'' யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்''

என இன்பக் கூத்தாடினார்.

இக்கால மொழிப் பற்றாளர்கள் போன்று, ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியிற் பிறந்த தமிழின் பெருமையைப் பார்! கேளீர்!!'' என வெறுமனே வாய்ப் பறை அடித்து அடங்கி விடுபவரல்லர் பாரதி. நான்கு பேர் நடுவில் தமிழ் வாழ்க! என மொழிந்து விட்டாலே போதும்! தமிழ்ப் பற்றை வெளிப் படுத்தி விட்டோம்; தமிழுக்கு ஆற்ற வேண்டிய கடமையையும் செய்து விட்டோம், எனத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு உலகையும் ஏமாற்றும் இக்கால விந்தைத் தமிழரி லும் வேறுபட்டவராக விளங்குபவர் பாரதி.

கால வேகத்திற்கேற்ப எல்லா வகையிலும் ஈடு கொடுக்கவியலாமல், வளர்ச்சி குன்றி தமிழ் எங்கே பின் தங்கி விடுமோ என எண்ணித் துடித் தவர் பாரதி.

அனைத்துத் துறைகளிலும் அழுத்தமாகக் காலூன்றி வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியின் விளை வாக மேற்குலக மொழிகளெல்லாம் மின்னல் வேகத்தில் விரைந்து வளர்ச்சி பெற்று வருவதைக் கண் ணுற்ற பாரதி, இளைய மொழி களெல்லாம் அறிவியல் மொழிகளாக வலுவாக வளரும் போது, இனிய தமிழ் மொழி இப் போட்டியில் ஈடு கொடுக்க இயலாது, எங்கே இளைத்து விடுமோ என எண்ணி மறு கினார். தமிழர் தம் உணர்வுகளைச் சுண்டி, அறிவியல் போக்கில் தமிழை வளர்க்க - வலுப்படுத்தத் தூண்டி னார். உலக மொழிகளுக்கு இணை யாகத் தமிழைச் செழிக்கச் செய்ய— அறிவியல் மொழியாகத் தமிழை உலகம் ஏற்றிப் போற்றக் கனவு கண்டார்.

'' நாமமது தமிழரெனக்கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்
வீர்! தேமதுரத் தமிழோசை உலக
மெலாம் பரவும் வகை செய்தல்
வேண்டும்.''

எனத் தமிழர்க்கு அன்புக் கட்டளை யிடுகிறார்.

தமிழின் அளப்பரிய ஆற்றலை அறிந்திருந்த பாரதி வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தமிழே அச்சாணியாக அமைய வேண்டு மென அறிவுறுத்தினார். தமிழர் தம்

வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தமிழே இடம் பெற வேண்டும் என விழைந்தார். மின்னல் வேகத்தில் முன்னேறி வரும் அறிவியல் உலகோடு இணைந்து முன்னேற இதைத் தவிர வேறு வழியில்லை என்பது அவரது கணிப்பு.

''சேமமுற வேண்டுமெனில் தெரு
வெல்லாம்தமிழ் முழக்கம் செழிக்கச்
செய்வீர்!''

என்பது அவரது அன்புக்கட்டளை.

காலப் போக்கில் பின்தங்கி விட்ட தமிழும் - தமிழரும் விரைவு நடை போட - அறிவியல் முன்னேற்றத்தோடு இணைந்து கொள்ள எளிய வழி மொழி பெயர்ப்பே என்பது பாரதியின் திடமான நம்பிக்கை. மேலை நாடுகளில் எழுந்த புதுமைச் சாத்திரங்கள் எதுவாயினும் அவற்றை அழகு தமிழில் பெயர்த்து விட வேண்டும் என அவாவினான். இதன் மூலம் மக்கள் அறிவியல் உணர்வு பெறவும் வளர்ச்சிப் பாதையில் துரித நடை போடவும்

oooooooooooooooooooooooooooooo

தொழிலை வளர்க்க

இரும்புத் தொழில் உலகத்திலே வலிமையும் செல்வமும் கொடுப்பது. எல்லா விதமான கைத்தொழில்களும் தற்காலத்தில் இரும்பு யந்திரங்களாலே செய்யப்படுகின்றன. ஆதலால் நமது தேசத்துக் கொல்லருக்கு நாம் பல விதங்களிலே அறிவுறுத்தியும் ஜீவன சௌகரியங்களும் ஏற்பாடு செய்து கொடுத்து இடத்துக்கிடம் இயன்ற வரை இரும்புத் தொழில்களை வளர்க்க வேண்டும்.

பாரதியார்-சமூகம்

oooooooooooooooooooooooooooooo

பெருவாய்ப்பாக அமையும் என எண்ணினார். எனவேதான்,

''பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்
கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல்
வேண்டும்''

என ஆணையிட்டார்.

மொழி பெயர்ப்பால் மட்டுமே ஒரு மொழி அறிவியல் மொழியாக வளர்ச்சி பெற்றுவிட முடியாது. அறிவியல் சிந்தனைகளை நுணுக்க எடுத்துரைக்கும் மூல மொழியாகவும் அது வளர்ச்சி பெறுதல் வேண்டும். இதற்கு எல்லா வகையிலும் ஏற்ற மொழி தமிழ் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடையே அழுத்தமாக நிலை பெற வேண்டும்.

அடிமை உணர்விலும் பழமைச் சேற்றிலும் ஆங்கில மோகத்திலும் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைத் திசை திருப்பிச் சரியான பாதைக்குக் கொண்டு வருவது அவ்வளவு எளிதானதல்ல என்பதை நன்குணர்ந்த பாரதி, தமிழனின் பிற்போக்குத் தனத்தை மற்றவர்கள் எள்ளி நகையாடுவதாகவும், தமிழ் மொழியின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதோடு, அறிவியலின் துரித வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க இயலாத நிலையில் தமிழ் மொழி பின் தங்கிய நிலையில் உழன்று எங்கே தாழ்ந்து விடுமோ என அஞ்சித் துடித்தான்.

''புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள்
கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில்
இல்லை,
சொல்லவும் கூடுவதில்லை -
அவை

சொல்லும் திறமை தமிழ்
மொழிக்கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை
யோங்கும்''
என்றந்தப் பேதை உரைத்தான்
- ஆ!
இந்த வசை எனக்
கெய்திட லாமோ?''

எனத் தமிழ் மக்களை நோக்கித் தமிழ்த் தாய் வருந்துவது போல் பாடினார். இப்பாடலின் ஒவ்வொரு சொல்லிலும் தன் ஆக்கத்தை - ஆசைக் கனவுகளை உணர்ச்சிக் கவிதைகளாக உள்ளத்தைத் தொடும் வண்ணம் வடித்துள்ளார். இனியாவது தமிழர்கள் விழித்துக் கொண்டு அறிவியல் மொழியாகத் தமிழை வளர்க்க முற்படாவிட்டால் தமிழ் வளர்ச்சி என்பது தேய்பிறையாகப் போய்விடும் என்பது அவரது அச்சம். இத்தேக்க நிலை உடனடியாக மாற,

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் -
கலைச்
செல்வங்கள் யாவுங்
கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!''

என ஆணையிடுகின்றார். அறிவியற் கலை முதலாக உலகெங்கும் வளர்ந்து வரும் அனைத்துக் கலைகளும் தமிழிலே கொழிக்க வேண்டும் என்ற கனவை உணர்ச்சி பொங்க வெளிப்படுத்தினார்.

பாரதியின் ஏக்கமும் அச்சமும் இன்னும் முழுமையாகப் போக்கப்படவில்லை. ''சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை'' என்ற சொத்தை வாதம் இன்னும் முழுமையாகச் செத்து மடிந்து விடவில்லை. தமிழறிவு குறைந்தோரும், ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டோரும் அளவிடற்கரிய தமிழின் பேராற்றலை இன்னும் முழுக்க அறியாதவர்களாகவே உள்ளனர். அறிவியலின் எத்துறைச் செய்தியாயினும் அதனை எளிமையாகவும் இனிமையாகவும், சொற்செட்டோடும் பொருட் செறிவோடும் தமிழால் எடுத்தியம்ப முடியும் என்ற நம்பிக்கை செயல் வடிவில் இன்னும் இவர்தம் உள்ளங்களில் அழுத்தமாகக் காலூன்றா நிலையே நீடித்து வருகிறது.

உலக மொழிகளிலே மிக அதிகமான வேர்ச் சொற்களையும் புதிய புதிய சொல்லாக்கங்களையும் உருவாக்குவதற்கேற்ற நெகிழ்வுத் தன்மையையும் தன்னியல்பாகக் கொண்ட மொழி தமிழ் என்பது பல்லாற்றானும் நிலை நாட்டப்பட்டு வரும் இன்றையச் சூழலில், தமிழை ஆற்றல் மிகு அறிவியல் மொழியாக முனைந்து வளர்ப்பது ஒன்றே பாரதிக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலி. □

காலம் மாறும்

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமமறு படிவெல்லும்'' எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழி தேடி விதியிந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம்; காலம் மாறும்.
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்.
- தனுவுண்டு காண்டீவ மதன்பேர்'' என்றான்.

பாரதியார்

பாரதியாரின் பெருமிதப் பண்புகள்

பேராசிரியர். திரு. போ. ரா. கிருஷ்ணமூர்த்தி,
முன்னாள் முதல்வர்,
பூ. சா. கோ. அறிவியல் கலைக்கல்லூரி

பாரதியார் வீறாப்புடன் நடந்து செல்வார்; துணிச்சலுடன் நடப்பார், துணிச்சலுடன் பேசுவார். அவர் அதனைச் செய்கையிலும் காட்டுவார். அவர் தைரியமாக எதனையும் செய்வார். முறுக்கிய மீசையுடன் கம்பீரத்துடன் நிமிர்ந்து நிற்பார்; நடப்பார்; தலைப்பாகையுடன் திகழ்வார். அவரது தலையில் முண்டாசு போட்டுக் கொண்டிருப்பார். அவருடைய கண்களில் தீ கனலும். ஆனால் அவரது பார்வை அன்பு நிறைந்தது.

திருவனந்தபுரத்திற்கு ஒரு திருமணத்திற்காகக் குடும்பத்துடன் சென்றார். மாலையில் அங்குள்ள மிருகக்காட்சி சாலைக்குள் தம் மனைவியுடன் சென்றார். மிருகக் காட்சி சாலையில் எல்லா மிருகங்களையும் தடவிக் கொடுத்தார். குரங்குகளுடன் கைகுலுக்கினார். கரடியைத் தடவினார். சிங்கம், புலி கூண்டுக்கு அருகே சென்றார். அவைகளின் அருகே செல்ல வேண்டாம் என்று அங்குள்ள காவலன் எச்சரித்தான். 'என்னை ஒன்றும் செய்யாது' என்று பாரதியார் கூறிக் கொண்டே சிறிதும் அச்சமின்றி சிங்கத்திற்கு அருகே சென்று அந்தச் சிங்கத்தின் தலை, காது, பிடரி முதலியவற்றையும் அன்புடன் தடவினார். அதனுடன் கொஞ்சிப் பேசினார். ''மிருக ராஜா! கவிராஜன் பாரதி வந்திருக்கிறேன்; உன் சக்தியையும் வீரத்தையும் எனக்குக் கொடுக்க மாட்டாயா? நீ பொல்லாதவன் என்று எல்லோரும் உன்னைக் கண்டு பயப்படுவார்கள். உங்கள் இனம், மனிதரைப் போல் உள்ளொன்று வைத்துப்புறமொன்று செய்யும் சுபாவம் இல்லாதது என்பதையும் அன்பு கொண்டோரை வருத்தாது என்பதையும் இங்கு இருப்போர் அறியும் வண்ணம் உன் கர்ஜனையின் மூலம் தெரியப்படுத்து ராஜா'' என்றார். சிங்கம் உடனே ஐந்து அல்லது பத்து நிமிடம் அதிக வீறுடன் கர்ஜித்தது. பாரதிக்கு மிகவும் மகிழ்ச்சி திருப்தி. மீண்டும் அதனைத் தடவிக் கொடுத்தார்.

பாரதியாருக்கு 7-ஆம் வயதில் உபநயனம் நடந்தது. அப்போது பாரதியார் தந்தைக்கு இரண்டாம் திருமணம் நடைபெற்றது. ஏனெனில் தன்னுடைய ஐந்தாவது வயதில் தன் தாயை இழந்தார்.

பாரதியார் தமது பாடலில் 'கடவுள் ஒருவரே' மக்கள் யாவரும் ஓர் இனத்தவர். ஒரு குலத்தார். 'சாதிகள் இல்லையடி பாப்பா :- சாதிக் கொடுமைகள் வேண்டாம்'

என்று ஜாதி, சமயம், குலம் இதில் வேறுபாடு இல்லை என்று அழுத்த மாகக் கூறுகிறார்.

தவறாதுணர்வீர், புவியீர்–மாலும்
சிவனும் வானோர் எவரும்
ஒன்றே
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்

ஒரு நாள் பாரதியார் இல்லத்தில் ஒருசிறு வைபவம் நடைபெற்றது. நண்பர் பலர் கூடி இருந்தனர். ஓமம் வளர்த்து வேதமந்திரங் களை ஜபித்துக் கொண்டிருந்தார் கள். பாரதியார் அமர்ந்து கொண் டார். நீண்ட நாட்களாக அரிஜன வகுப்பைச் சேர்ந்த கனகலிங்கத்துடன் நட்பு கொண் டிருந்தார். கனகலிங்கமும் அவ்வாறே அன்பு பாராட்டிப் பாரதியாரைப் பற்றி 'என் குரு நாதர்' என்ற நூலை எழுதியுள்ளார். அந்த நண்பர் கனகலிங்கத்தை மற் றொரு ஆசனத்தில் அமர்த்தினார். அந்த அரிஜன நண்பருக்கு பிரம்மோபதேசம் செய்து பூணூல் அணிவித்தார். 'இன்று முதல் நீ பிராமணன். யார் இந்தப் பூணூலைப் போட்டது என்று கேட்டால் 'பாரதி' என்று தைரியமாகக் கூறு.'

மற்றொரு சமயம் பாரதியார் குடிக்கத் தண்ணீர் கேட்டார், வையாபுரிப் பிள்ளை என்பவர் பிராம ணர் வீடு பக்கத்தில் உள்ளது என்று கூறினார். உடனே பாரதியார் தம்மிடத்தில் ஜாதி வேறுபாடில்லை என்று கூறி கோபித்துக் கொண்டார்.

பாரதியார் தாம் அணிந்துள்ள பூணூலைத் தகர்த்துத் தொலைவில் எறிந்து விட்டார் என்று ஒரு தகவல் கூறுகிறது.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் அரிஜனங்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட னர். அதுவும் புதுச்சேரியில் அவர்கள் கடுமையாக நடத்தப்பட்டனர். கோவில் நாடக அரங்கு, உணவு விடுதிகள் முடிதிருத்தும் நிலையங் களில் அரிஜனங்களை அனுமதிக்க வில்லை. பாரதியார் புதுவையில் வாழ்ந்தபொழுது தைரியமாக ஒரு கட்டுரை எழுதி விளம்பரம் செய்தார். ஜாதி வேற்றுமை பாராட்டாமல் அரி ஜனங்களைக் கோயிலுக்குள் அனு மதிக்க வேண்டும் என்று தக்க ஆதா ரங்களுடன் எழுதினார். அக்கட் டுரை 'கோயில் திருத்தம்' எனப்படும். அதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பி யது. பாரதியார் பல சமயங்களில் வறுமையால் பாதிக்கப்பட்டார். அவ ருக்குச் சிற்சில சமயங்களில் பாடல் எழுதக் காகிதம் கூடக் கிடைக்காது. பேனாவும் கிடைக்காது. சில நாட் கள் அவர் பட்டினியாக இருந்தார். யாராவது பொருளுதவி செய்தால் அதே நாளில் அப்பணத்தைச் செல வழித்து விடுவார். அத்தகைய தயாள மனப்பான்மை உடையவர். வறுமையால் வாழ்ந்த போதும் தங்களுடைய மனைவி சமையலுக்கு வைத்திருந்த அரிசியில் கால் பங்கினைக் காக்கை குருவி, அணில் கள் சாப்பிட வாரி இறைத்து அவை சாப்பிடுவதைக் கண்டு ஆனந்தம் அடைவார்.

ஒரு நாள் கிழத் தன்மையுள்ள பிச்சைக்காரன் கையேந்தி பிச்சை கேட்டான். கொடுப்பதற்குப் பாரதி யாரின் கையில் காசு இல்லை. நாம் என்ன செய்வோம் 'பணமில்லை போ' என்று துரத்தி விடுவோம். அவர் கருணை உள்ளம் கொண்ட வர். அவர் அக் கிழவனை வீட்டிற்கு அழைத்து வந்தார். தான் உடுத்திக் கொண்டிருந்த புது வேட்டியை

பாரதியாரும் அவருடைய மனைவி
செல்லம்மாளும்

அவனுக்கு அன்புடன் கொடுத்தார். பாரதியார் மனைவி, கோவணத்துடன் நின்று கொண்டிருந்த பாரதியாரைக் கண்டு மனம் கலங்கினார். பாரதியார் தம் மனைவிக்கு அக் கிழவனைக் காண்பித்து அந்தக் கிழவன் எவ்வளவு மகிழ்ச்சியுடன் செல்கிறான் பார் என்று கூறிப் பூரிப்பு அடைந்தார்.

கையில் உள்ள பணத்தைச் சேமித்து வைக்க வேண்டுமென்ற வேட்கை இல்லை. ஓர் வறியவனைக் கண்டால் அப் பணத்தை அப்படியே அளித்து விடுவார். இது அவருடைய பரோபாகாரப் பண்பைக் காண்பிக்கிறது.

தம்முடைய பிள்ளை காய்ச்சலாகப் படுத்திருந்தார். அச் சமயம் டாக்டருக்குக்கொடுக்கப் பணம் இல்லை. இருவரும் பெருங் குழப்பத்துடன் இருந்தனர். எனினும் 'சக்தி'யை உறுதியுடன் நம்பி வணங்கினார். பராசக்தியின்பால் அளவற்ற பக்தி கொண்டவர். எவ்வளவு தொல்லைப்பட்டாலும் அவருக்கு இருக்கும் கடவுள் பக்தி மாறவில்லை. 'சக்தி'யின் மீது பாடலைப் பாடினார். என்றன் முன்னைய தீய வினைப் பயன்கள் இன்னும் மூளாத வேண்டும்என்று தொழுதார். பராசக்திதான் அவர் உள்ளத்தை உறுதியாக்கியது.

பாரதியாருக்குப் புதுச்சேரியில் ஒரு துறவியுடன் நட்பு உண்டு. துறவி 4½ அடி உயரம். இதனால் அவரைக் குள்ளச் சுவாமியார் என்று அழைத்தனர். அவர் பிச்சை எடுத்துச் சாப்பிடுவார். பயித்தியக் காரனைப் போல் நடந்து கொள்வார். அவர் செயலும் சொல்லும் அத்தன்மையாகவே இருக்கும். ஒரு நாள்அவரிடம் பாரதியார் ''வாய்மை எது?'' என்று வினவினார். உடனே குள்ளச் சுவாமியார் இல்லத்தின் பின்

புறத்திற்கு ஓடினார். அங்கு உள்ள ஒரு குட்டிச் சுவரைக் காண்பித்து, பின்னர், கிணற்றில் உள்ள சூரிய பிம்பத்தையும் காண்பித்தார். குள்ளச்சாமி 'புரிந்து கொண்டாயா?' என்று வினவினார். குட்டிச் சுவர் போல மண் போலவும் ஒரு மனிதன் வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் அவனுடைய உள்ளத்தில் சூரிய பிம்பம் போல் தெய்வ ஒளி உண்டாகும் என்று பாரதியார் புரிந்து கொண்டார்.

பாரதியாரின் உடல் நலம் குன்றிக் கொண்டே வந்தது. வ. வே. சு அய்யர் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டதால் அவரை பிரிட்டிஷ் அரசாங்கம் கைதியாக்கியது. பாரதியாரைப் பார்ப்பதற்குச் சிறை அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற்று வந்தார், ' அவருடைய உடல் நலிவுற்றிருப்பதைக் கண்டு மருந்து சாப்பிட வற்புறுத்தினார். பாரதியார் மறுத்து விட்டார். பாரதியார் மயக்கமாய் படுத்திருந்தார். அதுவே அவரது இறுதிநாள். அவர் நண்பர் அருகிலேயே இருந்தார். டாக்டரை வர வழைத்து டாக்டர் மருந்து உட்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். அவருடைய உள்ளம் உறுதியானது. பிடிவாதத்துடன் பாரதியார் மருந்து சாப்பிடவில்லை. மயக்கமாய் இருந்து அதே இரவு காலமானார். இறுதிக் காலத்திலும் அஞ்சா நெஞ்சம் கொண்டிருந்தார். தாம் இறப்பதற்கும் அஞ்சவில்லை. அவருடைய பாடலில் யமனைப் பற்றி எழுதியுள்ளார். யமனுக்கு அஞ்சவில்லை.

"காலா உனைநான் சிறுபுல்லென
மதிக்கிறேன்
காலருகேவாடா! சற்றே உனை
மிதிக்கின்றேன்."

பாரதியார் சில கட்டுரைகள் ஆங்கிலத்திலும் எழுதி உள்ளார். ஆங்கிலத்தில் கட்டுரை, பாட்டு எழுதும் புலமை உண்டு. அரவிந்த கோஷ் ஆசிரமத்திற்கு அடிக்கடி போவார். அப்போது தாம் ஆங்கிலத்தில் எழுதி உள்ள "The Fox with the Golden Tail" 'பொன் வால் நரி' என்ற கதையினைக் காட்டினார். அரவிந்தகோஷ் மகிழ்ச்சி அடைந்தார். இதற்குப் பாராட்டுரைகள் வந்தன. அன்னி பெசண்டு, ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பற்றி விநோதமாகச் சித்திரித்து எழுதினார்.

நம்மாழ்வார், ஆண்டாள் பாடிய பாசுரங்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் பாசுரங்களாக எழுதி இருக்கிறார். 'ஸ்ரீ ஆண்டாள் கண்ட கனவு' 'வாரணமாயிரம்' என்று தொடங்கும் சில பாசுரங்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் இன்னும் சில கட்டுரைகள் எழுதியுள்ளார் 'Political Revolution in the Madras Presdency' என்ற கட்டுரையில் 'கொலையை'க் கண்டித்து உள்ளார். 'Coming Age' என்ற நூலில் பூதான இயக்கத்தை ஆதரித்துள்ளார்.

'என்றன் முன்னை தீய வினைப் பயன்கள்' என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. அவர் விதியினிடம் முறையிடுகிறார். காலனை மிதிக்கின்றேன்' என்ற அஞ்சா நெஞ்சம் உடைய பாரதியாரின் 'ஊழ்வினை' அவருடைய வாழ் நாட்கள் 39 ஆண்டுகள்தான் வாழ வேண்டும் என்று அறுதி இட்டிருக்கிறது. 'நான் அமரன் எனக்குச் சாவு கிடையாது; என்றும் உயிர் வாழ்வேன். எப்போதும் ஸத்தியமாவேன் எப்பொழுதும் களித்திருப்பேன் - நான் கடவுள் ஆதலால் சாக மாட்டேன்' இத்தகைய திடமான நம்பிக்கையுடன் உறுதியாக வாழ்ந்தார். ஆனபடியால் அவர் அமரத்துவ நிலையினை அடைந்து விட்டார். □

பெரிய புராணம்

பேராசிரியர் திரு. மு. மேத்தா

கன்னித் தமிழ் நாட்டின்
காகிதப்பெண்
நீ
மைதீட்டிய பிறகுதான்
மகத்துவம் பெற்றாள்

●

என்னுடைய பேனாப்பெண்
முதன்முறையாக
உன்னைப் பார்த்தபோதுதான்
தன்
முகத்திரை அகற்றினாள்

●

நீ எழுது கோல் எடுத்தபோதெல்லாம்
எங்களைப்
பூட்டியிருந்த விலங்குகள்
புலம்பத் தொடங்கின

●

உன்னிடத்தில் நான்
காணாமற் போனபிறகு தான்
இவர்கள் என்னைக்
கண்டு கொண்டார்கள்

●

தேசத்தை நேசிக்கும்
திருத்தொண்டர்களுக்கெல்லாம்
உன்பெயர் கூட—ஒரு
பெரிய புராணம்தான்

பாரதியும் தாகூரும்

டாக்டர் லலிதா காமேசுவரன்,
எம்பி; பிஎஸ்; பிஎச்டி;
துணை முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி

கடந்த இருபது அல்லது முப்பது ஆண்டுகளாகப் பொதுவாக இந்தியர்களும், சிறப்பாக வங்காள, தமிழ் நாட்டு மக்களும் அமரகவிகள் தாகூரையும், சுப்பிரமணிய பாரதியாரையும், தங்கள் அடிப்படைக் கலாச்சாரங்களின் தலைசிறந்த படைப்புகளாகக் கருதி, இறுமாப்புக் கொள்வதைக் காண்கிறோம். தங்களுடையவர்கள் என்று சொந்தம் கொண்டாடும் வேட்கையில் ஒரு முக்கியமான பொறுப்பை மறந்து விடுகிறார்கள். இந்த இரண்டு கவிஞர்களும் தனிப்பட்ட ஒரு சிறு சமுதாயத்திற்கு உட்பட்டவர்கள் என்ற நிலை என்றோ மாறிவிட்டது. இவர்கள் இருவருமே உலக மகா கவிகள் மட்டுமல்ல, காலவரம்பின்றி, கடந்த, நிகழ், எதிர்காலங்களுக்கெல்லாம் உரிமையுடையவர்கள்.

ஒரு கவிஞன் என்றென்றும் புகழுடன் திகழ வேண்டுமானால் கால வரம்பைக் கடந்து எல்லையற்ற அண்ட கோளங்கள் உள்ளடங்கிய பரிபூரணமான இயற்கையுடன் இணைந்து திகழ வேண்டும். இந்த நிலையை வைத்துப் பார்ப்போமானால் கவி தாகூரும், பாரதியாரும் அவர்களுடைய ஆர்வத்தையும் உயர்ந்த கொள்கைகளையும் வெளிப்படுத்தும் அழிவற்ற பெரும் கவிதைத் திரட்டுக்களை உலக சமுதாயத்திற்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். தனிப்பட்ட ஒரு நாட்டிற்கு மட்டும் என்று கூறி அவர்கள் தரத்தைக் குறைத்துவிடக் கூடாது. குறைகளற்ற சுதந்திர கேந்திரத்தைத் தேடும் தாகூர் ''அச்சம், சிறு பூசல்கள் இல்லா அறிவு மயமான சூழ்நிலையில் என் நாடு விழித்தெழட்டும்'' என்று இறைவனை வேண்டினார். பாரதியாரின் கவிதைகளும் இதே வரம்பற்ற, குறைகளற்ற சுதந்திர நிலைக்கான வேட்கையைத்தான் பிரதிபலிக்கின்றன. 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியில்' நம்பிக்கை மிகுந்த, சுதந்திரம் மிகுந்த விடிவு வேண்டும் என்றிறைஞ்சுகிறார். தன் சுயசரிதையிலும் கடைசி வரிகளில்

''அறிவிலே தெளிவு, நெஞ்சிலே
யுறுதி, அகத்திலே அன்பினோர்
வெள்ளம், பொறிகளின் மீது
தனியரசாணை, பொழுதெலாம்
நினது பேரருளின் நெறியிலே
நாட்டம், கருமயோகத்தில்
நிலைத்திடல் என்றிவை
யருளாய்''

என்று பரம்பொருளை இறைஞ்சுகிறார். பாரதியார் கவிதைகளில் பல இடங்களில் மீண்டும் மீண்டும் இதே இலட்சியம் வலியுறுத்தப் படுவதையே காண்கிறோம். வரம்பற்ற ஆன்ம சுதந்திரமே குறிக்கோளாகிறது.

"எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்,
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்த நல்லறிவு வேண்டும்."

எனும் வரிகளில் மனக் கண்களின் முன் தோன்றும் விடுதலைத் தோற்றம் ஆன்மீகத்தைத் தொடுவ தாகவும் இருக்கிறது.

கவிஞர்கள் வாழ்ந்த காலத்தைப் பொறுத்துக் கவிதைகளில் உணர்ச்சி களின் வேகத்தில் வரலாற்று நிகழ்ச்சி களின் முத்திரைகளும் தென்படத் தான் செய்யும். விடுதலை இயக்கக் காலத்தில், கொந்தளிப்பான சூழ் நிலையில் இயற்றப்பட்ட பாரதியாரின் கவிதைகள் சுதந்திர தாகம், நாட்டுப்பற்று போன்ற இந்திய வரலாற்றின் தனிப்பட்ட ஒரு சகாப்தத்தின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்றன.

"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்றும் "ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா, வா,!" என்றும் பாடப்பட்ட கவிதைகள் பல்லாயிரக் கணக்கான இந்தியர்களின் எதிர் காலத்தைப் பற்றிய கற்பனைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்த நிலையைச் சுட்டுகிறது.

தாகூரும், பாரதியாரும் 'இரு வருமே வர்ணனை என்று வரும் போது யார் யாரை மிஞ்சுகிறார்கள் என்று சொல்ல முடியாது. தாகூரின் இளமை கொஞ்சும் கதாநாயகி, வீராங்கனை "சித்ராங்கதை" இறைவன் தந்த வரப்பிரசாதத் தினால் மன மயங்கும் அழகியாக மாறுகிறாள். தன் மாறுபட்ட உருவத்தின் பிரதிபிம்பத்தைக் கண் ணுற்ற சித்ராங்கதாவின் உள்ளத் துணர்ச்சிகளை வர்ணிக்கும் போது முதலில் தோன்றிய மகிழ்ச்சி, கிளர்ச்சி, மயக்கம் இவைகளைக் கூறிப் பின்னர் எதிர் காலத்தை எண்ணிய போது அவையே கவலை யாக, துன்பமாக, சோர்வாக மாறும் இயல்பைக் காட்டுகிறார். சிக்கலான பல உணர்ச்சிகள் பின்னிப் பிணைந்து குழப்பத்தை விளை வித்துக் கொண்டு உள் மனத்தில் போட்டி போட்டுக் கொண்டு மாறி மாறித் தோன்றும் விந்தையை உள் ளத்தைத் தொடும் மென்மையோடு எடுத்தியம்பும் நயம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. இதே மென்மையும் நளினமும் பாரதியாரின் குயில் பாட்டிலும் தென்படுகிறது.

பெண்களை வருணிக்கும் பகுதி களைப் படிக்கும்போது, தாகூரும் பாரதியாரும் ஒருவருக்கொருவர் எள்ளளவும் சளைப்பின்றி இனிமை யும் அழகும் குழைத்துத் தருகிறார்கள். கீழை நாட்டு மக்களின் மனத்திரை யில் படிந்த பெண்ணுருவம் அழகு நிலை பற்றிய கருத்துக்களே இருவர் வருணனைகளிலும் தெளிவாகத் தென்படுகிறது. தாகூரின் சித்ராங் கதை நீண்ட பட்டுப் போன்ற கேசம் நிசியை நிகர்த்த கருமையுடன் மிளிர

சக்தி தர்மம்

ஆத்மா உணர்வு; சக்தி செய்கை

உலகம் முழுதும் செய்கை மயமாக நிற்கிறது. விரும்புதல், அறிதல், நடத்து தல் என்ற மூவகையான சக்தி இவ் வுலகத்தை ஆளுகின்றது. இதைப் பூர்வ சாஸ்திரங்கள் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்று சொல்லும்.

தத்துவம்— பாரதியார்

உள்ளத்தைக் கவரும் பெண்மை நயங்களுடன் அச்சம், மடம், நாணம் போன்ற கீழை நாட்டுக் கருத்துக்களின் அடிப்படையில் வடித்தெடுத்த பாவையாகத் தோற்றமளிக்கிறாள். பாரதியாரின் ''கண்ணம்மா என் காதலி'' யிலும் இதே வர்ணனை அழகைக் காண்கிறோம்.

''சுட்டும் விழிச்சுடர்தான் -
கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி - கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ''.

என்ற கவிதையில் காணும் இனிமையைத் தாகூரின் வர்ணனை நயத்துடன் பார்க்கும்போது இருவரையுமே நிச்சயமாக மனித உணர்ச்சிகளின் அடிப்படையில் வந்த கற்பனைக் கவிஞர்களாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒப்புவமைகளைப் பயன்படுத்துவதில் பாரதியாரின் சொல் விளையாட்டுகளைப் பார்க்கும் போது அதன் சிறப்பையும் பெருமையையும் நோக்கி பிரமிக்காமல் இருக்க முடியாது. சொற்கள் தானாக வந்து கவிஞர் நாவில் ஏறி விளையாடும் நயத்தைப் பார்க்கும்போது அவர் கற்பனையின் ஆழத்தையும் ஓட்டத்தையும் ஊகித்துத் தான் உணர முடியும்.

'' .... கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண் கூத்து எனு
மிவற்றின் சாரமெலாம் ஏற்றி,
அதனோடு இன்னமுதைத்தான்
கலந்து, காதல் வெயிலிலே காய
வைத்த கட்டியினால் மாதவளின்
மேனி வகுத்தான் பிரம
னென்பேன்''

என்ற கவிதையை ஒவ்வொரு முறை படிக்கும்போதும் திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்கத் தோன்றும்.

உபமான உவமேயங்களைப் பயன்படுத்துவதில் பாரதியாருக்கு இருந்த லாவகத்தை அவர் சமகாலத்தினர் யாவருமே பாராட்டத்தான் செய்தார்கள். 'எள்ளி நகையாடுவோம்' எனும் கருத்தை எளிதான உவமையினால் வலியுறுத்திவிடுவார். நாட்டிற்கு முழு விடுதலை வேண்டும் என்று கேட்ட தொண்டர் படைக்கு, சில சலுகைகளை மட்டும் தருகிறோம் என்ற வெள்ளையர்களை நோக்கி, ''கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ!'' என்கிறார். இதே வன்மை தாகூரிடமும் தெரிகிறது. குழந்தை (The Child) என்ற தாகூரின் கவிதையின் உவமை நயம் அதன் எளிமையினால் மட்டும்கூட மனதைக் கவர்ந்துவிடும்.

பெரும் கவிஞர்களாக இருப்பினும், இருவருமே சாதாரண மக்களிடையே கலந்து பழகி வாழ்ந்தனர். வாழ்ந்தது மட்டுமல்ல, சமகாலச் சமுதாயத்தில் இருந்த தர வேறுபாடுகள், குறைகளை உணர்ந்து சீர்திருத்த முயற்சிகளிலும் ஈடுபட்டனர். தன் இலட்சியங்களுக்கிணங்க தாகூர் விஸ்வ பாரதி பல்கலைக் கழகத்தை நிறுவினார். சாதி வேற்றுமையைச் சாடி அதை ஒழிக்க வேண்டும் என்று பாரதியார் கொடுத்த குரல் அவர் பரந்த நோக்கையும், கொள்கைப் பிடிப்பையும் சாதாரண மனிதனின் மனதிற்குள் ஏற்றி மக்களை உசுப்பி எழுப்பியது.

''சாதிகள் இல்லையடி பாப்பா
—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்
பாவம்''.

எனும் பாடல் உற்று நோக்கத்தக்கது. பாமர மக்களின் கல்வியின்மை, அறியாமையைப் பற்றித் தாகூர் எழுதிய கவிதையைப்

பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம்

தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம். மனிதன் தான்விரும்புகிறபடியே ஆகிறான். இதைக் காரணங்கள் காட்டி ருஜீதப்படுத்த வேண்டுமானால், அது ஒரு பத்திரிகைக் குறிப்பின் அளவுக்குள் முடிவு பெற மாட்டாது. ஆனால், அநுபவத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

தத்துவம் — பாரதியார்

பாரதியார் தமிழில் ''நாட்டுக் கல்வி'' என்ற தலைப்பில் மொழி பெயர்த்திருக்கிறார். விஸ்வபாரதியின் குறிக்கோள்களைக் காணும்போது ஒவ்வொருவரும் அறிவியல் துறைகளில் ஏதோ ஒரு பகுதியை மட்டும் கற்றுக் கொண்டிருக்கும் தற்போதைய முறையைக் கண்டித்து, முழு மனிதனின் வளர்ச்சியே கல்வியின் குறிக்கோள் என்று கூறுகிறார் தாகூர். பாரதியாரின் பாப்பா பாட்டும் குழந்தையின் முழுமையான வளர்ச்சியைக் குறித்து கவிஞனுக்கு இருக்கும் அக்கறையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

''வாலைக் குழைத்து வரும் நாய்
தான்—அது
மனிதருக்குத் தோழனடி பாப்பா''

என்ற வரிகளில் விலங்குகளின்பால் தோன்றும் இரக்கத்தையும் நெகிழ்ச்சியையும் குழந்தைக்கு விளக்குகிறது.

கட்டுப்பாடுகளினின்றும் கல்வியை வேறுபடுத்திச் சுதந்திர வேட்கையை இதிலும் கொண்டு வருவதே அவர்களின் சிறப்பைத் தெளிவாக்குகிறது. சாதாரணக் கவிஞர்களினின்றும் அவர்களைத் தனிப்படுத்திக் காட்டுகிறது. நம்மைப் பிணிக்கும் பிடிப்புகளிலிருந்து விடுபட்டு எல்லையற்ற பரம்பொருளை எட்டும் திறனே சாதாரண மனிதர்களிலிருந்து மேதைகளைத் தனிப்படுத்திக் காட்டுகிறது. வெள்ளையர்கள் வலிய வந்து தானம் தந்த ''சர்'' பட்டத்தை வேண்டாமென்று உதறிவிட்டு ஜலியன்வாலாபாக் கொடுமையைக் கண்டிக்கிறேன்.'' என்று சொன்ன தாகூரும், வெள்ளையர்கள் பிடிக்கு அகப்படாமல் நாடு விட்டுப் பிரெஞ்சு நாட்டார் பிராந்தியத்தில் குடியேறி, தொடர்ந்து வீர முழக்கம் செய்த பாரதியாரும், விடுதலை வெறியர்களான இருமாபெரும் மேதைகள். மனித சமுதாயத்தில் வாழ்ந்தாலும் உயர்ந்து ஓங்கித் தனித்திருக்கும் இயல்பைக் காட்டுகிறது. அவர்கள் எதிர்த்தது ஆங்கிலேய சமுதாயத்தையல்ல; இந்தியர்கள் மேல் ஆங்கிலேயர்கள் செலுத்திய ஆட்சியையும் அதிகாரத்தையும் தான். தனித்தியங்கும் மனிதத் தன்மையில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையே அவர்களுக்கு மனித சமுதாயத்தின் சமத்துவத்தில் இருந்த நம்பிக்கைக்கும் அடிப்படை.

தன் வாழ்க்கையின் அந்திம காலத்தில் தாகூர் ''மேற்கும் கிழக்கும் என்னுள்ளேயே சந்தித்து நட்புக் கொண்டு விட்டது. என் பெயருக்குப் பொருள் சூரியன் (Rabi) என்பதை என் உள்ளுணர்வு

கண்டு கொண்டது'' என்று கூறி தான் உலகத்திற்கெல்லாம் பொது என்பதை உணர்த்தினார். பாரதியாரும் நிலைத்திருக்கும் பாரம்பரியத்திற்கும் என்றென்றும் முடிவில்லா எதிர்காலத்திற்கும் உணர்த்தும் வகையில் படைப்பெல்லாம் தனக்கு ஒன்றுதான் என்று வலியுறுத்தி,

''இவ்வுலகம் ஒன்று
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்
உயிர், இறப்பு-இவையனைத்தும்
ஒன்றே''

என்றும்,

''காக்கை, குருவி எங்கள் சாதி,
நீள் கடலும், மலையும் எங்கள்
கூட்டம்''

என்றும் பாடியிருப்பது நம்மைத் திகைக்க வைக்கும்.

''இந்த ஒன்றின் பெயர் - ''தான்''
தானே தெய்வம். ''தான்''
அமுதம்
இறவாதது''

என்று பாரதியார் என்றும் அழிவில்லாததே இறைப் பொருள்; அதனுள் படைப்புகளனைத்தும் அடங்கும் என்று காட்டியதுபோல் மேதைகளின் புகழும் அழிவற்றது. வாழ்வின் நிகழ்ச்சியில் கலைகளின் அடித்தளமாய் அமைவது துவக்கமும் முடிவுமற்ற காலப்பாதையில் தாகூரும் பாரதியாரும் இந்தியத் துணைக் கண்டத்தின் இரு பகுதிகளினின்றும் வந்து இரு அடையாளச் சின்னங்களாக ''மேதை'' எனும் சொல்லிற்குப் பொருள் கூறுவது போல் இயற்கையுடன் இரண்டறக் கலந்தும் அழியாப் புகழுடம்பை விட்டுச் சென்றனர். □

With best compliments of :

SHYAM
ELECTRIC
WORKS

A. B. Road, DEWAS (M. P.)

பாரதியின் காதலி

டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்,
எம்ஏ; எம்லிட்; பிஎச்டி;
இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி, சென்னை

காலத்தை வென்று கன்னித்தமிழ் தன் இளமை மாறாமல் பெற்றெடுத்து வரும் தமிழிலக்கியங்கள், எண்ணற்றவை. இனிமையும் அழகும் அறிவும் அவைகளில் கூடிக் குவிந்து மக்கட்சமுதாயத்தை மகிழ்வித்து வாழ்வை வளப்படுத்தி வருகின்றன. அவ்வப்போது மறுமலர்ச்சியும் புரட்சியும் வெள்ளமெனப் பொங்கி ஊக்கமும் உரமும் பரப்பி புத்தொளியூட்டும் பெருமை கொண்டவை. கடலனைய மரபுகளில் மலையனைய புதிய அலைகள் வீசும் சுடர்மிகு இலக்கியத்தைப் படைத்த பாரதியார் அப்பெருவரிசையில் நம் நெஞ்சில் நிற்பவராவர். அவர் பொழிந்த பொழிவுகளில் செழிப்பும் விழிப்பும் எழுச்சியும் புரட்சியும் நிரம்பி வழியும். எல்லாவற்றிற்கும் மேலாக, என்றும் வாழும், தன்னை மறந்து தானேயாகி தனித்து நிற்கும், கவிதைக்காகவே கவி இயற்றிய நிலையும் அவர்பாலுண்டு.

அது எது?

உலகத்திற்குப் பாரதியை அறிமுகப் படுத்திப் புகழை ஒளியாக்கிக் காட்டியவை அவருடைய தேசியப் பாடல்களேயாகும். மக்களைத் தட்டி எழுப்பி விடுதலை வேட்கைக்களிப்பில் அழுத்தி அச்சத்தை ஓட்டி சுதந்திர வாழ்வுக்கு இழுத்துச் செல்லுபவை எளிமையும் இனிமையும் தெளிவும் கவர்ச்சியும் கொண்ட அப்பாடல்கள். ஆயினும், அவை ஒரு நோக்கும் அறிவுரையும் கொண்டவை. சமயச் சார்புடைய பாடல்கள் அழகுமிகு படைப்புக்களாயினும் சீர்திருத்தவாதியின் குரலைத் தன்பால் இணைத்துள்ளன. பாஞ்சாலி சபதம் வல்லவனாக்கிய சித்திரம் போன்ற உயரிய படைப்பாயினும் பிறர்படைத்த ஒன்றின் தழுவல் போக்கும் அரசியல் மண வீச்சும் கொண்டு அமைந்துள்ளது. மேலும், அதில் சொற்பொழிவுத் தொனி கேட்கிறது. வெர்ஜீனியா வுல்ஃப் என்ற திறனாய்வாளர் சொல்வன்மைக்கும் கவிதைக்குமுள்ள வேறுபாட்டை நுணுக்கமாகப் புலப்படுத்தியுள்ளார். கவிதை தனிமையில் நுகர வேண்டியது, யாருக்கும் தெரியாமல் கேட்டுத் துய்க்கத்தக்கது. முன்னிலை வேண்டுவதில்லை. இவை அவர் கண்ட நெறிகளாம்.

உண்மைக் கவிதையின் நிலையை ஒரு பாடலால் அழகுற வடித்துள்ளார் பாரதியார். அவருடைய காதலியின் அழகிய பெயர் கவிதையாம். காதலியைக் கண்டபோது அடிமையாகி விடுகிறார் அவளுக்கு. காதலியுடன் இன்பம் துய்த்ததை எண்ணி மகிழ்கிறார். அவர் சொல்வார்ப்பில் அதனைப் பார்ப்போம்.

"வாராய்! கவிதையாம்
மணிப்பெயர்க் காதலி!
பன்னாள் பன்மதி ஆண்டு பல
கழிந்தன
நின்னருள் வதனம்நான் நேருறக்
கண்டே.
அந்தநாள் நீயெனை அடிமையாக்
கொள, யாம்
மானிடர் குழாத்தின் மறைவுறத்
தனியிருந்தது
எண்ணிலா இன்பத்து இருங்கடல்
திளைத்தோம்
கலந்துயாம் பொழியிடைக் களித்த
வந் நாட்களிற்
பூம்பொழிற் குயில்களின்
இன்குரல் போன்ற
தீங்குரல் - உடைத்தோர்
புள்ளினைத் தெரிந்திலேன்.
மலரினத்து உன்றன்
வாள்விழிஒப்ப
நிலவியது ஒன்றினை
நேர்ந்திலேன்; குளிர்புனற்
சுனைகளில் உன்மணிச்
சொற்கள்போல் தண்ணிய
நீருடைத் தறிகிலேன்; நின்னொடு
தமியனாய்
நீயே உயிரெனத் தெய்வமும்
நீயென
நின்னையே பேணி நெடுநாள்
போக்கினேன்".

சோலையில் பாரதியைக் கவர்ந்தவை எவை என்பதனை இப்பாடற் பகுதி தெளிவுறக் காட்டும். கவிதைப் பெண்ணின் வாள் விழியொத்த மலர்கள் ஏதும் இல்லை. கவிதையின் தண்ணிய சொற்கள்போல் சுனை நீரில்லை. ஆனால் இசை? ஆம். குயிலின் தீங்குரல் அவரை ஆட்கொண்டு விட்டது. எனவேதான் குயிலை - இசையை - கவிதையை - காதலிக்கிறார். ஆகவேதான் அவருடைய உணர்ச்சியின் செயற்பாட்டால் சாகாக் கவிதை குயில் பாட்டாகப் பீறிட்டு வெடிக்கிறது. ஆன்மா உண்மையினையும் அழகினையும் நாடித் தேடிச் செல்லும் துணிவைப் பாடுகிறார் பாரதி. யாரும் தன் கருத்தை முன் நின்று கேட்பதாக அவருக்கு நினைவில்லை. அதில் அமையும் நோக்கம் பற்றியோ செய்தி பற்றியோகூட எண்ணமில்லை. அவர் ஏன் பாடுகிறார் எனில் அவர் பாட வேண்டிய நிலையில் இருக்கிறதானாலேயே அவர் பாடுகிறார். அவர் உள்ளக் குரலை உலகே கேட்கிறது. பிரச்சாரமோ, நோக்கமோ, அறிவுரையோ எதுவும் இல்லை. கவிதை கவிதைக்காகவே கனிகிறது. உண்மைக் கவிதைக்குரிய இலக்கணமாக உலகத் திறனாய்வாளர் இப்பண்பினையே விரித்து விளக்குகின்றனர். உயிர்க்கவிதை, இறவாக் கவிதை உண்மைக் கவிதையின் பண்புகள் குயில் பாடலில் குவிந்து பேரொளியாகின்றன.

பாரதியின் பரந்த புலமை இவருடைய குயில் பாட்டுக்கு விழுதாய் அமைந்துள்ளது. மேலைநாட்டுக் கவிஞர்கள் உணர்ச்சியும் கீழை நாட்டுப் புலவர்கள் கருத்தும் பிணைந்து முருகியுள்ளன. கீட்சின் நைட்டிங்கேல், எண்டிமியான் கவிதைகளும், ஷேக்ஸ்பியரின் நாடகங்களும், வோர்ட்ஸ்வொர்த் செய்யுட்களும் பாரதிக்குப் பாவியற்ற உணர்வூக்கம் தந்துள்ளன. அவர் ஆளுமையைக் கம்பனும், வள்ளுவரும், இளங்கோவும் உருவாக்கியுள்ளனர். வடமொழி இலக்கியங்களும் அவர் கனவினை வளப்படுத்தியுள்ளன. கற்பனை வளமும் புலமைத் தெளிவும் சொற்களையும் தொடர்களையும் தெரிந்தாளும் ஆட்சியும் துல்லியமாய்ப் பளிச்சிடுகின்றன. மாலை மயக்கத்தால் ஏற்பட்ட கற்பனையின்

சூழ்ச்சியைக் கவிதைக் கனியாகிய பாடல் நிலைகளை உணருமுன் அதன் கதையைச் சுருக்கமாக அறிதல் நல்லது.

செந்தமிழ்த் தென் புதுவை. பெரும் மாஞ்சோலை. வான்கிளையில் ஒரு பெண்குயில். இன்னிசைத் தீம்பாடல் இசைக்க கவிஞன் அவ்விந்தைப் பாடலில் பரவசமாகிறான். குக்குக்கூ, குக்குக்கூ என்பதுதான் பாட்டு ஆனால் அதன் பொருளைக் கவிஞன் சிந்தை அறிந்து கவிதை யாக்குகிறது. மோகப் பாட்டின் முடிவில் இன்பவெறியும் துயரும் இணைந்தன. கவிஞன் குயிலை நெருங்கினான். ஒற்றைக் குயில் மனிதர் மொழியில் பேசியது. ''காதலை வேண்டிக் கரை கின்றேன். இல்லையெனில் சாதலை வேண்டித் தவிக்கின்றேன்.'' கானக் குயிலி மனிதர் மொழியில் ''காதல் வழி கரடு முரடானது. நான்காம் நாள் வருக. சிந்தைபறி கொண்டு செல்லுபவரே! வரவில்லையாயின் ஆவி தரியேன்'' எனக்கூறி மறைந்தது. ஒரு நாளைக் கழிப்பதும் கவிஞனுக்குக் கடுமையாயிற்று. உள்ளம் புல்லரித்தது, அடுத்தநாளே மீண்டும் அதே சோலைக்கு வந்தான் ...திடுக்கிட்டான் குயில் குரங்கோடு காதல் பேசி நிற்கும் நிலை கண்டான். வாளை வீசினான். குரங்கு தப்பித்தது. குயில் பறந்தது. கவிஞன் வீட்டுக்குச் சென்றான். துயர் கவ்வியது. அடுத்த நாள் மீண்டும்அதே சோலைக்கு வந்தான். குயில் மாட்டுடன் காதலுற்று நின்ற காட்சியைக் கண்டான். வாளை எடுத்துக் காளை மேல் எறிந்தான். காளை தப்பி ஓடியது. குயில் மறைந்தது. மீண்டும் இல்லம் சென்ற கவிஞன் நான்காம் நாள் அதே சோலைக்கு வந்தான். குயிலைக் கண்ட கவிஞனின் உள்ளம் குமுறிற்று. ஆயினும் குயிலைப் பேசவிட்டான். குயில் தன் பூர்வப் பிறப்புக் கதையைச் செல்லியது. ''ஒரு நாள் சோலையில் ஒரு முனிவரைக் கண்டேன். அவரிடம் பறவையாய் இருந்து துன்புறுவதற்குரிய காரணம் கேட்டேன். அதற்கு அவர் முற் பிறப்பு வரலாறு கூறினார், அதனைக் கூறுகிறேன். கேட்டபின் கவிஞர் உள்ளம் போல் செய்யலாம்'' எனக் குயில் முனிவர் கூறியதைக் கூறலாயிற்று. ''சேர நாட்டில் வேடர்தலைவன் வீரமுருகன் மகளாய் இருந்தாய், உன் மாமன் மகன் மாடனுக்கு மணமுடிக்க இசைந் திருந்தாய். அந்நேரத்தில் தேன் மலையின் மொட்டைப்புலியன் மகன் நெட்டைக்குரங்கனுக்கு மண முடிக்க பெற்றோர் இசைந்தனர். மாடன் மருண்டான். ஆனால் கருணையினால் நீ அவனுக்கு இசைவு தந்தாய், அப்போது சின்னக் குயிலி என்பது பெயர். பின் ஒரு நாள் காட்டில் இருக்கும் போது சேரமான் மைந்தன் வந்தான். இருவரும் கண்டு விரும்பி காதல் பிறந்து கலந்தீர்கள். அந்நேரத்தில் மாடனும் குரங்கனும் அங்கு வந்தனர்; பொங்கினர். அவரிரு வரும் சேரனை வாளால் வெட்டினர். ஆயினும் மன்னன் எதிர்த்து அவ்விரு வரையும் வெட்டிய பின் உயிர் துறக்குமுன் மீண்டும் பிறந்து பிணைந்து வாழ்வோம் எனக் கூறி முகமலர்ச்சியுடன் இறந்தான். இப் பிறவியிலும் விந்தகிரி வேடனுக்குத் தான் பிறந்தாய். ஆனால் பேயான மாடனும் குரங்கனும் மன்னனைக் காதலிப்பாள் என்று மானிடப் பெண்ணைக் குயிலாக்கிச் சுற்றிவரு கின்றனர். ஆயினும் தொண்டை நாட்டில் வேந்தன் மகன் கண்டு

குயிலின் இசையில் மயங்கினும் காதலில் ஐயங்கொண்டு குயிலை விட்டுவிட நினைப்பான்'' இவ்வாறு கூறி முனிவர் நேரமானதால் தன் பணிக்குச் சென்றார். இனி வாழ்வதில் பயன் இல்லை என வருந்தியது. கவிஞன் குயிலைக் கையில் கொண்டு முத்தமிட்டான். ஆனால் குயிலைக் காணவில்லை. அழகிய பெண் உருவம் முன் நின்றது.'' கவிஞன் கனவு மறைந்தது. நனவில் முன் கண்ட பழைய பொருட்களையே தான் கண்டான். இவ்வளவே கதையின் சாரம். கதையின் அமைப்பு மிக எளிமை யானது. சிக்கலோ குழப்பமோ கதையில் இல்லை. இந்தக் கதை நம் நம்பிக்கைகளோடும் மரபுகளோடும் இயைந்தே காணப்படுகிறது.

பிராமணன் ஒருவன் குடத்தில் கொண்டு வரும் ஜலம் அழுக்காக இருப்பதால் குடிக்கத்தகாததென்றும், சண்டாளன் ஒருவன் சுத்தமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு வந்த நீர் சுத்தமாக இருப்பதால் குடிக்கத் தகும் என்றும் நாம் சொன்னால் வெறுமே குயுக்தி பேசுகிறான் என்று சொல்லி என்னைக் கண்டிப்பார்கள். ஏனெனில், எனது கொள்கை 'யஜமான் உத்தர'வுடன் ஒட்டவில்லை. 'ஒட்டாவிட்டால் என்ன குடி கெட்டுப் போயிற்று?' என்று நான் கேட்டால் உடனே என்னை ஜாதியிலிருந்து தள்ளிவிடுவார்கள். என்னை விருந்துக்குக் கூப்பிடமாட்டார்கள். நான் செத்துப்போனால் சாவுக்கு கிரியைகளுக்குக்கூட வரமாட்டார்கள்.

தத்துவம்—பாரதியார்

மறுபிறப்பு, விதி, காதலில் ஏற்படும் எதிர்ப்பு இவையே முக்கிய இடம் பெறுகின்றன. எல்லாம் பழைய மரபுகளே. ஆயினும், இந்த வலுவான அடிப்படையைக் கொண்டு பாரதியார் இறவாப் புகழ் பெற்ற எழில் மிகு கலைக்கோயிலை வண்ணமாக வடித்துள்ளார். தன் முழுக் கவிச் செல்வமும் இதில் நிறைந்து நிற்கிறது. பட்டறிவு பளிச்சிடுகிறது. கற்பனை உந்தலும் அறிவுத் தூண்டலும் உணர்வுத் துடிப்பும் ஒளிவீசுகின்றன. உயர்ந்த கவிதைக்கு எடுத்துக்காட்டாக பாரதியின் மணிமுடிப் பாடலாகக் குயில் பாட்டு கூவி நிற்கிறது.

பாரதியாரின் பிற பாடல்களின் நோக்கும் போக்கும் பொருளும் குயில் பாடலுக்கு ஒத்து வருவதில்லை. மாறாகப் பழமைப் பிடிப்பும், மறு பிறப்பு நம்பிக்கையும், பேய்களின் நடமாட்டமும், விதியின் வலிவுமே குயிலில் காணப்படுவதால் பாரதியின் ஆளுமையை ஆழமாக நினைந்து பார்க்க வேண்டிய நிலை திறனாய்வாளனுக்கு உண்டு. 'பேய்களுக்கு அஞ்சேல்' 'தொன்மைக்கு அஞ்சேல்' எனப் பேசிய கவிஞனா குயில் பாட்டு எழுதியுள்ளான் என்ற ஐயம் தோன்றும். புரட்சிக் கவிஞனின் பாடலா இது என்றுகூட எண்ணத் தோன்றலாம். அவ்வளவு செறிவும் ஆழமும் உயர்வும் ததும்பும் பாடல் இது. இங்கு ஓரிரண்டு கருத்தும் சுவையுமே எடுத்துக்காட்டாக விளக்கப்பட்டுள்ளன.

உள்ளம் ஒரு புதிர். அதன் இயல்புகளை உணர்வது மிக அருமை. மனம் ஒரு பொருளின் மீது வெறியும் ஆசையும் நிரம்பி வழியப் பற்றுக் கொண்டு விட்டால் எதைப் பார்த்தாலும் எங்குப் பார்த்தாலும் அப்பொருளே.

காட்சியளிக்கும். குயில் மீது காதல் கவிஞனுக்கு ஏற்பட்டு விட்டது. எங்கு பார்த்தாலும் அவனுக்குக் குயிலே தோன்றுகிறது. அவன் கூறுவதைப் பாருங்கள்.

'' கொம்புக் குயிலுருவங் கோடி பல
கோடியாய்
ஒன்றே யதுவாய் உலகமெலாந்
தோற்றமுற''

என்ற வரிகள் எதைத் தெரிவிக்கின் றன? எப்போது இம் மனநிலை?

'' கண்டதொரு காட்சி கனவ: நனவு
என்றறியேன், எண்ணுதலுஞ்
செய்யேன். இருபது பேய்
கொண்டவன் போல், கண்ணும்
முகமும் களியேறிக் காமனார்,
அம்பு நுனிகள் அகத்தே அமிழ்ந்த''
போது

இப்பேர்ப்பட்ட காட்சியும் மனநிலையும் உண்டாகிறது. எனவே, இரண்டறக் கலப்பதற்குரிய மனநிலையை அழகுறக் கொண்டுள்ளார் பாரதியார்.

கவிஞன் தன்னை மறந்து தான் வடிக்க விரும்பும் பொருளாக மாறி அதுவாகவே நின்று கவி எழுதும் போதுதான் கவிதைத் தன்மை சிறக்கிறது. சிறு கூறுகளும் சுவையாகவும் உண்மையாகவும் தெளிவாகவும் அமைகின்றன. குரங்கையும் மாட்டையும் சித்தரிக்கும் போதும், அவைகளின் உணர்வுகளைக் கொட்டும் போதும், கவிஞன் தானே குரங்காகவும், மாடாகவும் மாறி, தான் வேறு அவை வேறு என்ற வேறுபாடின்றி ஒன்றி ஒருமித்து நிற்பது வெளிப்படையாகத் தெரிகிறதல்லவா? இந்தத் தன்மயத்துவப் பண்பு உயரிய கவிஞனுக்குரிய ஒன்றாம். காட்டாக, குரங்கைக் காட்டுவதைக் காணலாம்.

'' மீசையையும் தாடியையும் விந்தை
செய்து வானரர்தம்
ஆசைமுகத்தினைப் போலாக்க
முயன்றிடினும்
ஆடிக்குதிக்கும் அழகிலுமை
நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும்
கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச்
சென்றாலும்
வேறெத்தைச் செய்தாலும்
வேகமுறப்பாய்வதிலே
வானரர் போலாவரோ'' எனக்
குரங்கின்

பெருமையை நகைச்சுவை ததும்ப சித்திரிக்கரா ரல்லவா? 'கற்பனையும் வர்ணனையும் காட்டிக் கதை வளர்க்கும் விற்பனர் தஞ்' செய்கையை அறியேன் எனக் கூறிய கவிஞன்தான் கற்பனையைக் கதைக்காகப் பாடாமல் கற்பனைக்காகவே பாடுவதாகக் கூறுவது கூர்ந்து நோக்கத் தக்கது. ''காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன்'' எனத் தொடங்கிக் காட்டும் படப்பிடிப்பு மிக உயர்ந்த நிலையில் நின்று ஞாயிறென வாழ்கிறது. சில வரிகளை விளக்காமல் அப்படியே தருகிறேன்,

'' தங்கமுருக்கித் தழல் குறைத்துத்
தேனாக்கி
எங்கும் பரப்பியதோர்
இங்கிதமோ?''
'' புல்லை நகையுறுத்திப் பூவை
வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில்
மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தை
செயும் சோதி''.

இங்கே ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ஸ் வோர்த்தின் பெயர்ப்பு அப்படியே அமைந்துள்ளது. உலகில் யார் மீதும் குறையில்லை. ஆனால்

துன்பமும் கருத்து வேறுபாடும் காணப்படுகின்றன. இதற்கு என் செய்வது.

குயில் பேசுகிறது.

''குற்றம்நீர் என்மேற் கொணர்ந்த
தனை யானறிவேன்
குற்றம் நுமைக்கூறுகிலேன்;
குற்றமிலேன் யானம்மா!''

என்றும்,

''நின் சொல் மறுக்க நெறியில்லை,
ஆயிடினும்
என்மேல் பிழையில்லை, யார
தனை நம்பிடுவார்''

என்றும் கூறுவது உலகியல் உண்மையைக் காட்டி விதியை வெல்ல என்றும் சாகாமல் இருக்க விரும்பும் கவிஞன் விதிக்கு வித் திட்டுக் காட்டுவது அவர் பட்டறிவு வளர்ச்சியன்றோ? பாரதிக்குச் சேர நாட்டின் மீதும் சேர மன்னர் மீதும் சேரப் பெண்கள் மீதும் பெரிய ஈடு பாடு உண்டு. கடந்த பிறவியில் இந்தக் கதைத் தலைவன்- கவிஞன்- சேர மன்னனாகவே இருந்திருக் கிறான். குயிலியும் சேர நாட்டு வேடன் மகனாவாள். வேடன் பெய ரும் முருகனே. முருகன் அழகின் உருவம். வீரத்தின் வடிவம். ஆகவே பாரதி தெரிந்தெடுத்துள்ள சேர மன்னன், முருகன் ஆகிய பெயர்கள் நமக்கு அவருடைய அருமையைக் காட்டுகின்றன. அழகையும் உண்மையையும் தேடுவதே இக் கவிதையின் நோக்கமன்றோ? வாழ்க்கையில் மறைந்து கிடக்கும் உண்மைகளையும் உள் இரகசியங் களையும் அழகினையும் வோர்ட்ஸ் வொர்த் இயற்கை மூலமும், கீட்ஸ் உண்மை, அழகு ஆகியவற்றின் மூலமும், செல்லி காதல் மூலமும் பிரௌனிங் இசை மூலமும் வெளிப் படுத்தியுள்ளனர். இவைகளையெல் லாம் ஒன்றாய்த் திரட்டிப் பாரதியார் குயில் வழி தந்துள்ளாரெனின் அவர் புலமையை வணங்காமல் என்ன செய்வது! குயில் பெண்ணாக மாறி யுள்ளதை வடிக்கும் கவிஞனின் கருவைக் கண்டால் கவிஞனின் காதலி கவிதையே என்பது புலனா கும்.

''கவிதைக் கனி பிழிந்த
சாற்றினிலே, பண்
கூத்தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனோடே இன்னமுதைத்
தான்கலந்து
காதல் வெயிலிலே காய வைத்த
கட்டியினால்
மாது அவளின் மேனி வகுத்தான்
பிரமன் என்பேன்''

எப்பேர்ப்பட்ட கலப்புடைப் படப் பிடிப்பு ஓவியம்!

''வாழ்க மனைவியாம் கவிதைத் தலைவி'' என்றும் ''வாராய்! கவிதையாம் மணிப்பெயர்க் காதலி'' என்றும் பாடியுள்ள அவர் பாடல் களைப் படித்தபின் குயில் பாட்டைப் படித்தால் பாரதியின் காதற்கன்னி, அறக் கிழத்தி கவிதையே என உணர லாம். அவர் தொழிலும் கவிதை யாம். எனவே நெஞ்சமும் தொழிலும் உயிரும் வாழ்வும் தெய்வமும் அவருக்குக் கவிதையேயாம். கவிதை வாழ்க! பாரதி வாழ்க! □

காரணம் என்ன?

அனாவசியமான தண்டத்திற் செல்லாம் தமிழர் பணத்தை வாரி இறைக்கிறார்கள். 'கான்பரென்ஸ்' என்றும் 'மீட்டிங்' என்றும் கூட்டங்கள் கூடி விடிய விடிய வார்த்தை சொல்லுகிறார்கள். கிராமங்கள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போடுவதற்கு யாதொரு வழியும் செய்யாமல் இருக்கிறார் களே! படிப்பில்லாத ஜனங்கள் மிருகங் களுக்குச் சமானமென்று திருவள்ளுவர் பச்சைத் தமிழிலே செல்லுகிறார், நமக்குள் எத்தனையோ புத்திமான்கள் இருந்தும், நம்மிலே முக்காற்பங்குக்கு மேலே மிருகங் களாக இருக்கும் அவமானத்தைத் தீர்க்க ஒரு வழி பிறக்கவில்லையே! ஏன்? எதனாலே? காரணந்தான் என்ன?

(பாரதியார்-சமூகம்)

வினா ??? —————— விடை !!!

திரு. கே. இராசேந்திரன், தளி

வினா : நமது வீட்டிற்கு வரும் 240 வோல்ட் மின்சாரத்தை ஸ்டாக் செய்ய ஏதாவது பாட்டரி (அ) எமர்ஜென்சி ஸ்டாக்கர் உள்ளதா? அது கோவையில் கிடைக்குமா? என்ன விலை? அந்த பேட்டரியின் பவர் குறைந்தது அரைமணி நேரம் வீட்டின் 100 வாட் பல்பு எரியுமாறு இருக்கவேண்டும். ஸ்டாக்செய்யும் நேரம் குறைந்த பட்சம் எவ்வளவு நேரம் பல்பு எரியுமோ அவ்வளவு நேரத்தைப் போல் இரு மடங்கு இருந்தால் கூட போதுமானது.

திரு. கு. நல்லதம்பி, பி இ; எம் டெக்;

விடை : நமது வீட்டிற்கு வரும் 230 வோல்ட் மின்சாரம் ஏ. சி மின்சாரம். ஏ. சி. மின்சாரத்தை அப்படியே சேமிக்க முடியாது. அதை டி. சி. மின்சாரமாக மாற்றி பேட்டரிகளில் சேமித்து வைத்துக் கொள்ளப்படுகிறது. பேட்டரியின் டி. சி மின்சாரத்தை பல்புக்கு நேரடியாகக் கொடுத்து எரிய விடலாம். பேட்டரி 6 வோல்ட் (அ) 12 வோல்ட் என்றால் முறையே 6 வோல்ட் (அ) 12 வோல்ட் பல்பைத்தான் பயன்படுத்த முடியும். பேட்டரியிலிருந்து 230 வோல்ட் பல்பினை எரிய வைப்பதென்றால் செலவு மிகுதி. மேற் சொன்ன 6 வோல்ட் (அ) 12 வோல்ட் டி. சி. யை ஏ. சி. யாக மாற்றி 230 வோல்ட் குழல் விளக்குகளுக்குக் கொடுக்கலாம். குழல் விளக்கு உள்ள எமர்ஜென்சி விளக்கு பல்பு உள்ள எமர்ஜென்சி விளக்கைவிட விலை அதிகமானது. ஓர் அடி நீள குழல் விளக்குடைய எமர்ஜென்சி விளக்கு 20 வாட் பவர் எடுக்கும். ஆனால் 40 வாட் பல்பு அளவுக்கு வெளிச்சம் கொடுக்கும். இது சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும். இது போல் இரண்டு அல்லது மூன்று வாங்கி வைத்துக் கொண்டால் ஒரு 100 வாட் பல்பின் வெளிச்சத்தைப் பெறலாம். தாங்கள் கூறியுள்ளது போன்ற 240 வோல்ட் 100 வாட் பல்பு எரியும் எமர்ஜென்சி விளக்கு, விலை அதிகமாக இருக்கும். ஆர்டர் கொடுத்துத்தான் இதைச் செய்து வாங்கும்படி இருக்கும்.

செய்திகள்

நவம்பர்த் திங்கள் 20-ஆம் நாள் இந்திய விண்வெளிக்கூடு 'பாஸ்கரா-2' இரசியாவில் உள்ள வோல்கா கிராட் என்ற விண்ணாய்வு நிலையத்திலிருந்து பூமியைச் சுற்றி வரும்படியாக ஏவப்பட்டது.

பூ. சா. கோ. அற நிலையத்திற்காக திரு. எஸ். மணி, கலைமணி பிரிண்டிங் இண்டஸ்டிரியல் இன்ஸ்டிட்யூட் (கலைமணி ஸ்டுடன்ஸ் அச்சகம்) அவர்களால் அச்சிடப்பட்டு நிருவாக அறங்காவலர் திரு. ஜி. வரதராஜ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் கல்வி நிருவனத்தாரால் வெளியிடப்படுகின்றது.



தமிழ் மொழி

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே.

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே.

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே.

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

"பல தரனுடைத் தொழில்செயும் மாசனமும் —
மாசனம், மஹாஜனங்கள், பொதுப்படையான குடிகள்
இவர்களே தேசத்திற்கு உயிராவர். இவர்களைச் சூத்திரர்
என்பது தற்கால வழக்கு. சூத்திரர் என்னும் பெயரைச் சில
மூடர் இழிவான பொருள்பட வழங்குவதுபற்றி நூலில்
அப்பெயர் வரவில்லை" — பாரதியார்

M/s. SRINIVASA ENGG. MFGRS.

Anna Nagar Road

PEELAMEDU, COIMBATORE - 641 004

அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீதருள்வாய் — பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. Srinivasa Charlu & Co.

10, N. S. R. Iyengar Road
Venkitapuram -:- Velandipalayam (P. O.)
COIMBATORE - 641 025

சக்தி — அடிப்பது, துரத்துவது, கூட்டுவது, பிணைப்பது, கலப்பது, உதறுவது, புடைப்பது, வீசுவது, சுழற்றுவது, கட்டுவது, சிதறடிப்பது, தூற்றுவது, ஊதிவிடுவது, நிறுத்துவது, ஓட்டுவது, ஒன்றாக்குவது, பலவாக்குவது.
— பாரதியார்

Tirumurugan Mineral Industries

Manufacturers and Dealers in:

PLUMBAGO, BENTONITE, COAL, FIRECLAY POWDERS,
FIRE BRICKS, FERRO SILICON,
FERRO MANGANESE etc.

Head Office:
117, Sathy Road, Gandhipuram
COIMBATORE - 641 012
Phone: 32346

Factory:
12-46, Prakash Nagar
RAJAHMUNDRY - 533 103

GRAPHITE CRUCIBLES

"மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி
போடலாமா?" போடலாம்.
மண்ணிலும் வானந்தானே நிரம்பி யிருக்கின்றது? மண்ணைக்
கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டியதாகாதா.

— பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. PRECISION INDUSTRIES

27, KRISHNASWAMY NAGAR
RAMANATHAPURAM
COIMBATORE-641 018

மஹத் — அதனிலும் பெரிய மஹத் — அதனிலும் பெரிது —
அதனிலும் பெரிது —
அணு — அதனிலும் சிறிய அணு — அதனிலும் சிறிது — அதனிலும் சிறிது
இருவழியிலும் முடிவில்லை. இருபுறத்திலும் அநந்தம்.
புலவர்களே, காலையில் எழுந்தவுடன் உயிர்களையெல்லாம்
போற்றுவோம்.
"நமஸ்தே, வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி". — பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. ANDAVAR ENGINEERING COMPANY

SHOBHA NAGAR :: K. R. PURAM
COIMBATORE - 641 006

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன.
உயிர் சுவையுடையது.
மனம்தேன். அறிவுதேன். உணர்வு அமுதம்.
உணர்வே அமுதம்.
உணர்வு தெய்வம். — பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. C. R. S. Mannadiar & Bros.

17/35, N. H. ROAD
COIMBATORE-641 001

மந்திரங் கூறுவோம். உண்மையே தெய்வம்
கவலையற் றிருத்தலே வீடு. களியே
அமிழ்தம். பயன்வருஞ் செய்கையே யறமாம்
அச்சமே நரகம்; அதனைச் சுட்டு
நல்லதை நம்பி நல்லதே செய்க. — பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. Hindustan Corporation

71, PATEL ROAD
COIMBATORE-641 009

எது தெய்வம் ?

'ஹெர்மெஸ்' என்ற புராதன மிசிர (ஈஜிப்டு) தேசத்து ஞானி சொல்லுகிறார் :

"உடலில்லாதது, தோற்றமில்லாதது, வடிவமற்றது, ஜடமில்லாதது, நமது புலன்களுக்கு எட்டாதது — இது தெய்வம்."

◆ ◆ ◆

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் : "ஈசன் ஒளி; எல்லாப் பொருள்களிலும் திரைக்குள் மறைந்ததுபோல் மறைந்து நிற்கும் ஒளியே தெய்வம்".

◆ ◆ ◆

பட்டினத்துப் பிள்ளை : எட்டுத்திசையும் பதினாறு கோணமும் எங்குமொன் றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கும் ஜோதி."

◆ ◆ ◆

தாயுமானவர் : "சுத்த அறிவே சிவம்".

◆ ◆ ◆

ரிக்வேதம் : "உண்மைப் பொருள் ஒன்று. அதனைப் புலவோர் பலவாறு சொல்லுகிறார்கள்".

◆ ◆ ◆

நம்மாழ்வார் : "திடவிசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசைப் படர் பொருள் முழுவதும் ஆய், அவையவை தோறும் உடல்மிசை உயிரெனக்கரந்துளன்".

With the best compliments from :

M/s. DECAN ENGINEERS

1-3-1036/3/12 & 13, KAVADIGUDA

HYDERABAD - 500 003

கலைக்கதிர் மாத இதழ் வளர்ந்து நற்பணியாற்ற
எம் நல்வாழ்த்துக்கள்!

பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ்
பயனும் அழகும் மிக்க வகையில் அமைவதாக!

M/s. Sree Saravana

32/50, Sami Iyer New Street

COIMBATORE - 641 001

M/s. Srinivasa Engg. Suppliers

6/18, New Damu Nagar, P. N. Palayam

COIMBATORE - 641 037

M/s. R. K. Industries

Kannimar Kovil Thottam
870, Sathy Main Road, Ganapathy (P. O.)
COIMBATORE - 641 006

M/s. Prompt Suppliers

64-A, Nava India Road
Avanashi Road, Peelamedu
COIMBATORE - 641 004

வாழ்க புரட்சிக் கவிஞன் பாரதி

கோபால் எண்டர்பிரைசஸ்

தரமிக்க மெஷின்டூல்ஸ் விற்பனையாளர்கள்

9, ஜவான்ஸ் பவன், கோயமுத்தூர் - 641 018

தொலைபேசி எண். 25276

தங்களது தேவைகளை பூர்த்தி செய்ய எங்களை இன்றே அணுகுங்கள்.

M/s. கற்பக விநாயகர் ஏஜென்சீஸ்

2, மண்டையன் ஆசாரி தெரு
டவுன் ஹால் ரோடு
மதுரை - 625 001

Sri Murugan Electricals

30-B, Marakadai Street

VELLORE - 632 004

Sri Saravana Traders

14, Tamil Sangam Buildings
West Bouleward Road
TIRUCHIRAPPALLI - 620 008

B. Venkadasamy

PSG Distributor, K. Thangammalpuram
SOORANKUDI (P. O.)
Vilathikulam (Tk.) Nellai (Dt.)

கலைக்கதிர் மாத இதழ் வளர்ந்து நற்பணியாற்ற
எம் நல்வாழ்த்துக்கள்!

பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ்
பயனும் அழகும் மிக்க வகையில் அமைவதாக!

Sri Meenachiyamman Industries

Opposite of Plague Mariamman Temple
V. K. Road, Peelamedu
COIMBATORE - 641 004

M/s. Anchor Standard Industrials

Trichy Road, Singanallur (P. O.)
COIMBATORE - 641 005

M/s. Ellarbee Agencies

10/4, Star Lodge Buildings
Kaleeswara Mill Road
COIMBATORE - 641 009

M/s. National Engg. Works

39, Ellaithottam Road, Peelamedu
COIMBATORE - 641 004

"ஓமெனப் பெரியோர்கள் — என்றும்
ஓதுவதாய் வினை மோதுவதாய்,
தீமைகள் மாய்ப்பதுவாய் — துயர்
தேய்ப்பதுவாய், நலம் வாய்ப்பதுவாய்
நாமமும் உருவும் அற்றே — மனம்
நாடரிதாய்ப் புந்தி தேடரிதாய்,
ஆமெனும் பொருளனைத்தாய் — வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்"

— பாரதியார்

With the best compliments from :

M/s. R. R. Castings

ELANTHAMARA THOTTAM
45-A. K. R. Puram Road, Peelamedu
COIMBATORE - 641 004

"பச்சை முந்திரி யன்னது உலகம்
பாட்டுப் பாடல் சிவக்களி எய்தல்
இச்சை தீர உலகினைக் கொல்வோம்
இனிய சாறு சிவமதை உண்போம்
கொச்சை மாக்களுக் கிஃதெளி தாமோ?
கொஞ்சு மாதொரு குண்டலி சக்தி
இச்ச கத்தில் இவையின்ப மன்றோ?
இவற்றினல் லின்பம் வேறுள தாமோ?

— பாரதியார்

கலைக்கதிர் பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ்
பயனுறு வகையில் அமைய வாழ்த்துக்கள்

M/s. COIMBATORE CASTINGS

No. 1, ARASAMARA STREET, K. R. PURAM
COIMBATORE-641 006

"இவ்வுலகத்துச் செய்திகள், மேலளவாகப் பார்க்கும்போது, முன்பின் தொடர்பு இல்லாதனவாகித் திடும் திடும் என்று புறப்படுவன போலத் தோன்றுகின்றன. ஆனால் ஆழ்ந்து நோக்குமிடத்து, இவை, 'காரணகாரியத் தொடர்' என்பதோர் தவிர்க்க முடியாத விதியால் கட்டுண்டிருக்கின்றன"

— பாரதியார்

கலைக்கதிர் பாரதி நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்
சிறப்புடன் அமைய வாழ்த்துக்கள்

M/s. TAURAS ENGINEERS & CONSULTANTS

4/16-A, Kondaswamy Iyer Road
Puliakulam
COIMBATORE - 641 018

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

— பாரதியார்

With the best compliments from:

M/s. FARM AGENCIES

OPP. WADIA PARK, MALIWADA
AHMEDNAGAR - 414 001
MAHARASHTRA STATE

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

With the best compliments from:

THE ROYAL COMPANY

STATION ROAD, JAIPUR - 302 006
RAJASTHAN

Distributors for Rajasthan:
PSG ELECTRIC MOTORS, MONOBLOCS, PUMPS, ENGINES, MACHINE TOOLS, TEXTILE & INDUSTRIAL MOTORS

Gram: SOGANICO Phone: 64292

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
வங்கிப் பணியில் சாதனை பலபுரிந்து
வளர்ந்து வருவது "பாங்க் ஆப் தமிழ்நாடு"

பாங்க் ஆப் தமிழ்நாடு லிமிடெட்

பதிவு அலுவலகம்:
62, கீழரதவீதி ✳ திருநெல்வேலி டவுன்

சேர்மன்: V. ரங்கநாதன்

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு;
நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது;
சாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது;
சொல்லடி, சொல்லடி, சக்தி, மாகாளீ!
வேதபுரத் தாருக்கு நல்லகுறி சொல்லு,
தரித்திரம் போகுது; செல்வம் வருகுது;
படிப்பு வளருது; பாவம் தொலையுது"

— பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. SARAVANA FOUNDRY & ENGINEERING INDUSTRIES

35/1-A, Bharathiyar Road
Maniyakarampalayam Road, Ganapathy (PO)
COIMBATORE-641006

வாழ்க பாரதி நாமம்! வளர்க அவர் காட்டிய நெறிகள்!

"மாகாளி பராசக்தி துணையே வேண்டும்
வையகத்தில் எதற்குமினிக் கவலை வேண்டா
சாகாமல் இருப்பதுநம் சதுரால் அன்று
சத்தியரு ளாலன்றோ பிறந்தோம் பார்மேல்
பாகான தமிழினிலே பொருளைச் சொல்வேன்
பாரில்நீர் கேளீரோ, படைத்தோன் காப்பான்
வேகாத மனம்கொண்டு களித்து வாழ்வீர்
மேதினியில் ஏதுவந்தால் எமக்கென் என்றே"

— பாரதியார்

கலைக்கதிர் பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழுக்கு
எங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்கள்

M/s. K. VENKATESULU & CO.
ELLAITHOTTAM ROAD
PEELAMEDU
COIMBATORE-641 004

சக்தி மகிழ்ச்சி தருவது, சினந்தருவது,
வெறுப்பு தருவது, உவப்புத் தருவது
பகைமை தருவது, காதல் மூட்டுவது,
உறுதி தருவது, அச்சந் தருவது,
கொதிப்புத் தருவது, ஆற்றுவது. — பாரதியார்

HARIKRISHNA & COMPANY

HARDWARE & PAINT MERCHANTS

15/422 - 423, Nawab Hakim Road

COIMBATORE - 641 001

Phone No. 31694

Specialists in:

GKW/TATA BOLTS NUTS, MM, BRASS BOLTS NUTS,
ALLEN BOLTS & GOUB SCREWS BSF, SAE &
BA THREADS SCREWS & NUTS

சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஓர் குமிழியாம்
சக்திப் பொய்கையிலே ஞாயிறு ஒரு மலர்
சக்தி அனந்தம், எல்லையற்றது, முடிவற்றது
அசையாமையில் அசைவு காட்டுவது. — பாரதியார்

Authorised Dealers for

JYOTI COLOR EMAG LTD. (BARODA)

Manufacturers of

SPECIAL TYPE RING FRAME CARD, LOOM & ORDINARY
STANDARD TYPE MOTORS OF ALL RANGES

Dealers of

ALL KIND OF ELECTRICAL MATERIALS

Suppliers to

GOVT. INSTITUTIONS, PRIVATE & N T C MILLS, ESTATES etc.

FOR COMPETITIVE RATES

Please Contact

M/s. Palaniappa Trading Co.

ELECTRICAL & HARDWARES

2, Head Quarters Road :: COIMBATORE-641 018

Phone: 34322 34553

ஒளி தருவது யாது? தீராத இளமையுடையது யாது?
வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?
மழை எவன் தருகிறான்? கண் எவனுடையது?
உயிர் எவன் தருகிறான்?
புகழ் எவன் தருகின்றான்? புகழ் எவனுக்குரியது?
அறிவு எதுபோல் சுடரும்?
அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?
ஞாயிறு
அது நன்று. — பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. Industrial Engineering Stores

TAHER MANSION

10/3, CHERIAN ROAD :: COIMBATORE - 641 009

செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம் — வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்த லியல்பு. — பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. GEEVAN INDUSTRIES

222, SASTHRI ROAD

RATHINAPURI :: COIMBATORE - 641 027

எல்லா உயிரும் இன்பமெய்துக.
எல்லா உடலும் நோய்தீர்க.
எல்லா உணர்வும் ஒன்றாதலுணர்க.
'தான்' வாழ்க.
அமுதம் எப்போதும் இன்பமாகுக.

— பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

M/s. RAMAKRISHNA & CO.

261, AVANASHI ROAD - COIMBATORE - 641 018

உணர்வே; நீ வாழ்க.
நீ ஒன்று—நீ ஒளி.
நீ ஒன்று—நீ பல.
நீ நட்பு—நீ பகை.
உள்ளதும், இல்லாததும் நீ.
அறிவதும், அறியாததும் நீ.
நன்றும், தீதும் நீ.
நீ அமுதம், நீ சுவை
நீ ஒன்று, நீ இன்பம்

— பாரதியார்

கலைக்கதிர் பாரதியார் சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.

M/s. Bharat Insulation Co.

No. 7, A. T. T. COLONY — COIMBATORE - 641 018

ABT
Parcel Service

11/231-B, Dr. NANJAPPA ROAD

COIMBATORE-641 018

- **ABT PARCEL SERVICE** has dedicated its services to the Road Transport Industry which plays a predominant role in the Economic growth of the Country besides giving satisfaction to those who are interested in transporting goods and parcels.
- **ABT PARCEL SERVICE** links over **850 STATIONS** situated in important places and spread all over India.
- **ABT PARCEL SERVICE** charges only 5 Paise per Quintal (100 Kilograms) per Kilometer.
- For all kinds of goods booked in ABT for a distance of 600 Kms. and beyond a rebate of 25% is given for the excess distance.
- No demurrage will be charged for the first 10 days from the date of arrival of the goods at the destination.
- The closed wagon type vehicles used by **ABT PARCEL SERVICE** give full protection to the goods carried.

Low Rate! Quick Delivery!! Satisfactory Service!!!
These are the objectives of A B T Parcel Service.

Regd No TN/CB/11 KALAIKATHIR டிசம்பர் -1981

(இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது) வெளிநாடு விலை ரூ. 2

INSTITUTIONS RUN BY

P S G & SONS, CHARITIES

PSG ELEMENTARY SCHOOL,
PEELAMEDU AND VEDAPATTI

SARVAJANA HIGHER SECONDARY SCHOOL

PSG COLLEGE OF ARTS AND SCIENCE

PSG POLYTECHNIC

PSG COLLEGE OF TECHNOLOGY

KALAIKATHIR

GANDHI RURAL CENTRE

PSG MATERNITY AND CHILD HEALTH CENTRE,
VEDAPATTI

PSG INDUSTRIAL INSTITUTE

PSG METALLURGY AND FOUNDRY DIVISION

அட்டைப்படம் அச்சிட்டோர்: கலைமணி பிரிண்டிங் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்., கோவை